Publication No: 005
**முதல் பதிப்பு 2007**

**The Forgotten Command: Be Holy** *in Tamil*

Copyright: © William MacDonald 2007

மறக்கப்பட்ட கற்பனை – பரிசுத்தராயிருங்கள்

*ஆசிரியர்*

**வில்லியம் மெக்டொனால்டு**

*தமிழாக்கம்*

**இரா. மாணிக்கவாசகம்**

**விலை: ரூ. 75/–**

**Moriah Ministries**
Post Box No. 2540, No. 1 West Club Road,
Shenoy Nagar, Chennai - 600 030, India
Email: <moriahministries@gmail.com> Phone: 91-044-2622 4010

**Moriah Ministries**
C/o Bethany Gospel Hall
16 North St. Mannarpuram, Tiruchirapalli - 620 020, India.

Typeset & Cover Design: Moriah Ministries

Printed by: J. R. Printech, Chennai - 600 010
Tel: 044-26631643 Mobile: 9841077931

# முன்னுரை

கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கை செய்கிறவர்களில் பாவத்தில் வீழ்ச்சியடைவோரின் நிலை மிகவும் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. பலர் ஓடுவதற்குப் பிறந்தவர்கள் போல நன்றாகத் தொடங்கு கின்றனர். ஆனால், அவர்கள் செல்லும் வழியில் பாவத்தில் வீழ்ந்து போனவர்களாகத் தங்களுடைய சிறப்பை இழந்து விடுகின்றனர். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை பண்ணும் அனைவரும் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்லர் என்பது உண்மையே. ஆனாலும், உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்களுக்குள்ளும், வீழ்ச்சியடைந்தவர் களின் விகிதம் மிகவும் கலக்கத்தை உண்டாக்குகிறது.

ஒருவரது வாழ்க்கையில் ஏற்படும் குறிப்பிட்ட வீழ்ச்சி, அன்னாரது எஞ்சிய காலத்தை இருண்ட அறைக்குள் அடைத்துப்போடுகின்ற நிலையை அவ்வப்போது நாம் காண்கின்றோம். அவ்வாறு வீழ்ச்சியடைகிற ஒருவர் தன்னுடைய பாவத்திற்காக மனம்வருந்தி, அறிக்கை செய்த பிறகும், வருத்தம் மேலிட்ட நிலையில், தான் இருளுக்குள் இருப்பதாக நினைத்துக் கொள்கிறார். சான்று பகராது தன் வாயை இறுக மூடிக்கொள்கிறார். கர்த்தருடைய ஊழியத்தில் பங்கு பெறத்தகுதியற்றவர் என்னும் முடிவிற்கு வருகிறார். தன்னைத்தானே நிராகரித்த ஒரு வாழ்க்கையைத் தனக்கென்று ஏற்படுத்திக்கொள்கிறார். நம்முடைய சபைகள் இப்படிப்பட்டவர்களால் நிறைந்திருக்கின்றன.

இந்நிலை தொடர வேண்டிய தேவையில்லை. தேவனிடத்தில் மன்னிப்பு உண்டு. சிறகொடிந்த பறவை குணமடைந்து மீண்டும் முன்போல பறக்க முடியும். வெட்டுக்கிளி தின்றுவிட்ட ஆண்டுகளை மீண்டும் தர தேவன் வல்லவராயிருக்கிறார். எவ்வாறு மன்னிப்பைத் தமக்குரியதாக்கிக் கொள்வது என்பதைப் பலர் அறியாதிருப்பதே இப்பிரச்சனைக்குக் காரணம். அவர்கள் பாவத்தை அறிக்கை செய்கின்றனர். ஆனால் அவர்கள் மன்னிக்கப் பட்டாயிற்று என்று தேவன் உரைக்கும் சொற்களை நம்புவதில்லை.

ஒருவேளை, தாங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்னும் உண்மையை அவர்கள் உணர்வதில்லை. அல்லது தாங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்று அறிந்த போதிலும், தங்களைத் தாங்களே மன்னிப்பதில்லை. தாங்கள் தோற்றுப்போன கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் தங்களுடைய வாழ்க்கையைத் தொடருகின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதனினும், குறிப்பாக அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு விசுவாசிகள் சென்றுவிடக்கூடாது என்னும் நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அனுபவம் என்னும் பள்ளிக்கூடம் செலவு மிக்கது. தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நேரடியாகக் கற்றுக்கொள்ள விருப்பம் உடையவர்களாக இருப்போமென்றால், கடினமான வழியில் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படாது. வேதத்திற்குக் கீழ்ப்படியும் எளிமையான முறையில், பரிசுத்த வாழ்க்கையை அடைகிற கிறிஸ்தவன் அதனால் பெறும் அனைத்து ஆசீர்வாதங்களையும் அறிந்து, பாவத்தினால் உண்டாகும் கேடுகளைத் தவிர்க்கிறான். நாம் பரிசுத்தமாவதற்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்வதற்காக வேதத்தைப் படிப்பதற்கு நேரத்தைச் செலவிட வேண்டும் என்பதை அறிந்திருந்தும், வெட்கத்திற்குரியதும், அவமானத்துக்குரியதுமான வழியில் சென்று ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்?

-- *வில்லியம் மெக்டொனால்டு*



# *பதிப்பகத்தார் உரை*

“பரிசுத்தராயிருங்கள்” என்பது இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் கொடுத்த கற்பனையாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மீட்பராகக் கொண்ட விசுவாசிகள் இதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதற்காக, புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் இக்கற்பனை தொடர்ந்து வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஆயின், இக்கற்பனையை இன்று கிறிஸ்தவர்கள் மறந்து விட்டனர். மேலும், இக்காலச் சூழ்நிலைக்கு இது ஒவ்வாதது என்றும் புறக்கணித்துத் தள்ளி விட்டனர். எனினும், இந்நிலைமாறி, இக்கற்பனைக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்து, தமது இரட்சகருக்குச் சாட்சிகளாக இவ்வுலகில் வாழ்ந்து, அவருக்கு மகிமையைக் கொண்டுவர வேண்டுமென்ற சீரிய நோக்குடன் இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார்.

இந்நூலாசிரியர், இருபுறமும் கூர்மையான பட்டயமாகிய தூய வேதாக மத்தின் அடிப்படையில் தமது ஆலோசனைகளை வழங்கியுள்ளார். ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வின் அனைத்துக் கூறுகளுக்கும் உட்சென்று அவற்றின் ஏற்றத்தாழ்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து, தன் வாழ்வை அவன் எங்ஙனம் தூய்மையாக நடத்த முடியும் என்பதற்கான விளக்கங்களை அளித்துள்ளார். இறை மக்கள் பலரது மேற்கோள்களையும், பல உண்மை நிகழ்ச்சிகளையும் கூறி ஆசிரியர் இச்சத்தியங்களை வலியுறுத்தியுள்ளது பாராட்டிற்குரியது.

எல்லா மொழி மக்களும் இந்நூலினைப் படித்துப் பயன்பெற வேண்டு மென்ற வாஞ்சையைத் தூய ஆவியானவர் ஆசிரியரின் உள்ளத்தில் எழுப்பினார். அதன் அடிப்படையில் இந்நூலைத் தமிழாக்கம் செய்யும் பணியினை மோரியா ஊழியங்களுக்கு வழங்கினர். இந்நூலின் மேன்மை யைக் கருத்தில் கொண்ட மோரியா ஊழியக் குழுவினரும் அப்பணியினை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

குறுகிய காலத்திற்குள் அழகிய தமிழ் நடையில் இந்நூல் வெளி வருவதற்கு உதவிபுரிந்த அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியை

உரித்தாக்குகிறோம். அவர்களில் திருவாளர்கள் ஆண்ட்ரியாஸ் லின்ட்னர், ஹட்ஸன் ஜான்ஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

இந்நூலை மொழியாக்கம் செய்த திரு. இரா. மாணிக்கவாசகம் அவர் கட்கும், தகுந்த ஆலோசனை நல்கிய திரு. ந. ஜான் ஜெயானந்தம் மற்றும் திரு. தே. டேனியல் அவர்கட்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகிறோம்.

தமிழ்க் கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்வினைத் தூய்மையாக்கி, கிறிஸ்துவுக்குள்ளாகக் காத்துக்கொள்வதற்கு இந்நூல் பெரிதும் உதவுமெனக் கருதி, ஜெபத்துடன் வெளியிடுகிறோம்.

தேவனுக்கு மகிமையுண்டாவதாக.

-- பதிப்பகத்தார்



# அறிமுகம்

## திரு. வில்லியம் மெக்டொனால்டு

இந்நூலாசிரியர் திரு. வில்லியம் மெக்டொனால்டு அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள புதிய இங்கிலாந்தில் பிறந்தவர். ஹார்வர்டு வணிகக் கல்லூரியில் (Harward Business School ) வணிகவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்று, அமெரிக்கக் கடற்படையில் சேர்ந்து, இரண்டாம் உலகப்போர் முடியும் வரை பணியாற்றினார். பின்னர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக்காக, வெற்றி வாய்ப்பு மிகுந்த தனது அலுவலைத் துறந்தார்.

கர்த்தருடைய ஊழியத்தில் தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக்கொண்ட வராக, உலகெங்கும் பயணம் மேற்கொண்டு, கிறிஸ்துவின் மேன்மை யைப் பறைசாற்றினார். எம்மாவு வேதாகமக் கல்லூரியின் தலைவராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். திரு. ஜீன் கிப்ஸன் என்பாருடன் இணைந்து ‘‘சீடத்துவப் பயிற்சி’’ முறையைக் கலிபோர்னியாவில் உள்ள சான்லியானஹோவில் அறிமுகப்படுத்தினார்.

சிறந்த இறையியல் போதகராகிய திரு. மெக்டொனால்டு, எண்பதிற்கும் அதிகமான நூல்களை இயற்றியுள்ளார். பழைய புதிய ஏற்பாடுகள் முழுவதற்கும் விளக்கவுரையாக ‘‘விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை’’ என்னும் மிகப்பெரிய நூலை எழுதியுள்ளார். திருமறையை ஆழ்ந்து கற்று, அதனுடன் அதிக நேரத்தைச் செலவிட்டுள்ள இவரது எழுத்துக்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் அமைந்துள்ளன.

தற்பொழுது, கலிபோர்னியாவில் வசிக்கும் இவர், தனது பெரும் பாலான நேரத்தை எழுத்துப் பணியில் செலவிட்டு வருகிறார். ‘‘நீதிமொழிகள்’’ புத்தகத்தை ஆராய்ந்து, ஒரு நூலை இப்பொழுது இயற்றி வருகிறார்.

90 வயது நிரம்பிய திரு. மெக்டொனால்டு, கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக இறைப்பணி செய்து வருகிறார். பரிசுத்த வாழ்க்கையை வலியுறுத்திக்கூறும் இந்நூல் நமக்கு அறைகூவலாக அமைந்திருக்கிறது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | i |
| | பதிப்பகத்தார் உரை | iv |
| | திரு. வில்லியம் மெக்டொனால்டு | vi |
| 1 | கிறிஸ்துவின் சாயல் | 1 |
| 2 | கிறிஸ்துவின் மாதிரிகளாகத் திகழ்வதில் குறைபாடுகள் | 4 |
| 3 | இயேசு கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் சீலர்கள் | 10 |
| 4 | ஏன் பரிசுத்தமாக இருக்க வேண்டும்? | 16 |
| 5 | பரிசுத்தமாகுதலின் நான்கு நிலைகள் | 22 |
| 6 | தேவனுடைய சர்வாயுதவர்க்கம் | 28 |
| 7 | தேவனுடைய பங்கும் நமது பங்கும் | 42 |
| 8 | பரிசுத்தமாவதற்குரிய வழி | 44 |
| 9 | கிறிஸ்தவ ஒழுக்கத்தின் ஒழுங்குகள் | 48 |
| 10 | சீரிய முறையின் சீரான உண்மைகள் | 59 |
| 11 | வெற்றிக்கு வழி – ஆவியில் நிறையுங்கள் | 70 |
| 12 | இரண்டு இராஜ்ஜியங்கள் | 89 |
| 13 | பாவத்தின் கூறுகளும் மனம் வருந்துதலும் | 100 |
| 14 | ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய தருணங்கள் | 110 |

15 சுய பாலுறவு என்னும் பாவம் . . . . . . . . . 120

16 மனச்சாட்சி – நமதுள்ளத்தில் வசிக்கும் நடுவர். . . . . . 125

17 மனிதனின் நினைவுகள் . . . . . . . . . 128

18 முறையான தியானம் . . . . . . . . . 139

19 நாவடக்கம் . . . . . . . . . 147

20 புறங்கூறுதல் . . . . . . . . . 154

21 சினம் கொள்ளாமை . . . . . . . . . 159

22 நாம் அணியும் ஆடைகள் . . . . . . . . . 163

23 உண்மையே பேசுதல் . . . . . . . . . 167

24 நேர்மை எது? . . . . . . . . . 170

25 ஆண்டவரே, என்னை நொறுக்கும் . . . . . . 174

26 போதைப் பொருட்கள் – வேண்டவே வேண்டாம் . . . 181

27 சூதாட்டம் – அதன் விலை மிக அதிகம் . . . . . . 189

28 குடும்பக் கட்டுப்பாடு – ஆதரவும் எதிர்ப்பும் . . . . . . 194

29 அரசியல் . . . . . . . . . 199

30 சுயம் – உள்ளான துரோகி . . . . . . . . . 204

31 பரிசுத்தமடைய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள் . . . 211

32 முடிவுரை . . . . . . . . . 216

அடிக்குறிப்புகள் . . . . . . . . . 218




# 1

# கிறிஸ்துவின் சாயல்

“கிறிஸ்துவின் சாயலைக் கொண்டவர்” என்ற வர்ணனை, ஒருவரது குணநலனை மிகச் சிறப்புடன் விவரித்துக் காட்டும் சொற்றொடர் ஆகும். அந்தச் சிறப்புரையே ஒரு விசுவாசி அடையக்கூடிய விரும்பத்தகுந்த புகழுரையும், நன்மதிப்பின் இலக்குமாகும். கிறிஸ்துவைப் போலக் காணப் படுவதைக் காட்டிலும் ஒரு விசுவாசி விரும்பத்தக்க மேலான வாஞ்சை வேறொன்றுமில்லை.

ஹென்றி டிரமண்ட் என்பார், “இந்த உலகில் வாழ்கிறபோது கிறிஸ்துவைப் போலாகுதல் ஒன்றே ஒருவரது தகுதிவாய்ந்த விருப்பமாயிருக்கிறது. இந்தக் குறிக்கோளுக்கு முன்னர் அவரது மற்ற விருப்பங்கள் யாவும் மதியீனமே. அதனினும் குறைவுடைய வெற்றிகள் அனைத்தும் வீணாகவே கருதப்படும்” எனக்கூறியுள்ளார்.

“ஒன்றே எந்தன் விருப்பம்
என்றும் அதனை நாடுவேன்,
அண்ணல் யேசுதம் சாயல்
அடைவதே எந்தன் ஆவல்!
வாழ்க்கை என்னும் பயணம்
உலகம் அதனது தொடக்கம்
அதனது இலக்கு வான்மகிமை
அதனது சிறப்பு அவர் சாயல்,
அண்ணல் யேசுதம் சாயல்
அடைவதே எந்தன் ஆவல்.”

ஒருவர் மிகுந்த வரம் பெற்றவராயிருந்து, கற்பிக்கும் திறமையினாலும், அறிவுரை வழங்கும் நாவன்மையினாலும் கேட்போரது உள்ளங்களைத் திருமறை வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியவும், ஏவிவிடவும் செய்பவராயிருப்பாரெனில் அது மிகுந்த மனநிறைவு அளிக்கக் கூடியது என உறுதியாய் நம்புகிறேன். ஆயினும்

"கிறிஸ்துவின் சாயலை" அணிந்த தன்மை, அந்த உயர்ந்த வரத்தைக் காட்டிலும் மேலானதாகும். அந்தச் சாயலை உடையவராய் இல்லாதிருப்பின், அவர் பெற்றவரம் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் காணப்படும். மேடையிலே வரம் பெற்றவராகவும், வீட்டிலே மூர்க்க குணமுடையவராகவும், ஒருவரால் இரண்டு நிலைகளில் இருக்க முடியும். 'வரம்' தேவன் அருளும் சலுகையாக இருக்கிறது. மாறாக, நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் வளர வேண்டியது நமது சொந்தப் பொறுப்பாகும். அதுவே தனிமனிதனைச் சார்ந்த கிருபை என்றழைக்கப்படுகிறது.

ஆத்தும ஆதாயம் செய்யப் பலர் ஆவலுடையவராயிருக்கிறார்கள். ஆத்தும ஆதாய ஊழியம் செய்வது ஒன்றுதான் நாம் படைக்கப்பட்டிருப்பதன் நோக்கமாகும் என்று பொதுவாகப் பலர் நம்புகிறார்கள். அதன் விளைவாக இடைவிடாது தனிநபர் சுவிசேஷ ஊழியம் செய்யப் பலர் முனைகின்றனர். ஆயினும், அவரது வாழ்க்கை கிறிஸ்தவ விசுவாசத்தை விரும்பத் தகாததும், நம்பகமற்றதுமாகக் காணச் செய்கிறது. "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என இயேசு கிறிஸ்து தகுந்த கட்டளையைக் கிறிஸ்தவர்களுக்கு வழங்கினார். அதனை நிறைவேற்றுவதற்காக நாம் எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறார். நமது பொறுப்பு அவரைப் பின் தொடர்வதாகும். அதாவது அவர் வாழ்ந்த வண்ணம் வாழ்வதாகும். நம்மை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவது அவரது பொறுப்பாகும். ஆத்தும ஆதாயம் செய்யும் இயல்பு கிறிஸ்துவின் சாயலை அணிவதால் உண்டாகும் பலனாகும்.

## தெய்வீக முன்னுரிமை

தேவ மக்கள் தமது குமாரரின் சாயலுக்கு ஒப்பானவராக மாற வேண்டும் என்பதே தேவனின் பெரிதான நோக்கமாகும். கிறிஸ்துவைப் போலக் காணப்படுகிறவர்களால் பரலோகம் நிறைய வேண்டும் என்று தேவன் விரும்பும் அளவிற்கு அவர் இயேசு கிறிஸ்துவின்பாற் மனமகிழ்ச்சி கொண்டிருக்கிறார். நாம் அவரைக் காணும் போது அவர் இருக்கிறவண்ணமாகவே மாற்றப்படுவோம். ஆயினும் அதன் செயலாக்கம் இவ்வுலக வாழ்க்கையிலேயே நடைபெறுமென்றால் அது தேவனுக்கு அதிக மகிமையாக இருக்கும்.

கரேல் மேஹால் என்பார் இச்செயலாக்கத்தை விளக்கும்படி இரண்டு மறக்க இயலா எடுத்துக்காட்டுகளைக் கூறியுள்ளார். முதலாவது, தனது உடல் எடையைக் குறைக்கும்படி உடற்பயிற்சி சாலையில் சேர்ந்த ஒரு பருமனான பெண்மணியைக் குறித்ததாகும். பயிற்சியாளர் முதலாவதாக ஒரு கண்ணாடியில் அப்பெண்மணி எவ்விதம் தான் காணப்பட வேண்டும் என்று விரும்பினாரோ அவ்வகையில் ஒரு கோடிட்ட வரைபடத்தை வரைந்தார். அக்கண்ணாடிக்கு முன் அப்பெண்மணியை நிற்கச் செய்தார். அப்பெண்ணின் உருவம் வரைபடக் கோட்டிற்கு அதிகமாக எல்லாப் பக்கங்களிலும் பெருத்துக் காணப்பட்டது. அப்போது பயிற்சியாளர் அந்தப் பெண்ணிடம், "நீங்கள் அந்த வரைபடத்தைப் போல காணப்பட வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்" என்றார். பல வாரங்கள் தொடர்ந்து அந்தப் பெண்மணி உணவைக் குறைத்தும் பயிற்சியை மேற்கொண்டும் வந்தார். ஒவ்வொரு வாரமும் அக்கண்ணாடிக்கு முன் நின்று பார்ப்பார். அவரது பருமன் குறைந்து கொண்டு வந்தாலும் அவ்வரைப்படத்தைக் காட்டிலும் பெருத்தே காணப்பட்டார். எனினும் பயிற்சியை நிறுத்திவிடவில்லை. தொடர்ந்து கடினமான பயிற்சிகளைச் செய்தார். உணவைக் கட்டுப்படுத்தினார். கடைசியில் ஒருநாள் அவர் கண்ணாடிக்கு முன் நின்றபோது அவரது உருவம் வரைபடத்திற்கு ஏற்றாற்போலக் காணப்பட்டது. அஃது அப்பெண்ணிற்கு மட்டுமின்றி எல்லோருக்கும் பேருவகையைக் கொடுத்தது.



இரண்டாவது எடுத்துக்காட்டு, கருங்கற் பாறையில் சிங்கத்தின் உருவத்தைச் செதுக்கிய ஒரு சிற்பியைப் பற்றியதாகும். அந்தத் தலைசிறந்த படைப்பை எவ்விதம் செய்து முடித்தார் என்று அவரிடம் கேட்டபோது அவர் உரைத்த பதில், "இது மிக எளிது, சிங்கத்தைப் போல இல்லாத எல்லாவற்றையும் நான் செதுக்கி விட்டேன்" என்பதாகும். நமது வாழ்வில் தேவையற்றவை அனைத்தும் செதுக்கி எறியப்பட்டு, தேவனுடைய சீரிய நோக்கமாகிய கிறிஸ்துவின் சாயல் காணப் பெறுவது எவ்வண்ணம் என்று பின்வரும் பக்கங்களில் விளக்குவோம். தொடர்ந்து படிக்கும் நாம், இவ்வித ஜெபத்தை ஏறெடுப்போம்.

எந்தன் இரட்சகா! கர்த்தர் இயேசுவே!
உம்முடன் உறைவதாய்க் காண்பதென் ஆசை.
எந்தன் உடையிலும், எந்தன் நடையிலும்,
உந்தன் உரிமையாய்க் காண்பதென் வாஞ்சை!

# 2

# கிறிஸ்துவின் மாதிரிகளாகத் திகழ்வதில் குறைபாடுகள்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வுலகில் கர்த்தர் இயேசுவின் பிரதிநிதியாக இருக்கிறான். கிறிஸ்து எவ்விதம் இருப்பார் என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற இரட்சகரின் மாதிரிகளாகக் கிறிஸ்தவர்கள் காணப்படுதல் இன்றியமையாதது. இது நமக்கு அளிக்கப்பட்ட மிக உயர்ந்த பொறுப்பாக இருக்கிறது.

நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம். ஒரு மனிதன் தனது சரீரத்தின் மூலமாகத் தன்னை வெளிப்படுத்துகிறான். அது போலவே, கிறிஸ்துவும் தம்மை உலகிற்கு வெளிப்படுத்திக்காட்டத் தம்முடைய சரீரமாகிய சபையையே பயன்படுத்துகிறார். இவ்வுண்மை "எனது வாழ்க்கையில் நான் வெளிப்படுத்திக் காட்டுகிற கிறிஸ்துவின் சித்திரம் எவ்வண்ணம் உள்ளது?", என்னும் கேள்வியை நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எழுப்பிவிட வேண்டும்.

"என் ஆத்துமாவே!
உன்னைக் காண்கிற மக்கள்
உன்னில் கிறிஸ்துவைக் காண விழைகின்றனரே;
உன்னைப் பார்க்கும் அவர்கள்
உன்னில் யாரைப் பார்க்கிறார்கள்?"

என்னும் கேள்வியை நாம் நம்மையே கேட்போமாக.

இதனையே ஒருவர் இவ்விதம் அழகுற எடுத்துரைக்கிறார்: "ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று குடும்பப் பெயரோடு தேவன் அழைக்கப்படுகிறார். தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை (எபி. 11:16). அதுபோல எனது பெயரைத் தமது குடும்பப்



பெயராக ஏற்றுக்கொள்வாரா? என்னைக் குறித்து அவர் என்ன நினைக்கிறார்?"

"நாம் விரும்புகிறோமோ இல்லையோ, சிற்றோடையில் நீந்தும் சிறுமீனைக் கொக்கு எவ்விதம் உன்னிப்பாகக் கவனிக்கிறதோ, அவ்விதமே உலகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இவ் வண்ணம் விசுவாசி தொடர்ந்து கண்காணிக்கப்படுவது, நமது வேலைக்கு வந்த முதல் ஆபத்து. அதுவே, நாம் நமது இரட்சகரைக் குறித்தும், அவர் அருளுகிற நித்திய ஜீவனைக் குறித்தும் பேசுகிற அனைத்தையும் பயனற்றதாக்கி விடுகிறது" என்று சார்லஸ் ஸ்வின்டால் கூறியிருக்கிறார்.

### நண்பர்கள் இல்லத்தில் காயமுற்றவர்

தங்களைக் கிறிஸ்துவின் சீடர்கள் என்று பறைசாற்றிக் கொள்வோரின் வாழ்க்கையின் மூலமாகக் கிறிஸ்து மிகவும் துயரடைந்திருக்கிறார் என்பது வருத்தத்திற்குரிய உண்மையாகும். தமது நண்பர்கள் இல்லத்தில் அவர் காயமுற்ற வராக இருக்கிறார்.

"இவ்வுலகம், கிறிஸ்தவனின் அறிக்கையையும் அவனது வாழ்க்கை யையும் ஒப்பிட்டுப் பார்த்து, வேறுபாடுகளைக் கண்டு பிடிக்கிறது. அதனால் கிறிஸ்தவத்தின் எதிரிகளைக் காட்டிலும், அதைக் கடைப் பிடிக்கிறவர்களாலேயே அதற்கு அதிகக் கேடு விளைந்திருக்கிறது. நீங்கள் சொல்லுகிற கிறிஸ்தவம் இதுவென்றால், உங்கள் வாழ்வில் மாற்றங்கள் காணவேண்டுமே என அவர்கள் வாதிடுவது சரியே" என ஜேம்ஸ் ஸ்பிங் கூறியுள்ளார்.

அதற்கு ஒத்த கருத்தைக் கொண்ட ஹட்சன் டெய்லர் உரைப்பதாவது: "நாங்கள் வேதத்தை நம்புகிறோம் என்று மார்தட்டிக் கொண்டு, அப்படி ஒரு நூல் இல்லாதது போலத் தங்கள் மனம்போன போக்கிலே முன்னுக்குப் பின் முரணாக வாழும் கிறிஸ்தவர்களின் போக்கு, உண்மையை உணராத தோழர்களின் வாதங்களை வலுப்படுத்தி விடுகிறது."

இயேசு கிறிஸ்துவை உலகிற்குத் தவறாகக் காட்டப்படுவதை விளக்க எடுத்துக் காட்டுகளைத் தேடுவது கடினமல்ல. சமீபத்தில் சாமான்களை ஏற்றிச் செல்லும் ஒரு வாகனத்தின் பின்புறம் காணப்பட்ட இரண்டு ஒட்டுத் தாள்களைக் கண்டேன். "நான் இயேசுவினிடத்தில் அன்பாயிருக்கிறேன்" என்று ஒன்றில் எழுதியிருந்தது. மற்றதில், "நீ என்னைத் தொட்டால் உமது முகத்தைப் பேர்த்து விடுவேன்" என்று கொச்சை மொழியில் எழுதியிருந்தது. அந்த இரண்டு எண்ணங்களுக்கும் உள்ள வேற்றுமையை அந்த வாகனத்தின் உரிமையாளர் அறிந்திலர் போலும்.

அடுத்தபடியாகத் தொழில் உலகிற்குச் செல்வோம். ஜார்ஜ் டங்கன் கூறிய கதை இது: ஒரு தொழிலதிபர், ஒரு நாள் இரவில் கிறிஸ்தவ வானொலி ஒன்றில் நற்செய்தியை வழங்கிக் கொண்டிருந்தார். அதை அவருடைய அலுவலகத்தில் பணியாற்றிய பெண் ஒருத்தி கேட்டாள். அடுத்த நாள் காலையில் அலுவலகத்தில் அந்தத் தொழிலதிபர் எதிர்பார்த்தவை ஒன்றும் சரியாக நடைபெறவில்லை. அவர் மனநிலை எரிச்சலடைந்திருந்தது. ஏதோ ஒரு காரணத்திற்காக அந்த பெண் அவருடைய கடுகடுப்பைச் சந்திக்க நேரிட்டது. அவள் அவர் அறையை விட்டு வெளியே செல்லும்போது, எதிரே வந்த மற்றொரு பெண்ணிடம், ‘‘நமது முதலாளி ஞாயிற்றுக்கிழமை இரவில் இயேசு நாதரிடத்தில் வா என்று அறைகூவல் விடுவார், திங்கட்கிழமை காலையில் நரகத்திற்குப் போ என்று பாய்வார்!’’ என்றாள்.

ஒரு கிறிஸ்தவத் தொழிலதிபர் தான் ஒப்புக்கொண்ட வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார். அவருடன் தொழிலில் போட்டியிடும் ஒருவர் அதனைக் கண்டு, ‘‘நீங்கள் எந்தச் சபைக்குச் செல்லுகிறீர்கள்?’’ என வினவினார். அதற்கு ‘‘இப்பொழுது சபையைப் பற்றிப்பேச வேண்டாம். இது தொழில், இதற்கும் சபைக்கும் சம்பந்தம் இல்லை’’ என்று அவர் சட்டெனப் பதில் உரைத்தார். தனது கிறிஸ்தவ சாட்சியை நிறுவ அவருக்கு இருபது ஆண்டுகள் தேவைப்பட்டி ருக்கும்; இருபதே நொடியில் தம் சாட்சியைத் தகர்த்துவிட்டார்.

பிரபலமான நடிகரோ, நடிகையோ கிறிஸ்துவை விசுவாசித்து ‘‘மறுபடியும் பிறக்க’’ முன் வருவார்கள். அந்தச் செய்தி எல்லையெங்கும் முழங்கும். ஆனால் அவர் தனது பழைய வாழ்க்கையிலேயே உழன்று கொண்டிருப்பார். மட்டமான படத்தில் நடிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார். கிறிஸ்து அவரது வாழ்க்கை யில் எவ்வித மாற்றத்தையும் உண்டுபண்ணவில்லை என்பது தெளிவாகும். இச் செய்திகளும் உடனுக்குடன் செய்தித் தாள்களில் வந்து கொண்டேயிருக்கும்.

கிறிஸ்தவப் பாடகர்களை எடுத்துக்கொள்ளுங்கள். இசை அரங்குகளில் அவர்களது நிகழ்ச்சிகள், அவர்களது அங்க அசைவுகளின் அர்த்தங்கள், உள்ளத்தில் கேள்விகளை எழுப்பும் பாடல்கள், உலகத்தைக் கோமாளியாக்கும் இசை, இதுவா கிறிஸ்தவம்? இது நையாண்டிதனமல்லவா? நகைக்கத்தக்க நாடகமல்லவா?

கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் நற்செய்திப் பேரணியில் தனது மனமாற்றத்தைக் குறித்து அறிக்கை செய்தான். அச்செய்தி காட்டுத் தீ போல பரவிற்று. ஆயினும் அவன் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. குற்றச் செயல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. அவனது செய்கை கிறிஸ்தவத் தைக் கேலிச்சித்திரமாக்கிவிட்டது. அதைக் குறித்து ஒருவர் அவனோடு வாதிட்ட போது, ‘‘இயேசுவை ஏற்றுக்கொள்கிறேன் என்று நான் அறிக்கையிடுவதினால் என்னுடைய பழைய தொழிலை விட்டுவிட வேண்டும் என்று யாரும் என்னிடம் சொல்லவில்லையே. கால்பந்து வீரர்கள், மந்தை மேய்க்கும் குதிரை வீரர்கள், ஏன், அரசியல்வாதிகள்கூடக் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த நான் ஏன் கிறிஸ்தவனாக இருக்கக்கூடாது?’’ என்றான். அன்று முதல் அவன் கிறிஸ்தவத்தை விட்டுவிட்டான்.



தொலைக்காட்சியில் தோன்றும் சில கிறிஸ்தவப் பெருந்தகையோரைப் பாருங்கள். அவர்களது ஓங்கி உயர்ந்த சிகை அலங்காரங்களும், தொங்கி வடியும் நகை அலங்காரங்களும் யேசபேலை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. இந் நாட்களில் இவ்விதமாக இயேசுநாதர் காட்டப்படுகிறார். நாசரேத் ஊரைச் சேர்ந்த நமது ஆண்டவர் தரித்திரராக அல்லவோ இவ்வுலகிற்கு வந்தார்?

## சூறையாடும் சுயநலவாதிகள்

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பிச்சை கேட்கும் பிரசங்கிகளும், பண வேட்டையாடும் போதகர்களும் செல்வச் சூழ்நிலையில் வாழ்கிறதையும், விலையுயர்ந்த வாகனங்களிலும், விமானங்களிலும் சுற்றித் திரிகிறதையும் நாம் மறந்துவிட வேண்டாம். புத்திசாலியான பத்திரிகை நிருபர்கள் மூலமாக எல்லா உண்மைகளும் மிக விரைவாக வெளிச்சத்திற்கு வந்துவிடும். இது கிறிஸ்தவத் திற்கு வருகிற இன்னொரு இழுக்கு. அமெரிக்காவில் பலரால் விரும்பப்படக் கூடிய பெயர் பெற்ற பிரசங்கியார் தன்னுடைய வீட்டை அரசர்களுடைய மாளிகைக்கு ஒப்பாகக் கட்டியிருக்கிறார். அங்கே பன்னிரண்டு படுக்கை அறைகளும், வீட்டைச் சுற்றிலும் சிங்காரத் தோட்டங்களும், குதிரை லாயங்களும், நீச்சல் குளங்களும் உள்ளன. லாஸ் ஏஞ்சல் என்னும் நகரத்தில் மற்றொருவர் ஐந்து மில்லியன் டாலர் மதிப்புள்ள மாளிகையை விலைக்கு வாங்கினார். ஆனால் அவர் மனைவியோ ‘‘இந்த வீடு வசிப்பதற்குச் சிறியதாயிருக்கிறது’’ என்று குறைபட்டுக் கொண்டார். அவர் மெர்ஸிடஸ், ஜாகுவார் முதலான வாகனங்கள் போதாதென்று ரோல்ஸ் ராய்ஸ் என்ற உலகிலேயே மிக உயர்ந்த கார் ஒன்றையும் வாங்கினார்.

அநேகக் கிறிஸ்தவத் தலைவர்கள் தங்கள் வாழ்க்கையின் உச்சிக்குச் சென்றபின் தகாத பெண்ணுறவில் ஈடுபட்டு வீழ்ந்துபோன கதைகள் நமது உள்ளத்தை உடைத்துப் போடுகின்றன. சிலர் தங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் பெண் செயலாளர்களோடு ஓடிப்போய், மனைவிகளைத் தள்ளி விட்டிருக் கிறார்கள். புகழ் வாய்ந்த கிறிஸ்தவப் பெண்மணிகள் தங்களது கணவனையும், வீட்டையும் விட்டுவிட்டு வேறு மனிதரோடு வசிக்கிறதையும் பார்க்கிறோமே. இன்றைய நற்செய்திப் பணியாளர்களின் கூட்டம் உண்மையாகவே முற்றிலும் தூய்மையடைய வேண்டியதாக இருக்கிறது.

கிறிஸ்தவ அரசியல்வாதிகள் தங்களது உலகு சார்ந்த பேச்சுக்களாலும், கேள்விக்குரிய நடக்கைகளாலும், மறைமுக உறவுகளாலும் கிறிஸ்துவின் பெயரை மாசுபடுத்துகிறதை நான் நினைத்துப் பார்க்கிறேன். அதனால் கிறிஸ்துவின் பெயருக்கு விளைந்த அவமானங்கள் அளவிடமுடியாதவை.

பிரசித்திபெற்ற சிறைக் கைதிகள் சிலர் தாங்கள் இரட்சிக்கப்பட்டதாகக் கூறுவார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று விசுவாசிகள் ஊக்கமாக விண்ணப்பிப்பார்கள். இவர்களது வேண்டுகோளுக்கிணங்க ஐயத் தோடும் அரைமனதோடும் நீதிபதிகள் அவர்களை விடுதலை செய்வார்கள். சில கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் அவர்களைத் தங்களது பிரசங்கிகளாக நிறுத்திப் பணம் சம்பாதிப்பார்கள். தங்களது விசுவாச வாழ்க்கையில் நிலைத்திருக்க முடியாத அக்கைதிகள், மிக விரைவாக வீழ்ந்து போவதால் மீண்டும் சிறைக்குச் சென்று விடுவர்.

தேர்வுகளில் ஏமாற்றுகிற மாணாக்கர், பக்கத்து வீட்டாரோடு சண்டையிடும் இல்லத்தரசிகள், முன்கோபமும் முரட்டுக் குணமும் கொண்ட கிறிஸ்தவக் கூட்டம் யாவரும் தங்களது நடைமுறை வாழ்க்கையில் வேதாகமத்திற்கு மாதிரியாகத் திகழ்வதில்லை; இவர்கள் கிறிஸ்துவின் பெயருக்கு அவதூறாகவே உள்ளனர். கிறிஸ்துவின் சாயலற்ற நிலையில் வாழும் கிறிஸ்தவர்களால் அவர் நாமத்தை எதிரிகள், தூற்றவே இடமுண்டாகிறது. இவ்விதம் கிறிஸ்துவின் மாதிரிகளாகத் திகழ்வதில் குறைபாடுகள் காணப்படுவதால் மனமாற்றம் அடையாத ஏனையோர், “உங்களது நடத்தையே சத்தமாய்ப் பேசுகிறது; நீங்கள் பேசும் வார்த்தைகள் எனக்குக் கேட்கிறதில்லை” என்று சொல்வதற்கு ஏதுவாகிறது. இவ்வகையான நடக்கைகளைக் கண்ணுற்ற காரணத்தினால்தான் ஜான் மெக்ஆர்தர், “இயேசு நாதர், தமது பிரதிநிதிகளைக் காட்டிலும் குணநல மேம்பாடு உடையவர்” என்று கூறினார் போலும்.

கட்டளைக்குக் கீழ்ப்படியாத போர்ச்சேவகன் ஒருவனை மகா அலெக் ஸாண்டரிடம் கொண்டு வந்தார்கள். “உன் பெயரென்ன?” என்று அந்த மாமன்னன் வினவினான். அதற்கு அச்சேவகன் “அலெக்ஸாண்டர்” எனப் பதிலுரைத்தான். “அலெக்ஸாண்டரா” என்று ஆச்சரியத்தோடு கேட்ட அந்த மாமன்னன், “ஒன்று உன் பெயரை மாற்றிக்கொள், இல்லையேல் உனது நடத்தையை மாற்றிக்கொள்” என்று கட்டளையிட்டான்.

கிறிஸ்தவன் என்ற பெயரைத் தாங்குகிற நாம் பெயருக்கேற்ற வண்ணமே நடந்துகொள்ள வேண்டும். “எப்படி விசுவாசிக்க வேண்டுமோ அப்படியே விசுவாசி என்று சொல்லுகிறவர், எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடக்க வில்லை என்றால் அது எவ்வளவு முரணானது” என்று எச். ஜி. போஸ்ச் என்பார் கூறியுள்ளார்.

ஒருமுறை ஈ. ஸ்டான்லி ஜோன்ஸ் என்பார் மகாத்மா காந்தியைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

“இந்தியா வளர்ச்சியடைவதற்கும், இந்தியர் மீட்படைவதற்கும் நான் விரும்புகிறேன். இது நிறைவேற கிறிஸ்தவம் நம்முடையதல்ல



வென்றோ, அந்நிய நாட்டைச் சேர்ந்தது என்றோ, அந்நிய அரசாங் கத்தைச் சேர்ந்தது என்றோ கருதாது, இந்தியாவோடு இரண்டறக் கலந்து, இந்த மண்ணைச் சேர்ந்தது என்று காணப்பட வேண்டும். இது எனது பேராவலாக இருக்கிறது. இது சாத்தியமாக நாங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் கூறும் ஆலோசனை யாது?” என வினவினார். மகாத்மா காந்தி ஆழ்ந்து சிந்தித்தவராக, “கிறிஸ்தவ ராகிய நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் போல வாழத் தொடங்குங்கள், இரண்டாவதாக உங்கள் சமயத்தைக் கலப்படமின்றியும், சாரம் குறைந்து போகாதபடியும் பின்பற்றுங்கள். மூன்றாவதாக, கிறிஸ்தவத் திற்கு ஆதாரமும், மையமுமாக இருக்கக்கூடிய அன்பிற்கு முக்கியத் துவம் கொடுங்கள். இவையே நான் கூறும் ஆலோசனை” என்றார்.

மகாத்மா காந்தி ஒருமுறை, “கிறிஸ்தவர்களைக் குறித்து நான் அறியாதிருப் பேனென்றால், நானும் ஒரு கிறிஸ்தவனாக மாறியிருப்பேன்” எனக் கூறினதாகச் சொல்லப்படுகிறது.

பிரய்ன் குட்வின் என்பார் கூறியது கவனிக்கத்தக்கது.

ஒரு கிறிஸ்தவப் பள்ளியிலே மிஷனரி ஒருவர் ஆசிரியராக இருந்தார். அவரிடம் படித்த சீன மாணவன் ஒருவன் அந்த ஆசிரியரைக் குறித்துப் பெருமதிப்பு கொண்டிருந்தான். சில ஆண்டுகள் கழிந்தன. தனது நகரத்திற்கு அந்த ஆசிரியர் மீண்டும் வந்திருப்பதாக அறிந்து அவன் அவரைக் காணும் ஆவலுடன் அவர் தங்கியிருந்த விடுதிக் குச் சென்றான். ஆனால் அவனுக்கு அவரைப் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. விடுதியிலிருந்து விரட்டியடிக்கப் பட்டான். அவன் திரும்பிச் சென்ற போது, “இவ்விதமாகத்தான் கிறிஸ்தவர்கள் நடந்துகொள்வார்கள்” என்று தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டான். இவ்விதமாக அவனைத் தரக்குறைவாக நடத்தினதால் அந்த ஆசிரியர் அந்த மாணவனிடத்தில் காண்பித்த அக்கறையும் கவனமும் பயனற்றுப்போயின. அந்த வாலிபனின் பெயர் மாசேதுங்.

இத்தகைய கேடு நிறைந்த செய்திகள் எத்தனை எத்தனை. ஆனால் முழுக் கதையும் இதுவல்ல. அதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். ●

# 3

# இயேசு கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் சீலர்கள்

சென்ற அத்தியாயத்தில், உண்மைக் கிறிஸ்தவர்களும் பெயர்க் கிறிஸ்தவர் களும், கிறிஸ்துவைத் தவறாகச் சித்தரித்துக் காட்டுவதைக் குறித்துப் பார்த்தோம். இது நமக்கு மிகுந்த மனச்சோர்வை உண்டு பண்ணுகிறது, ஆனால் அச்சித்திரத்திற்கு மறுபுறம் ஒன்று உண்டு. அதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். தேவகுமாரனின் உன்னதப் பண்புகளைச் சீரிய முறையில் தம்மைச்சூழ இருப்போருக்குப் பிரதிபலித்துக்காட்டும் மெய்பக்தர்களும் இருக்கின்றனர்.

எனது மாணவர்களில் ஒருவரும் எனக்கு நெருங்கின நண்பருமான இராபர்ட் என்பார் என் நினைவுக்கு வருகிறார். புற்று நோயினால் அவதியுற்று மரணத்தருவாயில் இருந்த அவரது படுக்கையறை பரலோகத்தின் முன்னறை யாகக் காட்சியளித்தது. அவருக்கு மருத்துவ உதவி செய்து கொண்டிருந்த செவிலி, ஒருமுறை, "ராபர்ட் அவர்கள் எப்பொழுதும் இயேசு கிறிஸ்துவையே நினைவூட்டுகிறார்" என அவரைப்பற்றிக் கூறினார்.

கிறிஸ்துவைப் பறைசாற்றுபவர் பலர்; ஆயின் கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுபவர் சிலரே! ராபர்ட் சேப்மேன் என்பார் கிறிஸ்துவை வாழ்ந்து காட்டு வதையே தனது வாழ்க்கையின் குறிக்கோளாக நியமித்துக் கொண்டார். அன்னா ரைக் குறித்து, "நான் எதைக் கற்பிக்கிறேனோ அவ்விதமாகவே அவர் வாழ்கிறார்" என்று ஜான் நெல்சன் டார்பி என்பார் குறிப்பிட்டுள்ளார்.

வில்லியம் ஆர்னாட் என்பாரைப் பற்றி "அவரது பிரசங்கம் சிறப்பாக இருக்கும்; அவரது எழுத்து வன்மையோ இன்னும் சிறப்பானது; ஆனால் அவரது ஜீவியமோ எல்லாவற்றைக் காட்டிலும் மிகச்சிறப்பானது" என்று ஒரு நண்பர் விவரித்துள்ளார்.



சாது சுந்தர்சிங் மனம் மாற்றம் பெற்ற சீக்கியர். அவர் ஒருமுறை கிறிஸ்தவர் ஒருவரது இல்லத்திற்குச் சென்று கதவைத் தட்டினார். கதவைத் திறந்த பணிப் பெண் பரபரப்புடன் தன் எஜமாட்டியிடம் ஓடிச்சென்று, "இயேசு கிறிஸ்து நம் வீட்டிற்கு வந்திருக்கிறார்" என்று அறிவித்தாள். இன்னொரு இல்லத்தில் சாது சுந்தர்சிங் குழந்தைகளுடன் தரையில் அமர்ந்து விளையாடி, அவர்களது உள்ளத்தில் பதியத்தக்க நன்மதிப்பைப் பெற்றார். அன்றிரவு அக்குழந்தைகள் இயேசு கிறிஸ்து தங்களைத் தூங்க வைப்பாரா என்று கேட்டனர். அதைப் பற்றி சாதுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர், "சாது சுந்தர்சிங்கைச் சந்தித்தோரது கருத்தையே, அக்குழந்தைகளின் பேச்சு வெளிப்படுத்துகிறது. அவருடைய சாந்தகுணமும் இனிய சுபாவமும் கிறிஸ்துவைப் போன்ற தோற்றத்திற்கு ஒத்திருந்தன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கிறிஸ்துவின் சாயலை அணிந்த மனிதர்

இராபர்ட் முரே மேக்செய்னியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஜேம்ஸ் ஏ. ஸ்டுவேர்ட் எழுதியுள்ளதாவது:

> "மேக் செய்னி பேசுவதற்குத் தனது வாயைத் திறப்பதற்கு முன்னரே அவருடைய பரிசுத்தம் தெரியவரும். அவருடைய தோற்றமே அவரது பரிசுத்தத்தை அறிவிக்கும். ஓரிரவு அவர் வட ஸ்காட்லாந் தைச் சேர்ந்த ஒரு போதகரோடு தங்க நேர்ந்தது. அந்தப் போதகர் மேக்செய்னியின் செயல்களைக் கண்ணுற்று வியப்பின் மிகுதியால் மெய்சிலிர்த்து அவருக்கு விடைகொடுத்து அனுப்பும்போது, கண்ணீர் வடித்தவராக, 'நான் பார்த்த மனிதர்களில் கிறிஸ்துவின் சாயலை இவ்வளவாக உடையவர் இவரே' என்றார்."

மற்றொரு இடத்தில் ஸ்டுவேர்ட் அவரைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்:

> "மேக்செய்னி திரைக்குள்ளாக தேவனோடு பரிசுத்த உறவுகொண்ட நிலையில் திளைத்தவராகப் பல மணி நேரங்களைச் செலவிடுவார், அந்த நேரங்களில் பேரானந்த மிகுதியினால் துதித்து ஆராதிப்பார். அவர் கல்வாரியின் அன்பிலே மூழ்கி, கிறிஸ்துவின் நற்கந்தத்தைச் சுமந்தவராய் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து வெளிவருவார்; அவர் செல்லும் வீடுகளில் அந்த சுகந்தவாசனை வீசும். அவர் கிறிஸ்துவத் தொண்டாற்றிய பிரிட்டன் நாட்டின் அனைத்து தெருக் களிலும், நகரங்களிலும் அவரைச் சந்தித்த மக்கள் இயேசு கிறிஸ்து வின் சாயலை அவர் முகத்தில் கண்டு வியப்பதிர்வு கொண்டனர்."

ஸ்காட்லாந்தின் ஓட்ட வீரரும், மிஷனரியுமான எரிக் லிடில் ஜப்பானிய நாட்டில் அரசாங்க எதிரிகளைச் சித்திரவதை செய்வதற்கென்று வைத்திருந்த சிறைக் கூடத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த போது அவர் கிறிஸ்துவைப்

போல இருந்ததாக, சேலி மேக்னுசன் குறிப்பிட்டுள்ளார். "லிடிக் கிறிஸ்தவ மார்க்கத்தை வாழ்ந்து காட்டுபவராகக் காணப்பட்டதால் மக்கள் அவரைக் காணும்படியாகத் திரும்பத் திரும்ப வந்தனர். சியோசங் என்னுமிடத்தில் சீனர்கள் மத்தியில் எவ்விதம் இருந்தாரோ, அதுபோலவே அவர் இங்கும் வாழ்ந்ததால், "கிறிஸ்துவின் வடிவமென்று" மக்களால் சித்தரிக்கப்பட்டார். புறக்கணிக்கப் பட்ட வணிகர்களிடமும், வேசிகளிடமும் நட்பு பாராட்டினார். பலவீன மானவர்களுக்குத் தேவையான நிலக்கரியை அவரே சுமந்து கொண்டுபோவார். இளைஞர்களுக்குக் கற்பிப்பார், ஒருமுறை மற்றவர்களுக்கு உதவி செய் வதற்காகத் தனது கடிகாரத்தையும், போர்வையையும் விற்றுவிடவும் துணிந்தார், எனினும் எரிக் தம்மை மேன்மை பாராட்டிக்கொள்ளவில்லை. எளிய மனிதராகவே அவர் காணப்பட்டார்."

ரிச்சர்ட் ஹில்லாரி என்பார் "கடைசி எதிரி" என்னும் தனது நூலில், தன்னுடன் பணிபுரிந்த உடன் விமானி பீட்டர் பீஸ் எவ்வாறு தன்னை எரிச் சலடையச் செய்து தனக்கு ஒரு சவாலாக விளங்கினார் என்று ஒளிவு மறைவின்றி அறிக்கை செய்துள்ளார்:

"பீட்டர் பீஸ் எல்லாராலும் போற்றப்பட்ட கிறிஸ்தவராகவும், தான் சந்தித்தவர்களில் மிக அற்புதமானவராகவும் இருந்தார்" என ஹில்லாரி குறிப்பிட்டுள்ளார். பீட்டரின் இந்த நற்குணங்களே ஹில்லாரி எரிச்சலடையக் காரணங்களாக இருந்தன. பீட்டர் தனியாக இருக்கும் வேளையில் அவரை இரக்கமற்ற கொடூரமான முறையில் வசைமாரிப் பொழிந்து, அவரது விசுவாசத் திரையைக் கிழித்துவிட வேண்டுமென்று ஹில்லாரி கங்கணம் கட்டிக்கொண் டிருந்தார். அதற்கேற்ற வேளையும் வந்தது; இருவரும் ஒன்றாக மாண்ட்ரோவி லிருந்து எடின்பரோவிற்கு இரயிலில் பயணம் செய்தனர். ஹில்லாரி கடுகடுப்பான முகத்தோடு, "உங்கள் மதம் போலியானது, பாரம்பரியத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள்; அது பிறருக்கு சமூகத் தொண்டாற்றிட துணைபுரியும் ஏமாற்று வேலை, அவ்வளவுதான்" என்று தீப்பொறிகளைக் கக்கினார். ஐயோ பாவம் பீட்டர்! அவர் வாயைத் திறக்கவில்லை. மறுத்துப் பேச முயன்ற போது அவருடைய வாய் குளறியது. அவருடைய எதிரியின் கோபக்கணைகளால் துளைக்கப்பட்டவராய் நிலை தடுமாறிய பீட்டர் மௌனமானார். பீட்டரின் உயரிய பண்பை விளங்கிக்கொள்ள இயலாத நிலையில் தான் வாதத்தில் தோற்றுப் போனதை ஹில்லாரி உணர்ந்து கொண்டார். அவ்வுன்னதப் பணிவும், அவரது மார்க்கமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத அளவுக்குப் பிணைக்கப்பட்டிருந்தன. அந்தப் பிணைப்பே ஹில்லாரியின் எண்ணங்களைச் சிதறடித்து விட்டது.

இதே கருத்தைக் கொண்ட ஜெ.எச். ஜோவெட் என்பார் மெய்க்கிறிஸ்தவர் களைக் குறித்து எழுதியுள்ளதாவது:



"வாத நுண்திறன் பெற்ற உலகோருக்கு நீங்கள் நிகரானவர் அல்லர். அறிவாற்றல் நிறைந்த வாதங்களில் தோல்வியே உங்கள் பங்கு. ஆயினும், மீட்கப்பட்டோரது ஜீவியமோ வெற்றி பெறும் வாதமாக இருக்கிறது. 'சொஸ்தமாக் கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால், எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது' என வேதத்தில் காண்கிறோமே."

வேறொரு சம்பவத்தைக் குறித்து ஆர். டபுள்யு. டீ ஹான் எழுதியதாவது:

ஒரு தேவ ஊழியர், தன்னுடைய ஊழியக் களத்திற்கு வந்தவுடன், அங்கு குழுமியிருந்த கிராம மக்களுக்கு நற்செய்தியை வழங்கினார். அப்போது இயேசு கிறிஸ்துவின் மனவுருக்கம், கருணையுள்ளம், அன்பு, கரிசனை, நற்செயல் ஆகிய நற்பண்புகளைக் குறித்துப் பேசி அவரைக் குறித்துச் சித்தரிக்கலானார். அந்த கிராம மக்கள் ஏற்கனவே அவரை அறிந்தவர்போல் தங்கள் தலைகளை அசைத்து, புன்முறுவல் பூத்ததைக் கண்ட தேவ ஊழியர், சற்றுக் குழப்பத்துடன், தனது செய்தியை நிறுத்தினவராக, "நான் யாரைக் குறித்துப் பேசுகிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?" என வினவினார். உடனே ஒருவர், "ஆம், அவரை நாங்கள் நன்கு அறிவோம். இங்கே அவர் அடிக்கடி வருவார்" எனக் கூறினார். தங்களது குக்கிராமத்திற்கு வெகு தொலைவிலிருந்து வந்து தங்களுக்கு மருத்துவ சேவை செய்யும் மற்றொரு தேவ ஊழியரைக் குறித்தே அவர்கள் அவ்வாறு ஆவலுடன் எடுத்துரைத்தனர். தியாகச் செம்மலான அன்னாரது வாழ்க்கையில், இயேசு கிறிஸ்துவின் சாயலை அந்த கிராம மக்கள் கண்டனர். அவர் உண்மை யாகவே கிறிஸ்துவின் சாயலை அணிந்துள்ள நல்லதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்திருக்கிறார்.

டேவிட் லிவிங்ஸ்டனின் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறித்து சர் ஹென்றி எம் ஸ்டேன்லி என்பார் எழுதியதாவது:

"சமயத்தை வெறுத்து, இழிவான நிலையில் லண்டன் மாநகரில் வாழ்ந்த நான் ஆப்பிரிக்காவிற்குச் சென்றேன். யுத்தங்கள், திரள் கூட்டங்கள் அரசியல் கூட்டங்கள், உணர்ச்சிகளைத் தூண்டும் செய்திகள் ஆகியவற்றிலே மனதையும், கவனத்தையும் செலுத்தி வந்த என்னைப் போன்ற நிருபர்களுக்கு ஆப்பிரிக்காவில் அதிக வேலை யில்லை. அங்கே நான் இருந்தபோது என்னைக் குறித்து நான் அறிந்துகொள்ளப் பல நாட்கள் கழிந்தன. உலகியல் செயலற்ற ஓரிடத்தில் நான் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். ஆங்கு வயது முதிர்ந்தவராகத் தனிமையில் வாழ்ந்து வந்த டேவிட் லிவிங்ஸ்டனைக் கண்டபோது திகைத்தவனாய், "இந்த இருண்ட காட்டில் ஏன் இவர் வசிக்கிறார்? இங்கே இவர் வசிப்பதற்கு எது ஊக்கமளிக்கிறது?" என எனக்குள்ளே வினவினேன்.

> எங்கள் முதல் சந்திப்பு நிகழ்ந்து சில மாதங்கள் கழித்து, அவர் பேசுவதை ஆவலுடன் கேட்கிறவனாக நான் மாறிப்போனேன். "உனக்குள்ள எல்லாவற்றையும் விட்டு விட்டு என்னைப் பின் பற்றிவா" என்று அவருரைத்தது என்னை ஆச்சரியத்திற்குள் ஆழ்த் தியது. அன்னாரது பக்தி, சாந்தம், வைராக்கியம், வாஞ்சை, ஊழியத்தில் காட்டிய அமைதி ஆகியவற்றைக் கண்ட நான் கொஞ்சம் கொஞ்சமாக அதில் ஆவல் காட்டினேன். நான் இரட்சிக்கப்படுவதற்காக அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லையெனினும், நான் கடைசியில் அவரது சாட்சியுள்ள வாழ்க்கையைக் கண்டு இரட்சிக்கப்பட்டேன்." டேவிட் லிவிங்ஸ்டனின் வாழ்க்கை எவ்வளவு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது!

பில்லி கிரஹாம், அமெரிக்க ஜனாதிபதி ஜேரால்டு போர்ட், ஜேக் நிக்காலஸ் மற்றுமொரு சிறந்த விளையாட்டு வீரர் ஆகியோர் சேர்ந்து கோல்ப் விளையாடிய போது நடந்த நிகழ்ச்சியைக் குறித்து ஆர்.சி. ஸ்பிரவுல் எழுதுகிறார்: "அந்தச் சிறந்த வீரர் தனது நண்பரிடம், "பில்லி கிரஹாம் தன்னுடைய மதத்தை எனக்குள் திணிக்க வேண்டிய அவசியமில்லை" என்று முறையிட்டார். பின்னர் மைதானத்தை விட்டு வெளியே சென்றபோது பந்துகளைச் சிதறடித்துத் தன்கோபத்தைத் தீர்த்துக் கொண்டார். தொடர்ந்து சென்ற நண்பர், "விளையாட்டுத் திடலில் பில்லி உங்களிடம் சற்று முரட்டுத்தனமாக நடந்து கொண்டாரா?" என்று கேட்டார். அதற்கு அந்த வீரர் தடுமாற்றம் அடைந்தவராகப் பெருமூச்சு விட்டு, 'அப்படி யொன்றும் இல்லை, கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்து ஒன்றுமே சொல்லவில்லை' எனக் கூறினார்." இந்தச் சம்பவத்தை ஸ்பிரவுல் இவ்வாறு விளக்குகிறார், "ஆச்சரியம் என்னவென்றால், பில்லிகிரஹாம் தேவனைப் பற்றியோ, கிறிஸ்து வைப் பற்றியோ, கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றியோ ஒன்றும் சொல்லவில்லை. எனினும் பில்லி கிரஹாம் தனது மார்க்கத்தைத் தனக்குள் திணிக்கிறதாக அந்த வீரர் குற்றம் கூறினவராகக் கடும் சீற்றத்துடன் விளையாட்டை விட்டு வெளி யேறிவிட்டார். அப்படியானால் நடந்தது என்ன? நற்செய்தி ஊழியரான பில்லி கிரஹாம் கிறிஸ்துவின் சாயலை அந்தத் திடலில் பிரதிபலித்துக் காட்டியது அந்த வீரருக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது. இதுதான் உண்மை."

இந்தியாவில் தேவ ஊழியம் செய்யும் மிஷனரிகள், அங்கு ஆந்திர மாநிலத்தில் பணியாற்றிய சைலக்ஸ் ஃபாக்ஸிற்கு விருந்து ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். அவரைக் காண வந்த பக்கத்து வீட்டு இந்துப் பெண்மணி, சிறிது நேரம் அவரோடு உரையாடிவிட்டு திரும்பிச் சென்று விட்டார். ஃபாக்ஸ் சென்றபின் மீண்டும் அங்கே விரைந்து வந்த அந்தப் பெண்மணி, "நான் அவருடைய முகத்தில் இறைவனைக் கண்டேன்" என்றாள். பல கடவுளரை நம்பும் அப்பெண் ஃபாக்ஸின் முகத்தில் ஒன்றான மெய்தேவனைக் கண்டது வியப்பிலும் வியப்பே!



எவ்வித முயற்சியுமின்றி இத்தகைய பரிசுத்தத்தை அடைந்துவிட முடியாது. இதற்கு மனஉறுதி இன்றியமையாததாகும். பரிசுத்தத்தை விரும்பும் விசுவாசிகள், அந்த இலக்கை அடையத் தங்களைச் சீர்ப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கென அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். "பரிசுத்தமாய் வாழ்வதற்கு விசுவாசிகளை ஊக்கமளிப்பது யாது?" என்னும் கேள்வி நமதுள்ளத்தில் எழுகிறதல்லவா.

தொடர்ந்து படியுங்கள். ●

# 4

# ஏன் பரிசுத்தமாக இருக்க வேண்டும்?

ஒரு விசுவாசி இன்னும் அதிகமாகப் பரிசுத்தமாக வாழ விரும்புவது ஏன்?

"எக்காலத்திலும் நான் ஆண்டவரைப் போலவே இருப்பேன்" என்னும் கருத்துமிக்க பாடலை விசுவாசி பாடுவதன் காரணம் என்ன? அவன் கிறிஸ்துவின் சாயலை அணிந்துகொள்ள வேண்டுமென்னும் வாஞ்சை கொண்டோனாக ஊக்கத்துடன் போராடுவதன் காரணம் என்ன?

ஒருவனுடைய மனமாற்றத்தின் தருணத்தில், அவனுக்குள்ளாக ஒரு புதிய உள்ளுணர்வு குடிகொள்கிறது. அவன் பாவத்தை வெறுக்கவும், பரிசுத்தத்தை நாடவும் கூடிய புதியதொரு இயல்பினைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்கிறான். அவனுக்குள்ளாகக் குடிகொண்டிருக்கும் தூய ஆவியானவர் அவனுக்குள் பரிசுத்த குணங்களைத் தோற்றுவிக்க ஏங்குகிறார். அத்தகைய புதிய இயல்பே அவனுடைய தனிப்பட்ட வாழ்வில் வெற்றியடைய வேண்டும் என்னும் நாட்டத்தைத் தோற்றுவிக்கிறது.

மேலும், ஒரு கிறிஸ்தவன் பரிசுத்தத்தை ஏன் நாட வேண்டும்; உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றின் சோதனைகளை ஏன் எதிர்த்து நிற்க வேண்டும் என்பதற்கான முக்கியமான காரணங்கள் சில உள்ளன.

ஒரு விசுவாசியின் பாவத்தினால் ஏற்படும் விளைவுகளில் மிக மோசமானது இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு ஏற்படும் அவப்பெயரேயாகும். ஒரு சீடனை அவனுடைய குருவோடு இணைத்து இவ்வுலக மக்கள் பேசுவதில் தவறேதுமில்லை. அந்தச் சீடன் பாவம் புரிகிறபோது, உலகம் அவனுடைய குருவின் மேல் சேற்றை வாரி இறைத்து, நித்தித்து அவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும். சீடர்களது அவமானச் செயல்களைக் கர்த்தருடைய மாண்புமிக்க பெயரோடு உலகோர் இணைத்து விடுவார்கள். அமெரிக்காவில் ஒரு



பிரபலமான தொலைக்காட்சிப் பிரசங்கியார், 1987-ஆம் ஆண்டு பாலியல் குற்றத்தில் சிக்கிக் கொண்டார். அப்பொழுது அந்நாட்டில் எல்லாராலும் அறியப்பட்ட நாத்திகர் ஒருவர் "மதம் பொல்லாங்கானதும், அருவருப்பானதும் அசுத்தமானதுமாக இருக்கிறது என்பதற்கு இது இன்னுமோர் எடுத்துக்காட்டு" என்று அந்நிகழ்ச்சியைக் குறித்து விமர்சித்தார். தாவீது செய்த விபச்சாரச் செயலும், கொலையும் கர்த்தருடைய பெயருக்கு அளவிடமுடியா களங்கத்தை ஏற்படுத்தின (2 சாமு. 12:14). விக்டர் ஜேக் என்பார் தாவீதின் பாவச் செயல் நான்குவிதத் தீமைகளை ஏற்படுத்திவிட்டது என்று பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார்:

> ஒன்று, தேவனுடைய முகத்திலிருந்த புன்முறுவல் மறைந்து போயிற்று. "அது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது" (2 சாமு. 11:27) என்று வாசிக்கிறோம்.
>
> இரண்டாவதாக, தாவீது தன் இருதயத்தில் குடிகொண்டிருந்த சமாதானத்தை இழந்துவிட்டான். "நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன்" (2 சாமு. 12:13) என எழுதப்பட்டிருக்கிறது.
>
> மூன்றாவதாக, தாவீதின் இராஜரீகம் நிலையற்றுப் போயிற்று. "பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்" (2 சாமு. 12:10).
>
> நான்காவதாக, அவன் சமுதாயத்தில் கொண்டிருந்த நற்சாட்சியை இழந்து விட்டான். "இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்கக் காரணமாயிருந்தாய்" (2 சாமு. 12:14) என்று வாசிக்கிறோம்.

நமது இரட்சகர் நம்முடைய பாவங்களுக்காக எவ்வளவு பெரிய விலைக் கிரயத்தைச் செலுத்த வேண்டியதாயிற்று என்னும் எண்ணம் நாம் பரிசுத்தராய் வாழ்வதற்கு நம்மைத் தூண்டிவிட வேண்டும் (1 பேதுரு 2:24). தேவ குமாரனைச் சிலுவை மரத்தில் ஆணிகளால் அறைந்த பாவத்தைக் குறித்துச் சிந்திக்கக் கூடிய விசுவாசி, பாவத்தை மீண்டும் செய்ய மாட்டான். பாவத்திற்குத் தண்டனையாக அவர் விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்த வேண்டியதாயிற்று. ஆகவே, அவரைப் பின்பற்றுவோர் எவ்வாறு பாவத்தைச் சகித்துக் கொள்ள முடியும்? எவ்வாறு அதனுடன் கைகோத்து நடக்க முடியும்?

நாம் பரிசுத்தராய் ஜீவிக்க கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவ வேண்டும். நாம் தேவனற்றவர்களாக, அவருக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தார். நம்மை மீட்கும் பொருட்டு விலைமதிக்க முடியாத விலைக்கிரயத்தைச் செலுத்தித் தமது அன்பை விளங்கச் செய்தார். தேவ பக்தி நிறைந்த வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் அவர் நமக்கு நல்கியிருக்கிறார். அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பிற்கு மேலாக அவராலே

அன்புகூர முடியாது. நமது முந்தின வாழ்க்கைக்குத் திரும்பிச் செல்லுதல் அவர் நம்மீது கொண்டிருக்கும் ஒப்பற்ற அன்பிற்குச் செலுத்தும் பதிலாகுமென்றால் அது எவ்வளவு பரிதாபத்திற்குரியதாகும்.

"நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்னும் கட்டளையை இஸ்ரவேல் மக்கள் மறந்ததுபோல, நாமும் அதனை மிக எளிதில் மறந்து விடுகிறோம் (லேவி. 11:44; 1 பேது. 1:16). பழைய ஏற்பாட்டில் இக்கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இக்காலத்திற்கும் இது முற்றும் பொருந்தும் என அப்போஸ்தலன் பேதுரு ஐயத்திற்கிடமின்றி எழுதி வைத்துள்ளார். பரிசுத்தத்தில் தேவனுக்கு ஒப்பானவர் தேவனே. அவருடைய குமாரனை நோக்கிப் பார்க்கிறவர்கள், அவர் ஒருவரே பரிசுத்தத்திற்கு அளவு கோலாக இருக்கிறார் என்பதை எளிதில் அறிந்து கொள்வார்கள்.

## பாவம் தேவனுடைய இதயத்தைத் தகர்க்கிறது

நாம் கிறிஸ்துவின்பால் கொண்டிருக்கும் அன்பானது, நாம் அவருக்குப் பயனுள்ள தூய பாத்திரங்களாக இருக்கும்படியான விருப்பத்தை நம்மிடத்தில் உண்டுபண்ண வேண்டும். உண்மையாகவே நாம் அவரிடத்தில் அன்புகூர்வோமெனில் அவரைப் பிரியப்படுத்த முனைவோம். பாவமானது அவருடைய பிரமாணத்தை மீறுவதோடு அவருடைய இருதயத்தையும் பிளக்கிறது. ஆனால் பரிசுத்தமோ அவரை மனமகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார் (யோவான். 14:15). மேலும் பரிசுத்தமாயிருக்கும்படி கட்டளையையும் நாம் பெற்றிருக்கிறோம் (1 பேதுரு 1:15,16; எபி. 12:14).

ஏனைய விசுவாசிகளும், அவிசுவாசிகளும் இடறுவதற்கு ஒரு விசுவாசியின் பாவம் காரணமாயிருக்கிறது. ஒரு விசுவாசி பாவத்தினால் வீழ்ச்சியடைவதைக் காண்கிற, இரட்சிக்கப்படாதோர், நற்செய்தியானது அதனை ஏற்றுக் கொள்வோரது வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துகிறதில்லை என்னும் முடிவுக்கு வந்தவர்களாகிக் கிறிஸ்துவண்டை வரத்தயங்குவார்கள். அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவதற்கு எதிரான முடிவிற்கு வருவதோடு, ஊக்கத்தோடு கிறிஸ்தவ விசுவாசத்தை எள்ளி நகையாடவும் செய்வர். மனிதர்களை அடிமைப்படுத்துவதைக் கிறிஸ்தவர்கள் பொறுத்துக்கொள்வதையும், இழிவாகப் பேசுகிறதையும், தவறான செயல்களில் ஈடுபடுகிறதையும் கண்ணுற்ற மாற்கு டுவைன் என்பார், கிறிஸ்தவ மார்க்கத்தை விட்டு வெளியேறினார். உண்மையான தேவன் ஒருவரே என்னும் கருத்தை யூதர்களிடமிருந்தும், கிறிஸ்தவர்களிடமிருந்தும் கற்றுக்கொண்ட முகமது, கிறிஸ்தவர்களது சாட்சியற்ற ஜீவியத்தினாலே விலகிச் சென்றுவிட்டார். பிரெய்ன் குட்வின் என்பார், "கிறிஸ்துவின் மீதும், ஏனையோர் மீதும் கிறிஸ்தவர்கள் சற்றுக் கூடுதலாக அன்புகூருகிறவர்களாக இருந்திருப்பின், தற்போது முஸ்லீம் உலகமாகக் காணும் வரலாறு வேறுவிதமாக மாற்றம் பெற்றிருக்கும்" என விமர்சித்துள்ளார்.



நாம் பாவம் செய்யும்போது, மற்ற விசுவாசிகளும் இடறல் அடைகின்றனர். மேலும், அதன் காரணமாக அவர்கள் அடையும் ஏமாற்றம் அவர்களை விசுவாசத்தில் குன்றிப்போகச் செய்கிறது. நமது குடும்பத்தினரும், சபையினரும் நம்மீது கொண்டிருந்த நம்பிக்கை சீர்குலைந்து போவதால் புண்படுத்தப்படுகின்றனர். இதனால் ஏற்படும் அவமானத்திற்கும், வேதனைக்கும் நமது குடும்பமே பொறுப்பேற்க வேண்டியதாயிருக்கிறது. நமது பாவம் வெளியரங்கமானால் நமது சபையைக் குறித்து விரும்பத்தகாத அவதூறான பேச்சுக்களைச் சந்திக்க நேரிடும். மறைமுகமான பாவங்கள் சபையின் ஆவிக்குரிய தரத்தையும், அதன் செயல் ஆக்கங்களையும் குன்றிப்போகச் செய்யும். ஒரு வாலிபனைக் கர்த்தரிடத்தில் வழிநடத்தினவரே அவமானத்தை உண்டாக்கும் பாவத்தைச் செய்வாரானால், அதையறியும் அவ்வாலிபன் தான் வஞ்சிக்கப்பட்டதாக நினைத்து மனமுடைந்து போவான். மற்றவர்களைத் தாங்குகிற தரிசனமும் விசுவாச உள்ளமும் கொண்ட நண்பர்களால், கிறிஸ்தவர்கள் மீண்டும் மீண்டும் இடறாதபடிக் காக்கப்படுகின்றனர். இவ்வுண்மையைப் பற்றிய எண்ணம் அப்படிப்பட்டவர்களது உள்ளத்தை ஊடுருவிப் பாய வேண்டும்!

பரிசுத்த ஜீவியமே மிகச் சிறந்த ஜீவியம். அதுவே ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்திற்கும் சிறந்தது. அது உடல் நலத்தையும், மன நலத்தையும் பேணுகிறது. அது ஆழ்ந்த வருத்தம், குற்றவுணர்வு, அவமானம் பல்வேறு விதமான நோய்கள் ஆகியவற்றினின்று காக்கும் அருமருந்தாம். அதுவே பரிபூரண ஆனந்தத்திற்கும் நித்திய பேரின்பத்திற்கும் நம்மை வழிநடத்துகிறது (1 யோவான் 1:4; சங். 16:11). வாலிபன் ஒருவன் ஒரு கிறிஸ்தவக் கூட்டத்தைவிட்டுத் துக்க முகத்தோடு வெளியே வந்தபோது, ஒருவர் அவனுடைய முகவாடலுக்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு அவன் "ஒரே சமயத்தில் சந்தோஷமாகவும், பரிசுத்தமாகவும் இருப்பது கடினம்" என விடை பகர்ந்தான். ஆயின், பரிசுத்தமில்லாமல் உண்மையான மகிழ்ச்சியோடு வாழ முடியாது என்பதே பேருண்மையாகும்.

நமது சரீரம் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் ஆலயமாக இருக்கிறது என்னும் அறிவு, "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தும்படி" நம்மை ஏவிவிடும் தூண்டுகோலாக இருக்கிறது (2 கொரி. 7:1). தேவத் திரித்துவத்தின் ஒரு நபர் நமக்குள்ளாக எப்போதும் குடிகொண்டிருக்கிறார்; அவர் நமது தேற்றரவாளராக இருக்கிறார் என்னும் வியத்தகு உள்ளுணர்வை நாம் ஒருபோதும் இழந்துவிடக்கூடாது.

"தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1 தீமோ. 4:8). நித்தியத்திற்குச் செல்ல அந்த தேவபக்தியே சிறந்த ஆயத்தமாகும். நாம் மிக

விரைவில் ஒரு நாளில் கர்த்தராகிய இயேசுவைச் சந்திக்கப்போகிறோம். மேலும் அவருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நிற்க வேண்டும். அந்த பய பக்திக்குரிய நிகழ்ச்சியை எண்ணியவர்களாக அதன் வெளிச்சத்தில் நாம் வாழ வேண்டும் என்பதையே அது வலியுறுத்துகிறது. மேலும் அந்த பயபக்தியானது பரிசுத்த வாழ்க்கையைச் சுட்டிக் காண்பிக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

## பாவத்தின் காரணமாக நாம் பேசமுடியாதபடித் தடுக்கப்படுகிறோம்

கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கான சுயாதீனத்தைப் பரிசுத்தம் அளிக்கிறது. ஆனால் பாவமோ நம்மைப் பேசமுடியாதபடித் தடுத்துவிடுகிறது. ஒருவரது அறிக்கை செய்யாத பாவம் குற்ற உணர்வையும், தகுதியற்றவர் என்னும் உணர்வையும் ஏற்படுத்தி அவரைச் செயலிழக்கச் செய்துவிடும். அப்படிப் பட்டவர், ஆவியானவர் தரும் விடுதலையை அனுபவிக்கிறதில்லை. அவ ருடைய சாட்சி தற்காலிகமாகச் சீர்குலைந்தும், அவரது நன்மதிப்பு கேள்விக் குறியாகவும் மாறிவிடுகின்றன.

பரிசுத்தமான வாழ்க்கை நடத்துபவர் நம்பிக்கையோடு ஜெபம் செய்கிற வராயிருப்பார். "நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்கா திருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனை களை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியால், நாம் வேண்டிக்கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோம்" (1 யோவான் 3:21,22). மாறாக, நம்முடைய இருதயங்களில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தோமானால், ஆண்டவர் நமக்குச் செவிகொடார் (சங். 66:18).

## பாவம் ஜெப சங்கிலியை அறுத்துவிடுகிறது

ஒரு விசுவாசி பாவம் செய்கிறபோது, அவன் தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியம் முறிந்துவிடுகிறது. இதனை அநேகர் பொருட்படுத்துகிறதில்லை யெனினும், இது மிகவும் கருத்திற்கொள்ள வேண்டியதொன்றாகும். பாவத்தினால், தேவனுக்கும் தனக்கும் சற்று இடைவெளியை உண்டாக்கிக் கொள்கிறவர் தொடர்ந்து வரும் இன்னல்களில் சிக்கிக்கொள்கிறார். தேவனுடன் ஐக்கியம் இல்லாத நிலையில் அவர் எடுக்கிற தீர்மானம், ஏற்படுத்திக்கொள்கிற உறவு, சோதனையில் வீழ்ந்து போகுதல் ஆகியவை அம்மனிதனை சிறையிலிட்டு, அவருடைய எஞ்சிய வாழ்க்கையை இருள்சூழச் செய்துவிடும்.

அதற்கு மாறாக தேவபயம் பரிசுத்தத்திற்குத் தூண்டுகோலாக இருக்கிறது. அது வல்லமை நிறைந்ததாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். 'தேவ பயம்' என்னும் சொற்றொடருக்கு மரியாதை அல்லது பயபக்தி என்பதே



பொருளாகும் என்றும், அதற்கு அதிகமாக ஒன்றுமில்லையென்று சொல்லும் அளவிற்கு இந்நாட்களில் அதன் புனிதத் தன்மை பறிபோய்விட்டது. அச் சொற்றொடருக்கு ஆரோக்கியமான தேவ பயம், அவருக்குத் துக்கத்தை ஏற்படுத்துவதால் உண்டாகும் பயம், அவர் அளிக்கும் சிட்சையைக் குறித்த பயம் ஆகிய அர்த்தங்களும் உள்ளன என்று சொல்லவேண்டிய காலம் வந்துவிட்டது. பிதாக்களுடைய அக்கிரமத்தைத் தேவன் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராய் இருக்கிறார் என்னும் பொருளும் ஒரு வகையில் அதில் அடங்கியுள்ளது எனலாம். அதென்னவெனில், தகப்பன்மார்கள் பலர் தங்களுடைய மனைவிகளுக்கு உண்மையற்றவர்களாக வாழ்ந்து, பிற் காலத்தில் அவர்களது பிள்ளைகள் அதே பாவத்தைத் திரும்பச் செய்கிறதைக் காண வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே பரிசுத்தத்தின் தூண்டுகோலாகிய தேவ பயம் உள்ளவர்களாக நாம் காணப்பட வேண்டும்.

இதுகாறும், பரிசுத்தத்தை நாடும் வாழ்க்கையில் நாம் ஏன் ஓய்ந்திருக்கக் கூடாது என்பதற்கும், நம்முடைய மீட்பரின் சாயலில் வளர்கிறதற்கு நாம் ஏன் ஊக்கம் கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்பதற்குமுரிய சில காரணங் களைக் கற்றறிந்தோம்.

இப்பொழுது பரிசுத்தத்தைக் குறித்து ஆழ்ந்து அறிவதற்கான நேரம் வந்துவிட்டது. ●

# 5

# பரிசுத்தமாகுதலின் நான்கு நிலைகள்

தான் இரட்சிப்படைவதற்கு முன்னரே பரிசுத்த ஆவியானவரால் முன் குறிக்கப்பட்டவர் என்பதை அருள் என்பவர் அறியாதிருந்தார். அவர் பிறப்பதற்கு முன்னரே பிரித்தெடுக்கப்பட்டவர் என்று சொல்வதே அதனினும் உகந்த உண்மையாகும். அவரது வாழ்க்கையின் பல்வேறு கால கட்டத்தில் நடந்த சம்பவங்களின் உட்கருத்தை அந்தந்த நேரங்களில் அவர் அறியவில்லை. ஒரு கட்டத்தில் சில உண்மையான விசுவாசிகளின் தொடர்பு அவருக்குக் கிட்டியது. முன்பின் அறியாத ஒருவர் ஒருநாள் அவருக்கு நற்செய்திக் கைப்பிரதி யொன்றைக் கொடுத்து, அதைப்படிக்கும்படி கேட்டுக் கொண்டார். வேறொரு நாள் வானொலியில் ஒலிபரப்பான நற்செய்தியைத் தற்செயலாகக் கேட்க நேரிட்டது. இன்னொரு சமயம் அவருடன் அலுவல்புரியும் நண்பர் தனது மனமாற்றத்தின் சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். தொலைக்காட்சியில் நற்செய்திப் பெருவிழா ஒன்றையும் அவர் கண்டார். இவைகளுக்குப் பிறகு, அவருடைய மனைவி மனமாற்றம் அடைந்தவராக இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அஃது அவருடைய குடும்பச் சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றிப் புதுப்பொலிவு அடையச் செய்தது. இந்நிகழ்ச்சிகள் யாவும் அவருடைய வாழ்க்கை ஓட்டத்தில் தற்செயலாக ஏற்பட்டது போலக் காணப்படினும் இந் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர் சங்கிலிபோல் தனது வாழ்க்கையில் தூய ஆவியானவராலே ஏற்படுத்தப்பட்டவை என்பதைத் தான் இரட்சிப்படைந்த பின்னரே அவரால் அறிந்து கொள்ள முடிந்தது. இயேசு கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக விசுவாசித்து ஏற்றுக்கொண்ட தருணத்திலே தேவனுக்கு முன்பாகத் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த அந்தஸ்தை அவர் அறிந்து கொண்டார். தேவன் அவரை இப்பொழுது கிறிஸ்துவுக்குள் பார்க்கிறார் என்பதையும் உணர்ந்து கொண்டார். ‘‘கிறிஸ்துவுக்குள்'' என்னும் பதத்திற்குப் பொருள் யாதெனில், கிறிஸ்துவே அவருடைய பரிசுத்தம், அதன் காரணமாக அவர் பரலோகத்திற்குத் தகுதியுடையவர் என்பதாகும். இதுமுதல் அவர்



சாத்தானின் தலைமையில் இயங்கும் உலக நடைமுறைகளுக்கு உட்பட்டவர் அல்லர். உலகினின்று பிரித்தெடுக்கப்பட்டு இப்பொழுது கிறிஸ்துவின் அங்கமாகத் திகழ்கிறார். என்னே அதன் மேன்மை!

அருள் தனது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்கூடாகக் காணத் தொடங்கினார். பாவத்தை வெறுக்கவும், பரிசுத்தத்தை வாஞ்சிக்கவும் கூடிய புதிய இயல்பை அவர் இப்பொழுது பெற்றிருந்தார். இன்னும் அவர் பாவம் செய்யக் கூடியவராக இருப்பினும் அது முன்போல் இல்லை. பாவம் அவரை ஆளுகை செய்யவில்லை. மனமுவந்து அவரால் எந்தப் பாவத்தையும் செய்ய இயலவில்லை. தவறி பாவத்தை இழைக்கும்போது அதற்காக வெட்கப்பட்டார். பழைய சுபாவங்கள் அவரைவிட்டு நீங்கின. அவர் பேச்சிலும் மாறுதல் ஏற்பட்டுத் தூய்மை காணப்பட்டது. அவர் பரிசுத்தத்தில் வளர்ச்சி அடைந்தார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சென்ற செவ்வாயன்று அருள் இறந்துவிட்டார். அவர் இரட்சகரை முகமுகமாகப் பார்த்தபோது வியத்தகு மாற்றம் நடந்தது. ஒழுக்கத்திலும், ஆவியிலும் இயேசு கிறிஸ்துவைப் போலவே மாறிவிட்டார். எல்லாப் பாவங்களினின்றும் தீட்டுக்களினின்றும் என்றென்றைக்கும் விடுவிக்கப்பட்டவராய் விளங்கினார்.

## நேரடியான விளக்கம்

அருளின் வாழ்க்கையின் நான்கு கட்டங்களும், புதிய ஏற்பாட்டில் காணப்படும் ‘‘பரிசுத்தமாகுதல்'' என்பதன் நான்கு நிலைகளை விளக்குகின்றன. அந்த நான்கு நிலைகளைக் குறித்து விளக்கமாகக் காண்பதற்கு முன்னர் ‘‘பரிசுத்தமாகுதல்'' என்னும் பதத்தின் பொதுவான பொருள் யாதெனக் காணலாம்.

‘‘பரிசுத்தமாகுதல்'' என்னும் சொல் ‘‘பிரித்து வைத்தல்'' எனப்பொருள்படும். இறைநூலில் இச்சொல் எங்கெல்லாம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் இப்பொருளே பொருத்தமாக அமைந்துள்ளது.

‘‘பரிசுத்தமாகுதல்'' என்னும் சொல்லுக்குப் ‘‘பரிபூரணமாகுதல்'' என்று பலர் தவறாகப் பொருள் கொடுக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்மையே பரிசுத்தமாக்குகிறதாகவும் (யோவான் 17:19), கர்த்தராகிய தேவனை நம் இருதயங்களில் பரிசுத்தம் பண்ண வேண்டுமெனவும் (1 பேதுரு 3:15) நாம் வாசிக்கிறபடியால் அந்த அர்த்தம் முற்றிலும் தவறானது என்பதை அறிகிறோம்.

இயேசு கிறிஸ்து தம்முடைய பரிபூரணத்திற்கு மேலாகத் தம்மைப் பரிபூரணப்படுத்த முடியாது. மேலும் அவருடைய பரிபூரணத்தோடு நாமும் சற்றேனும் கூடுதலாக சேர்க்க முடியாது என்பது நிச்சயம். எந்தக் கிரியையைச் செய்யும்படி பிதா அவரை அழைத்தாரோ அதைச் செய்து முடிக்க அவர் தன்னைப் ‘‘பிரித்து'' வைத்தார். நாமும் நமது ஜீவியத்தில் கர்த்தருக்கு ‘‘சர்வ

வல்லமையுடைய கர்த்தராகிய தேவன்'' என்னும் உன்னத ஸ்தானத்தைக் கொடுக்க முடியும்.

வேதத்தில் பரிசுத்தம் என்னும் சொல் சில மனிதரையும், பொருட்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. திரித்துவத்தின் மூவரும் பரிசுத்தர். தேவத்துவத்தில் மூவரும் ஒழுக்க நெறியிலும், செயற் பண்புகளிலும் மேம்பாடு உடையோராக எல்லாப் படைப்புகளினின்றும் தம்மைப் பிரித்துக் கொண்டவராய் உள்ளார் (லேவி. 11:44-45; யோவான் 10:36; 1 கொரி. 6:19). சீனாய்மலை பரிசுத்தமாக்கப்பட்டது என்று சொல்லும் போது, அந்த இடம் நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்காகப் பிரித்து வைக்கப்பட்டது என்பதே பொருளாகும் (யாத். 19:23). பழைய ஏற்பாட்டில் தேவன் ஏழாம் நாளைப் பரிசுத்தமாக்கினார் (ஆதி. 2:3). அந்நாளைக் கிரியை அற்ற ஓய்வுநாளாகப் பிரித்து வைத்தார். மனிதரிலும் மிருகங்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தும் பரிசுத்தமாக்கப் பட்டன (யாத். 13:2). அவை கர்த்தருக்கென்று பிரித்து வைக்கப்பட்டன. ஆசரிப்புக் கூடாரமும், அதன் பணி முட்டுகளும் பரிசுத்தப்படுத்தப்பட்டன. அதாவது அவையாவும் தேவனுடைய ஊழியத்திற்கெனப் பிரித்து வைக்கப்பட்டன (யாத். 40:9). இஸ்ரவேல் மக்கள் தங்களைத் தாங்களே அக்கிரமம் செய்வதற்கென்று பரிசுத்தம் பண்ணிக் கொண்டார்கள் (ஏசா. 66:17). தங்களை மேலும் பரிசுத்தமாக்கிக் கொண்டனர் என்னும் சாதாரண பொருளை அவ்வசனம் கொடுக்கவில்லையே!

அவிசுவாசிகளும் பரிசுத்தமாக்கப்படுகின்றனர் என்று வேதத்தில் காண் கிறோம். அதற்குரிய பொருளைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ''அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்'' (1 கொரி. 7:14) என்று எழுதியுள்ளது. அவருடைய இரட்சிப்பு உறுதியாக்கப்பட்டது என்று ஒருபோதும் இதற்குப்பொருள் கொள்ளக்கூடாது. அவர் கிறிஸ்தவ மனைவியை கொண்டிருப்பதால் சில புறம்பான சிலாக்கியங்களைப் பெற்றுப் பிரித்து வைக்கப்பட்ட நிலையில் இருக்கிறார். விசுவாசமுள்ளவராய் ஜெபிக்கும் மனைவி அவர்மீது கொண்டிருக்கும் செல்வாக்கு, மிகுந்த அனுகூலமான நிலையை ஏற்படுத்தும். மேற்கூறியவைகளிலிருந்து ''பரிசுத்தம்'' என்னும் சொல் வேதத்தில் ''பிரித்து வைத்தல்'' என்னும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

புதிய ஏற்பாட்டில் நாம் காணும் பரிசுத்தத்தின் நான்கு நிலைகளைத் தற்போது காண்பது சாலச் சிறந்ததாகும், அவையாவன:

1. இரட்சிப்புக்கு முன்னான பரிசுத்தம்
2. ஸ்தான பரிசுத்தம்
3. நடைமுறைப் பரிசுத்தம் அல்லது வளரும் பரிசுத்தம்
4. பரிபூரண பரிசுத்தம்



## இரட்சிப்புக்கு முன்னான பரிசுத்தம்

அனைத்து விசுவாசிகளும் தாங்கள் இரட்சிப்படைவதற்கு முன்னரே தூய ஆவியானவரால் பரிசுத்தம் செய்யப்பட்டுள்ளனர். தெசலோனேக்கியர்களது இரட்சிப்பின் மூன்று படிகளைப் பவுல் விளக்குகிறதைக் காணலாம் (2 தெச. 2:13).

1. தேவன் அவர்களைத் தெரிந்துகொண்டார்
2. தூய ஆவியானவர் அவர்களைப் பரிசுத்தமாக்கினார்
3. அவர்கள் சத்தியத்தை விசுவாசித்தனர்

பேதுருவும் இதுபோலொரு பட்டியலைத் தருகிறார் (1 பேதுரு 1:2)

1. பிதாவாகிய தேவனுடைய முன்னறிவினாலே தெரிந்துகொள்ளப்படுதல்
2. பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தம் செய்யப்படுதல்
3. இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிதல்
4. அவரது குருதி தெளிக்கப்படுதல்

மேற்காணும் இரண்டு இடங்களிலும் மனத்திரும்புதலுக்கு முன்னரே பரிசுத்தமாகுதல் நடைபெறுகிறது என்று காண்கிறோம். முதல்படியாகத் தூய ஆவியானவர் ஒருவரைக் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகப் பிரித்து வைக்கிறார். அதன் பின்னரே அவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறார். அதனோடு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலின் மதிப்பு அவரது கணக்கில் சேர்க்கப்படுகிறது.

## ஸ்தான பரிசுத்தம்

ஒருவர் இரட்சிப்பைப் பெறும் அத்தருணத்திலேயே பரிசுத்த ஸ்தானத்தை அடைகிறார். அதாவது, அவர் தேவனால் கிறிஸ்துவுக்குள்ளாகப் பார்க்கப்பட்டு, தேவனுக்கென உலகத்தினின்று பிரித்து வைக்கப்படுகிறார் (1 கொரி. 1:2). கிறிஸ்துவே அந்நபரின் பரிசுத்தமாக இருக்கிறார் என்பதே அதன் உண்மையான பொருளாகும் (1 கொரி. 1:31).

ஒவ்வொரு உண்மையான விசுவாசியும் பரிசுத்தவானாக இருக்கிறான். ஒரு கிறிஸ்தவன் இறந்துபோன பிறகு பரிசுத்தவானாகிறான் என்று பரிசுத்தவான் என்னும் சொல்லுக்கு ஒரு சிறுவன் விளக்கமளித்தான். அதற்கு மாறாக ஒரு உண்மையான கிறிஸ்தவர் உயிருடன் இருக்கும்போதும், இறந்தபிறகும் பரிசுத்தவானாகவே இருக்கிறார். அதே சமயம் அவர் மாம்சத்திற்குரிய வாழ்க்கை நடத்துபவராகவும் இருக்கலாம் (1 கொரி. 1:12; 3:13). அவர் தான் பெற்ற தகுதியின் அடிப்படையில் பரிசுத்தமாக்கப்பட்டவராகவும், நடத்தையில் ஓரளவு பரிசுத்தமற்றவராகவும் இருக்க வாய்ப்புண்டு. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் தொடர்ந்து பரிசுத்தமாக வாழும்படி போதிக்கப்பட்டுள்ளனர் (1 பேதுரு 1:2,15,16).

அப்போஸ்தலர் நடபடிகள் 20:32 - இல், "பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும்" என்று சொல்லப்பட்டிருப்பது அனைத்து விசுவாசிகளையும் குறிக்கிறது. "என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்" என்று கர்த்தர் தமது மக்களைச் சித்தரிக்கிறார். கொரிந்தியர்கள் "கழுவப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள்" என்று வர்ணிக்கப்பட்டுள்ளனர் (1 கொரி. 6:11). இந்தப் பகுதிகள் அனைத்தும் ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்குள்ளாகப் பெறும் பரிசுத்தவான் என்ற தகுதியையே குறிக்கின்றன.

## நடைமுறைப் பரிசுத்தம் அல்லது வளரும் பரிசுத்தம்

நமது அன்றாட வாழ்க்கையில் நாம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை விளக்குவதே நடைமுறைப் பரிசுத்தமாகும். பாவத்தையும் பொல்லாங்கையும் களைந்தவர்களாக, தேவனுக்கென்று பிரிந்து வாழ்வதையே இப்பரிசுத்தம் வலியுறுத்துகிறது. நாம் பரிசுத்தராயிருக்க வேண்டும் என்று எங்கெல்லாம் புத்தி புகட்டப்படுகிறதோ, அங்கெல்லாம் நடைமுறைப் பரிசுத்தமே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகைப் பரிசுத்தத்தையே நாம் பொதுவாகப் பரிசுத்தம் என்று குறிப்பிடுகிறோம்.

இயேசு கிறிஸ்து "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்" என்று தமக்குச் சொந்தமானவர்களுக்காக ஜெபித்தார் (யோவான் 17:17). "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" என்று பவுல் கொரிந்தியரை வலியுறுத்துகிறார். அதே சிந்தையைக் கொண்ட பேதுரு "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள், நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" என்று வலியுறுத்திக் கூறுகிறார் (1 பேதுரு 1:15).

நாம் பிரிந்து வாழ வேண்டுமெனில், நம்மைச் சூழ இருக்கும் இரட்சிக்கப்படாதோரினின்று வேறுபட்டவர்களாகக் காணப்படுதல் தவிர்க்க இயலாததாகும். சில வேளைகளில் ஏற்றுக்கொள்ள முடியாதபடி இந்த உபதேசம் கடினமாயிருக்கும். நாம் வித்தியாசமானவர்களாக வாழ விரும்புகிறதில்லை. நாம் ஆட்டு மந்தையைப் போலவே இருக்க விரும்புகிறோம். நம்முடைய சுற்றத்தாருடன் கூடி வாழ விரும்புகிறோம். ஆயின், நாம் பிறரிடமிருந்து வேறுபட்டவர்களாகப் பிரிந்து வாழ வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

தேவன் இஸ்ரவேல் மக்களை அழைத்தபோது அவர்கள், "அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்" என்று பிலேயாம் உரைத்தவண்ணம் வாழ வேண்டுமெனவே விரும்பினார் (எண். 23:9). அவர்களுக்குப் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையைக் குறித்த பாடத்தைப் பல வழிகளில் சொல்லிக் கொடுத்தார். வெவ்வேறான விதைகளைச் சேர்த்து விதைக்கலாகாது (லேவி. 19:19), சணல் நூலும், கம்பளி நூலும் கலந்த ஆடையை அணியலாகாது (லேவி. 19:19), மாட்டையும் கழுதையையும் ஒரே நுகத்தடியில் இணைத்து உழக்கூடாது (உபா. 22:10) என்பன அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டவைகளாகும்.



ஆனால், இஸ்ரவேலரோ அவ்விதம் வேறுபட்டவர்களாய் வாழ மனமற்றவராயிருந்தனர். மற்ற நாடுகளில் அரசர்கள் இருந்தது போலத் தங்களுக்கும் ஒரு இராஜா வேண்டுமென்று கூக்குரலிட்டனர் (1 சாமு. 8:5,20).

இதைப் போலவே, இந்நாட்களில் கிறிஸ்தவ சபைகளிலும் காணப்படுகின்றது என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

## பரிபூரண பரிசுத்தம்

பரிபூரண பரிசுத்தம் என்பதே நான்காம் வகைப் பரிசுத்தமாகும். இஃது விசுவாசிகளின் வாழ்வில் எதிர்காலத்தில் நடக்கப் போகிற ஒன்றாகும். நாம் இரட்சகரை முகமுகமாகச் சந்திக்கும் வேளையில் அனைத்துப் பாவங்களிலிருந்தும், தீட்டுகளிலிருந்தும் என்றென்றுமாகப் பிரித்து வைக்கப்படுவோம் (1 யோவா. 3:2). அவ்வமையம் பரிபூரணத்தை அடைந்தவராக, ஒழுக்க நெறியில் இயேசு கிறிஸ்துவைப் போலவே நாமும் இருப்போம்.

இந்நிகழ்ச்சியைக் குறித்தே கொலோ. 1:21-இல் "உங்களைப் பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தம்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று வாசிக்கின்றோம்.

வேறொரு வேத பகுதியில் யூதா நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை, "தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்களாக நிறுத்த வல்லவர்" என்று கூறுவதைக் காண்கிறோம் (யூதா. 24).

இதுகாறும், இரட்சிப்படையுமுன்னர் நடந்தது, மனமாற்றத்தின் போது நிகழ்ந்தது, தற்போது ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டிருப்பது, நம்முடைய கர்த்தரைச் சந்திக்கும்போது நிகழப்போவது ஆகிய பரிசுத்தமாகுதலின் நால்வகை நிலைகளைக் குறித்துக் காணலுற்றோம். மூன்றாவது வகையான நடைமுறைப் பரிசுத்தத்தைக் குறித்து வலியுறுத்துவதே இந்நூலின் நோக்கமாகும். அந்நோக்கின் அடிப்படையில், போராயுதங்களைப் பயன்படுத்தி எவ்விதமாக நாம் கிறிஸ்தவ குணநலன்களை வளர்த்துக் கொள்வது என்பதை அடுத்த அதிகாரம் விவரிக்கின்றது.

# 6

# தேவனுடைய சர்வாயுதவர்க்கம்

புதிய ஏற்பாட்டில் பரிசுத்தத்தை விளக்குவதற்காகப் பல்வேறு வகையான சித்திரங்கள் கையாளப்பட்டுள்ளன.

பழையதும், அழுக்கானதுமான ஆடையைக் களைந்து புதியதும், தூய்மையுமான ஆடையை அணிவதற்குப் பரிசுத்தம் ஒப்பாக இருக்கிறது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது (கொலோ. 3:9,10). கிறிஸ்துவின் ஜீவனே புதிய ஆடையாகும். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள வேண்டும் (ரோம. 13:14) என்று நாம் புத்தி புகட்டப்பட்டிருக்கிறோம்.

திராட்சைச் செடியில் வளரும் கனி பரிசுத்தத்திற்கு மற்றொரு சித்திரமாகும். இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற விசுவாசி, அவருடைய பண்புகளைத் தன்னிடத்தில் வெளிப்படுத்தி அவற்றைக் கனியாகத் தருகிறான் (யோவா. 15:1-17). இதனையே பவுல் ஆவியின் கனி என்று குறிப்பிடுகின்றார் (கலா. 5:22,23).

கிறிஸ்துவுக்குள்ளாகக் குடிகொண்டிருக்கும் அன்பைப் பரிசுத்தம் என்றழைக்கும் பவுல், விசுவாசிக்குள் பிறக்கும் அன்பையும் அவ்விதமே அழைக்கிறார் (1 கொரி. 13). இவ்விதமாகச் சிந்திக்கிற அவருடைய வளமிக்க மனது அடுத்த நொடியில் பரிசுத்தத்தை ஒரு போர்வீரன் அணிந்திருக்கும் ஆயுதங்களாகப் புனைகிறதைக் காண்கிறோம் (எபே. 6:10-18). அவர் எவ்வாறு இந்தச் சித்திரத்தை வரைகிறார் என்று இங்கு காண்போமாக.

### நாம் ஆயுதங்களை அணிவதன் அவசியம்

கிறிஸ்தவ ஜீவியம் போர்க்களத்தை ஒத்திருக்கிறது. விசுவாசி ஒவ்வொருவனும் போர்வீரனாகத் திகழ்கிறான். இந்த யுத்தம் ஓயாமல் நடந்து கொண்டிருக்கிறது. சில வேளைகளில் அது தீவிரமடைந்து கடுமையாகக் காணப்படும். மற்ற வேளைகளில் அதன் கடுமை குறையும். போர்த் தளபதிக்குத் தம்மை ஒப்புவித்த போர்வீரர்கள் அனைவரும், அவர் அருகில் நின்று கடும் தாக்குதலுக்கு



ஆளாவார்கள். பெயரளவில் விசுவாசிகளாக இருப்பவர்களைத் தாக்க, எதிரி தனது ஆயுதங்களை வீணாக்குவதில்லை.

யுத்தத்தின் முடிவில் வெற்றி நமக்கென்று வாக்களிக்கப்பட்டுள்ளது. "நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37). "தேவன் நம் பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31). நம்மை ஒருவராலும் வெற்றி கொள்ளமுடியாது. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக, முடிவில் எதிரிகள் அனைவருடைய முழங்கால்களும் கர்த்தராகிய இயேசுவிற்கு முன் முடங்கி, அவரே கர்த்தர் என்று அறிக்கை பண்ணுவார்கள் (பிலி. 2:10,11-ஐக் காண்க).

அவ்வாறாயின், ஏன் நமது தோழர்கள் பலரது சவங்கள் போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்றன? பிரசித்தி பெற்ற பிரசங்கிகளும், நாவன்மை மிக்க போதகர்களும் யுத்தகளத்தினின்று விரட்டியடிக்கப்பட்டதன் காரணம் என்ன? போர்க்களத்தில் மரணமடையும் போர்வீரரின் எண்ணிக்கை ஏன் பெருகிக் கொண்டே போகிறது? அவ்வீரர்களின் கவசத்தில் பிளவு காணப்பட்டு, அதை நோக்கி எதிரி தனது ஆயுதத்தை எய்ததினால் இப்பேரழிவு உண்டாயிருக்கிறது.

மற்றவர்கள் தோற்றுப்போனதுபோல, நாமும் வீழ்ந்து போகக்கூடிய வாய்ப்புண்டு. நாம் நம்மைக் காத்துக்கொள்வதற்கான போராயுதங்களின் அட்டவணையை அப்போஸ்தலனாகிய பவுல் எபே. 6:10-18-இல் அழகுறத் தந்துள்ளார். அந்தப் போரில் நம்மைக் காத்துக்கொள்வதற்கும், வெற்றியடைவதற்கும் தேவையான அனைத்து உபகரணங்களும் அதில் அடங்கியுள்ளன.

### நமது பலமல்ல, கிறிஸ்துவின் பலமே தேவை

முதலாவதாக, நாம் கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட வேண்டும். நம்முடைய சொந்த பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாகப் போர்க்களத்தில் முன்னேறிச் செல்வது, நாம் மரணத்தோடு விளையாடுவதற்கு ஒப்பாயிருக்கும். எதிரி அசாத்திய வலிமை கொண்டவனாயிருக்கிறான். நமது சொந்த பலத்தில் அவனைத் தோற்கடிக்க முடியாது. நாம் நமது பலவீனத்தை அறிக்கைசெய்து, கர்த்தருடைய பலம் நமக்குள்ளாகப் புகுந்து பிரவாகிக்க இடம் கொடுப்பதே, பலத்தைப் பெறுவதற்குரிய வழிமுறையாகும். "நான் பலவீனனாயிருக்கும் போதே, பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்று பவுல் உரைப்பதன் பொருள் இதுவே (2 கொரி. 12:10). நமது பலவீனத்திலே தேவனுடைய பலம் பூரணமாய் விளங்கும் (2 கொரி. 12:9). பலவீனமான போர்வீரர்கள் வெற்றியடையும் வேளைகளில், அவர்களுக்குப் பலம் அளித்த தேவனுக்கே மகிமையுண்டாகிறது.

### சர்வாயுதவர்க்கம்

நாம் தேவனின் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும். அவையாவன, அரைக்கச்சை, மார்க்கவசம், பாதரட்சை, கேடகம், தலைச்சீரா, மிகுந்த ஜெபம். சிறைச் சாலையில் தன்னைக் காவல் காக்கும் போர்வீரனின் சீருடையைக் கண்ணுற்ற பவுல், அதற்கு இணையான ஆவிக்குரிய உண்மை களை இங்கு எடுத்தியம்புகின்றார். அப்படியானால் "ரோமப் போர்க்கவசத்திற்கு ஆவிக்குரிய இணை எது?" என்னும் கேள்வி எழுவது சாத்தியமே. நாம் இங்கு எழுத்தின்படியான ஆயுதங்களை குறிக்கவில்லை. ஏனெனில், "நமது போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்கு கிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது" (2 கொரி. 10:4). நாம் கிறிஸ்துவுக் குள் பெற்றிருக்கும் அந்தஸ்தே இந்த ஆயுதங்கள் எனச் சிலர் நினைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, நாம் மறுபடியும் பிறந்த போது நம்மீது தேவன் அணிவித்த நீதியின் உடையையே நீதி என்னும் மார்க்கவசம் என்கின்றனர். நமக்கும் கிறிஸ்துவிற்கும் இடையில் உண்டாயிருக்கிற உறவினாலே நாம் பெற்றிருக்கிற நீதி, சத்தியம், விசுவாசம், இரட்சிப்பு என்பவைகளே இந்த ஆயுதங்கள் எனில், விசுவாசிகளுக்கு எதிராக விரோதி ஒருபோதும் ஊறுவிளைவிக்க முடியாது. மேலும் ஒழுக்கக் கேட்டினாலும், கள்ள போதகத்தினாலும் போர்க்களத்தில் விசுவாசிகள் விழுந்துவிடுகிறார்கள் என்ற செய்தியையும் கேள்விப்பட மாட் டோம். கிறிஸ்தவர்கள் அனைத்து ஆயுதங்களையும் எப்பொழுதும் அணிந்த வர்களாயிருப்பதால் மேற்கொண்டு கிறிஸ்தவப் படைக் குழுமம் இனி வேறு ஆயுதம் அணிய வேண்டியதில்லை என்றும் பொருளாகிவிடும். ஆனால் அது உண்மையான பொருளல்ல. நாம் கிறிஸ்துவுக்குள் பெற்றிருக்கிற அந்தஸ்தை அது குறிக்கிறதில்லை. நாளொரு வண்ணம் நமது வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த வேண்டிய இயல்பினையே அது சுட்டிக்காட்டுகிறது.

தேவனுடைய போர்க்கருவிகள் வலுமிக்க கிறிஸ்தவப் பண்பினை விளக் கும் கூறுகள் என நாம் கருதுகின்றோம். மாசு கற்பிக்க இயலா வாழ்க்கையை நடத்தக் கிறிஸ்தவப் படைவீரன் கற்றுக்கொள்வானெனில், எதிரி அவனைத் தாக்க இயலாது.

நாம் போராயுதங்களை அணிந்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டுள்ளதால், நாம் ஊக்கமாக செயல்புரிய வேண்டுமென்பது வெளிப்படை. நாம் எவ்வகைப் போர்வீரராய் இருக்கிறோம், எவ்வகை நடத்தையுடையவராய் இருக்கிறோம் என்பதே கேள்வி.

### பிசாசின் தந்திரங்கள்

தேவனின் போராயுதங்கள், பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க நம்மைத் திராணியுள்ளவர்களாக்குகிறது (வச. 11). சாத்தான் தேவனுடைய



மக்களுக்கு எதிராகக் கற்பனைக்கெட்டா தந்திரங்களால் எதிர்த்துப் போர் செய்கிற சூழ்ச்சிக்காரனாயிருக்கிறான். நாம் நமது எதிரி யார் என்பதை அறிந்திருக்க வேண்டும். பிசாசின் சூழ்ச்சியினின்று நம்மைக் காத்துக் கொள்பவராய் இருக்க வேண்டும். அவன் எப்படிப்பட்ட தந்திரங்களை உடையவனாய் இருக்கிறான் எனக் காண்போம்.

அவன் ஆதிமுதற்கொண்டு பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாக இருக் கிறான் (யோவான் 8:44). அவனே ஏவாளினிடத்தில் தேவனைப் பற்றித் தவறாகக் குறைகூறினவன். அதுமுதல் தொடர்ந்து பொய்சொல்லித் திரிகிறான்.

அவன் ஏமாற்றுபவன். அவன் ஒளியின் தூதனைப் போல வேடமணிந்து, தனது ஊழியக்காரரை நீதியின் தூதர்களாக வேஷம் அணிவித்து அனுப்புகிறான் (2 கொரி. 11:14,15). சில வேளைகளில் திருமறை வசனங்களை மாற்றிக்கூறி, சகல வல்லமையோடும் அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும் ஏமாற்றுகிறான் (2 தெச. 2:9). மேலும் வஞ்சிக்கிற சர்ப்பமாக இருந்து, தேவ மக்களின் உள்ளத்தில் ஐயங்களையும் எதிர்ப்புகளையும் விதைத்து, கிறிஸ்துவைப் பற்றிய உண்மையும், தூய்மையும் கொண்ட பக்தியினின்று விலக்க முற்படுகிறான் (2 கொரி. 11:3).

அவன் சகோதரர் மீது பழிசாற்றி, குற்றம் சுமத்துகிறவனாக இருக்கிறான் (வெளி. 12:10). கர்த்தருடைய பிள்ளைகள்மீது தவறாகப் பழிசுமத்துகிறது யாவும் பிசாசின் வேலையே.

அவன் போலியாகச் செயல்புரிபவன். தேவனுடைய செயல்கள் யாவற் றுக்கும் ஒத்த கள்ளச் செயல்களைச் செய்கிறவனாக இருக்கிறான். மோசே ஆற்றிய அற்புதங்களுக்கு ஒப்பான அற்புதங்களைச் செய்யும்படி எகிப்திய மந்திர வாதிகளைப் பலப்படத்தினவன் (2 தீமோ. 3:8) அவனே என்பதை மறந்துவிட வேண்டாம்.

அவன் மனச்சோர்வை விதைக்கிறான். பின்வாங்கிய விசுவாசி மனம் திருந்தியபோது, கொரிந்துப் பட்டண விசுவாசிகள் அவனை மன்னிக்கவில்லை யென்றால், அவன் அதிகத் துக்கத்திற்குள் அமிழ்ந்து போகும்படி அவனைச் சாத்தான் மனச்சோர்வுக்குள்ளாக்குவான் என்று பவுல் எச்சரிக்கின்றார் (2 கொரி 2:7-11). மனச் சோர்வுற்ற நிலையில் உள்ளவனைத் தேவன் பயன்படுத்துகிறதில்லை என்பதைப் பிசாசு அறிவான்.

பிரிவினையை உண்டாக்கி அங்கே வெற்றி பெறுவது அவனுக்குக் கைவந்த கலை. ஒரு வீடு இரண்டாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று எதிராகச் செயல்புரிந்தால் அந்த வீடு நிலைநிற்காது என்பதை நன்கறிந்த பிசாசு, பரிசுத்தவான்கள் உள்ளத்தில் பிரிவினையின் வித்தை விதைக்கிறான்.

எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரிகிற சிங்கத்தைப் போல, சில வேளைகளில் அவன் தோற்றமளிக்கிறான் (1 பேது. 5:8). அவனும், அவனைச் சார்ந்த தீய ஆவிகளும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர். அவன் சபையை உபத்திரவப்படுத்துகிறான் (வெளி. 2:10). போதைப் பொருட்களினாலும், ஆவிகளை வணங்குதல், மது, ஒழுக்கக்கேடு முதலிய செயல்களாலும் மனிதர்களை அழித்துப்போட முயற்சி செய்கிறான்.

பேதுருவின் மூலமாகக் கிறிஸ்து சிலுவைக்குச் செல்கிறதைத் தடுக்க முயன்றது போலவே பிசாசானவன் அவமானத்திற்கும், உபத்திரவத்திற்கும், மரணத்திற்குமுரிய சிலுவையைச் சுமக்காதபடி கிறிஸ்தவர்களுக்குத் துர் ஆலோசனையைக் கொடுக்கிறான் (மாற்கு 8:31-33).

மலைச் சிகரத்திற்கு ஒப்பான சாதனைகளையும், ஆவிக்குரிய வெற்றிகளையும் கண்ட தேவ மக்கள், பெருமை என்னும் அபாயத்திற்கு அருகிலிருக்கும்போது, அவனுடைய தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும்.

## சாத்தானின் சேனைகள்

நாம் பல வேளைகளில், கள்ள போதகர்களுடனும், மாக்கபேதங்கள் நிறைந்த கூட்டத்தாருடனும், நட்பு பாராட்டா அரசினரிடமும், சத்தியத்தின் பகைஞருடனும், எதிர்த்துநிற்க வேண்டியவர்களாயிருப்பினும், நமது போர் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அன்று என்பதை நன்குணர்ந்துகொள்ள வேண்டும். துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு என்று பவுல் உரைத்திருப்பது பிசாசையும், அவனுடைய ஊழியக்காரரையும் குறித்தேயாகும் (வச. 12). கண்களுக்குப் புலப்படா வீழ்ந்துபோன தூதர்களாகிய தீய ஆவிகள், இந்த அண்டசராசரம் முழுவதும் நிறைந்திருக்கிறார்கள் என்று இங்கே நாம் எச்சரிக்கப்படுகிறோம். ஒரு இராணுவத்திற்கு எவ்வாறு கட்டளை தொடர்ச்சியாகக் கொடுக்கப்படுகின்றதோ, அதுபோலப் பொல்லாத ஆவிகளும் கட்டளை பெறுகின்றன. அந்த ஆவிகள் என்னென்ன பதவிகளை வகிக்கின்றன, அதன் பதவி வரிசை என்ன போன்றவற்றை நாம் அறியோம். ஆனால், சாத்தானின் கட்டளைக்கு அவைகள் யாவும் கீழ்ப்படிகின்றன. இத்தீய சக்திகள் பொல்லாப்பு நிறைந்த மனிதர்களைத் தங்கள் கரங்களில் விளையாட்டுப் பொம்மையைப் போல் வைத்துக்கொண்டு, தேவனுடைய ஊழியத்திற்கும், உன்னதமானவருடைய ஊழியக்காரருக்கும் ஊறு விளைவிக்கின்றன.

அந்தகாரத்தின் தீய சக்திகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்று பவுல் சொல்லியிருப்பதால், அவைகள் மட்டுமே நமது பகைஞர் என்பது பொருளன்று. உலகம், மாம்சம், பிசாசு ஆகிய மூன்றுமே நம்முடைய எதிரிகளாகும். ஆனால், இந்த வேதப்பகுதியில், அப்போஸ்தலன் பிசாசோடும், அவனுடைய சேனைகளோடும் நமக்குள்ள போராட்டத்தையே முதன்மைப் படுத்தி எழுதியிருக்கிறார்.



## பிசாசுக்கு இடங்கொடாது நிலைத்திருத்தல்

நாம் பிசாசுக்குப் பிடிகொடாது நிலைத்திருக்க வேண்டுமெனில், சர்வாயுத வர்க்கம் அணிந்திருக்க வேண்டும். நமது பகைஞன் சர்வஞானியல்லன். ஆயினும், நாம் எந்தெந்த விஷயங்களில் எளிதில் தோற்றுப்போகக் கூடியவராயிருக்கிறோம் என்பதைத் திறமையாக வேவுபார்க்கும் அமைப்பைக்கொண்டு அறிந்துகொள்கிறான். ஆகலின், நமது நடைமுறைப் பழக்கத்தில் எதைக் குறித்தும் கவனமற்றவர்களாயிருக்கக்கூடாது.

எலேயாசர் என்பவன் தன் செய்கையில் பிடிகொடாது நிலைநின்று தன் கைசலித்து, தன் பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டினான் என்று 2 சாமு. 23:9,10-இல் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட விடாமுயற்சியும், தீர்மானமும் நமது சொந்த வாழ்க்கையில் நாம் கொண்டிருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

தொடர்ந்து வரும் பகுதியில் சர்வாயுதவர்க்கத்தின் படைக்கலன் ஒவ்வொன்றைக் குறித்தும் பவுல் விளக்குகிறார். முதல் மூன்று படைக்கலன்கள் அடிப்படைச் சீருடை என்றும், மற்ற மூன்றும் போரில் செயல்படுத்துகின்ற போர்க்கலன்கள் என்றும் வேத ஆசிரியர் சிலர் கருத்து கொண்டுள்ளனர்.

## சத்தியம் என்னும் இடைக்கச்சை

முதலாவது படைக்கலன் சத்தியம் என்னும் இடைக்கச்சையாகும். இடைக்கச்சை ஓர் போர்வீரன் தான் அணிந்திருக்கும் நீண்ட ஆடையானது, அவனது நடையைத் தடுக்காதபடி இறுகக்கட்டி வைத்துக்கொள்ளப் பயன்படுகிறது என்பது பெரும்பாலோர் கணிப்பு. அவ்வாறாயின், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தில், கிறிஸ்தவனுக்குத் தடையாகவரும் எந்த இடையூறையும். சத்திய வார்த்தையைக் கொண்டு அகற்றி விடுதல் என்பது இதன் பொருளாகும். கூடா ஒழுக்கம், மதுமயக்கம், உலகக் கவலை ஆகியவற்றைக் குறித்துத் தமது சீஷர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என இயேசு நாதர் வலியுறுத்தியுள்ளார் (லூக். 21:34). “தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்” என்று பவுல் புத்தி புகட்டுகிறார் (2 தீமோ. 2:4) பிறர் பொருள்மீது இச்சை, செல்வம், பொருளாசை, புகழ்ச்சி, பதவி ஆசை, ஆடம்பர வாழ்க்கை, இன்ப வாழ்க்கையில் மோகம் ஆகியவற்றினின்றும் நம்மைக் காத்துக்கொள்ள நாம் சத்தியத்தை இறுகக்கட்டிக்கொள்ள வேண்டும்.

சத்தியத்தை நாம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதும் இப்படைக்கலனின் பொருளாகும். திருமறை எழுத்துகள் யாவும் தேவ ஆவி யானவரால் ஏவப்பட்டு தேவ வார்த்தைகளாக, நிறைவாக அளிக்கப்பட்டிருக் கின்றன என்னும் கருத்தை விடாப்பிடியாகப் பற்றிகொளல் அவசியம். தேவனால் கொடுக்கப்பட்ட நிலையில் வேதம் எந்தத் தவறும் உடையதல்ல என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். வேதம் தேவனுடைய ஜீவ வார்த்தையாகும். இந்த உண்மைகளைக் குறித்து ஒரு துளி சந்தேகமும் நம்முடைய உள்ளத்தில் ஊடுருவக்கூடாது. வேதத்தை ஆராய்ந்து பார்த்து, அதில் சொல்லியிருக்கிற வைகளை நம் மனது நியாயந்தீர்க்க இடம் கொடுக்கக் கூடாது. மாறாக, வேத எழுத்துகள் நம்மை நியாயம்தீர்க்கவே நாம் இடங்கொடுக்க வேண்டும்.

நாம் சத்தியத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்வது மட்டும் போதாது. அந்த சத்தியம் நம்மைப் பற்றிக்கொள்ள வேண்டும்; நமது வாழ்க்கையை அது நடத்த வேண்டும்; அதனுடைய கட்டுப்பாட்டிற்குள் நாம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் வேதத்துடன் நாம் அதிக நேரத்தைச் செலவு செய்ய வேண்டும் என்பது இதன் நடைமுறை அர்த்தமாகும். மேலும் நாம் திருமறைக்கு முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும் என்பதே இதன் பொருளாகும். நமக்குச் சாதகமாக இருக்கின்ற வேத பகுதிகளுக்கு மட்டும் கீழ்ப்படிவது என்பது இதன் பொருளன்று. நமக்கென்று எழுதப்பட்ட அனைத்துக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். வேதத்தில் சொல்லியிருக்கிறவைகளைப் புறக்கணித்து வாழ்வதனால் பலரும் கிறிஸ்தவப் போராட்டத்தில் தோல்வி அடைந்து விடுகின்றனர். “வேதம் உன்னைப் பாவத்தி லிருந்து விலக்கும். பாவம் உன்னை வேதப் புத்தகத்திலிருந்து விலக்கிவைக்கும்” என்பதே உண்மை.

வேத எழுத்துகளின் உண்மைகளை ஒரு விசுவாசி உறுதியாய்ப் பற்றிக் கொண்டு நேர்மையாகவும், நம்பிக்கைக்குரியவனாயும் தொடர்ந்து வாழ்ந்து காட்டி அவ்வுண்மைகளை வெளிப்படுத்திக் காண்பிப்பானெனில் அவனுக்குப் பூரண பாதுகாப்பு உண்டு.

## நீதி என்னும் மார்க்கவசம்

போராயுதங்களின் இரண்டாவது படைக்கலன் நீதியென்னும் மார்க்கவச மாகும். இதனை நாம் எளிய சொற்களில் சொல்வோமெனில், தேவனுடைய பார்வையிலும், மனிதனுடைய பார்வையிலும் நேர்மையானவற்றைச் செய்வதே நீதியென்னும் மார்க்கவசமாகும். தவறானதையும் ஒளிவுமறைவானதையும், கேள்விக்குரியதையும் நாம் செய்யாதபடி உணர்வுமிக்க மனச்சாட்சி உடைய வர்களாயிருக்க வேண்டும். எந்த ஒரு சிறு விஷயத்திலும் சத்தியத்தை விட்டுக் கொடுக்காதபடி, நாம் அணிந்திருக்கும் நீதியென்னும் மார்க்கவசம் நம்மைப் பாதுகாக்கிறது. சிறு தவறுகள் பெரிய தவறுகளுக்கு வழிவகுத்துவிடும்.



லஞ்சம், கைக்கூலி, தனது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பணம் சம்பாதித் தல் போன்றவற்றை விசுவாசிகளாகிய நாம் அனுமதிப்பதில்லை. வருமானவரி செலுத்துவதில் தவறாதவராயிருக்கிறோம். ஒரு தேர்வில் ஏமாற்றுகிறதைக் காட்டிலும், தோல்வியடைவது மேல் என நினைக்கிறோம். நாம் சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறோம். செலவுக் கணக்கைக் கூட்டி எழுதத்தோன்றும் சோதனையை எதிர்த்து நிற்கிறோம். இவையாவும் நாம் நீதி என்னும் மார்க்கவசத்தை அணிவதால் வெளிப்படுகிற பண்புகளாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீதியென்னும் மார்க்கவசத்தை எப்பொழுதும் அணிந்தவராதலால் (ஏசா. 59:17) அவர் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார்.

## சுவிசேஷம் என்னும் பாதரட்சை

அடுத்தபடியாக, சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை சொல்லப்பட்டிருக்கிறது (வச. 15). இதனுடைய பொருள் என்ன? பிறரிடம் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வதற்கு ஆயத்தமும், விருப்பமும் கொண்டிருப்பதையே இது குறிக்கிறது. ஒவ்வொருநாள் காலையிலும், “கர்த்தராகிய இயேசுவே, இன்றைக்கு ஒரு ஆத்துமாவிடம் என்னை வழி நடத்தும், உம்மைக் குறித்துப் பேச எனக்குக் கதவைத் திறந்துவிடும்” என்று மன்றாடுவது இப்பாதரட்சையை அணிந்திருப்பதாகும். ஆழ்ந்த ஆவிக்குரிய தேவை உண்டென்பதை யாராவது ஒருவர் வெளிப்படுத்தும்போது, அவரைப் படிப்படியாகக் கர்த்தரிடம் வழிநடத்துதல் இந்த ஆயத்தமாகும். மனிதனது பாவத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் செயலைக் குறித்தும், பாவியின் பொறுப்பைக் குறித்தும், சொல்லுகின்ற வேத வசனங்களை நாம் முன்னமே மனப்பாடம் செய்திருப்போம். அப்பொழுது தூய ஆவியானவர் சரியான வசனத்தைத் தேர்ந்தெடுக்க வழிநடத்துவார்.

ஒரு வயோதிகப் பரிசுத்தவான், மிகவும் நோயுள்ளவராய் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அடுத்த நாள் அன்னாரது உறவினர்கள் அவரைப்பார்க்கச் சென்று நலம் உசாவினர். அவருரைத்த பதில், “நன்றாயிருக் கிறேன்; இந்த வார்டில் இருக்கிற அனைவருக்கும் கர்த்தரைப் பற்றிச் சொல்லி விட்டேன்” என்பதாகும். அவர் கால்களில் சமாதானத்தின் நற்செய்திக்குரிய ஆயத்தம் என்னும் காலணியை அணிந்திருந்தார்.

## விசுவாசமென்னும் கேடகம்

நான்காவது போர்க்கருவி விசுவாசம் என்னும் கேடகமாகும். அக்கினி யாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடுவதே அதனுடைய நோக்கமாகும். திருமறை வசனங்களைக் குறித்த ஐயத்தையும், தேவனுடைய நற்குணத்தைக் குறித்த ஐயத்தையும், நாமடைந்துள்ள இரட்சிப்பைக் குறித்த சந்தேகத்தையும்,

சோர்வையும், பாவத்தைச் செய்வதற்குத் தூண்டுதலையும், பொய்க் குற்றச் சாட்டுகளையும், பொல்லாங்கான சிந்தனை ஓட்டங்களையும் பிசாசு கொண்டு வருவான். அந்நேரங்களில் நாம் தேவ வசனத்தில் உறுதியாய் நிலைநின்று, அவற்றின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, வாக்குறுதிகளைச் சுதந்தரித்துக் கொண்டு செயல்படுவோமென்றால், விசுவாசமென்னும் கேடகத்தைப் பயன் படுத்துகிறவர்களாயிருப்போம். அப்பொழுது சாத்தானின் அஸ்திரங்கள் நமக்குக் கேடுவிளைவிக்காமல் தரையிலே விழுந்துவிடும்.

ரோமப் பேரரசனுக்கு முன் நிற்பாரென்ற வாக்குறுதியைத் தேவன் பவுலுக்கு அளித்திருந்தார். ஆனால் ரோமாபுரியை நோக்கி அவர் பயணம் செய்த போது கப்பல் கடலில் மூழ்கத்தக்கதான அபாயத்திற்குள் இருப்பதாகத் தோற்றமளித்தது. அப்பொழுது பவுல் விசுவாசமென்னும் கேடகத்தைக் கையில் ஏந்தினவராக, "எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" என்றுரைத்தார் (அப். 27:25).

## இரட்சணியமென்னும் தலைச்சீரா

இரட்சணியமென்னும் தலைச்சீராவை எடுத்துக்கொள்ளுங்கள் (வச. 17). தலைச்சீரா தலையைப் பாதுகாக்கும் படைக்கலனாகும். ஆகவே தேவனுடைய வசனங்களுக்கு எதிராக மனதில் எழும் அறிவார்ந்த எண்ணங்கள் நமது மனஉறுதியைத் தாக்காதபடி பாதுகாக்கக்கூடியதே இதன் பொருள் என நினைக் கிறோம். பகட்டு மிக்க முறையில் வெளியாகும் வரையறையற்ற வேதக்கருத்துகள், வேதத்தில் தவறுகள் உள்ளன என்று தோற்றுவிக்கும் போலி ஆதாரங்கள், குற்றம் காண்கிற அறிக்கைகள் தொடர்ந்து வெடிகுண்டு தாக்குதலைப் போன்று வசைமாரிப் பொழிகின்ற காலமாக இருக்கிறது. இவை எல்லாவற்றினின்றும் நமது மனது எப்பொழுதும் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஏவாளின் மனதில் சர்ப்பம் விதைத்த ஆலோசனையின் விளைவே இந்த உலகில் நடந்த முதல் பாவமாகும். கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளின் வாழ்க்கையிலும் அதுபோன்ற நிலை ஏற்பட்டுவிடும் என்று பவுல் பயந்தார். "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ வென்று பயந்திருக்கிறேன்" (2 கொரி. 11:3).

அவ்விதத் தாக்குதல்களை எதிர்த்து நிற்கப் பவுல் அப்போஸ்தலன் தரும் தற்காப்பு ஆலோசனையை 2 கொரி. 10:5-இல் காண்கிறோம். "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்."



மனிதனுடைய காரணகாரிய விளக்கங்களையும், ஊகங்களையும், தத்துவங் களையும் நம்முடைய கர்த்தரின் போதனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து நாம் நியாயம் தீர்க்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். கர்த்தருடைய போதனைகளுக்கு மாறான யாவற்றையும் நாம் நிராகரிக்க வேண்டும்.

இரட்சணியமென்னும் தலைச்சீரா வேறொரு பொருளையும் கொண் டுள்ளது; இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம் என்று 1 தெச. 5:8-இல் சொல்லியிருக்கிறது. இது எதிர் காலத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் நாம் கொண்டிருக்கிற நம்பிக்கை யாகும். இது இவ்வுலக யுத்தம் முடிவடைந்து, இம்மானுவேலின் கடற்கரையிலே நாம் பாதுகாப்பாகச் சென்றுசேரும் வேளையை எதிர் நோக்கியிருப்பதாகும். எவ்விதம் கிறிஸ்தவன் இந்தப் படைக்கலனை அணிந்து கொள்ளுவான்? சில வேளைகளில் யுத்தத்தின் போக்கு நம்மை வீழ்ச்சியடையச் செய்வது போலி ருக்கும். பகைஞன் பலத்திருப்பது போல் தோன்றும். சில பிரபலமான தலைவர்கள் விழுந்து விடுவார்கள். நன்றாக ஆரம்பம் பண்ணின பல படைவீரர்கள், நம்மை விட்டு விலகிச் செல்வார்கள். இன்னும் பலர் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொண்டவர்களாக, யுத்தத்தில் ஈடுபட நேரமில்லாது இருப்பார்கள். நரகத்தின் சேனைகள் பலத்து முன்னேறுகிறதாகவும், தேவனுடைய நோக்கம் தளர்ச்சியடைந்ததாகவும் காணப்படும். மனச்சோர்வைத் தரும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். அத்தகைய காலங்களில் நாம் இரட்சிப்பின் நம்பிக்கையை அணிந்து கொள்வது இன்றியமையாததாகும். "குமுறும் அலைகள் நமக்கெதிராக வந்தாலும், கடல் நீரோட்டத்தின் ஏற்றத் தாழ்வே வெற்றியடையும். முடிவிலே வெற்றி நமக்கே, தேவ நோக்கமே வெற்றிபெறும்" என்று நமது இரட்சிப்பின் நம்பிக்கை நம்மைப் பேசச் செய்யும்.

## தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்

தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம் கடைசி ஆயுதமாக இருக்கிறது. டபிள்யு. இ. வைன் இதனை அழகுற விளக்குகிறார்: "இங்கே குறிக்கப்பட் டிருப்பது முழுவேதப் புத்தகத்தை அல்ல; சூழ்நிலைக்கேற்ப, நாம் பயன்படுத்த சரியான வசனப் பகுதியை நம்முடைய நினைவிற்கு ஆவியானவர் கொண்டு வருகிறார். அதற்கு முன்னேற்பாடாக வேத வசனங்களால் நம்முடைய மனதை நிரப்பியிருக்க வேண்டும்."

ஆவியின் பட்டயம் பயன்படுத்தப்பட்டதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு விரோதமாகப் பிசாசானவன் சோதனை களைக் கொண்டுவந்தபோது, அதை எதிர்த்து வெற்றி சிறக்க, கர்த்தர் வேத வசனங்களைப் பயன்படுத்தியதேயாகும். அங்குமிங்குமாக வசனங்களை அவர் சொல்லவில்லை. அந்தந்த நேரத்திற்குத் தகுத்தாற்போலத் தேவையை

நிறைவு செய்யும் வகையில் வசனங்களைத் தெரிந்தெடுத்துப் பயன்படுத்தினார். மூன்று முறை “எழுதியிருக்கிறதே” என்று கூறினார். சாத்தானின் பொல்லாங் கான வேண்டுகோள்களுக்கு இடங்கொடாமல் புறக்கணித்துத் தள்ளும்படி ஆவியானவர் தந்த வசனங்களைத் தொடர்ந்து பயன்படுத்தினார்.

சரியான நேரத்தில், சரியான வசனத்தைத் தூய ஆவியானவர் நமக்குத் தந்தருளும்படி நாம் ஏற்கனவே அந்த வசனங்களை மனப்பாடம் செய்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த வசனத்தை அறிந்திருக்க வேண்டும். வேத வசனங்களை நாம் மனப்பாடம் செய்ய வேண்டியதின் அவசியத்தை இது வலி யுறுத்துகிறது. ஒரு கல்லூரி மாணவன், தன்னுடைய விசுவாசத்தை ஆசிரியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துப்போடுகிறார்கள் என்று தன் நண்பனிடம் கூறி னான். அந்த நண்பன், “என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச் செய்யும் போதகங்களை நீ கேளாதே” எனப் பதிலுரைத்தான். அந்த நண்பன் நீதிமொழி 19:27-இல் உள்ள அவ்வசனத்தை ஏற்கனவே மனப்பாடம் செய் திராவிட்டால் ஆவியின் பட்டயத்தை அவனால் பயன்படுத்தியிருக்க முடியாதே.

## ஜெபம்

ஆறு படைக்கலன்களைக் குறித்துச் சொல்லி முடித்தவுடன், எழுச்சிமிக்க ஜெப அழைப்புவிடுக்கப்படுகிறது. ஜெபத்தைப் பேராயுதத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டியதில்லை. அது நமது தலைமையகத்தோடு நாம் தொடர்பு கொள்ள உதவும் அவசியமான இணைப்பு ஆகும். வான மண்டலத்திலே விசுவாசி வாழ்கிறான்; போர் செய்கிறான். ஜெபத்தின் வாயிலாகவே அவன் தனது அன்றாடத் தேவ திட்டத்தை அறிந்துகொள்கிறான். ஜெபத்தின் மூலமாகப் பரமசேனையைத் தக்க பலமாகப் பெற்றுக்கொள்கிறான் (2 இராஜா. 6:17). ஜெபத்தினாலே வெற்றிபெறுகிறான்.

ஜெபம் தொடர்ந்து செய்ய வேண்டியதாகும்; அஃது தொடர்ச்சியற்றதல்ல. நாம் எல்லாவித ஜெபத்தையும் ஏறெடுக்க வேண்டும். அவைகளாவன: பரிந்து பேசுதல், வேண்டுதல், அறிக்கை செய்தல், விண்ணப்பம் - எல்லாவற்றையும் கலந்து நன்றி சொல்லுதல்.

ஜெபம் ஆவியில் செய்வதாகும். அதாவது, ஆவியானவரால் ஏவப்பட்ட வண்ணமாக, வழிநடத்தப்பட்ட வண்ணமாக, அவருடைய சித்தத்தின்படி ஜெபம் செய்ய வேண்டும்.

நமது ஜெபத்தில் விழிப்புணர்வு இருக்க வேண்டும் (கடைசிவரை கவனத் துடன் இருக்க வேண்டும்). கேட்பதும், நாடுவதும், தட்டுவதுமான விடா முயற்சி தேவை.



நமது யுத்தத்தில் அனைவரும் இணைந்து செயல்படுகிற காரணத்தால், நாம் எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

## முடிவுரை

கிறிஸ்தவப் போர்வீரன் பல பேராயுதங்களை அணிந்திருந்தாலும், தேவன் அவனுடைய முதுகைப் பாதுகாக்க எதையும் கொடுக்கவில்லை என்று அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகிறது. அதன் பொருள் யாதெனில் பின்வாங்குதல் கிறிஸ்தவப் போர் வீரனுக்கு அழகல்ல. கிறிஸ்தவப் போர்வீரன் புறமுதுகு காட்டி ஓடக்கூடாது. நெப்போலியன் ஒரு யுத்தத்தில், பகைஞருடன் கைகலப்புச் சண்டையில் தன் நாட்டு வீரர் பலர் மடிந்து விழுவதைக் கண்டு, முரசடிப்பவனிடம் படை பின்வாங்குவதற்குரிய முரசடிக்கும்படி பணித்தான். முரசடிக்கிறவனோ, “அரசே, படை பின்வாங்குவதற்குரிய முரசடிக்க நீர் கற்றுத் தரவில்லையே” என விடை பகர்ந்தான். இந்தச் சொற்கள் நெப்போலியனுடைய உள்ளத்தைக் கொழுந்துவிட்டு எரியச்செய்தது. புதியதொரு தீர்மானத்துடன் முன்னேறிச் சென்று வியத்தகு முறையில் வெற்றி வாகை சூடினான்.

விசுவாசி பின்வாங்கக் கூடாது. ஆகிலும் அவன் ஓடவேண்டிய கட்டங்கள் உள்ளன. அவன் வேசித்தனத்திற்கு விலகியோட வேண்டும். அதாவது, எந்தவிதத் தகாத பாலுறவிலும் ஈடுபடலாகாது (1 கொரி. 6:18). விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓட வேண்டும். செதுக்கிய சிலைகளை மட்டுமல்ல; கர்த்தருடைய ஸ்தானத்தை தன்னுடைய இதயத்திலிருந்தும், வாழ்க்கையிலிருந்தும் எடுத்துக்கொள்கிற எந்த நபரையும், எந்தப் பொருளையும் விசுவாசி விக்கிரகம் என்றே கருத வேண்டும் (1 கொரி. 10:14).

பிறர் பொருட்கள் மீது இச்சைகொள்ளுதல், பண ஆசை, செல்வந்தராக வேண்டுமென்ற விருப்பம் ஆகியவற்றைவிட்டு விலகியோட வேண்டும் (1 தீமோ. 6:11). ஆத்துமாவிற்கு விரோதமாகப் போர் செய்கிற பாலியத்துக்குரிய இச்சை களுக்கு விலகியோட வேண்டும் (2 தீமோ. 2:22). அவ்வாறு ஓடுவது கோழைத் தனமோ, வெட்கக்கேடானதோ, தோல்வியோ அன்று. நாம் தொடர்ந்து போர் முனையில் போர்பொருதுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பதற்கு அதுவே வழியாகும்.

இந்த யுத்தத்தில் நாம் இணைந்து போர் செய்கிறோம். எனவே இணைந்து காணப்படுவோம். ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்வோம். அது நம்மை வழியிலே மடிந்து போகாதபடிக் காத்து, கடைசிவரை நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்ல உதவும். ஒரு தேவ ஊழியர் கொடிய பாவத்திற்குட்பட்டு வீழ்ந்து போனதால் ஊழியக் களத்தைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. அப்பொழுது, மற்றொரு ஊழியர் தனது நண்பரிடம், “நான் இந்தச்

சகோதரனுக்காக ஜெபிக்கவில்லை என்று வெட்கத்தோடு அறிக்கை செய்கிறேன். இப்படிப்பட்ட பாவத்திற்குள்ளாக வீழாதபடி அவர் ஜெபத்தினால் காக்கப்பட வேண்டுமென்று நான் நினைக்கவேயில்லை" என்றார். நம் எல்லோருக்கும் ஜெபம் அவசியம். இத்தகைய வீழ்ச்சி யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படலாம். விசுவாசக் கப்பலை உடைத்துப்போடும் அபாயத்திலே நாம் அனைவரும் இருக்கிறோம்.

ஜான் டோர்ஸி என்பார், ஒரு விசுவாசி பிசாசின் தந்திரங்களிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை விளக்கித் தருகிறார்:

> இன்றைக்கு நான் ஜெபம் செய்யும் இடத்தில் கடுமையாகப் போர் செய்ய வேண்டியதாயிற்று.
>
> நான் தேவனிடத்திற்குச் சென்று, அவரைச் சந்தித்துப் பேச விழைந்தேன். ஆனால் அங்கே சாத்தான் இருந்தான்.
>
> "உன்னால் உண்மையாகவே ஜெபம் செய்ய முடியாது. ஏற்கனவே நீ இழந்து போனவனாயிருக்கிறாய்" என்று மெதுவாகக் கூறினான்.
>
> "நீ முழங்காலில் நின்று ஏதோ சில வார்த்தைகளைப் பேசலாம். ஆனால் நீ ஜெபிக்க முடியாது என்பதை நீ அறிவாய்" என்று தொடர்ந்தான்.
>
> உடனே தலைச்சீராவை இழுத்து, என் காதுகளை மூடிக்கொண்டேன். அது அவனுடைய சத்தத்தை நான் கேட்காதபடித் தடை செய்து, என் பயத்தை நீக்கிவிட்டது.
>
> நான் அணிந்திருந்த மற்ற படைக்கலன்களைச் சரிபார்த்தேன்; எனது கால்களில் சமாதானத்தின் ஆயத்தத்தைத் தரித்திருந்தேன்.
>
> சத்தியம் என்னும் இடைக்கச்சை சுற்றிலும் இறுகக் கட்டியிருந்தது. சத்திய வசனமாகிய ஆவியின் பட்டயம் என் வலது கரத்தில் இருந்தது.
>
> என் இருதயத்தின் அன்பைப் பாதுகாக்கும் நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்திருந்தேன்.
>
> விசுவாசமென்னும் கேடகத்தைச் சரியாகப் பிடித்திருந்தேன். அவனுடைய அக்கினியாஸ்திரங்கள் வந்த வேகத்தில் திரும்பச் சென்றன.
>
> இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தேவனை அழைத்தேன், விலையேறப்பெற்ற இரத்தத்தை வேண்டினேன்.
>
> வெட்கத்தோடு சாத்தான் நழுவிவிட்டான். நான் தேவனைச் சந்தித்தேன். அவரோடு பேசினேன்."



இதுகாறும் நாம் கண்டவை, பரிசுத்தத்தின் பள்ளியில் தேவன் நமது ஆசானாக இருக்கிறார் என்பதை நமக்கு விளக்கிக் காட்டியுள்ளன. நாமோ நமது வீட்டுப்பாடத்தைச் சரிவரச் செய்ய வேண்டும். ஜெபத்தைக் குறித்து எது உண்மையோ அதுவே பரிசுத்தத்திலும் உண்மையாயிருக்கிறது. தேவனின்றி நம்மால் ஒன்றும் செய்ய இயலாது; நம்மை நாம் ஒப்புவிக்காமல் அவர் நம்மிடத்தில் ஒன்றும் செய்வதில்லை. அதைக் குறித்து நாம் மேலும் படிப்போம். ●

# 7

# தேவனுடைய பங்கும் நமது பங்கும்

பரிசுத்த வாழ்க்கையில் தெய்வீகப் பங்கும் மனிதனது பங்கும் ஆச்சரிய மான வகையில் கலந்திருக்கின்றன. நாம் அனைவரும் பரிசுத்த மாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. அவர் ஒருவரால் தான் நம்மைப் பரிசுத்தமாக்க முடியும். அதற்குரிய பலத்தை நமக்குத் தந்தருளுகிறவரும் அவரே. ஆயினும் நமது பங்கின்றி அதை அவர் நமக்குத் தருகிறதில்லை.

இவ்வகையிலான தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்க வழியில் நாம் நம்மை ஒப்புவிக்க வேண்டும்.

> "ஏதோ சாதகமான மாய வித்தையினால் பரிசுத்த வாழ்க்கை நம்மை வந்தடையும் என்று நினைப்போமானால் அது மிகப்பெரிய தவறாகும். அதற்குரிய நிபந்தனைகளை அறிந்தும் அவைகளை நிறைவேற்றாமல், எதிர்பாராத ஒரு நற்பேறாக அதனை நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது. அந்தப் பசுமையான விளைச்சலைக் கண்டடையத்தக்க வழிமுறைகள் மிகத் தெளிவாக வரையறுக் கப்பட்டிருக்கின்றன. நாம் அவ்வழியை அறிந்து அதில் நடப்போம். எடுத்துக்காட்டாகப் பரிசுத்த வாழ்க்கையை விரும்பியும் வேத தியானத்தையும், ஜெபத்தையும் புறக்கணித்தல், ஒரு வழியை நாடி மற்றொரு வழியில் நடப்பதற்கு ஒப்பாக இருக்கிறது."

நாம் பரிசுத்தத்தை அடைய விசுவாசம் மட்டும் போதும் என்று கிறிஸ்தவர் களிடம் சொல்வோமானால் அது அவர்களைத் தவறான வழியில் நடத்துவதாகும். சாய்வு இருக்கையில் அமர்ந்த வண்ணம் எவ்வித முயற்சியும் இன்றி கிறிஸ்துவின் சாயலை அடைய முடியும் என்னும் எண்ணத்தையும் உண்டாக்கிவிடும். அது அவர்களுடைய விருப்பத்தையும், அழைப்பையும், கீழ்ப்படியச் செய்யும் நூற்றுக் கணக்கான புதிய ஏற்பாட்டு அறிவுரைகளையும் கருத்தில் கொள்ளாது விட்டுவிடச் செய்துவிடும்.

நாம் வெற்றியுள்ள வாழ்க்கையை அடைவதற்கு மேடையிலே கொடுக்கப் படுகின்ற அழைப்பிற்கு நம்மை ஒப்புவிப்பது போதுமானது என்று கற்பிப்பதும்



அதுபோலவே தவறாக வழிநடத்துவதாகும். அப்படிப்பட்ட அனுபவத்தில் ஒருவர் தன் வாழ்வை மீண்டும் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்கிறார் என்பதை ஒருவராலும் மறுக்க இயலாது. ஆனால் அச்செய்கை ஒன்றே போதுமானதாகாது. அதுவே முடிவுமல்ல. கருத்தோடு முயற்சி செய்யாவிடில் அதனுடைய சிறப்பும், இன்றியமையாத தன்மையும் விரைவாக மங்கிவிடும்.

"உன்னைச் சாராதே, தேவனைப் பற்றிக்கொள்; வாக்குறுதியை விசுவாசி, நிறைவைப் பெற்றுக்கொள்; முயற்சியைக் கைவிடு, நம்பிக்கையைக் கைக்கொள்" போன்ற அறைகூவல்களைக் குறித்து நாம் மிகுந்த எச்சரிக்கை உடையவர்களா யிருக்க வேண்டும். "தூய ஆவியானவர் தாமாகவே ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் செயல்படுகிறதில்லை. தம்மைச் சார்ந்திருக்கும்படி அவர் காத்திருக்கிறார்" என டோனால்டு கேம்ப்பெல் இதனைக் குறித்துக் கூறி யிருக்கிறார்.

### திடீர்ப் பரிசுத்தம் நடைமுறையில் செல்லாது

இந்தத் தொல்லையை ஒரேடியாக நீக்க, தேவன் நிவாரண மருந்தாக "பரிசுத்த மாத்திரைகளை" அளித்துப் பரிசுத்த வாழ்க்கையை அடையும்படி செய்கிறதில்லை. அதை அடைய உடனடித் தீர்வோ, குறுக்கு வழியோ கிடையாது. மாறாக, வாழ்நாட்களெல்லாம் நாம் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டிய வழிமுறையைத் தந்து, அதனோடு, அதனை நமக்குரியதாக்கிக் கொள்ளத்தக்க வலிமையையும் கொடுக்கிறார்.

விசுவாசத்தினால் மட்டுமே நாம் இரட்சிப்பைப் பெற முடியும். ஆனால் பரிசுத்த வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ள விசுவாசத்தோடு கிரியையும் அவசியமாகும்.

நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து மாற்றம் அடைய வேண்டியவர்களா யிருக்கிறோம். ஒருவேளை நாம் முன்கோபிகளாக, உணர்ச்சிவயப்பட்டு மற்றவர்களைச் சினமடையச் செய்கிறவர்களாக, பொறுமையற்றவர்களாக, நிதானம் தவறுகிறவர்களாக, சூழ்நிலைக்கேற்ப பக்குவமாக நடக்க அறியாதவர் களாக, அன்பற்றவர்களாக, தன்னலம் கொண்டவர்களாக, ஏமாற்றுகிறவர்களாக அல்லது மழுப்புப் பேச்சினால் ஆணையிடுகிறவர்களாக, சீர்கேடாகப் பேசுகிறவர்களாக, கிறிஸ்துவைக் கனப்படுத்தாத பழக்கங்களைக் கொண்ட வர்களாக இருப்பின் நாம் மாறவேண்டும். கர்த்தர்தாமே அம்மாற்றத்தை உருவாக்குவார். உண்மையாகவே அதை அவர் நம்மிடத்தில் செய்யக் காத்திருக்கிறார். நம்முடைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறார். நம்முடைய ஒத்துழைப்பை அடைவதற்கு நியாயப்பிரமாணத்திற்குள் நடத்தாமல் கிருபைக் குள்ளாகவே நம்மை அவர் நடத்துகிறார். தண்டனைக்குப் பயந்து அல்ல, தனது இரட்சகரின்பால் அன்பு மேலிடுகிறதனாலேயே விசுவாசி பரிசுத்தமாயிருக்க விரும்புகிறான். இதுவே நமது அடுத்த செய்தியின் பொருளாகும். ●

# 8

# பரிசுத்தமாவதற்குரிய வழி

ஒருவன் இரட்சிப்படைந்த பின்னர் பரிசுத்தமாக வாழ்வான் என்பதை எவ்விதம் நிச்சயித்துக்கொள்வது? அவன் பாவத்திலிருந்தும், உலகத்திலிருந்தும் பிரிந்து வந்து கிறிஸ்துவுடன் நடப்பதற்கு சிறந்த வழி எது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வது? என்னும் கேள்விகள் நமதுள்ளத்தில் எழுகின்றன.

பரிசுத்தத்தை அடைவதற்கான செயல்திட்டத்தை வகுக்கும் பொறுப்பு மனிதனிடம் விடப்பட்டிருக்குமானால், அவன் அதற்கென ஒழுங்குகளும் கோட்பாடுகளும் நிறைந்த அமைப்பையே நாடுவான் என்பது உறுதி. கிறிஸ்தவனை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படுத்த வேண்டும் என்றே வலியுறுத்துவான். ‘‘விசுவாசி தனது நடத்தையில் குறிப்பிட்ட அளவு வளர்ச்சியடைந்தால்தான் அவன் பரிசுத்தமாகிறான்; இதைச் செய், அப்பொழுது வாழ்வடைவாய்’’ என்பன மனிதனின் எண்ணங்களாயிருக்கும்.

இத்தகைய முறையைப் பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதனால் உண்டாகும் பரிசுத்தம் என்று அழைக்கலாம். அந்தப் பிரமாணத்தில் பத்துக் கட்டளைகள், ஓய்வுநாள் ஆசரிப்பு போன்றவை இடம் பெற்றிருக்கும். மற்றும் மது அருந்துதல், போதைப் பொருட்கள் உட்கொள்ளுதல், புகை பிடித்தல், திரைப்படம் பார்த்தல், நடனமாடுதல், ஒழுக்கக்கேடு போன்ற இன்னும் பல தடைசெய்யப்பட்டிருக்கும். ‘செய்’ அல்லது ‘செய்யாதே’ என்னும் கட்டளைகள் ஆயிரக் கணக்கில் காணப்படும்.

எனினும் தண்டனையில்லாத கட்டளைகள் வெறும் ஆலோசனைகளாகவே விளங்கும். அதனால் அந்தக் கோட்பாடுகளில் தவறுகிறவர்கள் நிச்சயமாய்த் தண்டிக்கப்படவேண்டும் என்று பிரமாணத்தைக் கைக்கொள்வதால் இரட்சிப் படைகிறோம் எனக்கற்பிப்பவர்கள் சொல்லுவார்கள். பொதுவாக இரட்சிப்பை இழந்துவிடுதல் தண்டனை என்று அவர்கள் கருதுகிறார்கள். ‘‘நாம் விசுவாசத்தினால் இரட்சிப்படைகிறோம், தூய கிறிஸ்தவ வாழ்க்கையைக்



கடைப்பிடிக்காவிட்டால் நித்திய ஜீவனை இழந்துவிடுவோம்’’ என்பது இதனுடைய விளக்கமாக இருக்கிறது. மேலும் அந்தக் கொடிய தண்டனைக்கு உட்பட்டுவிடுவோம் என்னும் அச்சத்தினால் மட்டுமே விசுவாசிகள் நேரானதும் குறுகலானதுமான பாதையில் நிலைத்திருக்க முடியும் என்று அவர்கள் மனமார நம்புகிறார்கள்.

பரிசுத்த வாழ்க்கைக்குரிய மேற்கூறிய வழிமுறை முற்றிலும் தவறானதாகவும், ஊறுவிளைவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இது வேத வசனத்தின் அடிப்படையில் உண்டானதுமல்ல. நாம் சில கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதாலும், தடை செய்யப்பட்ட செயல்களைக் களைவதாலும் பரிசுத்தராகலாம் என்று வேதம் எங்கும் சொல்லவில்லை. மாறாக, பவுல் அப்படிப்பட்ட கொள்கையை ஏற்றுக்கொள்ள மனதாயிருந்த கலாத்திய நாட்டு விசுவாசிகளைக் கண்டிக்கிறார். அவர்களிடம், ‘‘ஆவியிலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?’’ என்று வினவுகிறார். இதனையே, ‘‘முதலாவதாக நியாயப்பிரமாணத்தினால் இரட்சிப்படைய முடியாத நீங்கள் அந்தப் பிரமாணத்தினாலே எவ்விதம் பரிசுத்தமாக முடியும்?’’ என்று வேறுவிதமாகக் கேட்கலாம்.

இந்த வழிமுறை வேதத்தின் அடிப்படையில் உண்டானதல்ல என்பது மட்டுமின்றி பயனற்றதாகவும் உள்ளது. இதைக் குறித்து ‘‘சீனாய் மலையல்ல, சீயோன் மலையே பரிசுத்தரை உருவாக்குகிறது’’ என்று ஜேம்ஸ் டென்னி சொல்லியிருக்கிறார். பலமற்றவர்களைப் பலமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் நியாயப்பிரமாணம் அந்தப் பலத்தை அடைவதற்குத் தேவையான வல்லமையைத் தருவதில்லை. இருந்தபோதிலும், பலமற்றவர்களைப் பலமில்லாதவர்களாகக் காண்கிறபோது சாபத்திற்கும் உட்படுத்துகிறது (ரோமர் 7:8-13). வீழ்ந்துபோன மனிதப் பண்பை ஒருவன் தன்னகத்தே உடையவனாய் இருப்பதால், அவன் தடை செய்யப்பட்டதைச் செய்ய விழைகிறான். இது அந்த நியாயப்பிரமாணத்தின் குற்றமல்ல. மனிதனுக்குள்ளாகக் குடியிருக்கும் பாவத்தினாலேயே இது உண்டாகிறது.

### தேவன் வகுத்த வழி

பரிசுத்தத்தை அடைவதற்குத் தேவன் வகுத்தவழி முற்றிலும் வேறுபட்டது. நியாயப்பிரமாணத்தினால் அல்ல, கிருபையினாலேயே அது உண்டாகிறது. ‘‘என்னுடைய கிருபையால் உங்களை இரட்சித்தேன். ஆகவே நீங்கள் பயத்தினால் அல்ல, அன்பினாலே எங்கும் சென்று அதற்கு ஏற்றாற்போல நடந்துகொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தில் குடியிருக்கத்தக்கதாகத் தூய ஆவியானவரை உங்களுக்குத் தந்திருக்கிறேன். நீங்கள் பெற்ற அழைப்பிற்குப் பாத்திரவான்களாக நடந்துகொள்வதற்குத் தேவையான பலத்தை அவர் தந்தருளுவார். உங்களுக்கு எதிராக வரும் சோதனையை எதிர்த்து நிற்கும்

போதும், உங்களைத் தூண்டிவிடுகிற பாவத்தைச் செய்ய மாட்டேன் என்று உதறித் தள்ளுகிற போதும் அதற்குரிய வெகுமதியை உங்களுக்குத் தருவேன்'' என்பதே கர்த்தருடைய சொற்களின் பொருளாக இருக்கிறது.

''நான் பெற்ற கிறிஸ்தவ அழைப்பிற்கு எவ்வித நடத்தை ஏற்றது என்பதை எவ்வாறு அறிவேன்?'' என்கிற வினா ஒரு விசுவாசியின் உள்ளத்தில் எழுவது இயற்கையே. ''இதற்காகவே, உனக்காகப் புதிய ஏற்பாடு, நீதிகள் நிறைந்த நடைமுறை போதனைகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. இந்தப் போதனைகளில் சில கட்டளைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஆயினும் அவைகள் சட்டங்கள் அன்று; அவற்றோடு தண்டனைகள் இணைக்கப்படவில்லை என்பதை உணர்ந்து கொள். மாறாக அவை உன் வாழ்க்கைக்கு முன் மாதிரிகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட உனது வாழ்க்கை எம்மை மகிழச் செய்யும்'' எனத் தேவன் விளம்புகிறார்.

நாம் இரட்சிக்கப்பட்ட அக்கணத்திலேயே, தேவனுக்கு முன்பாகப் பரிசுத்த வான்கள் என்ற பதவியை அடைகிறோம். நாம் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கின்ற காரணத்தினால் பரிசுத்த தகுதியைக் கொண்டிருக்கிறோம். நமது நடைமுறைச் செயல்பாடுகள் நமது பதவிக்கு ஏற்ப காணப்பெறுதல் அவசியம். அழைக்கப்பட்ட தகுதிக்கு உகந்தபடி நமது நிலையைக் காணச் செய்தல் நமது பொறுப்பாகும்.

## பயப்படாதே, அன்புகூரு

கிருபைக்குக் கீழாகப் பரிசுத்த வாழ்க்கையை நடத்துவதற்குத் தூண்டு கோலாக அமைவது பயமன்று, அன்பே. தங்களது பாவங்களைத் தீர்ப்பதற்காகக் கர்த்தர் கொடுத்த விலையை எண்ணிப் பார்க்கும் விசுவாசிகள், இயல்பாகவே பரிசுத்தத்தை நாடுகிற உள்ளுணர்வு கொண்டவர்களாயிருக்கின்றனர். கல்வாரி யைக் குறித்த ஞாபகம் நாம் தன்னடக்கம் கொண்டவர்களாக, நீதியுடையவர் களாக, திவ்விய பண்புடையவர்களாக வாழ்வதற்குத் தேவையான தூண்டுதலைத் தருகிறது.

''உமக்குச் சிறைப்பட நான் நியாயப் பிரமாணத்தினால் கட்டப்பட வேண்டுமா?'' என்று வினவுகின்ற விசுவாசி, ''நீர் அளித்த மகிழ்ச்சியில் வயப்பட்டு, விடுதலை பெற விருப்பமின்றி, என் இதயமே உமக்குச் சிறை யாயிற்று'' என்று உடனடியாக விடை பகர்கிறான்.

''கிருபைக்குக் கீழாக இருக்கின்ற காரணத்தினால், கிறிஸ்தவர்கள் தங்கள் மனம்போன போக்கிலே எங்கும் சென்று எவ்வகையிலும் வாழ்க்கையை நடத்துவார்கள்'' என்று கூறி, மேற்கூறிய கருத்தைச் சிலர் எதிர்க்கலாம். அவர்கள், கிருபையின் அடிப்படையிலான கொள்கை பாவத்தை ஊக்குவிக்கிறது என்றும் கூறுவார்கள்.



ஸ்பர்ஜன் இதற்கு உற்ற விடை தருகிறார்:

> தனது இயல்பினாலும், தான் பெற்ற கிருபையினாலும் பாவம் செய் கிறேன் என்று ஒருவன் தேவனுடைய நற்பண்புக்கு எதிராக வாதிட முடியாது... ''தேவன் என்னிடம் இரக்கம் உடையவராக இருக்கிறார் என்பதால் நான் அவரை வெறுக்கலாமா? அவர் என்னை ஆசீர்வதிப் பதால் நான் அவரைச் சபிக்கலாமா?''. . . இயேசுவுக்குள்ளான விசுவாசி வேறுவிதமாகவே காரணங்களை ஆராய்ந்து பார்க்கிறான். ''தேவன் இவ்வளவு நல்லவரா?. . . அப்படியானால் அவரை நான் துக்கப்படுத்தப் போவதில்லை. என்னுடைய மீறுதல்களை மன்னிக்க ஆயத்தமுடையவராயிருக்கிறாரா? அப்படியானால் அவரிடத்தில் நான் அன்புகூருவேன், அவரைத் துன்பப்படுத்தமாட்டேன்.''

ஒருவன் தேவனுக்காகத் தன்னை முற்றிலும் பரிசுத்தமாக்கிக் கொள்ளவும், பொல்லாங்கை வெறுக்கவும் கூடியவனாக மாறுவதற்கு அவன் தேவனிடத்தில் இலவசமாகப் பெற்றுக்கொண்ட மன்னிப்பைக் காட்டிலும் சிறந்த காரணம் ஒன்றும் தேவையில்லை.

மற்றவற்றைப் போலவே, கிருபை தவறாகப் பயன்படுத்தப்படும் என்பது உண்மைதான். நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள் என்பது உண்மையே எனினும், நாம் கட்டுப்பாடற்றவர்கள் அல்லர். மாறாக, நாம் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு உட்பட்டவர்களாயிருக்கிறோம் என்று பவுல் குறிப்பிட்டிருக்கிறார் (1 கொரி. 9:21). விசுவாசி நியாயப் பிரமாணத்தையல்ல, கிறிஸ்துவையே தான் வாழ்வதற்குரிய கோட்பாடாகக் கொண்டிருக்கிறான்.

நாம் விரும்புகிறவைகளைச் செய்கிறவராயிருக்கிறோம் என்பது உண்மை. ஆயினும் அதன் உட்கருத்து, நாம் தற்போது விரும்புகிறவைகள் யாவும் வித்தியாசமானவை என்பதாகும். நாம் பரிசுத்தராயிருக்க விரும்புகிறோம். சோதனையை எதிர்த்து நிற்க முயல்கிறோம். அதை விட்டு ஓட வாஞ்சிக்கிறோம். கிறிஸ்துவின் இதயத்தைக் களிகூரச் செய்யும் செயல்களைச் செய்ய நாடுகிறோம். நாம் விரும்புகிற வண்ணம் வாழ்கிறோம் என்பதன் பொருள் இதுவே.

பல்வேறு சபைப் பின்னனியில் உள்ள கிறிஸ்தவர்கள் பலர் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதை நாம் மறுக்க இயலாது. தேவனுடைய கிருபையில் ஊன்றக் கட்டப்பட்டவர்களாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களால் அவ்விதம் இருக்க முடிகிறது. நியாயப்பிரமாண பின்னனியைச் சார்ந்தவர்களாயிருந்தும்கூடச் சிலர் பரிசுத்த வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

இத்தருணத்தில் எழுகின்ற வேறொரு கேள்வியைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அக்கேள்வியை நாம் தவிர்க்க முடியாது. ஒரு விசுவாசி இனிப் பாவமே செய்யாத ஒரு பரிபூரண பரிசுத்த நிலையை அடைய முடியுமா? இதைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது? ●

# 9

# கிறிஸ்தவ ஒழுக்கத்தின் ஒழுங்குகள்

“விசுவாசியின் சரியான ஒழுக்கம் எது? அவன் எதைச் செய்யலாம், எதைச் செய்யலாகாது? இந்த நடவடிக்கை சரியா? தவறா?” என்னும் வினாக்கள் நமக்குமுன் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு விசுவாசி தான் பெற்றுக்கொண்ட பரலோக அழைப்பின் தகுதிக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்கைக் குறித்து வேதம் பொதுவான விளக்கங் களைத் தருகிறது. அது பல கேள்விகளுக்கு நேரடியான விடையைக் கொடுக் கிறது. அவற்றை மேலும் ஆராய்ந்து பார்க்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளோடு இணைக்கப்படுவது ஒருபோதும் சரியான தல்ல என்று அது தெளிவாகப் போதிக்கிறது (2 கொரி 6:14). ஒரு விசுவாசி அவிசுவாசியைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது. அவிசுவாசியைத் தொழில் கூட்டாளியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. கிறிஸ்தவ ஊழியத்தில் அவி சுவாசியை வேலைக்கு அமர்த்தக்கூடாது. இவைகளைச் செய்யலாமா அல்லது கூடாதா என்று அறிய நாம் ஜெபிக்கத் தேவையில்லை. எவருடைய ஆலோசனை யையும் நாட வேண்டியதுமில்லை. அதனுடைய பதில் ஏற்கனவே இறை நூலில் பொதிந்துள்ளது.

ஆனால் வேதத்தில் நேரடியாக விடையளிக்கப்படாத நூற்றுக்கணக்கான சூழ்நிலைகள் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படும். வேதம் எல்லாப் பிரச்சனை களையும் விளக்க முற்படுவதாயிருப்பின் நாம் அதனை எங்கும் சுமந்து செல்லக்கூடாதபடி மிகப்பெரியதாயிருக்கும்.

ஆகவே தேவன் செய்தது யாது? அவர் பல நடைமுறை விதிகளைத் தந்துள்ளார். ‘இதைச் செய்வது சரியா?’ என்னும் கேள்வி எழும்போது அவ் விதிகள் ஒவ்வொன்றையும் அதனோடு பொருத்திப்பார்க்க வேண்டும். இந்த முறையை நாம் பயன்படுத்தும் போது, தீர்வுகாண முடியாதபடி எந்த ஒரு சிக்கலும் இருக்காது என்றே நான் நினைக்கிறேன். ஒரு கணக்கிற்கு விடை காண நாம் கணிப்பொறியைப் பயன்படுத்துவதுபோல இது செயல்படுகிறது.



கணிப்பொறியில் காணப்படும் விதிகள் ஒவ்வொன்றையும் முறையாகப் பயன்படுத்தும்போது, முடிவில் அக்கணக்கின் விடை திரையில் பளிச்சிடும். பரிசுத்த வாழ்க்கைக்குத் தேவையான விதிமுறைகள் கேள்விகளாகக் கீழே தரப்பட்டுள்ளன.

## இது தேவனுக்கு மகிமையாக இருக்கிறதா?

“இதைச் செய்வதில் ஏதேனும் தீங்கு உண்டா?” என்றே நாம் பொதுவாகக் கேட்கிறோம். “இதைச் செய்வது தேவனுக்கு மகிமையாக இருக்கிறதா?” என்றும் கூட நாம் கேட்க வேண்டும். நாம் எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக் காகவே செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இது பொதுவாக உட்கொள்கிற உணவு, பருகுகின்ற பானம் போன்ற செயல்களோடு சம்பந்தமுடையதாகும் (1 கொரி. 10:31). புகழ்பெற்ற சுவிசேஷகர் தேவனுக்கு மகிமையாக நற்செய்தியை வழங்குகிறார். அவருடைய மனைவி அதே நோக்கத்தோடு பாத்திரங்களைக் கழுவுகிறார். “நாள் ஒன்றுக்கு மும்முறை தெய்வீக ஊழியம் இங்கே செய்யப்படுகிறது” என்னும் எழுத்துகள் பாத்திரம் கழுவும் தொட்டிக்கு மேலே பொறிக்கப்பட்டிருக்கின்றன.

எந்த ஒரு கனமான வேலையையும் தேவனுக்கு மகிமையாகச் செய்ய முடியும். பண்ணையில் பணியாற்றும் கிறிஸ்தவ அடிமைகளும் ‘கிறிஸ்துவுக் கென்று, கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனிதருக்கென்று அல்ல கர்த்தருக் கென்று’ ஊழியம் செய்யலாம். (எபே. 6:5-8).

உண்மையற்றதும், தூய்மையற்றதும், நீதியற்றதும், கேள்விக்குரியதுமான செயல்கள் தேவனுக்கு மகிமையாக இருப்பதில்லை. அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவதற்குமுன் தலை வணங்கி, “கர்த்தராகிய இயேசுவே, நான் செய்யப் போகிற செயலில் நீர் மகிமைப்பட வேண்டும்” என்று ஜெபிப்பது பொருத்த மற்றதும் நகைப்பிற்குரியதுமாகும்.

## இது உலகத்திற்குரியதா?

மறுபடியும் பிறக்காதவர் தங்களது நடை, உடை, பாவனை, இசை, கலை, மதம், தத்துவம் ஆகியவற்றிலெல்லாம் தங்களுக்கென்ற பாணி உடையவர்களா யுள்ளனர். அது ஆவிக்குரியதாயில்லாமல் அவர்களது சரீரத்தையே போற்றக் கூடியதாகவும், மனிதனுக்குக் கிறிஸ்து நியமித்த மேன்மைக்கு மாறாக, அவனது ஒழுக்கக் கேட்டையே திருப்தி செய்கிறதாகவும் இருக்கிறது.

கிறிஸ்து உலகத்தாரல்லர்; அது போலவே விசுவாசிகளும் உலகத்தாரல்லர் (யோவான் 17:16). உலகம் தேவனைப் பகைக்கிறது. எனவே எவனொருவன் இந்த உலகில் அன்புகூருகிறானோ அவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான் (யாக். 4:4; 1 யோவான் 2:15).

ஒருவன் மறுபடியும் பிறக்கும் போது, எது உலகத்திற்குரியது என்று அறியத்தக்க உள்ளுணர்வைத் தூய ஆவியானவராலே பெற்றுக்கொள்கிறான். அவன் கிருபையிலே பெருகுகிறபோது அந்த உள்ளுணர்வும் ஆர்வமிக்கதாகப் பெருகும். விசுவாசி ஒருவர் நூதன நுட்பங்கள் அனைத்தும் கொண்ட தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றை வாங்க ஆணை கொடுத்திருந்தார். பெட்டியை ஏற்றிக் கொண்டு சரக்கு வண்டி வீட்டிற்கு வந்துவிட்டது. ஆவலுடன் பலகணி வழியாக எட்டிப் பார்த்தவருக்குத் தூக்கிவாரிப் போட்டது, அதில் எழுதியிருந்த விளம்பரம். "உங்களுடைய வீட்டிற்குள்ளாக உலகத்தைக் கொண்டு வருகிறோம்." அவ்வளவு தான் ஓட்டுநரிடம் தொலைக்காட்சிப் பெட்டியைத் திரும்ப எடுத்துச் செல்லும்படி பணித்தார்.

## இயேசு கிறிஸ்து இதைச் செய்திருப்பாரா?

நாம் அவரது அடியொற்றிப் பின் செல்லும்படி, நமது இரட்சகர் நமக்கு மாதிரியை வைத்துச் சென்றுள்ளார் (1 பேதுரு 2:21). எனவே 'இயேசு நாதர் என்ன செய்திருப்பார்' என்னும் சோதனையை நமது அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொருத்திப் பார்ப்பதே தகுதியாயிருக்கும்.

ஒரு கிறிஸ்தவச் சபையினர் இந்தச் சோதனையைத் தங்களது அனுதின வாழ்க்கையில் பயன்படுத்தத் தீர்மானித்ததாக சார்லஸ் ஷெல்டன் "அவரது காலடிகளைப் பின்பற்றுதல்" என்னும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அதன் பயனாக அச்சபையினரின் வாழ்க்கையில் போற்றத்தகு எழுச்சி கண்டனர்.

இயேசு கிறிஸ்து ஆயக்காரரோடும் பாவிகளோடும் உணவருந்தினார் என்பதைச் சிலர் நமக்கு நினைவூட்டலாம் (மாற்கு 2:15,16). அது உண்மைதான். அவர் எப்போதும் தமது தந்தையாகிய தேவனுக்கு உண்மையுள்ளவராய் இருந்தார் என்பதும் உண்மையே. அவர்களோடு உணவு உண்டபோது உண்மை யுள்ளவராய் இருந்தார். அவர்களது பாவங்களைப் பொறுத்துக் கொள்ளவில்லை; தமது சாட்சியை அவர்களுக்காக நெகிழவிடவுமில்லை. நாம் தேவனற்றவர் களுடைய பாவத்தைக் கண்டித்து உணர்த்தக்கூடியவர்களாகவும் (எபே. 5:11), அவர்களுக்குக் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து அளிக்கிறவர்களாகவும் (ரோமர் 1:14) இருப்போமென்றால் அவர்களோடு உணவு அருந்துவதில் தவறேதுமில்லை.

> "கிறிஸ்து இவ்வுலகில் நடந்துகொண்ட முறை பரிசுத்தத்திற்கு அளவு கோலாக நமக்குமுன் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்க வேண்டும்" (ஆர். சி. சேப்மென்).



## இயேசு கிறிஸ்து மீண்டும் வருகிற போது, இதைச் செய்கிறவனாக நீ காணப்படலாமா?

நமது இரட்சகர் மீண்டும் எப்பொழுது வருவார் என்று யாருக்கும் தெரியாது. அது எக்கணத்திலும் நிகழக்கூடியது. அப்போஸ்தலனாகிய யோவான் அவர் வருகையின் போது வெட்கப்பட்டுப் போக ஏதுவுண்டு என்று எச்சரிக்கிறார் (1 யோவான் 2:28). நாம் பொல்லாங்கில் அகப்பட்டவர்களாகவோ, கேள்விக்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாகவோ, உணர்ச்சி வயப்படுத்தும் படங்களைக் காண்பவர்களாகவோ, கீழ்த்தரமான நூல்களைப் படிக்கிறவர்களாகவோ, மாமிச வேட்கையை நிறைவேற்றுகிறவர்களாகவோ காணப்படுவோமெனில் நாம் வெட்கமடைய வேண்டியதாய்ப் போய்விடுமே. "நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என நம்மைப் பார்த்து அவர் கேட்பாரென்றால் அது நம்மை வெட்கமடையச் செய்துவிடும். விசுவாசத்திலிருந்து விலகிப் போயிருந்த பேதுருவைக் கண்ட ஆண்டவர் "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று வினவிய விதமாக நம்மையும் அவர் வினவக்கூடும்.

கிறிஸ்துவின் சடுதியான வருகை விசுவாசியின் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்தக்கூடிய ஏவுதிறன் கொண்டதாகும் (1 யோவான் 3:3). அந்தச் சத்தியத்தை நாம் அறிவுபூர்வமாக நம்மகத்தே வைத்துக்கொள்வோமெனில் பயனேதுமில்லை. அச்சத்தியம் ஆக்கபூர்வமாக நம்மை நடத்த வேண்டும். அவருடைய வருகையை விரும்பும் யாவரும் (2 தீமோ. 4:8) அந்த அருமையான நம்பிக்கையினாலே தங்களது வாழ்க்கையைக் கர்த்தருக்கென்று ஊற்றி விடுகிறார்கள்.

## எத்தகைய இயல்பு இதை ஊட்டி வளர்க்கிறது?

இருவகை இயல்புகளைக் குறித்து நாம் பின்னொரு பகுதியில் விளக்கமாகக் காணலாம். அதனுடைய தொகுப்பை மட்டும் இங்கே குறிப்பிடலாம். ஒவ்வொரு விசுவாசியும் இருவகை இயல்புகளைக் கொண்டிருக்கிறான். ஒன்று முந்தினது, மற்றது புதியது. முந்தின இயல்பு சரி செய்யக்கூடாத பொல்லாங்கு; புதிய இயல்பு சொல்லி முடியாத நற்பண்பாகும். இவ்விரண்டு இயல்புகளும் ஒன்றோடொன்று தொடர்ந்து போர் செய்கிறவைகளாக இருக்கின்றன. எவ்வியல்பை நாம் ஊட்டி வளர்க்கிறோமோ அவ்வியல்பே வெற்றிபெறும். நம்முடைய பார்வை, கேள்வி, செயல், நாம் போகிற இடம், நாம் கொள்கிற உறவு, நாம் ஊக்குவிக்கிற சிந்தை ஆகியவை நம்முடைய இயல்பை வளர்க்கும். நாம் ஓநாய்க்கு உணவளித்து விட்டு, ஆடு வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

**உங்களுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயம் என்பதை நினைவுகூர்கிற நீங்கள் இதைச் செய்ய உடன்படுவீர்களா?**

ஒருவன் இரட்சிக்கப்பட்ட உடனே அவனது சரீரத்தைத் தூய ஆவியானவர் தமக்கு நிரந்தர வாசஸ்தலமாகக் கொள்கிறார் (1 கொரி. 6:19). திரியேக தேவனில் மூன்றாவது நபர் நமது சரீரத்தை ஆலயமாக, அதாவது தாம் தங்கும் பரிசுத்த வீடாகக் கண்ணோக்குகிறார். நமது சரீரம் பரிசுத்தமானது என்றும் அதில் பரிசுத்தமான ஒருவர் குடியிருக்கிறார் என்றும் அறிகின்ற அறிவோடு நாம் வாழ வேண்டும்.

இந்த உண்மை நம்மை எந்த அளவு உறுதியாகப் பற்றிக் கொண்டிருக் கிறதோ அந்த அளவிற்கு நாம் சன்மார்க்க நெறி தவறாதவர்களாகவும், பசிப்பிணி கொள்ளாதவர்களாகவும், மது மயக்கம் அடையாதவர்களாகவும் அவைகளை எதிர்த்து நிற்போம். புகையிலை, போதைப் பொருட்கள் போன்ற புற்றுநோய்களை உருவாக்கும் பொருட்களுக்கு அடிமைப்பட மாட்டோம். மாறாக நமது சரீரங் களைக் கர்த்தருக்கென்று நலத்துடனும், பாதுகாப்புடனும் பேணுவதற்கு உகந்த முயற்சிகளை மேற்கொள்வோம்.

**இது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஏற்ற நடத்தையா?**

நாம் மாமன்னரின் பிள்ளைகள், நாம் பெற்ற உன்னத அழைப்பிற்குத் தகுதி படைத்தவர்கள் என்னும் எதிர்பார்ப்பிற்கு ஏற்றபடி நமது நடத்தை காணப்பட வேண்டும் (எபே. 5:8; கொலோ. 1:10).

பிரான்சு நாட்டு மன்னன் லூயி XVI என்பாரின் குமாரனைக் குறித்த கதை (வெறும் கதையாகத்தான் இருக்கும்). பொல்லாப்பு நிறைந்த பெண்மணி ஒருத்தி அவனை இழிந்த சொற்களைப் பேசச் செய்து களங்கப்படுத்த முயற்சி செய்தாள். அரச குமாரனோ தனது கையை முறுக்கிக் கொண்டு, காலை ஓங்கி மிதித்து, ''நான் அப்படிச் சொல்ல மாட்டேன்; மன்னன் ஆவதற்குப் பிறந்தவன். நான் அவ் விதமாகப் பேசவே மாட்டேன்'' என்றான்.

சேரியில் குடியிருக்கும் ஒருவன் சாக்கடையில் புரள்வதைக் காணும்போது நாம் மனவருத்தம் அடைவோமேயொழிய வியப்படைய மாட்டோம். மாறாக ஒரு மன்னனின் மைந்தன் பாழடைந்த, கேட்பார் அற்ற வீட்டில் கைவிடப் பட்டவனாக வாழ்வான் என்றால் அதைக் கண்ணுற்ற எவரும் அதிர்ச்சி அடைவர். அவ்விதம் நிகழும் என்றும் எதிர்பார்க்கமாட்டோம்.

இப்புவி மக்கள் தங்களைக் காட்டிலும் விசுவாசிகள் மேலான நடத்தை கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஒரு விசுவாசி வழுவிப் போகும்போது அவனிடம், ''நீ விசுவாசி என்றல்லவா நினைத்தேன்'' என்று



பாய்வார்கள். அவர்கள் அதே பாவத்தை வழக்கமாகச் செய்து கொண்டிருந்தும் அதைக் குறித்துப் பேசமாட்டார்கள்.

இவ்விதம் பிறர் நம்மிடம் எதிர்பார்ப்பது சரியே. இந்த உலகம் நம்மிடத்தி லிருந்து உயர்ந்த பண்பையே எதிர்பார்க்க வேண்டும். மேலானதையே பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

**அது பணத்தைச் செலவிடும் செயலாக இருப்பின் இதைக் காட்டிலும் சிறப்பாகச் செலவிட முடியுமா?**

நமது வாழ்க்கையில் சில நல்லவைகளாக உள்ளன. சில அவைகளைக் காட்டிலும் உயர்ந்தவை. இன்னும் சில எல்லாவற்றிலும் மிகச் சிறந்தவைகளாக இருக்கின்றன. ஒவ்வொன்றின் மதிப்பையும் நாம் ஆராய்ந்து பார்த்து அதன் செயலாக்கத்தை மிகுந்த பயனுள்ளதாக்க வேண்டும்.

நல்லது என்று காணப்படுவது, மிகச் சிறந்தது என்பதற்கு எதிராக விளங்கு கிறது. பாவமற்ற பொருட்களில் நாம் பணத்தைச் செலவிடுகிறோம். இருந்த போதிலும் அவை தேவையற்றதாகவும், கொஞ்ச காலமே பயனுள்ளதாகவும் முக்கியமற்றதாகவும் இருக்கலாம். அதற்கு மாறாக, நற்செய்தியைப் பரப்புவதற்குச் செலவிடலாம். அப்படிச் செய்வதினால் மகிமையின் வாசல்களில் நமக்கென்று வரவேற்புக் குழுவை நியமித்துக் கொண்டவர்களாயிருப்போம் (லூக். 16:9).

நாம் செலவு செய்கிற ஒவ்வொரு ரூபாயைக் குறித்தும் குற்ற உணர்வு கொண்டவர்களாக நம்மை மாற்றும் நோக்கத்தோடு இந்த விதி சொல்லப் படவில்லை. ஆனால், தேவனுக்கென்று ஒரு கிரியையைச் செய்து அதன் பலன் நித்தியத்தில் நிலைத்திருக்கும்படி செய்யத்தக்க முறையில் நமது பணத்தைச் செலவிட, வியத்தகு வாய்ப்புண்டு என்பதை நாம் அறிந்து செயல்பட இக்கருத்து வழிவகுக்க வேண்டும்.

**காலத்தைச் சிறந்த முறையில் கழிப்பது எப்படி?**

நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுண்டவர்களாக அல்ல, மகிமை நிறைந்த விடுதலை பெற்றவர்கள் என்னும் கருத்தோடு நமது நேரத்தைக் கணக்கிடுபவர் களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளிலும் நமக்கு இருபத்து நான்கு மணி நேரம் தரப்பட்டுள்ளது. அதை எவ்விதம் செலவிடுவது என்று தீர்மானிக்கிறோம். நன்மைக்கென்றோ, தீமைக்கென்றோ, வீணாகவோ அந்நேரத்தைக் கழிக்க நமக்குக் கணக்கற்ற வாய்ப்புகள் உள்ளன.

நல்ல உக்கிராணக்காரராக நாம் காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும் (எபே. 5:16). அதாவது ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதன் பொருளாகும். சிறந்த செயல் களுக்கு முதலிடம் கொடுத்து, தேவையற்றவைகளைத் தவிர்க்க வேண்டும்

என்பதே இதன் பொருள். அஃது சில விருந்துகளை நிராகரிப்பதாக இருக்கலாம்; ஜெபத்திற்காகவும், வேத தியானத்திற்காகவும் சிலமணிநேர வேலையை உதறித்தள்ளுவதாக இருக்கலாம். உறவினர்களோடும் நண்பர்களுடனும் ஒன்றுகூடி சில நாட்களைக் கொண்டாட்டமாகக் கழிப்பதை விட்டுவிட்டுச் சபைக் கூட்டங்களுக்கே முதலிடம் கொடுத்து அவற்றையே நாடுவோமாக.

இப்படிப்பட்ட நல்ல தீர்மானங்களை எடுப்பதில் உண்மையுள்ளவர்களாக இருப்போமென்றால் தேவனுக்கென்று நாம் செய்கிற ஊழியத்தின் அளவு பெருகும்.

## உங்கள் நடத்தையின் தாக்கம் மற்றவர்கள் மீது எவ்விதம் செயல்படுகிறது?

நமது வாழ்வில் சில நடவடிக்கைகள் நல்லவையென்றும் தீயவையென்றும் காணப்படாது பொதுவானவைகளாக உள்ளன. கிறிஸ்தவன் அப்படிப்பட்ட செயல்களைச் செய்வதில் தவறில்லை. ஆயினும், அச்செயல்கள் மற்ற சகோதரர் களுக்குத் தடுக்கலாகவும் இடறலாகவும் இருக்குமென்றால் அவை தவறானவை களாகப் போய்விடும். இந்தக் கருத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் என்ன சொல்கிறார் என ரோமர் 14-ஐக் காண்க.

ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள் (வச. 13).

போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே (வச. 15).

1 கொரி. 8:9-13-ல் மீண்டும் அப்போஸ்தலன் கூறுகிறதாவது:

ஆகிலும் இதைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிப் பாருங்கள். எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவு கொள்ளுமல்லவா?

பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப் போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே.

இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள்.



ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியா திருப்பேன்.

ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பக்தி விருத்திக்கென்று இல்லாமல், மற்றவர்களது பக்தி விருத்திக்காக வாழ வேண்டும் என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு பவுல், “எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு, ஆயினும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது” (1 கொரி. 10:23) என்று உரைத்துள்ளார்.

> “மற்றவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும், அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு நாம் காரணமாக அமைய வேண்டும் என்பதே நம்மை வழிநடத்தும் தத்துவமாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கத் தக்க முறையில் ஒருவர் தமது சுதந்தரத்தை அனுபவிப்பாரென்றால் அதனால் ஒரு பயனையும் பெற்றுக்கொள்வதில்லை” (W.E. வைன்).

ஒரு கிறிஸ்தவன் பன்றி இறைச்சியையோ, ஓடுள்ள மீனையோ உண்ணலாம். சிறிதளவு திராட்சைப் பிழிவையும் பருகலாம். எனினும் அது கர்த்தருக்குள்ளான சகோதரன் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குமெனில் அந்த சுதந்தரத்தை விட்டுவிட வேண்டியது அவனுடைய மிகப் பெரிய பொறுப்பாகும்.

தேவனாலே சபைக்குக் கொடுக்கப்பட்ட வரங்களில் ஒருவராக விளங்கிய C.H. ஸ்பர்ஜன் புகைபிடிக்கும் பழக்கமடையவராக இருந்தார் என்பது பெரும்பாலோர் அறிந்த ஒன்று. அப்பழக்கம் தவறானது அல்ல என்றும் வாதிடுவார். ஒரு நாள் அவர் பெரிய விளம்பரப் பலகை ஒன்றைக் காண நேரிட்டது. ‘ஸ்பர்ஜன் பிடிக்கும் புகையிலை இது. நீங்களும் பிடியுங்கள்’ என்று அதில் எழுதியிருந்தது. உடனடியாக அப்பழக்கத்தை அவர் கைவிட்டார்.

## அதைக் குறித்து ஐயம் ஏற்படுகிறதா?

விசுவாசத்தினால் வராதது யாவும் பாவமே (ரோமர் 14:23). நல்லது அல்லது தீமையானது என்று சொல்ல முடியாத பொதுவான செயலை அதாவது தன்னகத்தே தவறொன்றும் இல்லாத ஒன்றையே இது குறிக்கிறது. ஒரு செயலைக் குறித்து நான் தவறு என்று கருதுகிறேன். ஆனாலும் அதைத் தொடர்ந்து சென்று அச்செயலைச் செய்கிறேன் என்றால், நான் பாவம் செய்பவனாவேன். அதுவே வேறொரு விசுவாசிக்குத் தவறாக இருக்காது. அதனை அவர் செய்யப் பூரண விடுதலை பெற்றிருக்கிறார். ஆனால் எனது உள்மனதோ அதைக் குறித்துத் தெளிவற்றிருக்கிறது. விசுவாசத்தோடும், அதைச் செய்வது முறையானது என்ற நம்பிக்கையோடும் அதை என்னால் செய்ய முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் அதைச் செய்வேனென்றால் நான் பாவம் செய்கிறவனாவேன்.

சில சமயங்களில் ஒரு ஆடை சுத்தமாக வெளுக்கப்பட்டிருக்கிறதா அல்லது அழுக்கு படிந்திருக்கிறதா என நமக்குச் சந்தேகம் ஏற்படும். அதைக் கூறுவது சற்றுக் கடினமாகவும் இருக்கும். "சந்தேகம் என்றால் அழுக்குதான்" என்னும் விதியை அங்கே நாம் கடைப்பிடிக்கிறோம். அது போலவே ஒழுக்கத்தைக் குறித்த செயல்களிலும் அவ்விதியைக் கடைப்பிடிக்க வேண்டும். "சந்தேகத்திற்குரியதைச் செய்வது தவறு" எனக்கொள்ள வேண்டும்.

## அது பொல்லாங்கான தோற்றம் உடையதாயிருக்கிறதா?

"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" என்று 1 தெச. 5:22-இல் வாசிக்கிறோம். "பொல்லாங்கின் சகலவித தோற்றங்களுக்கும் விலகுங்கள்" என்று புதிய மொழி பெயர்ப்பு சொல்லுகிறது. பழைய மொழி பெயர்ப்பு நமக்குத் தேவையான எச்சரிப்பைத் தருகிறது. திருமணமாகாத ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து தங்களது ஊரை விட்டுச் சென்று விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களுக்குள்ளாக எவ்வித நெறி முறைகேடும் நிகழாமல் முற்றிலும் தூய்மை உள்ளவர்களாக இருப்பினும், அச்செய்கை மற்றவர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தும். ஞாயிறு வேதபாட ஆசிரியர் ஒருவர் குளிர்பானம் பருகுவதற்கு மதுக்கடைக்குச் செல்லலாம். ஆனால் அவருடைய மாணவன் ஒருவன் அதைக் கண்ணுற்றால் அவர் தவறற்றவர் என்று அவனை நம்பச் செய்வது கடினம்.

## அது பாரமானதாக உள்ளதா?

பாவம் என்பதும் பாரம் என்பதும் வெவ்வேறானது. பாவம் எப்பொழுதும் தவறானதே, அதை ஒருபோதும் தவறற்றது என்று சொல்ல முடியாது. ஆனால் பாரம் என்பது தவறற்றதாகவும் இருக்கலாம்; எனினும் அது இடையூறு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. "பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு... நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி. 12:1). ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றாவிட்டால் ஓடுபவர் பந்தயத்தில் ஓடும் தகுதியை இழந்து விடுவார். காலிலே இரண்டு கிலோ எடையுள்ள வளையங்களை மாட்டிக் கொண்டு ஓடினாலும் பந்தயத்திலிருந்து அவரைத் தடை செய்ய முடியாது. அவர் அவைகளை அணியலாம். ஆனால் அவரால் வெற்றி பெற முடியாது.

"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" (1 கொரி. 6:12; 10:33) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியபோது இவ்வித பாரத்தைக் குறித்தே சிந்தித்திருக்க வேண்டும். கிறிஸ்துவுக்கென்று விசுவாசிகள் முன்னேறிச் செல்கிறதற்கு அவை துணை செய்வதில்லை. அவை தவறற்றவைகளாகக் கருதப்படலாம், எனினும் அவை பயனற்றவையே.



விசுவாச ஓட்டத்தில் பாரம் என்பது எது? ஆவிக்குரிய வளர்ச்சியைத் தராத நட்பு, நெடுநேர வேலை, கருத்தைக் கவருகிற பொழுதுபோக்கு, முழு ஆதிக்கம் கொள்கிற விளையாட்டு, அளவுக்கு மிஞ்சிய நேரத்தைத் தொலைக்காட்சியில் செலவிடுவது போன்றவை ஆகும். இவையாவும் ஒரு விசுவாசி தான் அடையத் தக்க வெற்றியையும், பரிசுப் பொருளையும் இழக்கச் செய்துவிடும். சொல்லப் போனால் எந்த ஒரு சிறப்பற்ற வேலையிலும் அதிக நேரத்தைச் செலவிடுவது பாரமாகவே மாறிவிடும்.

## அது அடிமைப்படுத்துகிறதா?

ஒரு செயல் நேரிய பண்புடையதாக இருப்பினும், அது நம்மை அடிமைப்படுத்தக்கூடியதாக இருந்தால், அதனை நாம் தவிர்க்க வேண்டும். "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு, ஆகிலும் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" (1 கொரி. 6:12) எனப் பவுல் உரைக்கிறார். பல செயல்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தவறேதும் இல்லையென்றாலும், அவை நம்மைத் தமது ஆதிக்கத்துக்குள் அடக்கி வைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். உணவிற்கும், பானங்களுக்கும் தான் அடிமைப்பட பவுல் இடங்கொடுக்கவில்லை. இந்தப் பட்டியலில் அடிமைப்படுத்தும் மருந்துகள், விளையாட்டுகள், தொலைக்காட்சி ஆகியவை இடம்பெறும்.

## கிறிஸ்துவின் கண்களுக்கு அது எங்ஙனம் தோற்றமளிக்கிறது?

கிறிஸ்துவின் கண்களுக்கு அது எங்ஙனம் தோற்றமளிக்கிறது என்பதே ஒரு கிறிஸ்தவனின் நடத்தையைக் குறித்த மிகப்பெரிய சோதனையாக இருக்கிறது என ஒருவர் கருத்துரைத்திருக்கிறார். அவர் இவைகளைப் பாராட்டுவாரா? நாம் ஒரு செயலைச் செய்கிறபோது அவர் நமதருகே இருப்பாரென்றால் நாம் அச்செயலைச் செய்வதற்குத் தடுமாற்றம் அடைவோமோ?

அவர் நம்மோடு எப்பொழுதும் இருக்கிறார் என்பதே பேருண்மையாகும். "நாம் செய்கிற எல்லாவற்றையும் கிறிஸ்து காண்கிறார்; நாம் பேசுகிறவற்றைக் கேட்கிறார்; என் கர்த்தர் எப்பொழுதும் எழுதிக்கொண்டிருக்கிறார்" என்பது மூதறிஞர் கூற்று. எல்லாக் காலத்திலும் பரிசுத்த இரட்சகர் உடன் உறையும் நண்பராக இருக்கிறார் என்னும் சிந்தை நமதுள்ளத்தைத் தொடர்ந்து ஆட்கொள்ளுமெனில், அதுவே நமது வாழ்க்கை பரிசுத்தமாக மாறக் காரணமாக அமையும்.

நமது நன்னடத்தைக்கு உரிய தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் தத்துவங்களே தேவன் நமக்குத் தந்த வழிகாட்டி. நாம் அவைகளை அறிந்து, நினைவுகூர்ந்து, கைக்கொள்வோமென்றால் அவரது உள்ளத்தைக் களிப்புறச் செய்யும் சந்தர்ப்பங்களை நமது வாழ்நாட்களில் உருவாக்குவோம் என்பது

உறுதி. மேலும், அவை நம்மைப் பரிசுத்த பாதையில் வெற்றி நடை போடுகிறவர்களாகக் காத்துக்கொள்ளும்.

நம்மில் பலர், விசுவாச வாழ்க்கையில் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப் படுகிறோம் என்பது வருந்தத்தக்கதே. வெற்றியும், தோல்வியும் நம்மை நோக்கி மாறி மாறி வருகிறது. பாவத்தின் அதிகாரத்திலிருந்து விடுதலைபெற விரும்புகிறோம். அவ்வப்போது புதுப்பிக்கப்பட விரும்புகிறோம். அதனைக் கண்டடையத்தக்க வழியுண்டு. ●

# 10

# சீரிய முறையின் சீரான உண்மைகள்

நமக்குள்ளாக வாசம்செய்யும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து விடுதலை பெற உறுதுணையான சத்தியங்கள் பல உள்ளன. அவைகளை நாம் காண்போம்.

## இருவகை இயல்புகள்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருவகை இயல்புகளைக் கொண்டவனாக இருக்கிறான் (ரோமர் 7:14-25). ஒன்று முந்தினது. அது பொல்லாங்கு நிறைந்ததும் மாசு படிந்ததுமான தூய்மையற்ற இயல்பு. அத்தகைய இயல்போடு அவன் பிறந்திருக்கிறான். மற்றதோ புதியதும், தூய்மையானதும், பரிசுத்தம் நிறைந்தது மான இயல்பு. இதனை அவன் மனமாற்றம் அடைந்த தருணத்தில் பெறுகிறான். இவ்விரு இயல்புகளை நாம் ஆதாமின் இயல்பு என்றும், கிறிஸ்துவின் இயல்பு என்றும் கூற வேண்டும். இதைக் குறித்து ஒரு கிறிஸ்தவன், "என்னுடைய உள்ளத்தினின்று பாவம் போய்விட்டது; எனினும் எனது பாட்டனார் என்னுடைய எலும்புகளில் இருக்கிறார்" என்று கூறியுள்ளான்.

முந்தின இயல்பு முற்றிலும் கேடு நிறைந்தது. "என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்" (ரோமர் 7:18) என்று சொல்லக்கூடிய அனுபவம் பவுலுக்கு மட்டுமின்றி, நமக்குரியதாகவும் இருக்கிறது. ஆகவே நாம் நமது முந்தின இயல்பில் ஒரு போதும் நன்மையைக் காண முற்படக்கூடாது. அந்த இயல்பில் நன்மை இல்லையே என்று வியப்படையவும், ஏமாற்றம் அடையவும் கூடாது. அது முற்றிலும் கேடு நிறைந்ததாக மட்டுமின்றி, சீர்செய்ய இயலாததாகவும் இருக்கிறது. ஒருவர் தனது பரிசுத்த வாழ்க்கையைத் தொடங்கினபோது அவரிடத்தில் காணப்பட்ட முந்தின இயல்பின் தன்மை பல ஆண்டுகள் கழிந்தும் மேன்மை யுடையதாக மாற்றம் பெறுகிறதில்லை. உண்மையாகவே, தேவன் நமது முந்தின இயல்பைச் சீர்ப்படுத்தும் வேலையைச் செய்கிறதில்லை. அந்த முந்தின இயல்பை அவர் கல்வாரி சிலுவையில் நியாயம்தீர்த்து விட்டார். அது நம்முடைய

வாழ்க்கையை நடத்துவதற்குச் செய்யும் அனைத்து முயற்சிகளுக்கும் நாம் மரணமடைய வேண்டுமென்றே விரும்புகிறார்.

இறந்துபோன சடலம் ஒன்று, தன்னுடைய முதுகில் கட்டிவைக்கப்பட்டுள்ள தற்கு ஒப்பாகவே தனது முந்தின இயல்பு இருக்கிறது என்று பவுல் கூறியுள்ளார். (அந்தப் பிணம் அழுகி நாற்றமெடுக்கக் கூடியதாக இருக்கும் என்பது வெளிப் படை) அவர் சென்றமிடமெங்கும் அதுவும் சென்றது.

அதன்பொருட்டே பவுல், "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று வேதனையோடு கதறினார்.

புதிய இயல்பு என்பது கிறிஸ்துவின் வாழ்க்கையாகும். ஆகவே, அது முழுவதும் நல்லது. அது நல்லதாக மட்டுமே இருக்க முடியும். தூய்மையும், உயர் பண்பும், நீதியும், மகிழச் செய்வதும், உண்மையும் புதிய இயல்பின் குணச் சிறப்புகள் ஆகும். அதன் எண்ணங்களும், விருப்பங்களும், நோக்கங்களும் கிறிஸ்துவின் பண்பிற்கு ஒப்பானவைகளாயிருக்கும்.

இந்த இரண்டு இயல்புகளும் தொடர்ந்து ஒன்றோடொன்று போர் செய் கிறவைகளாயிருக்கின்றன. அதில் வியப்பேதுமில்லை. (அவைகளால் சமாதான மாக இணைந்து வாழ முடியுமா?) ஒரு விசுவாசியின் மனமாற்றத்தின் தருணத்தில் இப்போராட்டம் தொடங்குகிறது. புதிய விசுவாசி இதுகாறும் தனது உள்ளத்தில் அறிந்திராத போராட்டத்தை உணர்கிறான். அவனது முந்தின இயல்பு புவி ஈர்ப்புச் சக்தியைப் போலச் செயல்புரிந்து, அவனைக் கீழே தள்ள முயல்கிறது. அதற்கு மாறாக அவனுடைய புதிய இயல்பு புனிதத் தன்மையின் உயர்கட்டத்தை நோக்கிச் செல்லும்படி ஊக்குவிக்கிறது. அவன் தான் பெற்ற இரட்சிப்பைக் குறித்து ஐயம் கொள்ளும் அளவிற்கு அப்போர் வலுமிக்கதாக இருக்கிறது. அப்படிப்பட்ட சந்தேகம் ஒருபோதும் உண்டாகலாகாது. அவனுக்குள்ளாக உண்டாகும் இந்தப் போராட்டமே அவன் இரட்சிப்படைந்ததின் அடையாளமாயிருக்கிறது. இருவித இயல்புகள் இல்லாதிருப்பின், இத்தகைய போராட்டத்தை அவன் கொண்டிருக்க மாட்டான்.

ரெபெக்காளின் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன. அப்பொழுது அவள், "இப்படியானால் எனக்கு எப்படியோ?" என்று வினவினாள். அந்த அனுபவமும், ஒரு விசுவாசியின் உள்ளத்தில் உண்டாகும் இருவகை இயல்புகளின் போராட்டமும் ஒத்திருக் கின்றன. தேவனோடு தொடர்ந்து முன்செல்ல முனைகின்ற உண்மையான விசுவாசியின் உள்ளத்தில், ரெபெக்காளின் கர்ப்பத்தின் நிலைமை காணப்படும்.

> "தூய ஆவியானவர் நம்முடன் இருக்கிறார் என்னும் உள்ளுணர்வு உண்டாகிறபோது, நமக்குள்ளாக நமது மாம்சம் பகைஞனாக இருக்கிறான் என்ற எண்ணமும் ஏற்படுகிறது." இதன் நிமித்தமே, "நான் ஏன் இப்படி இருக்கிறேன்" என்று இளம் விசுவாசி கதறுகிறான். மாம்சமாகிய மூத்தவன் தனது வழியிலே செல்ல விழைகிறான். அமைதியும் சாந்தமும் நிறைந்து விளங்கும் இளையவனாகிய ஆவியானவர், தோற்றத்தில் வெற்றிபெற இயலாதவர்போலக் காட்சியளிக்கிறார். என்றாலும், நம்மைப் பொருத்தமட்டில் ரெபெக்காளின் பிள்ளைகளைப் போல, மூத்தவன் இளையவனைச் சேவிப்பான். ஏனெனில் தூய ஆவியானவரிடத்திலிருந்து தோன்றுகிற அனைத்தையும் தேவன் ஆசீர்வதிப்பேன் என வாக்குரைத்துள்ளார். மாம்சத்திலிருந்து தோன்றுகிறதை அவர் வெறுக்கிறார்." (பார்ன் ஹவுஸ்)



மனமாற்றம் பெற்ற தருணத்தில் தொடங்கிய அப்போராட்டம் ஒரு விசுவாசியின் வாழ்நாட்களெல்லாம் தொடர்ந்து கொண்டே இருக்கும். மரணமோ அல்லது பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதலோதான் இந்த யுத்தத் திலிருந்து நமக்கு ஓய்வைக் கொடுக்கும். நமது இரட்சகரைக் காணும்போது நமது முந்தின இயல்பிலிருந்து விடுதலை அடைவோம் என்பது நம்மைத் தேற்றுகிற நற்செய்தியாயிருக்கிறது. ஏனெனில் அவரைக் காண்கிறபோது அவர் இருக்கிற வண்ணமாக இருப்போம். தேவனுடைய மக்களாக இருக்கும் அனைவருக்கும் இத்தகைய போராட்டம் உண்டு என்னும் உண்மையை நாம் அறிந்துகொள்வது இன்றியமையாதது. "மனிதருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறு சோதனை நமக்கு நேரிடுகிறதில்லை" என்று பவுல் நமக்கு நினைவூட்டுகிறார் (1 கொரி. 10:13). முதியோர்களும், திருமறை ஆசிரியர்களும், இறை ஊழியர்களும் இத்தகைய இருளான சிந்தைகளுக்கும், தீயெனத் தீண்டும் தீமைகளுக்கும் அப்பாற்பட்டவர்கள் என இளமைக்குரிய இச்சைகளை எதிர்த்துச் சண்டையிடுகிற வாலிபர்கள் நினைக்கலாம். அது முற்றிலும் மதியீனமே! ரெபெக்காளின் கர்ப்பத்தில் இரண்டு குழந்தைகள் மோதிக் கொண்டிருந்தன (ஆதி 25:22,23). அதுபோலவே ஒவ்வொரு விசுவாசியும் தனக்குள்ளாகச் சண்டையிடுகிற இரண்டு இயல்புகளைக் கொண்டிருக்கிறான்.

முந்தின இயல்பு அசுத்தமானதை உட்கொண்டு தனது பசியை ஆற்றிக் கொள்கிறது. ஆனால் புதியதோ தூய்மையானதிலும், பரிசுத்தமானதிலும் வேட்கை கொள்கிறது. அவைகள் நோவா தனது பேழையிலிருந்து அனுப்பிய காகத்திற்கும், புறாவிற்கும் ஒப்பாயிருக்கின்றன. அந்த அசுத்தம் நிறைந்த காகம் மிதக்கும் சடலத்தையும், குப்பையையும் தின்றது. ஆனால் அந்தப் புறாவோ தான் தங்குவதற்கும், உண்பதற்கும் தூய்மையான இடம் கிடைக்கும் வரை அந்தப் பேழைக்குத் திரும்பி வந்தது (ஆதி 8:6-12). முந்தின இயல்பு, திரை உலக மோகத்திலும் தொலைக்காட்சியிலும் காண்பிக்கப்படுகின்ற இச்சையை உண்டு, தனது ஆசையைத் திருப்திப்படுத்திக்கொள்ள விழைகிறது. புதிய இயல்போ,

அதற்கு முற்றிலும் மாறாகத் திருவசனமாகிய களங்கமில்லா ஞானப்பாலில் வாஞ்சையாயிருக்கிறது. இதில் சிறப்பாக நாம் கருத்திற்கொள்ள வேண்டியது யாதெனில், எந்த இயல்புக்கு உணவளித்து ஊட்டி வளர்க்கிறோமோ அந்த இயல்பே வெற்றிபெறும் தன்மையுடையது என்பதே. தனது இரண்டு நாய்கள் எப்போதும் சண்டையிட்டுக்கொள்வதாக ஒருவன் தனது தோழனிடம் குறை பட்டுக் கொண்டான். அவனது தோழனோ, "நண்பா, எந்த நாய் ஜெயிக்கும்?"என்று வினவினான். அதற்கு, "நான் எதனிடம் அதைப்பிடி என்று சொல்லுவேனோ அந்த நாயே ஜெயிக்கும்" என்று அவன் விடை பகர்ந்தான். அதுபோலவே எந்த இயல்பிடம் அதைப்பிடி என்று சொல்லுகிறோமோ, அந்த இயல்பே நமது வாழ்க்கையில் வெற்றி அடையும். குயிலைக் குறித்த கதையும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது. குயில் வேறொரு பறவையின் கூட்டில் முட்டையிட்டுவிடும். அந்தப் பறவை அதையறியாது தனது முட்டை களோடு இந்த முட்டையையும் சேர்த்து அடைகாத்துக் குஞ்சுகள் பொரிக்கும். தாய்ப்பறவை குஞ்சுகளுக்கு உணவைக் கொண்டுவரும்போது எல்லாக் குஞ்சு களும் அலகைத் திறந்து உணவைப் பெற்றுக்கொள்ளும். எதற்கு அதிக உணவு கிடைக்கிறதோ அதைப் பொறுத்தே எல்லாம் நடக்கும். அந்தக் குயில் குஞ்சு உணவை அடைவதில் வெற்றி பெற்றால் விரைவில் மற்ற பறவைகளை அந்தக் கூட்டிலிருந்து விரட்டிவிடும். நமது வாழ்க்கைக் கூட்டிலும் இவ்விதமே நடை பெறுகிறது.

## எனது முந்தின இயல்பு இதனைச் செய்தது

நாம் பாவத்தைச் செய்துவிட்டு முந்தின இயல்பின் மீது பழிபோடக்கூடாது; அப்படிக் காரணம் கற்பிப்பது சரியல்ல. தேவன் இந்த இயல்பையல்ல. அந்தப் பாவத்தைச் செய்த மனிதனையே அதற்குப் பொறுப்பாளியாக்குகிறார். இதனை விளக்கக்கூடிய ஒரு கற்பனைக் கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். வேகமாக வாகனத்தை ஓட்டியதற்காக நீதிபதி முன் நிறுத்தப்பட்ட ஒருவன், "கனம் நீதிபதி அவர்களே, என்னுடைய முந்தின இயல்பு இவ்விதம் என்னை வேகமாக வண்டி ஓட்டச் செய்துவிட்டது" என்றான். அதற்கு அந்த நீதிபதி, "வேகமாக ஓட்டின உனது முந்தின இயல்பிற்கு ரூ. 1000/- அபராதம்; அதற்கு இடங்கொடுத்த புதிய இயல்பிற்கு ரூ.1000/- அபராதம்" என்றார். முந்தின இயல்பைக் குற்றப்படுத்தி விட்டு நாம் தப்பித்துக்கொள்ள முடியாது.

## பாவச் செய்கையும் பாவப் பழக்கமும்

பாவச் செயல்களைப் புரிந்துவிடுவதற்கும், பாவத்தினால் ஆளுகை செய்யப்படுவதற்கும் உள்ள வேறுபாட்டினைக் குறித்த உண்மையை அறிவது நல்லது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பாவத்தின் ஆதிக்கத்திற்குள் வாழாவிடினும் பாவச் செயலைச் செய்துவிடுகிறான். அவன் பாவமற்றவன் அல்லன். கொஞ்ச மாகவே பாவத்தைச் செய்கிறான்.



யோவான் தனது முதல் மடலில் விசுவாசி பாவம் செய்யக் கூடியவனாக இருக்கிறான் என்றே தெளிவுபடுத்துகிறார். நாம் அதை மறுப்போமென்றால் நம்மை வஞ்சிக்கிறவர்களாகவும் தேவனைப் பொய்யராக்குகிறவர்களாயும் இருப்போம் (1 யோவா. 1:8-10). அவர் தொடர்ந்து, "அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்கிறதில்லை. பாவம் செய்கிற எவனும் அவரைக் காணவு மில்லை. அவரை அறியவுமில்லை. பாவஞ்செய்கிறவன் (பாவம் செய்து கொண்டே இருப்பவன்) பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசா னவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் (தொடர்ந்து) பாவஞ்செய்யமாட்டான்" என்று எழுதியுள்ளார் (3:6,8,9). பாவப் பழக்கத்தைக் குறித்தே யோவான் இங்கு பேசுகிறார் என்பது பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான் என்று வலியுறுத்திக் கூறியதிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது (3:8). அது அவனுடைய பாவகுணத்தினால் உண்டான நடத்தை; ஆனால் விசுவாசிகளின் வாழ்க்கை முறை பாவ குணத்தினால் உருவானதல்ல.

இந்த விளக்கம் "பாவச் செயல்களைப் புரிவது, எப்பொழுது பாவப் பழக்கமாக மாறுகிறது?" என்னும் கேள்வியை எழுப்புகிறது. இறைநூல் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை. திருமறை அதற்கு விடைகொடுத்திருக்கு மென்றால், எதுவரை பாவம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதோ அதுவரை அதனை நாம் செய்கிறவர்களாயிருப்போம். ஆகவே நாம் பாவம் செய்யாதபடி நம்மைத் தடுக்கவே வேதம் இதைக் குறித்து அமைதியாக இருக்கிறது.

## பாவமற்ற பரிசுத்த நிலையை நம்மால் அடைய முடியுமா?

கிறிஸ்தவன் இனிப்பாவம் செய்யாத நிலையை அடையமுடியும், முற்றிலும் பரிசுத்தமான நிலையைப் பெறமுடியும் என்று சிலர் மனமார நம்புகிறார்கள். மனமாற்றத்தை அடைந்த பின்னர் விசுவாசியின் வாழ்வில் பரிசுத்த ஆவி யானவர் ஒரு திருப்புமுனை சந்தர்ப்பத்தினால் பாவ இயல்பை நீக்கிவிடுகிறார் என்று அவர்கள் வாதிடுகின்றனர். அந்தத் திருப்புமுனையிலிருந்து தங்களது வாழ்க்கையில் பாவம் செய்வதில்லை என்றும் அவ்விசுவாசிகள் கூறுவார்கள்.

இவ்வகைக் கருத்தைக் கொண்டிருக்கும் மக்கள், எது பாவம் என்று தெளிவாக அறியாதிருக்கின்றனர். எந்த ஒரு செயலும், சிந்தனையும், பேசும் வார்த்தையும் தேவனுடைய பரிபூரணத்தை எட்டவில்லையென்றால் அது பாவமே (ரோமர் 3:23). பிரமாணம் அற்ற தன்மை பாவம், அதாவது ஒருவன் தனது சொந்த வழியில் செல்லத் தீர்மானிப்பது பாவம் (1 யோவான் 3:4). ஒருவன் குற்றம் இழைக்காது இருக்கலாம்; ஆனால் அவன் நன்மை செய்ய அறிந்தவனா யிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது பாவம் (யாக் 4:17). ஒருவனது உள்ளுணர்வு அவனைக் குற்றப்படுத்தினால் அது பாவமே (ரோமர் 14:23). "ஒரு

விசுவாசி செய்கிற மிகநல்ல செயலைப் பாவம் மாசுபடுத்தி விடுகிறது. அது அவனுடைய மனமாற்றத்தையும் பாழ்படுத்திவிடும். பாவம் அவனுடைய கண்ணீரில் அழுக்காகவும், விசுவாசத்தில் அவநம்பிக்கையாகவும் இருக்கிறது.'' ஒரு ஆவிக்குரிய பரிசுத்தவான் தனது மனமாற்றம் கிறிஸ்துவின் குருதியால் தூய்மைப்படுத்த வேண்டியதாயிருக்கிறது என்று கூறியுள்ளார். மற்றொரு பக்தன் தான் செய்கிறவை அனைத்தும் பாவத்தினால் கறைபட்டுவிடுகிறது என்பதை உணர்ந்தவராக இவ்விதம் பாடுகிறார்:

''முழங்காலில் நின்றிட்டு மன்றாடும் வேளைகள்
மனம்தாழ்த்தும் மாந்தர்கள் தூயநல் நேரங்கள்
விண்ணகரின் பேர்புகழைப் போற்றிடும் காலங்கள்
மன்னவனைக் களிப்பூட்டும் எனநினைந்து மயங்கிட்டோம்.
உள்ளத்தைத் துருவியே ஆய்ந்திடும் அண்ணல்நீர்
அள்ளியே மன்னிப்பைப் பொழிந்திடுவீர் எம்மீது!''

''ஒரு உண்மைக் கிறிஸ்தவன் தனது பாவம் செய்யும் ஆற்றலை இழந்து விடவில்லை. பாவம் செய்யத் தான் கொண்டிருந்த விருப்பத்தையும் வாஞ்சை யையுமே இழந்துவிட்டான்.'' தற்போது அவன் பாவத்தை வெறுக்கிறான். அவன் பாவத்தைச் செய்கிறபோது வெட்கப்படுகிறான். அசுத்தமடைந்து விட்டோம் என்ற எண்ணத்தினால் தாக்கப்படுகிறான்.

''ஒரு கிறிஸ்தவன் பாவமற்றவனாக இருக்க முடியாதெனில், 'என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்' என்று ஏன் 1 யோவான் 2:1 சொல்கிறது?'' என்று ஒருவர் கேள்வி எழுப்பலாம். தேவனுடைய அளவுகோலாக பரிபூரணம் இருக்கிறது என்பதே அதன் பதிலாகும். எந்த ஒரு பாவத்தையும் பரிசுத்த தேவன் பொறுத்துக் கொள்ளமாட்டார். எடுத்துக்காட்டாக, ''முடியாத நிலையில் கொஞ்சம் பாவம் செய்து கொள்ளுங்கள்'' என்று அவரால் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் அது பாவத்தை அனுமதிப்பதாகும். தேவன் அவ்விதம் செய்யமாட்டார். ஆகலின், தேவன் தமது மக்களுக்குப் பரிபூரணத்தையே தகுதியாக நியமித்திருக்கிறார். அதே சமயத்தில தோல்வியைச் சந்திக்க ஒரு வழியையும் ஏற்படுத்தி வைத் திருக்கிறார். அந்த வசனத்திலேயே யோவான் தொடர்ந்து ''ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவி னிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்'' என்றுரைக்கிறார். முந்தின அதிகாரத்தில் அவர் ஏற்கனவே, கிறிஸ்தவன் பாவம் செய்யக்கூடியவனாக இருக்கிறான் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

''நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக் கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது (1:8). நாம் பாவஞ் செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்கு கிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது'' (1:10) என்பதைக் காண்க.



ஒரு விசுவாசி பாவமற்றவனாக இருக்க முடியும் என்று சொல்லுவதாகத் தோன்றும் வசனங்கள் திருமறையில் பல இடங்களில் உள்ளன என்பது உண்மை தான். முதலாவதாக, ரோமர் 6:2 விசுவாசி பாவத்திற்கு மரித்துவிட்டான் என்று கூறுகிறது. அது அவனது ஸ்தானத்தைக் காட்டுகிறது. அவனைக் கிறிஸ்துவுடன் மரித்தவனாகவே தேவன் காண்கிறார். முந்தின மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையில் இறந்துவிட்டான். நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக் கொள்ள வேண்டுமென 11-ஆவது வசனத்தில் காண்கிறோம். நாள்தோறும் நமது நடக்கையில் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே அதன் பொருள். 2-ஆம் வசனத்திற்கு நாம் பாவமற்றவர்கள் என்ற பொருள் கொள்வோமெனில், 11-ஆம் வசனத்தில் சொல்லியுள்ள அறிவுரை தேவையற்றதாகப் போய்விடுமே.

ரோமர் 6:7,18,22 ஆகிய மூன்று வசனங்களும் விசுவாசி பாவத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டதாகக் கூறுகின்றன. இவ்வசனங்களில் அப்போஸ்தலன் எஜமான்களையும், அடிமைகளையும் குறித்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்து கிறார். நாம் இரட்சிப்படைவதற்கு முன்னர் பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களா யிருந்தோம். நாம் கிறிஸ்துவின் மரணத்தினாலே, எஜமான் என்னும் நிலை யிலிருந்த பாவத்திற்கு மரித்துவிட்டோம். மேலும் பாவத்தின் ஆளுகைக்குள் ளிருந்து விடுதலைபெற்றுத் தேவனுக்கும், நீதிக்கும் அடிமைகளாகிவிட்டோம்.

திருமறையை மேலோட்டமாகப் படிப்போர், அங்கு காணப்படும் 'பரிபூரணமான', 'பரிபூரணமாக்கப்பட்ட', 'பரிபூரணமாகும்படி' என்னும் சொற்கள் விசுவாசிகளின் பாவமற்ற தன்மையைக் குறித்தே சொல்வதாக நினைப்பார்கள் (மத். 5:48; பிலி. 3:12,15; 2 தீமோ. 3:16, 17; எபி. 6:1,2; 9:9; 10:14; 13:20,21; யாக். 3:2; வெளி. 3:12).

பொதுவாகப் பரிபூரணம் என்னும் சொல், நிறைவு, முழுவதும் வளர்ச்சி யடைந்த நிலை, முற்றிலும் தேர்ச்சி அடைந்த நிலை என்று பொருள்படும். ஆனால், கிறிஸ்தவர்கள் பூமியில் வாழ்கிறபோது பாவமற்றவர்களாக உள்ளனர் என்ற அர்த்தத்துடன் அச்சொல் எங்கும் பயன்படுத்தப்படவில்லை. மனச்சாட்சி பூரணப்படுதலைக் குறித்து எபி. 9:9 சொல்லுகிறது; தேவனுக்கு முன்பான நமது ஸ்தானத்தைக் குறித்து எபி. 10:14-இல் சொல்லியிருக்கிறது.

மேலும், பாவமற்ற பரிபூரணத்தைக் குறித்துக் கற்பிக்க 1 தெச. 5:23-ஆம் வசனத்தைச் சிலர் பயன்படுத்துகிறார்கள். விசுவாசி தனது முக்கூறுகளாகிய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றில் பரிசுத்தமாகுதல் விரிவாக்கம் பெற்றுக் குற்றமற்றவனாகக் கர்த்தரின் வருகையின்போது காண வேண்டுமென்றே அங்கு பவுல் ஜெபிக்கிறார்.

யோவான் முதல் நிருபத்தில் 3:6,9; 5:18 ஆகிய வசனங்களின் பொருளை இன்னும் முடிவு செய்யாதிருக்கிறோம். ஏற்கனவே விளக்கியபடி இவ்வசனங்கள் பாவப் பழக்கத்தையே குறிப்பிடுகின்றன. அங்கு வினைச்சொற்கள் தொடர் காலத்தில் உள்ளதைக் காண்க. தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவஞ் செய்யமாட்டான்; அவன் பாவத்தில் வாழமாட்டான். அவனுடைய வாழ்க்கை முறை பாவத்தினால் சித்தரிக்கப்படுவதில்லை.

பாவமற்ற பரிபூரணத்தை அடைய முடியும் எனக் கற்பிப்பது தவறானதா? திருமறை எழுத்துகளுக்கு எதிரான கொள்கை தவறானதே. வாஞ்சையும், நேர்மையும் உடைய விசுவாசிகள் பலர் பாவமற்ற பரிபூரணத்தை அடைய வேண்டுமென்று முயன்று மதிமயக்கம் அடைந்துவிட்டனர். பலர் மனசோர்வுற்றவர்களாகவும், மனமுடைந்துபோனவர்களாகவும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். இது போன்று முற்றிலும் பரிசுத்தமாகுதலைத் தேடி அலைந்து மனமுடைந்த நிலையில் இருந்த எச். ஏ. அயன்சைடு என்பார் எவ்வாறு அந்த வீணான எண்ணத்திலிருந்து உண்மையான கிறிஸ்தவப் பரிசுத்தத்தின் கொள்கைக்கு வழிநடத்தப்பட்டார் என்பதை "பரிசுத்தம் - பொய்யும் உண்மையும்" என்னும் நூலில் விளக்கிக் கூறியுள்ளார்.

## என்னால் அதைத் தடுக்க இயலாது – நான் பாவம் செய்ய வேண்டியதாக இருக்கிறது

பாவம் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று நாம் ஒருபோதும் சொல்லக்கூடாது. அவ்வாறு திருமறையில் எங்கும் சொல்லவில்லை. அவ்வாறு கூறுவது உண்மையுமல்ல, நாம் பாவம் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று சொல்வோமெனில், தூய ஆவியானவர் நமக்கு எதிராக வரும் சோதனையைத் தடுக்க இயலாதவர் என்பதே அதன் பொருளாகும். பிரச்சனை அவரிடத்தில் இல்லை; நம்மிடத்தில்தான் உள்ளது. அவருடைய பலத்தை மதிக்காத சமயங்களில் நாம் பாவம் செய்கிறோம். நாம் விரும்பும்போதே பாவம் செய்கிறோம்.

> "நாம் பாவம் செய்துதான் தீர வேண்டும் என்று சொல்வது கிறிஸ்தவத்தின் அஸ்திபாரத்தை மறுப்பதாகும். ஏனெனில் விசுவாசிகள் மீது பாவம் ஆதிக்கம் செலுத்துகிறதில்லை (ரோமர் 6:14). நாம் பாவஞ் செய்யவில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் (1 யோவான் 1:8). நாம் பாவம் செய்ய வேண்டியதில்லை என்போமானால் தெய்வீகத் தத்துவத்தைப் பறைசாற்றுகிறோம் என்பதே பொருள். கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோமர் 8:2). நமக்கு ஜெயம்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!"



## உறவும், ஐக்கியமும்

ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்கிறபோது இரட்சிப்பை இழந்துவிடுகிறதில்லை. மாறாக, இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்துவிடுகிறான். தேவ குடும்பத்தோடு அவன் கொண்டுள்ள ஐக்கியம் முறிந்துவிடுகிறது. ஆனால் தேவனோடு உள்ள உறவு முறிகிறதில்லை. புதிய பிறப்பினாலே அவன் தேவனுடைய பிள்ளையாகிறான். அந்த உறவு யாராலும், எந்த சக்தியினாலும், எப்போதும் மாற்ற முடியாததாயிருக்கிறது. ஆனால் அவன் பாவம் செய்கிற போது தேவனோடு கொண்டிருந்த ஐக்கியம் முறிந்துபோகிறது. ஏனெனில், "தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5). அந்தப் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடுகிற வரை மகிழ்ச்சியான குடும்பச் சூழ்நிலை முறிந்தே காணப்படும் (யோவான் 1:9; நீதி. 28:13).

## வெற்றிபெறமுடியாத பாவமுண்டா?

தான் செய்யக்கூடிய எந்தப் பாவத்திலிருந்தும் விடுதலை கிடைக்கும் என்பதை விசுவாசி அறிய வேண்டும் (1 கொரி 10:13). நாம் அனைவரும் சில பாவங்களில் சிக்கிக் கொள்கிறோம். நாம் விரும்பாத ஒருவரைச் சந்திக்கும் போது அந்தப் பாவம் நம்மை இறுக்கிப் பிடிப்பது போல் தோன்றும். சில பழக்கங்கள் நம்மைக் கீழே தள்ளிவிடுகின்றன. நாம் முற்றிலும் நிறைவான விடுதலையைப் பெற முடியாமல் எத்தனை முறை மனக்கசப்பும் ஏமாற்றமும் அடைந்திருக்கிறோம். வேதமும், மனிதனுடைய அனுபவமும் சொல்லுகிற உண்மை யாதெனில், தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. அவருடைய வல்லமைக்கு மேலான பாவம் ஏதுமில்லை. ஆகவே பாவத்தை வெற்றிகொள்ள அவருடைய வல்லமையை நாட வேண்டும்.

## பாவத்தை வெற்றி கொள்வது ஒரு செயல் அல்ல, அது நடைமுறை வளர்ச்சியாகும்

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியால் நமக்குள்ளாக வாசம் செய்யும் பாவத்தின் பலத்திலிருந்து நாம் பூரண விடுதலையை அடைந்துவிடமுடியாது என்பதை அறிவது இன்றியமையாதது. இவ்வுண்மை பல சபைகளில் மறுக்கப்படுகிறது. குறுக்கு வழியாகப் பரிசுத்தத்தை அடையலாம் எனச் சில பிரசங்கிகள் சொல்லித் தருகிறார்கள். தாங்கள் நடத்தும் கூட்டங்களில் உணர்ச்சி மிக்க உச்சகட்டத்தை உருவாக்கி அந்நேரத்தில் கூடியிருக்கும் மக்களை ஆவியானவரின் நிறைவையும், ஆவியின் ஞானஸ்நானத்தையும், வெற்றியுள்ள ஜீவியத்தையும் பெற்றுக்கொள்ளும்படி அறைகூவல் விடுக்கிறார்கள். அத்தகைய நிகழ்ச்சியால் தங்களது வாழ்வு திருப்புமுனை அடைந்து தானாகவே உயர் மட்டத்திற்குச் சென்றுவிடும் எனக் கேட்பவர்கள் கருதுவார்களெனில், பெருத்த ஏமாற்றமே அடைவர்.

விடுதலை என்பது கணத்திற்குக் கணம் அடையும் வளர்ச்சியாகும். அதை நாம் ஒரு நொடிப்பொழுதில் அடையமுடியாது. ''உன் நாட்களுக்குத் தக்கதாக உன் பெலனும் இருக்கும்'' (உபா. 33:25) என்பதே வாக்குறுதி. பரிசுத்த ஆவியால் நிறையுங்கள் என்று (எபே. 5:18) சொல்லியிருப்பதன் பொருள், பரிசுத்த ஆவியினால் தொடர்ந்து நிறையுங்கள் என்பதாகும். அது நிகழ்காலத்திற்கும், தொடர்காலத்திற்கும் உரியது. முந்தின இரவு அடைந்த மேடை அழைப்பின் அனுபவம், இன்றைக்கு எழும் சோதனையினின்று விடுதலையைத் தரும் என்று உறுதி கூறமுடியாது.

## மனப்பூர்வமாய்ச் செய்கிற பாவம்

சிலர், எபிரெயர் 10:26,27 ஆகிய வசனங்களில் காணும் மனப்பூர்வமான பாவத்தைச் செய்துவிட்டோம் என்று தேவையற்ற கவலையில் மூழ்கி வேதனை அடைகின்றனர். அவர்கள் ஒரு பாவத்தைச் செய்தபோது தங்களது உள்ளுணர் வோடு அதைச் செய்த காரணத்தினால், குற்ற உணர்வுக்கு உள்ளாகி விரோதி களைப் பட்சிக்கும் கோபாக்கினையும், நியாயத்தீர்ப்பும் வருமென்று பயந்து கலங்குகின்றனர். ஆனால் அப்படி எண்ணுவதில் ஒரு உண்மையும் இல்லை. கிறிஸ்தவ ஜீவியத்தில் நடந்த ஒரு பாவச் செயலுக்கும், மனப்பூர்வமான பாவத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டென்பதை அறிவது முக்கியமானது. மனப்பூர்வமான பாவம் என்பது ஆண்டவரை மறுப்பதாகும். அதன் விளக்கத்தை 29-ஆம் வசனத்தில் காண்கிறோம். தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து. தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென் றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறதே அப்பாவமாகும். ஒரு பாவத்தைச் செய்துவிட்டோமே என்கிற மனவருத்தம் ஒருவருக்கு உண்டாவதே அவர் மனப்பூர்வமான பாவத்தைச் செய்யவில்லை என்னும் உண்மையை வெளிப் படுத்துகிறது. விசுவாசத்திலிருந்து வழுவிப் போனவர்கள் தங்களது இருதயத்தில் கடினப்பட்டவர்களாகவும், இறுமாப்புக் கொண்டவர்களாகவும் இருப்பர். அவர்கள் ஒருபோதும் விசுவாசத்தைக் குறித்து மீண்டும் நினைக்கமாட்டார்கள். அவர்கள் தேவனுக்கும், அவர் விதிக்கப்போகிற தண்டனைக்கும் பயப்பட மாட்டார்கள்.

## வெற்றிக்கு உதவாதவைகள்

இத்தனை சீரான உண்மைகளைக் கண்ட நாம், பரிசுத்தத்தை அடைவதற்கு உதவாத மனப்பான்மைகளையும், நடக்கைகளையும் குறித்து நினைவுபடுத்திக் கொள்வது பயனுள்ளது.

*உடல் வருத்தம்* பயனற்றது. சரீர ஒடுக்கமும், மாயமான தாழ்மையும் ஞானம் என்ற பேர் கொண்டிருந்தாலும், இவை மாமிசத்தைப் பேணுவதற்கே யொழிய மற்ற ஒன்றுக்கும் உதவாது என்று கொலே. 2:23-இல் பவுல் கூறியுள்ளார்.



*துறவறம் பயனற்றது.* ஒரு மனிதன் உலகத்திலிருந்து பிரிந்து துறவிகள் வாழும் மடத்திற்குள்ளாக இருள் சூழ்ந்த தனி அறையில் தன்னை ஒடுக்கிக் கொள்ளலாம். எனினும் சுய இயல்பினின்று தன்னைப் பிரித்துக்கொள்ள இயலாது.

தன் உள்ளத்தைத் *தானே நுணுகிக்காணும் செயலில்* வெற்றிபெற முடியாது. தன்னைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பது, படகிற்குள்ளாக நங்கூரத்தைப் பாய்ச்சுவதற்கு ஒப்பாகும்.

*சாத்வீக குணம் பயனற்றது.* ஒரு செயலையும் செய்யாது பரிசுத்தம் தானாக தன்னைத் தேடிவரும் என்று காத்திருப்பவர்களை அது வந்தடையாது. சோதனைகளைக் குறித்து அதிகமாகச் சிந்தித்தால், அவைகளுக்கு அதிகமாக இடம் கொடுக்கவே ஏதுவாகும்.

*மனக்கசப்பு அடைந்து* இந்த முயற்சி நமக்கெதற்கு என்று விட்டுவிடு வதனால் வெற்றியைப் பெறமுடியாது. அது தோல்வி எனக்கருதப்படும். தோற்றுப்போகும் கிறிஸ்தவர்களைத் தேவன் பயன்படுத்தமாட்டார்.

சீரான அனைத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும். அடுத்து, நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி பெறுவதற்கான செயலாக்கத்தைக் குறித்துக் காண்போம்.
●

# 11

# வெற்றிக்கு வழி – ஆவியில் நிறையுங்கள்

தேவன் ஒருவரே நம்மைப் பரிசுத்தமாக்கக் கூடியவராக இருக்கிறார். நமது ஒத்துழைப்பு இன்றி அவர் நம்மைப் பரிசுத்தமாக்குகிறதில்லை. கிறிஸ்தவ வாழ்வின் பல அம்சங்களில், தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும் ஆர்வமிக்க முறையில் கலந்து இருக்கின்றன. தேவன் நாம் பரிசுத்தமாவதற்குத் தேவையான பலத்தைத் தருகிறார். அதனை நாம் நமக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், நாம் பரிசுத்த ஆவியினால் நிறைய வேண்டுமென்பது நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகும். மாம்சத்தில் எழுகிற இச்சைகளுக்கு இடம்கொடாது, ஆவியில் நடப்பதே பரிசுத்த ஆவியில் நிறைவதாகும்.

பரிசுத்த ஆவியினால் நிறையப்படுவது என்பது யாது? அது நமது புலனுக்கு அப்பாற்பட்டதும், மறைபொருளுமாகத் தோன்றுகிறது. அது ஏதோ பிரசங்கிகளுக்கும், இறை ஊழியர்களுக்கும் என ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்றாகவும் தோற்றமளிக்கிறது. அந்த எண்ணம் முற்றிலும் தவறானது. அது தேவனுடைய மக்கள் யாவருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளையாக இருக்கிறது. எந்தவொரு விசுவாசியும் செய்யமுடியாத ஒன்றைச் செய்யும்படியாகச் சொல்லப்படவில்லை. தொடர்ந்துவரும் பகுதியில் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதை மிக எளிமையாகவும் நடைமுறைக்கு ஏற்றதாகவும் ஆக்கித்தரும்படி சில அடிப்படை வழிமுறைகளை ஆலோசனையாகத் தருகிறோம்.

## பாவத்தைக் குவித்துக்கொள்ளாதீர்கள்

நாம் நம்மைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும்படி, நம்மிடம் பாவம் உண்டென்று தெரிந்தவுடனே, அதை அறிக்கைசெய்து விட்டுவிட வேண்டும் (நீதி. 28:13; 1 யோவான் 1:9). எல்லாப் பாவமும் தேவனுக்கு விரோதமாக இருப்பதால் அவரிடத்தில் அறிக்கை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு



எதிராகக் குற்றம் இழைத்திருப்பின் அவர்களிடமும் அறிக்கை செய்ய வேண்டும். உண்மையான அறிக்கை யாதெனில்:

*உடனடியான அறிக்கை* - பாவம் செய்த நாளின் முடிவுவரை அல்லது அந்த வாரத்தின் கடைசி வரைக்கும் காத்திருக்கக்கூடாது, உடனடியாக அறிக்கை செய்ய வேண்டும்.

*நிபந்தனையற்ற அறிக்கை* - "நான் ஏதாவது தவறு செய்திருந்தால்" என்றோ, "நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என்றால் நான் உங்களை மன்னிப்பேன்" என்றோ சொல்லக்கூடாது. "நான் ஏதாவது தவறு செய்திருந்தால், அதற்கான மன்னிப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன்" என்று சொன்ன ஒரு பெண்மணியைப் போல நாம் நடந்துகொள்ளக்கூடாது. இது மெய்யான அறிக்கை ஆகாது.

*உண்மை முழுவதையும் அறிக்கை செய்தல்* - ஒரு மனிதன் ஒரு முழுக் கயிற்றைத் திருடிவிட்டேன் என அறிக்கை செய்தான். ஆனால் அக்கயிற்றின் மறுபுறத்தில் ஒரு குதிரை கட்டியிருந்தது என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட அறிக்கையில் எவ்விதப் பயனுமில்லை.

*உள்ளதை உள்ளவாறு சொல்லிச் செய்யும் அறிக்கை* - உள்ளதை உள்ள படியே சொல்ல வேண்டும். அரக்கனை அரக்கன் என்றே சொல்ல வேண்டும். 'குடியை' அறியாப்பிழை என்றோ 'திருடியதை' கடன்பெற்றேன் என்றோ சொல்லக்கூடாது. பேதுரு, "நான் குறையுள்ள மனிதன்" என்று சொல்லவில்லை. "கர்த்தாவே, நான் பாவியான மனுஷன்" என்றே அறிக்கை செய்தான். செய்த பாவத்தை விட்டுவிடும் மனமும், தீர்மானமும் இல்லாதிருப்பின் அது அறிக்கை ஆகாது. ஒரு பெட்டி மாங்காயைத் திருடிவிட்டு இரண்டு பெட்டியானால் நல்லது என்று எண்ணி, "இன்று இரவு இன்னொரு பெட்டியைத் திருடுவேன்" என எண்ணுவது போல இருக்கக்கூடாது.

*இதயபூர்வமான அறிக்கை* - "நான் தவறு இழைத்து விட்டேன், அதற்காக வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள்" என்றே உளமாரச் சொல்ல வேண்டும்.

நாம் பாவத்தை நேர்மையாக அறிக்கை செய்யும்போது, தேவ வார்த்தை யின் அதிகாரத்தின் அடிப்படையில் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்வோம். நாம் அறிக்கை செய்தால் தேவன் மன்னிப்பேன் என வாக்களித் துள்ளார். தமது வாக்கை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவருமாயிருக்கிறார். நமது விசுவாசத்தினாலே மன்னிப்பை நமக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும்.

"நான் மன்னிப்படைந்த உணர்வு எனக்கில்லையே" என்று ஒருவர் நினைக்கலாம். நீங்கள் அதை உணர்கிறீர்களோ, இல்லையோ மன்னிக்கப் பட்டாயிற்று. மாறிப்போகிற உணர்வுகளாலே அல்ல, மாறாத தேவ வார்த்தை களினாலேயே மன்னிப்பின் உறுதி கிடைக்கிறது.

“தேவன் என்னை மன்னித்துவிட்டார் என்று அறிவேன். ஆனால், நான் என்னை மன்னிக்கமாட்டேன்” என்று மற்றொருவர் கூறலாம். அந்த மனப் பான்மை தேவையில்லாது தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதாகும். தேவன் நம்மை மன்னித்தாயிற்றெனில் அது முடிவடைந்த ஒன்றாகும். குற்ற உணர்வோடு இன்னும் ஏன் புரளுகிறீர்கள்?

தேவன் மன்னிக்கிறபோது, அப்பாவத்தை மறக்கவும் செய்கிறார் என்பதே உண்மை (எபி. 10:17). அவர் ஞாபகமறதியுள்ளவர் என்பது இதன் பொருளல்ல. அப்பாவங்களை நமக்கு எதிராக ஒருபோதும் கொண்டுவரமாட்டார் என்பதே அதன் பொருளாகும். அந்த வழக்கு முடிவடைந்துவிட்டது என்னும் வகையில் அப்பாவங்கள் மறக்கப்பட்டுவிட்டன. உள்ளம் உடைந்து மனம் வருந்தின ஒருவன், மீண்டும் தீய பழக்கத்தில் வீழ்ந்துபோனவனாக, “கர்த்தாவே, நான் அந்தப் பாவத்தை மீண்டும் செய்து விட்டேனே” என்று அழுதபோது, “எதை நீ மீண்டும் செய்தாய்?” என்று கர்த்தர் பதில் உரைத்ததாக ஒரு கதை உண்டு. அவன் அறிக்கைசெய்த அத்தருணத்திலேயே அந்தப் பாவத்தைத் தேவன் மறந்து விடுகிறார்.

நாம் அறிக்கை செய்த பாவத்தை தேவன் மறப்பதோடு ‘இங்கே தோண்டிப் பார்க்காதே’ என்னும் குறிப்பையும் அதின்மேல் வைக்கிறார் என்று கூரிடென் பூம் என்பார் நமக்கு நினைவூட்டுகிறார். அறிக்கை செய்து பாவ மன்னிப்பைப் பெற்ற பிறகு, அது நாம் செய்த பாவமோ அல்லது மற்றவர்கள் செய்த பாவமோ, நாம் அதைத் தோண்டி ஆராய்ந்து பார்க்கும்படி தேவன் விரும்புகிறதில்லை. அந்தப் பாவங்களை நாம் மீண்டும் செய்யாதபடி நம்முடைய எச்சரிப்புக்கென அவற்றை நினைத்துப் பார்க்கலாம்.

நாம் தேவனிடத்திலா, யாருக்கு எதிராகப் பாவம் செய்தோமோ அவர் களிடத்திலா அல்லது சபையிலா, யாரிடமெல்லாம் பாவ அறிக்கை செய்ய வேண்டும்? நாம் யார் யாருக்கு எதிராகப் பாவம் செய்தோமோ அவர்களிடத் திலெல்லாம் அறிக்கை செய்ய வேண்டும் என்பதே இதற்குத்தக்க பதிலாக இருக்கிறது. இதைக் குறித்து லீத் சாமுவேல் என்பார் நல்லாலோசனை தருகிறார்: “உங்களுடைய பாவம் சிந்தனையில் ஏற்பட்டிருந்தால், உங்கள் அறிக்கையும் சிந்தனையிலே செய்யப்பட வேண்டும். யாராவது ஒரு பெண்ணிடம் சென்று என் உள்ளத்தில் உங்கள் மீது இச்சை கொண்டேன் என்று சொல்லி விரும்பத் தகாத சூழ்நிலையையும், குழப்பத்தையும் வருவித்து சில இடங்களில் ஏற்பட்டது போல அதிகப் பாவத்தை ஏற்படுத்த வேண்டாம். உங்கள் எண்ணத்தில் உண்டான பாவம் மறைவானதாக இருப்பின், பாவ அறிக்கை சிந்தையிலே மறைவானதாக இருக்கட்டும். அதை வெளிப்படையாகச் சொல்லி மற்றவர்களுடைய உள்ளம் உடைந்து போவதற்கும், கறைபடுவதற்கும் ஏதுவாக இருக்க வேண்டாம். சபை ஐக்கியத்திலே வெளிப்படையாகச் செய்த பாவத்திற்குரிய மன்னிப்பை சபை



ஐக்கியத்திலிருந்தே பெற வேண்டும். பிறரைக் குற்றப்படுத்தி விட்டீர்களா? உங்கள் வருத்தத்தை அவர்களிடம் சொல்லுங்கள். அவர்களுக்கு எதிராகக் கசப்பு உணர்வு கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்கள் சொற்களால் அவர்கள் அறிந்திருக்கிறார்களே? உங்கள் சொற்களுக்காக நீங்கள் மனங்கசந்து வருந்துகிறீர் என்பதைத் தெளிவாக அறிக்கையிடுங்கள்.”

தமது நண்பர்களாலும், வாடிக்கையாளர்களாலும், மிகச் சிறந்த கிறிஸ்தவத் தொழிலதிபர் என்னும் புனிதத் தன்மையோடுகூடிய புகழுரையை கேட்டபோது ஹேரிலாய்டு என்பார் தன் உள்ளத்தில் குத்தப்பட்டவராக, தான் அதற்குத் தகுதியற்றவர் என்று உணரலானார். அவர்கள் தன்னை, “முற்றிலுமாக ஒப்புவித்த கிறிஸ்தவ ஒளிச்சுடர்” என்று புகழுரை வழங்கி ஆச்சரியத்தோடு போற்றிய போது மிகுந்த தொல்லையுற்றவரானார். இந்தப் புகழுரைக்குத் தான் தகுதியற்றவன் என்ற அறிவிப்பை வெளியிட்டார்:

> “எனது தொழில் வளர்ச்சிக்கும், எனது மகிழ்ச்சிக்குமாகவே என் னுடைய அனைத்து சக்தியையும் நான் செலவிட்டேன்; எனது வாழ்க்கையில் அதற்கே முதலிடம் கொடுத்தேன்.
>
> நான் உண்மையாக வேதத்தைப் படிக்கவேயில்லை. என்னுடைய எண்ணத்திலும், செயலிலும் செய்த பாவங்கள் கொடியவை, தேவ னுடைய ஊழியத்திற்கென்று நான் கொடுத்த தசமபாகம் என்னுடைய சக்திக்கு மிகச்சிறிய தொகையாகும். அதைப் பலி என்று சொல்வது கேலிக்கூத்தாகும்
>
> என்னுடைய அதிகாரத்தைச் செலுத்தி, மற்றவர்களிடம் குற்றம் கண்டுபிடித்து எஜமான் என்னும் ஆணவம் கொண்டிருந்தேன்.
>
> அவ்வப்போது அன்புகூராத கணவனாகவும், தகப்பனாகவும் விளங்கினேன். சிறுவனாக இருந்தபோது சபைக்குச் சென்றதுபோல, இப்போது சபைக்கு ஒழுங்காகச் செல்கிறதில்லை.
>
> மற்றவர்கள் புகழும்போது நான் ஏமாற்றுகிறவன் என்று உணர் கிறேன். அதனால் இந்த உண்மைகளைச் சொல்ல ஏவப்பட்டேன். என்னை, ‘மாதிரிக் கிறிஸ்தவன்’ என்று சொல்வது பரிதாபமானது, வெட்கத்துக்குரியது. கிறிஸ்து ஒருவரைத் தவிர ஒருவரையும் புகழாதீர்கள்.”

இப்படிப்பட்ட நேர்மையான அறிக்கைகளை அடிக்கடி நாம் கேட்பதில்லை. இதுபோல அறிக்கைகளை நாம் செய்வதுமில்லை.

## கிடைக்கும் சந்தர்ப்பங்களில் திரும்பச் செலுத்த வேண்டும்

கடந்தகாலத்தில், நாம் செய்த தவறுகளை முடிந்த மட்டும் சரிசெய்ய வேண்டியது, தேவனுடைய கிருபை நமக்குக் கற்பிக்கும் பாடமாகும். நாம் தவறான முறையில் எடுத்துக்கொண்ட பொருட்களை, அவற்றின் உரிமையாளரிடம் திரும்பக்கொடுப்பது என்பதும் இதன் பொருளாகும். களவு செய்த பணத்தை வட்டியோடு திரும்பச் செலுத்த வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் சகேயு இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான். அவன் மனமாற்றம் அடைந்த பிறகு, கர்த்தரைநோக்கி, "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகச் செலுத்து கிறேன்" என்றான் (லூக் 19:8). தான் இரட்சிப்படைய வேண்டும் என்பதற்காக அவன் இதைச் செய்யவில்லை. இரட்சிப்படைந்ததினாலேயே இதைச் செய்தான்.

திரும்பிச் செலுத்துதல் நேர்மையாகவும், முழுமையாகவும் இருக்க வேண்டும். "கடந்த ஆண்டு, என்னுடைய வருமானவரி அறிக்கையில் உண்மை யான வருமானத்தைக் காட்டவில்லை. அதனால் என்னால் சரியாக உறங்கமுடிய வில்லை. ஆகவே இத்துடன் ரூ.1000/-க்கான காசோலையை அனுப்புகிறேன். இன்னும் எனக்குத் தூக்கம் வரவில்லையென்றால் மீதித் தொகையையும் அனுப்புவேன்" என்று வருமான இலாகாவிற்கு மடல் எழுதினவனைப் போல நாம் நடந்து கொள்ளக்கூடாது.

காலம் கடந்துவிட்டதாலும், சூழ்நிலைகள் மாறிவிட்டதாலும், சில வேளை களில் திரும்பச் செலுத்த முடியாது போய்விடும். அந்தப் பாவத்தை நாம் அறிக்கை செய்த போது நமது உள்ளத்தில் அதைச் சரிசெய்ய வேண்டுமென்ற மனமார்ந்த விருப்பம் எழுந்ததைக் கர்த்தர் அறிவார்.

சூழ்நிலைகளை அறிகிற கர்த்தர் நமது எண்ணங்களையும் ஏற்றுக் கொள்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் பெல்ஃபாஸ்ட் என்னும் நகரில் W. P. நிக்கல்சன் தேவ செய்தியை வழங்கினார். தேவ ஆவியானவரின் வல்லமையுள்ள நடத்துதலினால் குற்ற உணர்வைப் பெற்ற மக்கள், தாங்கள் தொழிற்சாலைகளில் திருடிய இயந்திரக் கருவிகளைத் திரும்பக்கொடுத்தனர். இவ்வாறு திரும்பக் கிடைத்த கருவிகளை வைப்பதற்குச் சில தொழிற்சாலைகள் புதிய அறைகளைக் கட்ட வேண்டியதாயிற்று. கடைசியில் அத்தொழிற்சாலைகள் போதுமான இடம் இல்லாத காரணத்தினால் எடுத்த பொருட்களைத் திரும்ப கொண்டுவராதீர்கள் என்று பொது அறிவிப்பு செய்தனர்.

அதுபோலவே, கெஸ்விக் மாநாட்டில் F. B. மேயர் உயிர்மீட்சி அடையச் செய்யும் செய்திகளை வழங்கினார். பல கிறிஸ்தவர்கள், தாங்கள் தவறாக



எடுத்துக்கொண்ட பணத்தையும், வாங்கிய கடனையும் அனுப்பும்படி அருகில் உள்ள அஞ்சல் நிலையத்தை மொய்த்து விட்டனர். இன்னும் பல முறைகளில் திரும்பச் செலுத்தினர்.

## உங்கள் சரீரத்தை ஜீவபலியாய் ஒப்புவியுங்கள்

நடைமுறைப் பரிசுத்தத்தை அறிய, நாம் செய்ய வேண்டிய மூன்றாவது செயலாக்கத்தைக் குறித்துக் காண்போம்.

நம்மையும், நமது அவயவங்களையும் நீதிக்கு அடிமைகளாக ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 12:1,2; 6:19). ஒப்புவித்தல் விசுவாசிகளின் வாழ்க்கையின் முதல் திருப்புமுனையாக இருக்கிறது. தொடர்ந்து நாம் செய்ய வேண்டிய ஒன்றாகவும் அது இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாம் நமது சரீரங்களைக் கர்த்தருக்கு ஜீவபலியாய் ஒப்புவிக்கிறோம். ஆனாலும், தொடர்ந்து ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும், நம்முடைய சித்தத்திற்குப் பதிலாக அவருடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கர்த்தரிடம் ஒப்புவிக்க வேண்டும். தன்னைத்தான் வெறுத்து, சிலுவையைச் சுமந்து அவர்தம் அடியொற்றிச் செல்ல வேண்டும். பாவ அறிக்கை எப்படி நம்மைத் தூய்மையாகக் காத்துக்கொள்கிறதோ, அதுபோலவே ஒப்பு வித்தல் நம்மை அவருக்கு உரியவராகக் காத்துக்கொள்ளும்.

ஆனே கிரேனிஸ் என்பார், பரிசுத்தத்தின் உண்மையான பொருளை கீழ்வரும் வாக்கியங்களில் விளக்கித் தருகிறார்:

"எனது வாழ்க்கையினின்று சுயம் நீங்கி, எனக்குள்ளாக எனது நேச கர்த்தர் வருவாராக.

என் இதயத்தை அவர் வசிக்கும் வீடாக மாற்றி, அவர் தங்குவதற் கேற்ற அனைத்து வேலைப்பாடுகளையும் செய்வாராக.

இவ்வித நிலை உண்டாவதற்கு என்னென்ன தேவை என்பதை அறியத்தக்கதாக ஒவ்வொருநாள் அதிகாலையிலும், இரகசிய அறைக்குள் சென்று, எனது சித்தத்தை அவரிடம் சமர்ப்பிக்கிறேன்.

அதனை அவர் கிருபையுடன் ஏற்றுக்கொண்டு, தமது சித்தத்தை என்னிடம் தருகிறார்.

அதன் பிறகு, அந்நாளைத் தொடங்க ஆயத்தப்படுகிறேன். அந்த நாளில் கர்த்தர் எனக்கிட்ட பணியைச் செய்கிறேன்.

இவ்விதமாகவே என் நலனைக் காக்கிறார். எனக்கு எதிராக வரும் இடர்ப்பாட்டை அவர் கட்டுப்படுத்துகிறார்.

நாளின் இடைவேளைகளில் நாங்கள் சந்தித்து எங்களது சித்தங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வோம்.''

பிஷப் டெய்லர் ஸ்மித் என்பார் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் தனது படுக்கையில் முழங்காலில் நின்றவராக, ''கர்த்தாவே, எனது படுக்கை உமது பலிபீடம், நானோ உமது ஜீவபலி'' என்னும் எளிய சொற்களைச் சொல்லி, இவ்வாறு தன்னுடைய செய்கைகளின் உரிமையைக் கர்த்தரிடம் ஒப்புவிப்பார்.

ஆர்தர் பியர்சன் என்பார் ஒருமுறை ஜார்ஜ் முல்லரிடம், ''தேவன், உங்கள் மூலமாக மேன்மையானதும், அதிசயமானதுமான செயல்களைச் செய்வதன் இரகசியம் என்ன?'' என்று வினவினார். ஜார்ஜ் முல்லர் ஒருகணம் மேல்நோக்கிப் பார்த்தார்; பின்னர் தனது தலையைக் குனிந்து, முழங்கால் மட்டும் குனிந்தார். அதன் பிறகு சில மணித்துளிகள் அமைதியாக இருந்தார். பிற்பாடு, ''பல ஆண்டுகளுக்கு முன்பே என் வாழ்க்கையில் ஒரு நாள், ஜார்ஜ் முல்லர் இறந்துவிட்டார். இளைஞனாக இருந்தபோது என் வாழ்க்கையில் பல சாதனைகளாற்ற வேண்டுமென்ற நோக்கம் எனக்கு இருந்தது. அவையாவற்றிற்கும் ஒரு நாள் மரித்துவிட்டேன். அப்பொழுது, ஆண்டவராகிய இயேசுவே, இன்றிலிருந்து எனது சித்தமல்ல, உமது சித்தமே என் வாழ்க்கையில் நிகழக்கடவது என்றேன். அந்தநாள் முதற்கொண்டு என்னைத் தேவன் அவருடைய கிரியைக்கென்று பயன்படுத்துகிறார்'' என்றார்.

இதனையே ஜெனரல் பூத் என்பார் வேறொரு முறையில் விளக்குகிறார். ''நான் பதினேழு வயது நிரம்பினவனாக இருந்தபோது, வில்லியம் பூத் என்பவனுடைய உடைமையாவும் தேவனுக்கு உரியதாக வேண்டும் எனத் தீர்மானித்தேன்'' என்பதாகும்.

## திருமறை எழுத்துகளால் உங்கள் வாழ்க்கையை நிரப்புங்கள்

நான்காவதாக, நாம் திருமறை எழுத்துகளுக்கு நெருங்கியிருப்பது இன்றியமையாத தேவையாகும். அந்த வார்த்தைகள் நம்முடைய வாழ்வில் நிரம்பி இருக்கும் அளவிற்கு நாம் வேதத்தை நெருங்கியிருக்க வேண்டும். நாம் வேதத்தை வாசித்தல், மனப்பாடம் செய்தல், படிப்பது, தியானம் செய்வது, தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பன அதனுள் அடங்கும். நாம் வேதத்தை வாசிப்பதால், நமது குணநல நடவடிக்கை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதன் பொதுவான கருத்துகளைக் கற்றுக்கொள்வோம். நாம் அவற்றை மனப்பாடம் செய்வதால், நாம் சாட்சி பகரும் வேளைகளிலும், சோதனைக் காலங்களிலும், முடிவெடுக்க முடியாத சூழ்நிலைகளிலும் ஏற்ற வசனங்களை ஆவியானவர் நமது நினைவிற்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாயிருக்கும். நாம் அதனைப் படிப்பதால் கள்ள போதகங்களிலிருந்தும், தவறான எதிர்பார்ப்புகளிலிருந்தும் விடுவிக்கப்படுவோம். அதனைத் தியானம் பண்ணுவதால், அது யாரைக் குறித்துப் பேசுகிறதோ அவரை நோக்கிப் பார்த்து மாற்றம் பெறுவோம். அதற்குக் கீழ்ப்படிவதால், நாம் நீதியின் பாதைகளில் நடத்தப்படுகிறவர்களாயிருப்போம்.



பரிசுத்தமாகுதலுக்கும், திருமறைக்கும் உள்ள தொடர்பை நன்கு அறிந்த சங்கீதப் பாடகன், ''வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே... நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்'' என எழுதியுள்ளான் (சங் 119:9,11). இயேசு நாதர் இந்தத் தொடர்பைத் தமது ஜெபத்தில் உறுதிப்படுத்துகிறார், ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவான் 7:17). இந்நாட்களில் வழங்கும் பொதுமொழி இத்தொடர்பை இவ்வாறு விவரிக்கிறது:

> வேதம் பாவத்திலிருந்து உன்னைக் காக்கும், அல்லது பாவம் உன்னைப் பரிசுத்த வேதத்திலிருந்து விலக்கும். இரண்டு செயல்களில் தேவனுடைய பங்கு இல்லை. அவையாவன, வேதத்தில் படியும் தூசி, பனிபோலக் குளிர்ந்துபோன இருதயம்.

தூய ஆவியினால் நிறைவதற்கும், திருமறைக்கும் உள்ள தொடர்பு தெளிவுள்ளதாயிருக்கிறது. பரிசுத்த ஆவியின் நிறைவைத் தொடர்ந்து, ''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுதல்'' ஆகியவை நிகழும் என்று எபேசியர் 5–ஆம் அதிகாரத்தில் பவுல் கூறியிருக்கிறார். மேலும், ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு நமது இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடுவோம்'' என்று கொலோசெயர் நிருபத்தில் 3–ஆவது அதிகாரத்தில், அதே ஆசிரியர் கூறியிருக்கிறார். ஒரு பொருளுக்கு வேறு இரண்டு பொருட்கள் சமமாயிருக்குமெனில், அவ்விருபொருட்களும் ஒன்றுக்கொன்று சமமானவையாகும். ஆகலின், ஆவியினால் நிறைவது என்பது, கிறிஸ்துவின் வசனத்தினால் நாம் பூரணமாக நிறைந்து வாசம் செய்வதற்கு ஒப்பாகும் என்பதே முடிவு.

வேதம் இல்லாமல் பரிசுத்தம் இல்லை. தேவபக்தி நிறைந்த மேக்செய்னி என்பார், ''வேத வசனங்கள் இல்லாமல் தேவ தூதர்கள் தேவனால் படைக்கப்பட்டனர். ஆதாமும் வேத வசனங்களின்றிப் பரிசுத்தமாய்ப் படைக்கப்பட்டான். அவரால் வேத வசனங்கள் இன்றி எதனையும் பரிசுத்தமாக்க முடியும் என நான் நம்புகிறேன். ஆனால் அவர் அவ்வாறு செய்யமாட்டார். 'உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.' ஒரு தாய் தன் குழந்தையைப் பாலூட்டிப் பேணி வளர்க்கிற வண்ணம், இயேசு

நாதர் திருவசனமாகிய ஞானப்பாலினால் ஒவ்வொரு ஆத்துமாவையும் ஊட்டி வளர்க்கிறார்'' எனக் கூறியுள்ளார். தாங்கள் அடைகின்ற அனுபவங்களின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் மக்கள், வாரத்தின் முதல் நாள் தொடங்கி கடைசிநாள் வரைக்கும் வேதாகமத்தைத் திறக்காதபடி ஏமாற்றப்படுகின்றனர்.

## இடைவிடாத ஜெபம்

ஜெபம் இல்லாமல் பரிசுத்தம் இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சீடர்களுக்கு முன்மாதிரியாக ஜெபத்தைக் கற்பித்த போது, ''எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்'' என்னும் வேண்டுகோளையும் சேர்த்துள்ளார். இந்த வேண்டுகோளைத் தவறாமல் ஏறெடுக்க வேண்டும். பாவத்திலிருந்து தன்னைக் காப்பாற்றுவதற்கான கதறுதல் ஒருவரது இதயத்தினின்று வெளிப்படவில்லையேல், அவரது ஜெபம் முற்றுப்பெற்றதாகக் கருத முடியாது.

நமது அன்றாடக ஜெபப்பட்டியலில், கீழ்க்காண்பனவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்:

> ''கர்த்தாவே, பரிசுத்தமாய் வாழ்வதற்குத் தேவையான பலத்தை எனக்குத் தாரும்.''
>
> ''பரிசுத்த ஆவியானவர் எனக்குள் வாசம்பண்ணுகிறார் என்பதை எனக்கு நினைவூட்டி, அதன் காரணமாக அவரைத் துக்கப்படுத்தும்படி நான் எதையும் செய்யாதபடிக் காத்துக்கொள்ளும்.''
>
> ''பரலோகத்தின் இப்புறமாகிய பூமியில் வாழ்கிற ஒருவன், எந்த அளவிற்குப் பரிசுத்தமாய் வாழ முடியுமோ அந்த அளவிற்கு நான் பரிசுத்தமாய் வாழ எனக்கு உதவி செய்யும்.''
>
> ''நான் பாவம் செய்ய விரும்பினாலும், அதைச் செய்யாதபடித் தடை செய்யும்.''
>
> ''பாவம் செய்வதற்கான சோதனையும், வாய்ப்பும் ஒன்று சேராதபடி என்னைக் காத்துக்கொள்ளும்.''
>
> ''உமது பெயருக்குக் களங்கம் உண்டாகாதபடி என் செய்கைகளைக் காத்துக்கொள்ளும்.''
>
> ''நான் பாவத்தில் வீழ்ந்துபோவதைக் காட்டிலும், என்னைப் பரலோக வீட்டிற்கு அழைத்துக்கொள்ளும்.''

எவன் ஒருவனுடைய முழங்கால்கள் ஜெபத்தில் களைத்துப் போகாதிருக்கிறதோ, அவன் பரிசுத்தமாய் வாழ்வான் என எதிர்பார்க்க முடியாது.



## கிறிஸ்தவ ஐக்கியத்தில் நெருங்கிக் காணப்படுதல்

மற்ற விசுவாசிகளுடன் நெருங்கி வாழ்வது, பரிசுத்தமாகுதலுக்குத் தூண்டுகோலாயிருக்கிறது. கூடிவாழும் பறவைகளுக்கு ஒப்பாகவே, தேவ மக்களும் காணப்பட வேண்டும். ஆலோசனைச் சங்கத்தாரால் விடுதலை செய்யப்பட்டவுடன், பேதுருவும், யோவானும் தமது கிறிஸ்தவத் தோழர்களை நாடிச் சென்றனர் (அப். 4:23). சபை கூடுதலை விட்டுவிடக்கூடாது என நாம் புத்தி புகட்டப்பட்டிருக்கிறோம் (எபி. 10:25). தேவ ஜனங்கள் ஒன்றாகக் குழுமியிருந்த நேரங்களிலேயே, தூய ஆவியானவர் அதிசயிக்கத்தக்க வகையில் இறங்கி வந்ததாக அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காண்கிறோம். ஒருமன இணக்கத்தினால் ஏற்படும் ஆவியின் அனுபவம் என்று இது அறியப்படுகிறது.

வாரந்தோறும் ஒழுங்காக நாம் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூர்ந்து அப்பம்பிட்பது, நமது இரட்சகர் பாவத்திற்கென்று செலுத்திய விலையை நமக்கு ஞாபகமூட்டுவதால், நாம் பாவம் செய்யாதபடி நம்மைத் தடுக்கும் வலிமைமிக்க சாதனமாக இருக்கிறது. தேவனுடைய கணக்கின்படி பாவத்திற்கு என்னவிலை கொடுக்கப்பட்டது என்பதைக் கர்த்தருடைய பந்தி நமக்கு அறிவிக்கிறது. அதன் வாயிலாக நாம் பொல்லாங்கனை எதிர்த்து நிற்கத்தக்க பலத்தைப் பெறுகிறோம். மேலும், இவ்வுண்மை உள்ளூர் சபையின் அனைத்துக் கூட்டங்களுக்கும் பொருந்தும்.

## கர்த்தருக்கென்று சுறுசுறுப்பாயிருத்தல்

ஜெயக் கிறிஸ்தவர்கள், கர்த்தருக்கென்று எப்பொழுதும் சுறுசுறுப்பாயிருப்பதன் மேன்மையை நிரூபித்துக் காட்டியுள்ளனர் (பிரசங்கி 9:10).

> ''சோம்பலான கரங்கள் பொல்லாங்கை விளைவிக்க சாத்தான் சூழ்ச்சி செய்வான். ஆகவே கர்த்தருக்கென்று வேலைத்திறனும், உழைப்பும் உடையவனாய் சுறுசுறுப்பாயிருப்பேன்'' என ஐசக் வாட்ஸ் கூறியுள்ளார்.

நாம் நம்மைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளாத தருணங்களில், நமக்கெதிராகப் பெரும் சோதனைகள் உண்டாகக்கூடிய அபாயத்திற்குள்ளாக இருக்கிறோம் என்பதை நினைவிற்கொள்வோம். தாவீது, தனக்கு வெட்கம் உண்டாகும்படி இப்பாடத்தைக் கற்றுக்கொண்டான். வசந்த காலத்தில் இராஜாக்கள் யுத்தத்திற்குச் சென்றபோது தாவீது உப்பரிகையின்மேல் உலாவிக் கொண்டிருந்தான். அவன் கண்ட காட்சி, அவனை இச்சைக்குட்படுத்தியது. விபசாரம் செய்து அதை மறைக்கக் கொலையும் செய்தான் (2 சாமு. 11).

சோதோம் என்று சொன்னவுடன், நம் நினைவிற்கு வருவது வெட்கக்கேடான சுயபால் உறவாகும். அதற்கு இணையான சோதோமின் மற்ற

பாவங்களை எசேக்கியேல் நினைவூட்டுகிறான் (எசே. 16:49). அவற்றில் ஒன்று மிகுதியான சோம்பலாகும். அந்தச் சோம்பல் அவர்களது ஒழுக்கக் கேட்டிற்கு ஊற்றாக விளங்கினது!

கர்த்தருக்கென்று நாம் சுறுசுறுப்பாக இருப்பதால் நமது உடல் வலிமை வீணாகாதபடி காக்கப்படுகிறோம். மேலும் அவ்விதச் சுறுசுறுப்பு, நம்மை அநாகரீகச் செயல்களைச் செய்யாதபடி தடுத்து, குணநலமிக்கதும், நாகரீக மானதும், நெறிமேம்பாடுடையதுமான செய்கைகளைச் செய்ய ஊக்குவிக்கும். திருமணம் வேண்டாம் என்னும் நோக்குடையோர், தங்களது உடல் வலிமையை இடைவிடாது ஊழியத்தில் செலவிட வேண்டும். "அவர்கள் தங்களது சரீரங்களை வேலை மிகுதியினால் கொன்று, ஜெபத்தினால் உயிர்பெற வேண்டும்" என்று ஒருவர் கூறியுள்ளார். செயல்திறன் கொண்ட நாட்கள், மிகுந்த பாதுகாப்பானவை.

## சரீரக் கட்டுப்பாட்டின் செயல்முறை

மேற்கூறியவைகளோடு, சரீரக் கட்டுப்பாடு தொடர்புடையதாயிருக்கிறது. "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாத படிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" எனப் பவுல் உரைக்கிறார் (1 கொரி. 9:27). அதனையே தற்கால மொழிபெயர்ப்பு இவ்வாறு விவரிக்கிறது.

> "அதன் காரணமாக, எனக்கு நியமிக்கப்பட்ட எல்லைக்கோட்டை நோக்கி நேராக ஓடுகிறேன். நான் ஒரு குத்துச்சண்டை வீரனைப் போல இருக்கிறேன். அவன் தன் ஆற்றலை வீணாக்குவதில்லை. என்னுடைய சரீரத்தை மற்றவர்களின் குத்துகளினாலே கடினமாக்கி, அதனை என்னுடைய ஆதிக்கத்திற்குள் முற்றிலுமாக அடக்குகிறேன். மற்றவர்களைப் போட்டிக்கு அழைத்துவிட்டு என்னை ஆயத்தப்படுத்தாமல் நிராகரிக்கப்பட்டவனாகப் போய்விடாதபடிக்கு என்னுடைய சரீரத்தை ஒடுக்குகிறேன்."

பவுல் உண்மையாகவே பல அடிகளையும், குத்துகளையும் வாங்கித் தன் சரீரத்தை ஒடுக்கினார் என்பது பொருளல்ல. மாறாக, தன்னுடைய வாழ்க்கையின் ஒழுக்கம், உறக்கம், உணவு, உடற்பயிற்சி ஆகிய பகுதிகளைச் சொந்தக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டார் என்பதே பொருள். மாம்ச இச்சைக்கு அடிபணியாதிருந்தார். ஆகவே நாமும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான தடவைகள் நமது மனது ஏவும் பல செயல்களுக்கு 'மாட்டேன்' என்று பதில் சொல்லுகிறவர்களாக இருக்க விழைவோம். தற்கால உலக ஞானம், "அது நல்லதாகத் தோன்றுமாகில் அதனைச் செய்யுங்கள்" என்று கூறுகிறது. ஆயின் நாமோ பல செயல்களை எதிர்த்து நிராகரிக்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.



நாம் சோதனைகளை எதிர்த்து நிற்கிற ஒவ்வொரு முறையும், தேவன் அதற்கேற்ற வெகுமதியை அளிக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது. "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்...," என யாக்கோபு உரைக்கிறார் (1:12). இதனைக் குறித்து எல்லா வீலர் வில்காக்ஸ், "எந்தச் செய்கைகளை நிறைவேற்றினோம் என்பதனால் அல்ல, எந்தச் செய்கைகளை எதிர்த்து நின்றோம் என்பதன் அடிப்படையிலேயே, அழிவில்லாதவரின் பெயர்ப்பட்டியலில் நமக்கு வரிசை எண் தரப்படும் என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை" என உரைக்கிறார்.

நமது உறக்கத்தைக் கட்டுப்படுத்துவது இதன் மற்றொரு பொருளாக இருக்கிறது. மணியோசை தரும் கடிகாரம் நல்லதொரு ஆவிக்குரிய கருவியாக இருக்கிறது. நாம் உட்கொள்ளும் உணவு, பருகும் பானங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதும் இதன் பொருளாகும். ஏனெனில் 'உணவினாலே வயிற்றை நிறைத்துக்கொள்ளுதல்' சோதோமின் பிறிதொரு பாவம் என்பதனை நினைவிற்கொள்க (எசே. 16:49). சரீர உடற்பயிற்சியில் ஈடுபடுவது என்பதும் இதன் பொருளாகும். அதனை "அற்ப பிரயோஜனம் உள்ளது" எனப் பவுல் உரைக்கிறார் (1 தீமோ. 4:8).

இவையாவற்றையும் சுருங்கக் கூறுவோமாகில், "சோதனை கதவைத் தட்டுகையில், இயேசுநாதரை வாசலுக்கு அனுப்புவோம்" என்னும் முறையில் நாம் செயல்பட வேண்டும்.

## சிந்தனை வாழ்க்கையைக் காத்துக்கொள்ளுதல்

சரீரக் கட்டுப்பாடு எவ்வளவு இன்றியமையாததோ, அதுபோலவே சிந்தனை வாழ்க்கையும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். நாம் சிந்திக்கிறவை யாவும் நன்மையானாலும், தீமையானாலும் கட்டுப்படுத்தக் கூடியவை என்பதே உண்மை. மனம் என்னும் ஊற்றிலிருந்து செயல் என்னும் ஓடை பாய்ந்து வருகிறது (நீதி 4:25). பாவம் மனதில் தோன்றுகிறது. தொடரும் சிந்தையால் செயல் உண்டாகிறது. அந்தச் செயல் தொடர்கிற போது மரணத்தைப் பிறப்பிக்கும். இது வாழ்க்கையெனும் சக்கரத்திற்கு ஒத்திருக்கிறது. கருவுறுதல், பிறப்பு, வளர்ச்சி, மரணம் என்னும் வாழ்க்கைச் சக்கரத்தைப் போலப் பாவத்தின் செயல்பாடும் இருக்கிறது என யாக்கோபு தெளிவாக எழுதியுள்ளார்.

நமது சிந்தனை எவ்வாறு இருக்கிறதோ, அவ்வாறே நாம் மாறுகிறோம். "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி 23:7). இதன் நிமித்தமாக நமக்குள்ளாக இருக்கும் மிருக உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய தொலைக்காட்சி, வீடியோ படங்கள், வானொலி, திரைப் படங்கள், பத்திரிகைகள் போன்றவற்றில் நாம் மிகுந்த கட்டுப்பாடு உடையவரா யிருக்க வேண்டும்.

புத்தாண்டின் முந்தினநாள், கிறிஸ்தவர் ஒருவருடைய இல்லத்தில் தொலைக் காட்சிப் பெட்டி பழுதடைந்துவிட்டது. அந்தக் கிறிஸ்தவத் தம்பதி அதனைப்பழுது பார்க்க வேண்டுமா அல்லது அதனை வேண்டாமென விட்டுவிட வேண்டுமா எனக் கர்த்தரிடம் விண்ணப்பித்தார்கள். அடுத்தநாள் காலை 101-ஆவது சங்கீதத்தைப் படித்தனர். அவர்களது விண்ணப்பத்திற்குப் பதில் 2,3 ஆகிய வசனங்களில் காத்திருந்தது, "என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன். தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்" என்பதே அவர்கள் பெற்ற பதில்.

வாழ்க்கையில் பல அம்சங்கள் பொல்லாப்பைச் சார்ந்துவிடக் கூடியவை களாக இருக்கின்றன. அவைகளை நாம் வெறுத்துத் தள்ள வேண்டுமென்று யூதா நம்மை எச்சரிக்கிறார் (யூதா 23).

நமது சிந்தனை வாழ்க்கையின் மறுபுறம் நன்மை பயக்கக்கூடியதாய் உள்ளது. நாம் பொல்லாங்கான சிந்தனைகளை நமதுள்ளத்திலிருந்து விரட்டு வதோடு, அதைத் தூய்மையும், பரிசுத்தமும் மிக்க நினைவுகளால் நிரப்ப வேண்டிய அவசியமுண்டு (பிலி. 4:8). இதனை "நல்ல நினைவுகள் வேதத்தின் வல்லமை" என்று அழைக்கிறோம்.

நாம் ஒரே நேரத்தில் இரண்டு நினைவுகளைக் கொண்டிருக்க முடியாது என்பதே, அனுபவம் நமக்குக் கற்பிக்கும் பாடமாகும். இந்த உண்மையை நம்முடைய நன்மைக்கென்று பயன்படுத்துவோம். நாம் ஒரே சமயத்தில் பாவத்தையும், கிறிஸ்துவையும் குறித்துச் சிந்திக்கமுடியாது. நாம் எவ்வளவு அதிகமாகக் கர்த்தரைக் குறித்துச் சிந்திக்கிறோமோ, அந்த அளவிற்கு நமது வாழ்க்கை தூய்மையாக இருக்கும். இதை இன்னும் ஒரு படி மேலே சொல்வோ மானால் கர்த்தரைக் குறித்துச் சிந்திக்க சிந்திக்க, அவருடைய சாயலைப் பெறுகிறவர்களாக இருப்போம். இந்த உண்மையைப் பவுல் 2 கொரி. 3:18-இல் வெளிப்படுத்துகிறார்:

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக்
கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு,
ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாலயலாகத்தானே
மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்."

இந்த வசனம் கிறிஸ்தவப் பரிசுத்தத்தைப் பொருத்தமட்டில் மிகவும் முக்கியமானதாகும். ஆகையால் நாம் இதனை நன்கு பகுத்தறிவது நல்லது.

*நாமெல்லாரும்* - அதாவது, அனைத்து உண்மையான விசுவாசிகளும்.

*திறந்த முகமாய்* - நமது முகத்திற்கும் கர்த்தருக்கும் இடையே திரையை உண்டாக்குவதற்குப் பாவம் காரணமாயிருக்கிறது. பாவத்தை அறிக்கைசெய்து அதனை விட்டுவிடுவோமென்றால், திறந்த முகமுடையவராய் இருப்போம்.



அவ்வாறு நாம் இருப்போமாயின் நமக்கும், நமது இரட்சகருக்கும் இடையில் ஒரு தடையுமிராது.

*கர்த்தருடைய மகிமையை* - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்குணச் சிறப்பினையும், அதன் நிறைவையும், அவருடைய கிரியைகளின் அழகையும், அவருடைய வழியையும் நாம் வேதத்தில் காண்கிறவர்களாக இருக்கிறோம்.

*கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு* - தேவ வார்த்தை கண்ணாடி யாக இருக்கிறது.

*ஆவியாயிருக்கிற கர்த்தரால்* - நமது குணநலன்களில் நாம் மறுரூப மடைகின்ற செயல்பாடு தூய ஆவியானவரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. திருமறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற வண்ணமாக இரட்சகரை விசுவாசத் தோடு நோக்கிப் பார்க்கிறவர்களிடத்தில் கிறிஸ்துவின் சாயலை, ஆவியானவர் உருவாக்குகிறார்.

*அந்தச் சாயலாகத்தானே மறுரூபப்படுகிறோம்* - அவரைப் பார்த்ததால் மாறியிருக்கிறோம். அவரைப் புகழ்ந்து தொழுதுகொள்ளும் எண்ணத்துடன் உற்று நோக்குகிறவர்களாயிருப்போமெனில் அவரைப் போலாவோம். இதனை ஒருவர் இவ்வாறு விளக்கியிருக்கிறார், "அவரைக் காணும் பார்வை நம்மை இரட்சிக்கிறது. அவரை உற்றுநோக்குவது பரிசுத்தப்படுத்துகிறது."

*மகிமையின்மேல் மகிமையடைந்து* - மகிமையின் ஒருபடியிலிருந்து அடுத்தபடிக்கு உயர்வதை இது குறிக்கிறது. இது சடுதியாக ஏற்படுகின்ற செயல் அல்ல. அவரோடு எவ்வளவாக நெருங்கி இருக்கிறோமோ அதற்கு ஏற்றபடி நாம் மகிமையின்மேல் மகிமை அடைகிறவர்களாயிருப்போம்.

கிறிஸ்துவை நோக்கிநீ பார்த்தால்
அவர் சாயலைநீ அடைவாய்;
அதனால் உன்நடத்தை மாறும்
அதனை உன்நண்பர் காண்பர்.

## வீழ்வதைக் காட்டிலும் ஓடுவதைத் தெரிந்துகொள்வோம்

சில சந்தர்ப்பங்களில், நம்மை எதிர்த்துவரும் சோதனைகளுக்கும், நமக்கும் சில மைல் கற்கள் இடைவெளிதூரம் இருக்கும் வண்ணம் ஓடுவது அவசியமாகும். நாம் சரியான பாதையைத் தெரிந்து கொண்டால் அவ்விதமாக ஓடுகிறவர்களாக இருப்போம்.

யோசேப்பு அதனைச் செய்து காட்டினான் (ஆதி. 39:12). அவன் தனது மேலாடையை இழந்துவிட்டது உண்மைதான். ஆனால் கிரீடத்தை அல்லவா பெற்றான். "எவனொருவன் போராடி ஓடுகிறானோ, அவன் இன்னும் ஒருநாள் போர் செய்ய வாழ்கிறான்" என்பதை அவன் நிரூபித்துக் காட்டினான். வேசித்

தனத்திற்கும் (1 கொரி. 6:18); விக்கிரக ஆராதனைக்கும் (1 கொரி. 10:14); இச்சைகளுக்கும் (1 தீமோ. 6:11); பாலியத்துக்குரிய இச்சைகளுக்கும் (2 தீமோ. 2:22) நாம் விலகியோட வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது.

அவ்வப்போது வலுவான மனஉறுதிகொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இயேசுநாதர் கற்பித்திருக்கிறார். "உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என அவர் உரைத்துள்ளார் (மத். 18:8,9). இங்கு சொல்லியிருக்கிறபடி நாம் நமது அவயவங்களைச் தறித்துப்போட வேண்டும் என்பது அதன் பொருளாகாது. நமது சரீரங்கள் பரிசுத்த ஆவி வாசம் செய்யும் ஆலயங்களாயிருக்கின்றனவே. நாம் பாவத்தோடு விளையாடக்கூடாது, மாறாக, அவற்றோடு இரக்கமற்ற முறையில் போராடி வெற்றிகொள்ள வேண்டும் என்பதே ஆண்டவர் இங்கு வலியுறுத்திக் கூறுவதன் பொருளாகும்.

நாம் பாவத் தூண்டுதலுக்கு விலகியோடும்போது, நமது முகவரியை கொடுத்துவிடக்கூடாது என்னும் ஆலோசனையும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## இறந்துபோன மனிதனைப் போல சோதனையை எதிர்த்து நிற்க வேண்டும்

நாம் வெற்றிபெறுவதற்கான சகல வழிமுறைகளையும் நாம் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. நம்மைப் பாவத்திற்கு மரித்துப்போனவர்களாக நாம் எண்ணிக்கொள்ள வேண்டுமென்று பவுல் நமக்கு நினைவுபடுத்துகிறார் (ரோமர் 6:11). அந்த நிழற்காட்சி தெளிவாகவும் மறக்க முடியாததாகவும் இருக்கிறது. பளபளக்கும் துணியால் அலங்கரிக்கப்பட்ட பெட்டியிலே வைக்கப்பட்டிருக்கும் சவத்தை நினைத்துக்கொள்ளுங்கள். இறந்துபோன அந்த மனிதனோடு முன்பு வாழ்ந்த காமக்கிழத்தி அந்தப் பெட்டிக்கு அருகில் வந்து வாழ்த்தினாள். ஒரு பதிலும் இல்லை! மாலையில் வெளியில் செல்வதற்கு அழைத்தாள். அந்தச் சவம் அசையவுமில்லை, பேசவுமில்லை. அவளோ அவனைப் பாவத்திற்குட்படுத்தும்படி பல உபாயங்களைக் கையாண்டாள். ஆனால் அனைத்தும் வீணாய்ப்போயின. அவன் இறந்துவிட்டான். இந்தக் கதை அகஸ்டின் என்பவனின் கடந்தகால அனுபவத்தை நினைவிற்குக் கொண்டுவருகிறது. தான் மனமாற்றம் அடைவதற்கு முன்னர் தனக்குப் பிரியமாக இருந்த ஒரு பெண்ணை ஒருநாள் சந்திக்க நேரிட்டது. அவனைக் கண்டவுடன் அவள் கூவி அழைத்தாள். ஆனால்



அவனோ திரும்பித் தன் வழியில் வேகமாகச் சென்றான். அவள் விடவில்லை. பின் தொடர்ந்து வந்து, "அகஸ்டின், நான்தான், நான்தான்!" எனக் கூறினாள். அவன் தன் முகத்தைச் சற்றுத் திருப்பி, "எனக்குத் தெரியும், இனி நான் பழைய அகஸ்டின் இல்லை" என்று சொல்லித் தன் நடையை வேகப்படுத்தினான்.

பொல்லாங்கை நடப்பிக்கும்படி நாம் தூண்டப்படும்போது, ஒரு பிணம் எவ்வாறு பதில் ஒன்றும் செய்யாதோ, அவ்விதமாகவே நாமும் நம்மை மரித்துப் போனவர்கள் என்று எண்ணிக்கொள்ள வேண்டும். ஆனால் அதோடு நாம் நிறுத்தி விடக்கூடாது. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்குள்ளாக நாம் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டும். அதாவது, நாம் உடனடியாகக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, எப்பொழுதும் அவரது உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியவைகளையே செய்ய வேண்டும் என்பதே அதன் பொருளாகும்.

## தொடுவதனால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்போம்

தொடுதல், நேசமாகத் தடவிக்கொடுத்தல், நெருக்கமான வார்த்தைகள், அர்த்தமுள்ள அங்க அசைவுகள், விளையாட்டுத் தனமான நடத்தைகள் ஆகிய ஆசாரமற்ற பழக்கங்களை நாம் தவிர்க்க வேண்டும் என்பது நடைமுறைக்குத் தேவையான இன்னுமொரு ஆலோசனையாகும்.

மூடி என்னும் மாதப் பத்திரிக்கையில், ஜெரி ஜென்கின்ஸ் என்பார் இந்த ஆலோசனைக்குத் தேவையான நடைமுறை விதிகளைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். தன்னையும், தன் மனைவியையும், தனது குடும்பத்தையும், தனது எஜமானனையும், தனது சபையையும், கிறிஸ்துவின் மேன்மையையும் நிலை நிறுத்திப் பாதுகாத்துக்கொள்ளத்தக்க வேலியாக அந்த ஆலோசனைகளைத் தன் வாழ்க்கையில் அவர் கடைப்பிடிக்கவும் செய்கிறார்.

1. தொடர்பில்லாத பெண்ணைச் சந்திக்கவோ, அவருடன் உணவருந்தவோ, பயணம் செய்யவோ நிர்ப்பந்தம் நேரிட்டால், அத்தகைய சந்தர்ப்பங்களில் எங்களோடு இருக்கும்படியாக இன்னும் ஒருவரைச் சேர்த்துக்கொள்வேன். கடைசி நேரத்தில் அவ்வாறு ஒருவரைச் சேர்த்துகொள்ள இயலாவிட்டால் அதைக்குறித்து முதலாவதாக என் மனைவிக்குத் தெரிவிப்பேன்.

2. தொடுவதைக் குறித்து மிக ஜாக்கிரதையுள்ளவனாக இருப்பேன். மிக நெருங்கிய நண்பர்களையும், உறவினர்களையும் மட்டுமே கைகளை அழுத்திப் பிடித்துக் கைகுலுக்குவேன். அதுவும் மற்றவர்களுக்கு முன்னால் மட்டுமே அவ்வாறு செய்வேன்.

3. ஒருவருக்குப் புகழுரை வழங்கும் போது அவருடைய ஆடையைப் பற்றியோ, முடி அலங்காரத்தைப் பற்றியோ தான் சொல்வேன். அப்பெண்ணைக் குறித்து எதுவும் சொல்லமாட்டேன். அந்தப் பெண்ணின் அலங்காரத்தைக் குறித்துச் சொல்வது, அந்தப் பெண்ணையே அழகுள்ளவர் என்று சொல்வதைக் காட்டிலும் நாகரிகமானதாகும் என்று நான் கருதுகிறேன்.

4. குலுக்கி மினுக்கிப் பேசுவதையும், வசியப்படுத்தும் உரையாடலையும் வேடிக்கைக்கும்கூடச் செய்யமாட்டேன்.

5. நான் விவாக உறுதிமொழியை நினைவில் கொண்டுள்ளேன் என்பதைப் பேச்சிலும், எழுத்திலும் என் மனைவிக்கு அடிக்கடி நினைவுபடுத்துவேன். "நாம் உயிரோடு இருக்கும் வரை உன்னையே எனக்காகக் கொண்டிருப்பேன்..." என் மனைவி டயானா பொறாமை கொண்ட பெண்ணல்ல. இந்த உறுதிமொழியை என்னிடத்தில் எந்த ஒரு சமயத்திலும் கேட்டதில்லை. ஆயினும் நான் எனக்கு நியமித்துக்கொண்ட விதிகளை, நான் கடைப்பிடிப்பதைக் கண்டு, என் மனைவி என்னை அவ்வப்போது பாராட்டுவதுண்டு.

6. வேலையிலிருந்து வீடுதிரும்பிய பிறகு, குழந்தைகள் படுக்கைக்குச் செல்லும்வரை, நான் வீட்டில் எழுதுவதோ, அலுவலக வேலையைச் செய்வதோ இல்லை. அதன் காரணமாகக் குடும்பத்தோடு அதிகமான நேரத்தைச் செலவிட முடியும். தாம்பத்ய உறவில் மகிழ்ச்சி கொண்டவர்களாகவும் இருக்க அது துணை செய்கிறது.

## நமது உறுதியைப் பலவீனப்படுத்தும் எதையும் தவிர்ப்போம்

வசியப்படுத்தும் வார்த்தைகளையும், செயல்களையும் தவிர்ப்பதோடு, பாவம் செய்வதை எதிர்க்கும் இயல்பைப் பலவீனப்படுத்தும் எதனையும் நாம் தவிர்க்க வேண்டும். மது அருந்துதல், மனதைச் சீர்குலைக்கும் போதை மருந்துகள் போன்றவற்றை முற்றிலுமாக விலக்க வேண்டும்.

மனிதர்கள் மது அருந்தும் போதும், போதைப் பொருட்களை உட்கொள்ளும் போதும் தாங்கள் சாதரணமாகச் செய்வதற்கு வெட்கப்படும் செயல்களைச் செய்வார்கள். எரின் ஒட்சர் என்பார் இதனைக் குறித்து கருத்துரை வழங்குகிறார்:

> "குடிவெறியும், வெட்கமற்ற செயலும் கைகோத்துச் செல்பவை என்பதனை நோவாவின் அனுபவம் நமக்கு விளக்குகிறது. அதுவே வேதத்தில் குடி வெறியைப் பற்றி முதலாவதாகக் குறிப்பிட்டுள்ள இடமாகும். அந்த இடத்திலே அதனுடைய விளைவையும் காண்கிறோம். நோவா தன் கூடாரத்தில் நிர்வாணமாகப் படுத்துக் கிடந்தான். ஒருவரது குடிப்பழக்கம் அவர் தனது குணநலனைக் காத்துக்கொள்ளும் திறனை வலுவிலக்கச் செய்துவிடுகிறது. ஒருவர் சிறிதளவு குடித்தவுடனேயே கட்டுப்பாட்டை இழந்து, நியாயமான மனிதர்கள் செய்வதற்குத் தடுமாறக்கூடிய செயல்களைத் தாராளமாகச் செய்கிறவராக மாறி விடுவார். ஜன்மசுபாவமுள்ள மனிதன் ஒருவன் தனது கீழான நடத்தையைக் குறித்துப் பேசினதைக் கேட்க நேரிட்டது. "நாங்கள் சிறிதளவு குடித்தோம், பின்னர்... அவ்விதமாக நடந்து கொண்டோம்" என்று நாக்கூசாது கூறினான். மது மனிதனை மிருகமாக மாற்றி விடுகிறது. அதற்காக அவன் வெட்கப்படுகிறதில்லை. குடிப்பவர்கள் தங்களது பிரச்சனைகளை மறக்கவே குடிக்கிறோம் என்கின்றனர். ஆனால் அந்தக் குடியே அவர்களது பிரச்சனைகளை வளர்த்து விடுகிறது."



## உதவிக்கு அழையுங்கள்

கொடுமையான சோதனைக் காலத்திலும், உதவியற்ற நிலையில் இருக்கிறோம் என்ற எண்ணமும், வீழ்ந்து போய்விடுவோமென்ற எண்ணமும் நம்மைச் சூழ்ந்துகொள்ளும் நேரத்திலும் நாம் என்ன செய்ய வேண்டும்? "கர்த்தருடைய நாமத்தை அழையுங்கள்" என்பதே அதற்குரிய விடையாகும். "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி. 18:10). பேதுரு அலைகளுக்குள்ளே தான் அழிழ்ந்துபோகிறவனாக உணர்ந்தபோது, "ஆண்டவரே, என்னை இரட்சியும்" எனக் கூறினான் (மத். 14:30). கர்த்தர் அவனை உடனடியாகக் காப்பாற்றினார். எப்பொழுதும் அவர் அவ்வாறு செய்பவராக இருக்கிறார்.

## உங்களிலும் உங்கள் மூலமாகவும் தேவன் கிரியை செய்கிறார் என்பதை விசுவாசியுங்கள்

சாமுவேல் ருதர்போர்ட் என்பார், "தேவனுடைய விருப்பத்திற்கேற்ற சூழ்நிலைகளுக்கு உங்களைத் திறந்துகொடுங்கள்" என்று அறிவுரை கூறியுள்ளார். இதன்பொருள் யாது? ஜான் எல். பேர்ட் என்பார் இதனை விளக்குகிறார்;

> "இதன் பொருள் யாதெனில், நீங்களும் நானும் தேவனிடத்தில் காலையிலும், பகலிலும் நம்மை ஒப்புவிப்போமானால், அவருடைய சித்தம் அனுமதிக்காத ஒன்றும் அந்த நாளில் நம்மை நெருங்கி வராது. ஒவ்வொன்றிற்கும் ஓரிடமுண்டு, ஒவ்வொன்றிற்கும் ஒரு நோக்கமுண்டு. நமது சிறுசிறு திட்டங்களுக்கு ஊடாக சில தடைகள் ஏற்படும். அவை நமது திட்டங்களுக்கு இடையூறாக அமையும். அவை நமது திட்டங்களை மாற்றிவிடும். ஆனாலும் நம்முடைய நாளை நாம் தேவனிடம் ஒப்புவித்திருப்பதால் நம்மை நெருங்கி வருகிற அனைத்து இடையூற்றையும், அவருடைய சித்தத்தினால் அனுமதிக்கப்பட்டவை என்றே நம்புவோம். நாம் அதற்கு எதிர்த்து நிற்க வேண்டாம். அந்த எதிர்ப்பு நமது ஆத்துமாவைக் கசப்படையச் செய்துவிடும். மாறாக, நாம் அந்தச் சூழ்நிலைகளுக்கு நம்மை ஒப்புவிக்க வேண்டும். அவைகளை நாம் வருகிற வண்ணமாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்."

ஹரோல்ட் வில்டிஸ் என்பார் அதற்கொப்பான புத்திமதியை வேதத்தின் அடிப்படையில் தருகிறார்:

“கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட கிரியையில் பாவபாரம் முழுவதையும் சுமத்திவிட்டு, நாம் இளைப்பாறுகிற வண்ணமாகவே, நமது வாழ்க்கையின் பாரத்தையும், ஊழியத்தின் பாரத்தையும் ஒதுக்கிவிட்டு, தூய ஆவியானவரின் உள்ளார்ந்த கிரியைக்கு நாம் வழிநடத்தப்படுவதற்கென்று நம்மை ஒப்புவிப்போம்; நாம் அவரை வாழ்த்தி, நமது நாளையும் அவர் நடத்தும்படி சமர்ப்பணம் செய்வோம். நாள் முழுவதும் அவரைச் சார்ந்து மனமகிழ்ச்சியுடன் இருக்க நாம் பழகிக்கொள்வோம். மேலும், அவருக்குக் கீழ்ப்படியவும், அவர் நம்மைப் பிரகாசிப்பிக்க, கடிந்துகொள்ள, கற்பிக்க, பயன்படுத்த, அவருக்கென்று நாம் செயலாற்ற, அவர் சித்தத்திற்கு ஒப்புவிக்க நாம் பழகிக்கொள்வோம். நமது காட்சிக்கும், உணர்ச்சிக்கும் முற்றிலும் அப்பாற்பட்டு அவருடைய கிரியை பேருண்மையாக இருக்கிறது என்பதை நினைவிற்கொள்வோம்.”

ஆவியினால் நிரப்பப்படுவது என்பது உணர்ச்சி பூர்வமானதல்ல, அது பரிசுத்தமாகுதலேயாகும். வேலை மிகுதியினாலும், உலகு சார்ந்த கடின உழைப்பினாலும் நாட்கள் நிறைந்து காணப்படலாம். எப்பொழுதாவது மலையுச்சியின் அனுபவம் உண்டாகும். அந்த அனுபவம் நாம் முன்னேறிச் செல்வதற்கு நம்மை ஊக்குவிக்கப் போதுமானதாயிருக்கும். ஆனாலும் வாழ்க்கையின் ஓட்டங்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளும். நமது ஊழியம் வியத்தகு முறையில் பளிச்சிடும். தேவன் நம்மிலும், நமது மூலமாகவும் கிரியை செய்கிறார் என்ற உணர்வு எப்பொழுதும் இருக்கும். ஆயினும் அதில் சிறிதளவும் பெருமையுண்டாகாது. நமது மூலமாக மற்றவர்களது வாழ்க்கை தொடப்படும்போது, அது தேவனுக்குச் சிறப்பைக் கொண்டுவரும்.

மேலும், ஆங்கே வல்லமை காணப்படும் (லூக். 24:49; அப். 1:8). சாட்சி பகர்வதில் தைரியம் விளங்கும் (அப். 4:13,29,31); மகிழ்ச்சி நிறைந்திருக்கும் (அப். 13:52); தொழுகையும் (லூக். 1:67-75; எபே. 5:19,20), கீழ்ப்படிதலும் (எபே. 5:21) இருக்கும்.

பரிசுத்தமாகுதலின் மற்றுமொரு அம்சத்தைக் காண, நமது சிந்தனைச் சக்கரத்தின் ஓட்டத்தைத் உந்திவிடுவோம். கிறிஸ்தவன், தன்னை இரண்டு இராஜ்ஜியங்களுக்கு உட்பட்டவனாகக் காண்கிறான். அவை கர்த்தருடைய இராஜ்ஜியமும், உலக இராஜ்ஜியமுமாகும். அவற்றின் வேறுபாட்டை நிதானித்து அறிந்தவராக, நாம் எதைச் சார்ந்திருக்கிறோம் என்று உணர்ந்து கொள்வோமாக. ●

# 12

# இரண்டு இராஜ்ஜியங்கள்

இரண்டு இராஜ்ஜியங்களின் கதையை இங்கு பார்க்கப்போகிறோம். முதலாவது உலக இராஜ்ஜியம் என்றழைக்கப்படுகிறது. மற்றொன்று தேவனுடைய இராஜ்ஜியமாகும். அவை ஒன்றோடொன்று உடன்பாடற்றும், முற்றிலும் வேறுபட்டுமுள்ளன. முதலாவது ஒழுக்கங்களுக்கும், ஆவிக்குரியவைகளுக்கும் மாறான இருள் சூழ்ந்ததாகும். மற்றதோ அவைகளின் ஒளிப்பிரகாசம். இரண்டிற்கும் இடையே பெரும் பிளவு உண்டாயிருக்கிறது.

## உலகம்

நாம் உலகம் என்று சொல்வது பூமி என்னும் வான்கோளையல்ல; அழகு நிறைந்த இயற்கையையுமல்ல; வீழ்ந்துபோன மனுக்குலத்தையுமல்ல. அதற்கு மாறாக, தேவனற்ற நிலையில் மனிதனால் உருவாக்கப்பட்ட உலக சமய நாகரிகத்தையே குறிப்பிடுகிறோம். இஃது தேவனற்ற மனித சமுதாயத்தைக் குறிக்கிறது. தேவனில்லாமல் தான் மகிழ்ச்சியுள்ளவனாகக் காணப்பட வேண்டுமென மனிதன் விரும்பிச் செய்கின்ற அனைத்துச் செயல்களும், நடவடிக்கைகளும் அடங்கிய நிலையைக் குறிக்கின்றது. இது தவறான தத்துவங்களையும், மாய்மாலமான மேன்மைகளையும், பொய்யான தெய்வங்களையும் உடையதாயிருக்கிறது. இது இழிவான விருப்பங்களையும், தற்பெருமையையும், தன்னல நாட்டத்தையும் குணங்களாகக் கொண்ட அமைப்பாகும். தேவனுக்கு விரோதமாக மனிதன் நடைமுறைப்படுத்தும் செயலாக்கங்களை இது உடையதாயிருக்கிறது. ஆங்கே, கர்த்தர் புறக்கணிக்கப்பட்டவராகவும், விட்டுவிடப்பட்டவராகவும் இருப்பது மட்டுமன்றி, அது அவருக்கு எதிரான கடும் விரோதமாகவும் காணப்படுகிறது. இவ்வுலகம் அவரை விட்டுத் தூரமாகச் சென்றதுமன்றி, அவரோடு போர் செய்வதுமாயிருக்கிறது.

## கர்த்தருடைய இராஜ்ஜியம்

இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய கர்த்தரும் இரட்சகரும் என்று அறிந்து ஏற்றுக்கொண்டுள்ள மனிதர்களின் கூட்டத்தையே, அதாவது, கிறிஸ்தவ

சமூகத்தையே நாம் தேவனுடைய குமாரனுடைய இராஜ்ஜியம் என்று குறிப்பிடுகிறோம். (இராஜ்ஜியம் என்பதற்கும் சபை என்று சொல்வதற்கும் அடிப்படைப் பொருள் வேறுபாடு இருப்பினும் நாம் கொடுக்கும் விளக்கங்களுக்கு அவையிரண்டையும் இங்கே ஒன்றாகவே காண்பிக்கிறோம்.)

## சாத்தானும் கிறிஸ்துவும்

சாத்தான் இந்த உலகத்தை ஆளுகிறவன். இவ்வுலகம் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளையும் அது எதற்கெல்லாம் முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதையும் அவனே வகுக்கிறவன். அவன் உலகத்தின் அதிபதி (யோவா. 12:31; 14:30; 16:11), இப்பிரபஞ்சத்தின் தேவன் (2 கொரி. 4:4), பொல்லாங்கன் (1 யோவான் 5:19), பொய்யன், ஏமாற்றுகிறவன் என்றெல்லாம் (யோவான் 8:44) அழைக்கப்படுகிறான். அவனுடைய நோக்கம் திருடுவதும், கொல்லுவதும், அழிப்பதுமாயிருக்கிறது (யோவான் 10:10).

பிறிதொரு இராஜ்ஜியத்தின் அதிபதியாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திகழ்கிறார். ஜீவனைப் பரிபூரணமாகக் கொடுக்க அவர் நோக்கம் கொண்டிருக்கிறார் (யோவான் 10:10). அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு... இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலம் நாமும் உண்டாயிருக்கிறோம் (1 கொரி. 8:6).

## யார் எதைச் சேர்ந்தவர்?

மனமாற்றம் பெறாத அனைத்து மக்களும் இவ்வுலக இராஜ்ஜியத்தின் குடிமக்களாவர். பிறப்பினாலே அவர்கள் இந்த இராஜ்ஜியத்தின் உறுப்பினர்கள் என்னும் உரிமையைப் பெற்றுள்ளனர். அவர்கள் இந்தப் பூமியில் வாழ்கிறவர்கள். அதாவது இந்தப் பூமியே அவர்களது வீடாயிருக்கிறது. சங்கீத எழுத்தாளன் அவர்களைக் குறித்து, “இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலக மக்கள்” என்று வர்ணிக்கிறான் (சங். 17:14). அவர்கள் உலகத்தைச் சிநேகிக்கிறதால் உலகம் அவர்களைச் சிநேகிக்கிறது (யோவா. 15:19).

ஒருவன் மறுபடியும் பிறக்கிறபோது, அவன் முதலாவது இராஜ்ஜியத்திலிருந்து இரண்டாவது இராஜ்ஜியத்திற்குக் கடந்து செல்கிறான் (யோவன் 3:3,5). இவ்வாறு கடந்து செல்வதைத் தண்ணீரில் பெறும் ஞானஸ்நானம் சித்தரிக்கின்றது. இன்னும் அவன் இவ்வுலகில் வாழ்கிறவனாக இருந்த போதிலும், இவ்வுலகத்திற்குரியவனல்லன் (யோவா. 14:18; 17:11). அவன் இவ்வுலகில் அந்நியனும், பரதேசியுமாயிருக்கிறான் (1 பேதுரு 2:11). இவ்வுலகின் வழியாகப் பயணம் மேற்கொண்டு, தனது பரலோக வீட்டை நோக்கிச் செல்கிறான். ஆயினும், அப்பயணத்தில் உலகத்திற்குரிய எந்தக் குணத்தையும் தன்னகத்தே சேர்த்துக் கொள்வதில்லை. மாறாக, உலகத்தில் அன்புகூருகிறவன் தேவனுக்கு விரோதியாயிருக்கிறான் என்பதை அவன் அறிந்தபடியினாலே, உலகத்தில் அன்புகூருகிறதில்லை (1 யோவா. 2:15). மேலும், உலகத்தால் பகைக்கப்படுவதை வேண்டுமென்றே தெரிந்துகொள்கிறான் (யோவா. 15:18,19; 17:14; 1 யோவான் 3:13). உலகம் தன்னை இறுக்கி அதற்கு ஏற்றாற்போல தான் மாற்றம் அடைவதற்கு அவன் இடங்கொடுப்பதில்லை. உண்மையான பொருளில் பார்க்கிறபோது அவன் உலகத்தோடு ஒத்துப்போகிறவனில்லை என்றே கூற வேண்டும் (ரோமர் 12:2). அவன் உலகோடு உடன் வாழ்பவனாகவோ, அதில் நட்பு பாராட்டுகிறவனாகவோ இல்லாது, அதனுடன் பகைமையே கொண்டிருக்கிறான். அதன் கிரியைகள் அனைத்தும் பொல்லாங்கானவையாக இருக்கின்றன என்று அதற்கு எதிராகச் சாட்சி பகர்கிறான் (யோவான் 7:7). எனினும், இவ்வுலகிற்கு நற்செய்தியை வழங்குகிறான். உலகின் அடிமைத்தனத்திலிருந்து எவ்வாறு மனிதர்கள் விடுதலையடைய முடியுமென்பதையும், கிறிஸ்துவில் உண்மையான விடுதலை உண்டு என்பதையும் அவன் பறை சாற்றுகிறான் (2 கொரி. 5:18-21).



இவ்வுலகம் கவர்ச்சிமிக்கதும், மயக்குகிறதும், பாவம் செய்யத் தூண்டுகிறதாகவும் இருக்கிறது. சில கிறிஸ்தவர்களை அது கவர்ந்து கொள்கிறது. அதனை விடுத்து முற்றிலுமாகப் பிரிந்து வாழ்வது அனுகூலமற்றது என அவர்கள் கருதுகின்றனர். ஆகவே அவர்கள் மதிற்மேல் பூனைபோல் வாழ்கின்றனர். அதன் காரணமாக இரண்டு இராஜ்யங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளும் மங்கிக் காணப்படுகின்றன. “நான் சபையைக் காண விழைந்தேன், அதனை உலகினில் கண்டேன்; உலகைக்காண விழைந்தேன், அதனைச் சபையில் கண்டேன்” என்று ஒருவர் கூறியதன் காரணத்தை இது விளக்குகிறது. வேர்ட்ஸ்வொர்த் என்பார், “இந்த உலகம் மிக அதிக அளவில் நம்முடன் ஒட்டிக்கொண்டு இருக்கிறது. மிக விரைவில் நம்மிடம் வந்துவிடுகிறது. நேரம் கடந்தாலும் நம்மோடு இருக்கிறது. இந்த உலகைப் பெற்றுக்கொள்வதற்கும், இதற்காகச் செலவு செய்வதற்கும் நமது சக்தியை வீணாக்கிக்கொண்டிருக்கிறோம்” என்று இதனை விளக்குகிறார்.

தேவனுடைய பிள்ளையாக இருக்கிறவன் இவ்வுலகோடு தோழமை கொள்ள விரும்புகிறான். தேவனும் அவன் அவ்வாறு செல்வதற்கு விட்டு விடுகிறார். அதன் பிறகு ஏற்படும் கசப்பான அனுபவத்தினாலே உலகம் வெறுமையானது என்பதை அவன் உணர்கிறான். உலகின் புறத்தோற்றத்தைக் கண்டு அவன் ஏமாந்துபோகிறான். அதன் இன்பங்கள் ஆழமற்றவையாகவும், தற்காலிகமானவையாகவும் இருக்கின்றன. அவற்றால் நிலையான திருப்தியளிக்க இயலாது. அந்த இன்பங்கள், அனுபவிக்கிறதற்கு முன்னர் இன்பமானவைகளாகத் தோற்றமளிக்கும். அனுபவித்த பின்னரோ கசப்பாகத் தோன்றும்.

“உடைந்துபோன நீர்த்தொட்டியில் நீர் அருந்த விரைந்தேன்.
கர்த்தாவே, அங்கே தாகம் தீர்க்க நீரில்லை. குனிந்து பருகிவிட

நினைத்தேன். ஆனால் இருந்த நீரும் ஒழுகி விட்டது. வெட்கமும்
தலை குனிவும் என்னைச் சூழ்ந்து கொண்டன"

என்று உலக இன்பத்தைக் குறித்து ஒருவர் பாடுகிறார்.

## இந்த உலகில் என்ன இருக்கிறது?

அப்போஸ்தலனாகிய யோவான் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் உலகத்திலுள்ளவைகள் என்று எடுத்துரைக்கிறார் (1 யோவான் 2:16). இந்த உலகம் காமம், வெறி, தீவிரவாதம், போர், ஐசுவரியம், சமுதாய மேன்மை, அதிகாரம் ஆகியவற்றில் மேன்மை பாராட்டுகிறது. இவ்வுலகினர் தற்காலத்திற்காக வாழ்கின்றனர். அவர்கள், வரப்போகும் நிலைபேறான வாழ்வைக் கருதுவதில்லை. அழிந்துபோகிறவைகளுக்காகவே வாழ்கின்றனர். மக்களுக்காக வாழ்கிறதில்லை. தனக்காக வாழும் மனிதன் தேவனுக்காக வாழ்கிறதில்லை. அவர்களுடைய திட்டங்கள் அனைத்தும் கல்லறையில் முடிவடைந்துவிடுகின்றன.

கிறிஸ்தவனின் மேன்மை பாராட்டல் வித்தியாசமானது. இச்சையினால் அல்ல, அன்பினால் சித்தரிக்கப்படுகிறான். வெறி கொண்டவனாக அல்ல, தூய்மையினால் நிறைந்திருக்கிறான். முரண்பாடோடல்ல, உடன்பாட்டில் செயல்படுகிறான். அவன் தூய ஆவியானவருக்குள்ளான நீதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் வலியுறுத்துகிறான் (ரோமர் 14:17). கண்களின் இச்சைக்குப் பதிலாக, விசுவாசத்தின் விருப்பத்திற்கு இணங்குகிறான். மாம்சத்தின் இச்சைக்கு மாறாக, ஆவியின் விருப்பங்களுக்குத் தன்னை ஒப்புவிக்கிறான். ஜீவனத்தின் பெருமைக்கு மாறாக தேவனின் மகிமையை நாடுகிறான்.

## உலகினைச் சார்ந்து ஜீவிப்பது என்பது யாது?

கடந்த நாட்களில் புகைபிடித்தல், மது அருந்துதல், நடனமாடுதல், சீட்டு விளையாடுதல், திரைப்படம் பார்த்தல் போன்றவை மட்டுமே உலகத்தைச் சார்ந்தவையென்று சொல்லக்கூடிய நிலையிருந்தது. ஆனால், அதன் ஊசல் மறுபக்கம் சென்றுவிட்டது. "நான் குடிப்பதில்லை, புகை பிடிப்பதில்லை, போதைப் பொருட்களை மெல்லுவதில்லை, பெண்களோடு பழக்கமில்லை" என்று பலர் கணீரென்ற ஓசையுடன் சொல்வது அந்தத் தடைகளை நகைப்பிற்கிடமாக்கி விட்டது. இவைகளை மட்டுமே உலகிற்குரியன என்று நாம் குறிப்பிடுவதில்லை என்பது உறுதி. எந்தச் செயலிலும் தவறான மனப்பான்மை, உள்நோக்கங்கள், தவறான சிந்தனைகள் இருப்பின் அவையனைத்தையும் தவிர்க்க வேண்டும். இதன் காரணமாக எர்வின் லுட்சர் என்பார், "கிறிஸ்தவர்கள் பலர் குறிப்பிட்ட சில பாவங்களை மட்டும் செய்யலாகாது எனக்கூறுவர். தங்களைப் புதிய ஏற்பாட்டிற்கேற்பத் தகுதி படைத்தவர்களாக உயர்த்திக் கொள்வதற்காக அப்படி அவர்கள் சொல்லுவதில்லை. தங்களது தகுதியை அந்த அளவிற்குக் குறைத்துக் கொள்வதற்காகவே அவ்வாறு சொல்லுகிறார்கள். சில இன்பங்களை, ஒருவேளை சிற்றின்பங்களையும் இழந்துவிடுவோம் என்று அவர்கள் ஐயம் கொண்டு பழைய தடைகளைத் தவறான நோக்கோடு குறை சொல்கின்றனர். மணற்பாங்கான இடத்தில் வழுவிப் போகிறதுபோல, ஒழுக்கங்களைக் குறித்த அவர்களது பற்றுறுதி அவ்வப்போது மாறிக் கொண்டிருக்கும்."



## எந்த உலகம்?

இந்த உலகில் பலவித அமைப்புகள் உள்ளன. அரசியல் உலகம் முற்றிலும் நேர்மையற்றதாகும். தொழில் உலகம் நெறிசாரா முறைகள் நிறைந்து காணப்படுகிறது. சமய உலகம் இயேசு நாதரின் இரத்தத்தினால் தமது கரங்களைக் கறைப்படுத்திக்கொண்டுள்ளது. கலை, இசை, நாகரிகம் ஆகியவற்றின் உலகில் கிறிஸ்துவின் நாமம் நிராகரிக்கப்பட்டுக் காணப்படுகிறது. காரணம் அந்த நாமம் அவர்களுக்குத் தடுமாற்றத்தை விளைவிக்கிறது. களியாட்ட உலகம் அருவருப்பு நிறைந்ததாகவும், பாலுணர்வு மேலிடச் செய்யும் சாடைப் பேச்சுடையதாகவும், இரண்டு அர்த்தமுள்ள பேச்சுக்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. ஹாலிவுட், தொலைக்காட்சி ஆகியவை இந்த உலகைப் பல்வகை வர்ணங்களிலே படமாக வரைந்து காட்டுகின்றன.

ஒரு விசுவாசி எவ்வாறு உலகின் பலவகை அமைப்புகளை எதிர்கொள்வான்? இயேசு கிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ எவரும் அரசியல் உலகில் ஈடுபடவில்லை என்பதை நினைவுகூர்வானாக. "என் இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கர்த்தர் சொல்லவில்லையா? நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது என்று பவுல் நமக்கு ஞாபகமூட்டுகிறார் (பிலி. 3:20). அரசியல் மனிதனுடைய பிரச்சனைகளுக்குப் பதில் அல்ல. கிருபையினால் மீட்பு உண்டாகிறது என்னும் நற்செய்தி அதற்கு விடையாயிருக்கிறது.

தொழில் உலகிலிருந்து தேவனுடைய மக்கள் முற்றிலும் பிரிந்து வாழ முடியாது. "உலகத்தை அனுபவிப்பவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவிக்கக்கூடாது" என்று பவுல் ஞானமாய் அறிவுரை வழங்குகிறார் (1 கொரி. 7:31). தண்டில் சேவகம் பண்ணுகிறவர்களாகிய நாம், பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது (2 தீமோ. 2:4).

சமய உலகம் என்று நாம் பேசுகிறபோது, வேதத்தில் காண்கிற கிறிஸ்து அற்ற சமயத்தையே நாம் குறிப்பிடுகிறோம். ஸ்தாபிக்கப்பட்ட சமயக் கூட்டமைப்புகளிலிருந்து, நிந்தையைச் சுமந்தவர்களாகப் பாளயத்திற்குப் புறம்பே கிறிஸ்துவை நோக்கிச் செல்வதே கிறிஸ்தவனின் தகுதியாக இருக்கிறது (எபி. 13:11-14).

நாகரிகம், கலை, இசை ஆகியவற்றின் உலகத்தை எண்ணிப் பார்க்கிற

போது, எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழ வேண்டும். நாகரிகத்தின் மையம் என்று கருதப்பட்ட அத்தேனே பட்டணத்திற்குப் பவுல் சென்றபோது அதன் நாகரிக மேம்பாட்டைக் கண்டு கிளர்ச்சி அடையவில்லை. மாறாக, அதன் சிலை வணக்கம் அவரை ஆழ்ந்த வருத்தத்திற்குட்படுத்தியது. அந்த வருத்தம் அவரை மார்ஸ் மேடைக்கு அழைத்துச் சென்று, இரட்சிப்பின் நற்செய்தியைப் பறைசாற்றும்படி ஏவினது (அப். 17).

களியாட்டு உலகத்தைக் குறித்து நாம் என்ன சொல்வோம்? களியாட்டங்கள் மக்களை நரகத்தின் பாதையில் அல்லவா வழி நடத்துகின்றன? வாழ்க்கை என்பது இதுதானா? ஹாலிவுட் திரை உலகு ஊறுவிளைவிக்காமலா இருக்கிறது? தொலைக்காட்சி பரிசுத்தத்தை வலியுறுத்துகிறதா? நடன அரங்குகள் ஆவிக்குரிய மேன்மை கொண்டதாக இருக்கின்றனவோ? அருவருப்பும் குப்பையுமாகிய இவைகளை உட்கொள்கிற எவனும் தேவனுக்குச் சரித்திரம் படைக்க இயலாது என்பது மாயமற்ற உண்மையாக இருக்கிறது.

மேற்கூறியவைகளினின்று அப்பாற்பட்ட ஸ்தானத்தை ஒரு சீஷன் தனக்கென்று கொண்டிருக்க வேண்டும். பூமியை நெம்புகோலினால் அசைக்கும்படி அதற்கான ஆதார ஸ்தானத்தை அதற்கு வெளியே கண்டுபிடிப்பேனாகில், அதனை அசைத்துவிடுவேன் என்று ஆர்கிமிடிஸ் கூறினான். கிறிஸ்தவனுக்கு அது பொருந்துகிறது. அவன் உலகினின்று பிரிந்து வாழ்பவனாக இருப்பின் உலகை அசைக்கிறவனாக இருப்பான்.

## இருவகை ஞானம்

அடுத்து, உலக ஞானம் தேவ ஞானத்திற்கு எவ்வகைகளில் விரோதமாயிருக்கிறது என்பதனைக் காண்போம். எளிதில் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக அதன் விளக்கங்களைப் பட்டியலிட்டுக் கீழே தருகிறோம்.

| உலக ஞானம் | தேவஞானம் |
|---|---|
| நீங்கள் காண்கிறதிலும், தொடுவதிலும், கையாளுகிறதிலும் உண்மையைக் காண முடியும். | காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள். ஆவிக்குரியவைகளே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் (2 கொரி. 4:18). |
| மனிதனுடைய மனதிலும், அறிவிலும் ஞானம் காணப்படுகிறது. | கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (சங். 111:10). |
| எஜமானனும், பிரபுவுமாக இருந்து ஊழியம் கொள்வது மேன்மையானது. | தாழ்மையான ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதும், பணிவிடை செய்வதும் மேன்மையானது (லூக். 22:26,27). |
| ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாகரிகம் என்று ஏற்றுக்கொள்ளப்படுவதே சத்தியம். | ஒன்றைக் குறித்து தேவன் சொல்லுகிறதே சத்தியம் (யோவா. 17:17). அது மாறாதது. |
| அளவில் பெரியதும், எண்ணிக்கையில் அதிகமானதும் இலக்கு என்று கருதப்படுகிறது. பெரியதே அழகு. | குறைவானவர்களும், மீதியானவர்களும் பலவீனர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். (கிதியோனின் படை வீரர்களைக் காண்க.) (நியா. 7:1-7). |
| தனக்காக வாழ், தனக்கு உண்மையாக இருக்க வேண்டும். தனக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். | கிறிஸ்துவிற்காகவும், நற்செய்திக்காகவும் ஜீவனைக் கொடுக்க வேண்டும் (மாற்கு 8:35). தம்மைக் காட்டிலும் மற்றவர்களை மேன்மையாகக் கருத வேண்டும் (பிலி. 2:3). மற்றவர்களுக்காக வாழ். |
| தலைமைப் பதவி, முக்கியத்துவம், புகழ்ச்சி, சமுதாய உயர்வு, கீர்த்தி ஆகியவற்றை அடைதலே வெற்றி என்று கருதப்படுகிறது. | தன்னைத்தான் வெறுமையாக்கித் தாழ்மையின் பாதையில் செல்வதே சீஷத்துவமாகும் (பிலி. 2:7). |
| உடைமைகளைச் சேர்ப்பதினால் ஐசுவரியம் பெருகும். | ஆன்மீக வளர்ச்சியே உண்மையான ஐசுவரியம். விசுவாசி பரலோகத்தில் தன் பொக்கிஷத்தைச் சேர்க்கிறான் (மத். 6:20). உடமைகளின் மிகுதியினாலின்றி, ஆவிக்குரிய பொக்கிஷங்களினாலும், அவனுடைய தேவைகள் மிகக் குறைவாக இருப்பதினாலும் ஐசுவரியவான் என்றழைக்கப்படுகிறான். எல்லாவற்றையும் இழப்பதனால் எல்லாவற்றையும் அடைந்தவனாயிருக்கிறான். |
| காண்பதே நம்பிக்கை, உலகத்தின் மனிதன் தரிசித்து நடக்கிறான். | நம்புகிறதைக் காண்கிறான். தேவனுடைய பிள்ளையாக இருக்கிறவன், தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறான் (2 கொரி. 5:7). |
| முடிவே செயல் வழிமுறையை நீதியென்று நிரூபிக்கிறது. | எது நீதியானதோ அதையே செய். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படி, விளைவை அவரிடம் விட்டுவிடு (அப் 5:29). |

உலக ஞானத்திற்கும், தேவ ஞானத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் குறித்துப் பவுல், "எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று ... நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது" என்று எழுதியிருக்கிறார் (1 கொரி. 1:21, 23-25).

## இரு இராஜ்ஜியங்களில் செயல் வழிமுறைகள்

இரண்டு இராஜ்ஜியங்களின் ஞானங்களும் ஒன்றுக்கொன்று இத்தனை வேறுபாடுகள் உடையதாக இருப்பின், அவற்றின் செயல் வழிமுறைகளும், திட்டங்களும் முரண்பாடுள்ளவைகளாகவே இருக்க வேண்டும். சில முரண்பாடு களைக் கீழே தருகிறோம்.

| உலகத்தின் வழி முறை | கிறிஸ்துவின் வழிமுறை |
|---|---|
| உங்களுக்கு உதவுகிறவர்களுக்கு உதவுங்கள். | திரும்பச் செலுத்த இயலாதவர்களுக்கு உதவுங்கள் (லூக். 14:12-14). |
| பழிக்குப் பழிவாங்கு. | தீமைக்குப் பதிலாக நன்மை செய்யுங்கள் (ரோமர் 12:20; 1 தெச. 5:15). |
| தேவையானபோது வன்முறையைக் கையாளு. | மறுகன்னத்தைக் காட்டு (லூக்கா 6:27,29). |
| ஆசைக்கேற்ப பகிர்ந்துகொடு, | தேவைக்கு ஏற்ப பகிர்ந்துகொடு (மத். 20:1-16). |
| தீவிரமான உழைப்பு, லஞ்சம், நேர்மையற்ற தன்மை ஆகியவற்றால் தடைகளை வெற்றிகொள்ள வேண்டும். | எப்பொழுதும் நீதியைச் செய்வாயாக (1 யோவான் 2:1). அதற்கு மாறாக உடன்படவோ, நேர்மையற்ற முறையைக் கைக்கொள்ளவோ கூடாது. |
| போட்டியிடுதலே வாழ்க்கையென்னும் விளையாட்டு | கொள்கையை விட்டுக்கொடுக்காது உதவி செய்தலும், ஒத்துழைப்பதும் வாழ்க்கையின் வழி முறையாகும் (1 கொரி. 12:25). |



## எவ்வகை ஆயுதங்கள்

துப்பாக்கிகள், பீரங்கிகள் ஆகியவை மட்டுமே உலகத்தின் ஆயுதங்களாகக் கருதப்படுவதில்லை, பணம், கொள்கை விளக்கங்கள், விளம்பரங்கள், மக்களை மாற்றும் தத்துவங்கள், நேர்மையற்ற முறைகேடுகள் யாவும் உலகத்தின் ஆயுதங்களாகும். ஆனால் தேவனுடைய வார்த்தை, ஜெபம், அன்பு ஆகியவையே விசுவாசியின் ஆயுதங்களாகும். அவை அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாக இருக்கின்றன (2 கொரி. 10:4).

## எவ்வகை மேன்மைகள்

உலகத்தில் மேன்மைகளாகக் கருதப்படுகிறவை யாவை என இப்பொழுது காண்போம். அவை எவ்வாறு தனது குடிமக்களை ஊக்குவித்து, செயலாக்கம் உடையவர்களாக மாற்றுகின்றன? இவ்வுலகம் விருதுகளாலும், பட்டங்களாலும், பட்டயங்களாலும், பதக்கங்களாலும், கிரீடங்களாலும், சீருடைகளாலும், பதவிகளாலும் தன் குடிமக்களை ஊக்குவிக்கிறது. ஒரு சமயம் நெப்போலியன், "பலவர்ண ரிப்பன்களைக் கொண்டு என்னுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவேன்" என்றான். எத்தனை ஆச்சரியம்! கடைக்குச் சென்று சில்லரை நாணயங்களைக் கொடுத்துப் பலவர்ண நாடாக்களை வாங்கிவிடலாமே. வர்ண நாடாக்களினாலான விருதுகளைப் பெறுவதற்காக ஆடவரும் பெண்டிரும் இருபத்தாறு மைல் ஓடுவதற்கும் ஆயத்தமுடையவராயுள்ளனர். இவை உதிர்ந்துபோகிற இலைகள். இவையே உலகத்தின் மேன்மைகள்.

பவுல் கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் மேன்மைகளைக் கிரீடம் என்று கூறுகிறார். மேலும், கிறிஸ்தவர்கள் அழிவில்லாத கிரீடத்தை நாடுகிறார்கள் என்றும் உரைக்கிறார் (1 கொரி. 9:25). நீதியின் கிரீடத்தையும், ஜீவ கிரீடத்தையும், மகிழ்ச்சியின் கிரீடத்தையும், மகிமையின் கிரீடத்தையும் அடைவதற்காக விசுவாசிகள் திருமறை எழுத்துகளால் போராடும்படி ஊக்குவிக்கப்படுகின்றனர். மனுஷர் முன்பாகக் கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிறவனை, கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு முன்பாகவும், தேவதூதர்களுக்கு முன்பாகவும் அறிக்கை பண்ணுவார் (மத். 10:32; லூக். 12:8). "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று நமது இரட்சகர் தருகிற நன்மதிப்பைக் காட்டிலும் மேன்மையான நன்மதிப்பு உண்டோ? (மத். 25:21,23) அதனால் விசுவாசி ஆனந்த கீதம் பாடுகிறான்:

மண்ணின் புகழும் மாந்தரின் மிடுக்கும்
விண்ணில் சேரா தழியும் வீணாய்,
பன்னருங் கதையைப் பாங்குடன் கேட்டேன்
மன்னிய பேற்றினை மகிழ்வுடன் பெற்றேன்.

நிறைபுகழ் வேந்தன் தருவீர் ஓரிடம்
குறையற்ற வாழ்வினைச் சிறப்பாய் அடைவேன்
மறையவர் இயேசுவைக் கண்ணுற்றே களிப்பேன்
இறையவர் இருப்பிடம் நிலையாய் உறைவேன்.

**யார் சீரான குடிமகன்**

செல்வமும், பெருமையும், இறுமாப்பும் நிறைந்த மனிதன் தன்னைச் சீரான குடிமகன் என்று இவ்வுலகில் பறைசாற்றுகிறான். ஆனால், கிறிஸ்தவ இராஜ்ஜியத்தில் அவ்வாறன்று. ஆவியில் எளிமையுள்ளவனும், துயரப்படுகிறவனும், இருதயத்தில் சுத்தமுள்ளவனும், சமாதானம் பண்ணுகிறவனும், நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவனுமே சீரான குடிமகன் ஆவான் (மத் 5:3-12). இயேசு நாதர் அற்பமானவர்களுக்காகவும், பின்தங்கியவருக்காகவும், தாழ்ந்தவருக்காகவும், வறியவருக்காகவும், ஒன்றுமில்லாதவருக்காகவும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் (1 கொரி. 1:27-29; யாக். 2:5).

**முடிவுரை**

இந்தப் பொல்லாத உலகிலிருந்து நம்மை விடுவிப்பதற்கெனக் கிறிஸ்து சிலுவையில் மரித்தார் (கலா. 1:4). நாம் இந்த உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறோம்; இந்த உலகமும் நமக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது (கலா. 6:14). அந்தச் சிலுவையே நமக்கு எல்லா மகிமையுமாக இருக்கிறது.

இந்த உலகம் நமது இரட்சகருக்குச் சிலுவையையும், கல்லறையையும் தவிர வேறொன்றையும் தரவில்லை. ஆகவே இத்தகைய உலகச்சூழலில் நாம் சுகமாக வாழ விரும்புவதை தேவன் தடைசெய்வாராக.

> "நாம் இவ்வுலகில் அந்நியராய் இருக்கிறோம். நமது இரட்சகருக்குக் கல்லறையைத்தந்த இந்த மண்ணில் நாம் ஒரு வீட்டை நாட மாட்டோம். அவருடைய சிலுவை இந்நிலத்தோடு நமக்கிருந்த பற்றுதலை அறுத்துவிட்டது. அவரே ஒளிமிகுந்த இடத்தில் நமது பொக்கிஷமாக இருக்கிறார்"

என ஜேம்ஸ் ஜி. டெக் என்பார் கூறியிருக்கிறார்.

இந்த உலகம் தேவனுடைய சாபத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. உலகமும், அதன் இச்சையும் ஒழிந்துபோம் என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறியிருக்கிறார். அதனோடு, டோனால்டு க்ரே பான்ஹவுஸ் ஞானமாய் எழுதியுள்ளார். "இந்த உலகில் எவ்வித அக்கறையும் நாம் கொள்ளலாகாது. ஏனெனில், இது சாபத்திற்குட்பட்டது, அழிவிற்கென ஆண்டவரால் நியமிக்கப்பட்டது. நமது வாழ்க்கையின் கொள்கைகள், கோட்பாடுகள் செயலாக்க



வழிமுறைகள் ஆகியவற்றை இவ்வுலகத்திற்குரிய முறைகளோடு கலப்படம் செய்து களங்கப்படுத்தக்கூடாது."

"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (யோவான் 2:17).

நாம் பரலோக வாசிகளாக வாழ வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நாம் உலகத்தில் இருப்பினும், உலகத்திற்குரியவர்களல்லர் என்பதே அடிப்படைக் கொள்கையாகும். இன்னும் ஒரு பொருள்பற்றி கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். பாவத்தின் தன்மையும், உண்மையான மனம் திரும்புதலும் என்பதே அப்பொருள். சமுதாய ஒழுங்கு என்னும் பாட வகுப்பறையிலிருந்து, உடல் உறுப்புகளைக் குறித்துப் படிக்கும் வகுப்பறைக்குச் செல்வோம்.

●

# 13

# பாவத்தின் கூறுகளும் மனம் வருந்துதலும்

பாவம் என்பது யாது? தேவனுடைய நிறைவிற்குக் குறைவுடைய யாவும் பாவமே. அது ஒரு செயலாகவோ, பேச்சாகவோ எண்ணமாகவோ அல்லது நோக்கமாகவோ இருக்கலாம் (ரோமர் 3:23). தேவனுடைய சித்தத்தை மீறுகிற செயல் அனைத்தும் பாவமே. தவறு இழைக்கிறது மட்டுமே பாவம் என்று சொல்ல முடியாது. நாம் அறிந்தும் நன்மை செய்யவில்லையென்றால் அதுவும் பாவமாகும் (யாக். 4:17). ஒரு செயலைக்குறித்து உண்மையான ஐயம் கொண்டிருந்தும் அதனைச் செய்வோமெனில் அது பாவமாகும் (ரோமர் 14:23). தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கும் மனிதனுடைய கட்டுப்பாடற்ற சித்தம் பாவமாகும் (1 யோவான் 3:4).

இப்பிரபஞ்சம் முழுவதும் பாவமாயிருக்கிறது. "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை" (பிர. 7:20).

பாவம் உளப்பாங்கானது. எல்லாரும் துர்க்குணத்தில் உருவானவர்கள், பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டவர்கள் (சங். 51:5).

பாவம் ஊடுருவிப் பரவக்கூடியது. மனிதன் முற்றிலும் சீர்கெட்டவனாக இருக்கிறான். அது அவனுடைய ஒவ்வொரு உறுப்பையும் பாதித்துள்ளது. (ரோமர் 3:13-18). வேதத்தில் சொல்லப்பட்ட எல்லாப் பாவங்களையும் ஒருவன் செய்திரா விட்டாலும், அவற்றைச் செய்யத் திறம்படைத்தவனாக இருக்கிறான்.

பாவம் சிந்தையிலே பிறக்கிறது (யாக். 1:13-15). ஒருவன் தனது சிந்தனை வாழ்க்கையில், எந்த ஒரு மனிதனின் கண்களும் பின்தொடராதபடி, பொல்லாங்கின் அனைத்துத் திக்குகளிலும் பாய்ந்து சென்று அலைந்து திரியலாம். ஒரு பாவத்தை ஒருவன் எவ்வளவாகச் சிந்தித்து, அதை இனிப்புப் பண்டத்தைப் போல சுவைப்பவனாக இருக்கிறானோ, அவ்வளவு எளிதாக அப்பாவத்தில் வீழ்ந்துவிடக் கூடியவனாக இருக்கிறான்.



பாவம் தேவனுக்கு விரோதமாக இருப்பதால் நாம் மிகுந்த எச்சரிப்புடன் இருக்க வேண்டும் (சங். 51:4). மனுக்குலம் அடைகிற துன்பமும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவையில் அடைந்த துன்பமும், இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்தில் அடையப்போகிற துன்பமும் பாவத்தைக் குறித்து அசதியாயிருக்கக்கூடாது என்பதை நமக்கு அறிவிக்கின்றன.

பாவம் அடிமைப்படுத்துகிறது (ரோமர் 6:15,16). அது இச்சை, பேராசை மற்றும் அனைத்துப் பொல்லாங்கான பழக்கங்கள் ஆகிய சங்கிலிகளால் அடிமைப் பட்டவர்களைக் கட்டி வைக்கிறது.

பாவம் வஞ்சிக்கக்கூடியது. அது இன்பத்தை அளித்தாலும், அவ்வின்பம் நிலையான திருப்தியளிப்பதில்லை. தண்டனையிலிருந்து ஒருவர் தப்பித்துக் கொள்ளும்படியான உபாயத்தைப் பாவம் எதிர்த்து நிற்கிறது. எனினும் அது மீட்பை உண்டுபண்ணுகிறதில்லை. அந்தப் பாவம் எதிர்பார்க்கிறதற்கு இன்ப மாகவும், முடிவிலே அருவருப்பாகவும் இருக்கிறது.

பாவம் குருடாக்கும் தன்மையுடையது. மற்றவர்களிடம் காணும் பாவம் நமக்கு எளிதில் புலப்படும். ஆயினும் நம்மிடத்திலிருக்கும் பாவம் நமக்குத் தெரிவதில்லை. நம்மிடத்தில் மதிப்பிற்குரியதாய்க் காணப்படும் அதே செயல், மற்றவர்களிடத்தில் வெறுக்கத்தக்கதாய்க் காணப்படும். நம்மைக் காட்டிலும் தாழ்வான ஒருவரோடு ஒப்பிட்டு நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொள்வோம். நம்முடைய சீர்கேடான நிலையில் இப்படிப்பட்ட சிந்தனை நம்மை ஆறுதல் படுத்தும்.

பாவம் உள்ளத்தைக் கடினப்படுத்துகிறது. நாம் ஒரு பாவத்தை முதன் முதலில் செய்கிறபோது, நம்முடைய மனச்சாட்சி நம்மை எதிர்த்து நின்று குற்றப்படுத்தும். நாம் அந்தப் பாவத்தைத் தொடர்ந்து செய்வோமானால், நம்முடைய மனச்சாட்சியின் குரல் ஒலியிழந்து போகும். காலம் செல்லச்செல்ல அப்பாவத்தை மிகச் சுலபமாகச் செய்கிறவர்களாகக் காணப்படுவோம். அது நம் உள்ளத்தை உறுத்தாது. நம் நினைவில் நிற்காத கடந்தகால அனுபவமாகப் போய்விடும்.

பாவம் மற்றவர்கள்மீது பழிசுமத்தும். ஆதாம் வீழ்ந்துபோனபோது தேவன் மீதும், தன் மனைவியின் மீதும் பழி சுமத்தினான். "....என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள்" (ஆதி. 3:12). ஏவாள் பிசாசின்மீது குற்றம் சுமத்தினாள்: "சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன்" (ஆதி. 3:13). இப்பொழுதோ, அவர்களுடைய சந்ததி சூழ்நிலையின்மீதும், பெற்றோர்கள் மீதும், நண்பர்கள்மீதும் பழிபோடுகிறது. எடுத்துக்காட்டாக, விபத்து நேரிட்ட பிறகு காப்பீட்டுக் கழகங்களுக்கு வாகன உரிமையாளர்கள் எழுதித்தரும் விளக்கங்கள் சிலவற்றைக் காணலாம்.

சாலையில் நடந்துவந்தவர் எந்தப்பக்கம் திரும்புவது என்று தெரியாதவராய் நின்றபோது நான் அவன்மீது வண்டியை ஏற்றிவிட்டேன்.

அந்த மனிதன் சாலையில் அங்குமிங்குமாக ஓடினான். அதனால் பலமுறை வாகனத்தைத் திருப்பியும் அவன்மீது இடிக்காமல் வண்டியை நிறுத்த முடிய வில்லை.

சாலையோரத்திலிருந்து வண்டியைச் சாலைக்குத் திருப்பினேன். அப் பொழுது எனது மாமியாரைப் பார்க்கத் திரும்பினேன். அதற்குள்ளாக வாகனம் மறுபக்கத்திற்குச் சென்று மேட்டில் இடித்துவிட்டது.

தொலைபேசிக் கம்பம் என்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. அதன் பாதையிலிருந்து எப்படியாவது வண்டியைத் திருப்பிவிட வேண்டும் என்று முயற்சி செய்தும் அது இடித்துவிட்டது.

கண்டுபிடிக்கக்கூடாதபடி பாவம் மறைந்துபோவதில்லை (எபி. 4:13). மறைமுகமாக இவ்வுலகில் செய்த பாவம் விண்ணுலகில் வெளிப்படையாகக் காணப்பட்டு அவமானச் சின்னமாயிருக்கும்.

பாவம் பெருகக் கூடியதாக இருக்கிறது. அது புளித்தமாவைப் போலச் செயல்புரிகிறது. ஒரு பொய்யை மறைப்பதற்குப் பல பொய்களைச் சொல்ல வேண்டியதாயிருக்கும். ஒருவன் ஒழுக்கக்கேடான செயலைச் செய்துவிட்டு, தனது வாழ்க்கையில் மிகக் கீழான நிலைக்கு ஏற்கனவே சென்றுவிட்டதால், பாவத்தைச் செய்கிறபோது அதைக் குறித்து கவலை கொள்வதில்லை. இது ஒன்றுமில்லை என்று கூறிக்கொள்வான். மனிதர்கள் தங்களுடைய பாவத்தைப் பொறுத்துக்கொள்ளக்கூடியவர்களாய் இருக்கின்றனர். அதனால் ஒருவகைப் பாவத்தைப் பலர் செய்கிறபோது, அது பாவமில்லை என்று கருதப்படும். இவ்விதமாகப் பாவம் பெருகக் கூடியதாய் இருக்கிறது.

குற்றம் செய்யாதவர்களையும் பாவம் துன்புறுத்தும். அடுத்த தலை முறைக்கும் அத்துன்பம் தொடரும். குடிகாரனின் பிள்ளைகள் அவனுடைய துயரங்களில் பங்கடைகிறார்கள். ஒருவரது இரத்தம் மற்றவர்களுக்கு ஏற்றப் படுவதினாலே எய்ட்ஸ் வியாதி குற்றம் இழைக்காதவர்களையும் தாக்குகிறது. போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்ட பெண்ணைத் தாக்கும் நோய் அவளுக்குப் பிறக்க இருக்கும் குழந்தையையும் தாக்கும். ஒருவரும் தனித் திருக்கும் தீவைப்போல இருப்பதில்லை. அவருடைய செயல்கள் நன்மை யானாலும், தீமையானாலும் மற்றவர்களைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

பாவம் இம்மையிலும், மறுமையிலும் விளைவுகளை உண்டாக்கும், இம்மையிலே அது ஒருவரது ஆவி, ஆத்துமா, மனது, சரீரம் யாவற்றிற்கும் ஊறுவிளைவிக்கக் கூடியதாயிருக்கிறது. மறுமையில் மரணத்தையும் நரகத்தை யும் அடையச் செய்யும்.



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பேயல்லாமல், பாவத்திலிருந்து தப்பிக்க வேறு வழியில்லை.

அடுத்து, இஸ்ரவேலின் அரசனாகிய தாவீதின் வாழ்க்கையில் பாவம் எவ்வாறு கிரியை செய்தது என்று காண விழைவோம்.

தாவீது தன் வாழ்க்கையில் அனைத்து நன்மைகளையும் பெற்றிருந்தான். அழகு, செல்வம், புகழ்ச்சி, பதவி, மேன்மை, குடும்பம் நண்பர்கள் என அவனுக்கு எதிலும் குறைவில்லை. அநேகரால் அறியப்படாத நிலையிலிருந்து அரியா சனத்திற்கு உயர்ந்தவன். உண்மையாகவே தேவனிடம் தயை பெற்றவனா யிருந்தான். அவனது எதிர்காலம் வாக்குறுதிகளால் நிறைந்திருந்தது. இந்த உலகம் அவனுக்கு மகிழ்ச்சியின் கூடாரமாக இருந்தது.

ஆனால், அவனோ தன்னைக் கவனமற்றதும், சோம்பலுமான நிலைக்கு உட்படுத்திக்கொண்டான். அரசர்கள் யுத்தத்திற்குப் போகும் காலத்தில், தாவீது தன் வீட்டிலே தங்கி சுகபோகத்திலும், பொழுது போக்கிலும் காலத்தைக் கழித்தான், தனக்குரிய அலுவலில் தன்னைச் சுறுசுறுப்பாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தால், தனக்கு எதிராக ஒளிந்து கொண்டிருந்த ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்க மாட்டான். தனது சரீரத்தை ஒழுங்காகக் காத்துக்கொள்ளாததினால், சாத்தானுக்கு இடங்கொடுக்க வேண்டியதாயிற்று.

சோதனை! தற்காப்பில்லாத தருணத்தில், உப்பரிகையில் உலாவிக் கொண் டிருந்த சமயத்தில் அசாதாரண அழகுள்ள பெண் ஒருத்தி குளித்துக் கொண்டிருந்த காட்சியைத் தற்செயலாகக் காண நேரிட்டது.

உடனடியாக அவனுடைய மனது வேகமாக ஓடத்தொடங்கியது. மனக்கண் முன்னர் கற்பனைப் பெருவெள்ளம் பிரவாகித்தது. அவன் அவளை அடைய விரும்பினான். அவன் அவளை அடைந்தே ஆக வேண்டும். ஏன் அடையக் கூடாது? அது அவனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தருமல்லவா? வாழ்க்கை என்பதன் பொருள் அது தான்!

இருந்தபோதிலும் சுற்றிலும் சிவப்பு விளக்குகள் பிரகாசித்தன. அவனுடைய உள்ளுணர்வு ஓலமிடத்தொடங்கியது. "இல்லை! இல்லை! இல்லை! நீ அதைச் செய்யக்கூடாது. அது பாவம். அது விபசாரம். நிறுத்திவிடு." அவன் தனது வேலைக்காரர்களிடத்தில் அந்தப் பெண்ணை அழைத்துவரும்படிக் கட்டளை யிட்டபோது, அவர்களில் ஒருவன் அவள் தாவீதின் உண்மையுள்ள போர்த் தலைவன் ஒருவனுடைய மனைவி என்று சொல்லித் தடுத்துப் பார்த்தான்.

உள்ளத்தில் போராட்டம் தொடர்ந்தது. எதுசரி, எது தவறு என்ற கேள்விக்கே அங்கு இடமில்லை. தனது மனச்சாட்சியின் சத்தத்திற்கு இடம் கொடுத்துப் பின்வாங்குவதே அறிவுடையதும், ஏற்றதுமான செயல். ஆனால் அவனுடைய

விருப்பம், மனச்சாட்சியைத் தோற்கடிக்கும் அளவிற்கு வலிமையுடைய தாயிருந்தது.

“ஒரு கலயம் கூழுக்காகத் தனது பிறப்புரிமையை விற்றுப் போட்டான்” என்னும் வழக்குச் சொல்லுக்கு ஒப்பான நிலையில் அவனிருந்தான்; எப்படியாவது தான் விரும்பியதை அடைந்தே ஆக வேண்டும். கணப்பொழுது இன்பம் கட்டுக்கடங்காத வேட்கையைத் தூண்டிவிட்டது. வேறு எதுவும் முக்கியமல்ல. சிறிது நேர மன நிறைவுக்காக, தனது மகிழ்ச்சியையும், தனது குடும்பத்தையும், தனது புகழையும் இழக்கத் துணிந்துவிட்டான்.

## பித்துப்பிடித்த நிலை

ஆகவே, தாவீது பித்துப் பிடித்த நிலைக்குப் போய்விட்டான், அவனது வெறித்தன்மை பரிசுத்தத்தின் சத்தத்தை ஒடுக்கிவிட்டது. காரணங்களை ஆராய்ந்து வாதிடும் ஆற்றலைக் காட்டிலும், சரீர இச்சையின் ஏவுதல் கவர்ச்சிகர மாக இருந்தது. வானுலகின் நம்பிக்கையும், நரகத்தின் வேதனையைக் குறித்த அச்சமும் அவனைவிட்டு அகன்றுபோயின. ஒரு கணப்பொழுது காமவெறிக்காக தேவனுடைய கனத்தையும், தனது சாட்சியையும், தனது குடும்பத்தின் மேன்மை யையும், நண்பர்களின் மதிப்பையும், தனது சிறந்த குணநலத்தையும் இழந்து போனான்.

அலெக்ஸாண்டர் மாக்லேரன் என்பார், “நீதியின் மீது அவன் கொண் டிருந்த தாகத்தை அவன் மறந்து போனான், தேவனோடு கொண்டிருந்த நெருங்கிய உறவின் மகிழ்ச்சியை உதறித் தள்ளிவிட்டான், ஆத்துமாவை இருளடையச் செய்துவிட்டான், தனது வெற்றியின் வளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டான்; தனது எஞ்சிய வாழ்க்கை, வீழ்ச்சியின் பாதையில் செல்லும் நிலைக்கு மாற்றிவிட்டான், தொடர்ந்துவரும் சந்ததியாரின் பழிச் சொல்லுக்கு இலக்கானான்; அவன் தழுவிய மதத்திற்கு அவப்பெயருண் டாக்கினான். தான் ஒரு மனிதன், போர்வீரன், அரசன் என்னும் தகுதியுடைய நிலைகளில் அவன் குறைவுடையவனாகக் காணப்பட்டான்” என்று அவனது நிலையை வர்ணிக்கிறார்.

ஏசாவைப் போல ஒரு கலயம் கூழுக்காகத் தன் தலைப் பேற்றுரிமையை விற்றுவிட்டான்.

பாவச்செயலைச் செய்வதற்கு முன் ஒரு பெரிய செயலைச் செய்ய விருக்கிறோம் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. செய்து முடித்த பிறகோ அது பயங்கரமாகக் காட்சியளிக்கிறது. தாவீது தான் தீட்டுப்பட்டதை உணர்ந்தான். தான் செய்த செயல் சரியானதுதான் என்று கருத முற்பட்டாலும், தன் குற்ற உணர்வினால் குத்தப்பட்டான். பாவ உணர்வு அவனுக்கு மிகுந்த கசப்பையே உண்டாக்கியது. மிகச் சாமர்த்தியமாக தனது பாவச் செயலை மூடி மறைக்க முற்பட்டான்.



நிச்சயமாகக் கொல்லப்படும்படி தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான போர்த் தலைவனைப் போர்க்களத்தின் முகப்பில் தனித்து விடும்படிச் செய்தான். அப்படி நடந்தால் பிறக்கப்போகிற குழந்தை இறந்து போனவனின் பிள்ளைதான் என்று எல்லாரும் நினைத்துக் கொள்வார்கள்; பின்னர் அந்த விதவையைத் திருமணம் செய்து கொள்வதற்கு எந்தத் தடையும் இருக்காது என்று எண்ணியவனாக அதன்படி செயலாற்றினான்.

ஒருவரும் உண்மைகளை அறியவில்லை என்று அரசன் நினைத்தான். ஆயினும், தேவன் அனைத்தையும் அறிந்திருந்தார்; கோபம் கொண்டார். அவனை அந்நிலையிலேயே விட்டுவிட அவன்மேல் கொண்ட அவருடைய அன்பு இடங்கொடுக்கவில்லை. அவனது காமச் செயலையும், கொலையையும் குறித்த குற்ற உணர்வு தொடர்ந்து அவனை வாட்டியது. ஆனாலும், தாவீது கட்டிவைக்கப்பட்ட காளையைப்போல முரண்டுபிடித்துக் கொண்டிருந்தான். வெட்கத்திலும், அவமானத்திலும் அவன் தொடர்ந்து உழன்று கொண்டிருந்தா லும், மனம் உடைந்து, கசந்து குற்றத்தை அறிக்கையிட மறுத்தவனாகவே இருந்தான். தற்பெருமையும், பிடிவாதமும் அவனைப் பாவத்தில் நிலைத்திருக்கச் செய்தன.

கடைசியில், தேவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானை ஒரு உவமையைச் சொல்லும்படி அவனிடம் அனுப்பினார். ஒரு வறியவனின் ஒரே ஆட்டுக் குட்டியை அபகரித்துக்கொண்ட செல்வந்தனைப் பற்றிய கதை அது. அக் கதையைக் கேட்ட தாவீது, தனது நீதியின் நிமித்தமாகக் கடுங்கோபம் கொண்டு அச்செல்வந்தன் கொலை செய்யப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினான்.

விரிக்கப்பட்ட வலையில் அரசன் அகப்பட்டுக்கொண்டான். அவனே குற்றவாளி, மற்றவர்களது பாவத்தை எளிதில் கண்டுபிடித்த அவனுக்குத் தனது பாவம் புலப்படவில்லை. செல்வந்தனைக் குற்றம் சுமத்திய அரசன், தன்னையே குற்றம் சுமத்தினான். தன்னைத் தற்காத்துக் கொள்ள இயலாத நிலையில் வாயடைத்துப் போயினன்.

## உண்மையான மனவருத்தமும் திருந்துதலும்.

கடைசியில் அவன் மனமுடைந்து போனான். உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஊற்று பெருக்கெடுத்து வந்தது. அவன் தேவனிடத்தில் தனது பாவ அறிக்கை யையும், மனவருத்தத்தையும் ஊற்றினான். அவனுடைய அறிக்கை 51-ஆவது சங்கீதத்தில் நமக்கென்று பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனை நான் சற்று விவரித்து எழுதுகிறேன்:

> கர்த்தரே இரங்கும்! உமது இரக்கத்திற்காக இறைஞ்சுகிறேன்! நான் தண்டிக்கப்பட வேண்டியவனாக இருக்கிறேன். நீர் நிலைபேறான அன்புகூருகிற தேவனாக இருக்கிறீர். அதனடிப்டையில் என் பாவத்

திற்குத் தக்கதாக என்னை நடத்த வேண்டாம் என்று விண்ணப் பிக்கிறேன். நீர் மிகுந்த இரக்கமுள்ளவர் என்னும் காரணத்தினால் தைரியம் கொண்டவனாக, உம்முடைய தூய்மையான கற்பனை களுக்கு விரோதமாக நான் செய்த பயங்கரமான மீறுதலை என்னை விட்டு நீக்கும்படி விண்ணப்பிக்கிறேன்.

உம்முடைய நேரிய வழியிலிருந்து விலகிச்சென்று நான் ஆற்றிய ஒவ்வொரு செயலுக்காகவும் என்னை முற்றிலும் அழுக்கறக் கழுவித் தூய்மைப்படுத்தும்; நீர் நியமித்த இலக்கை விடுத்துத் தீய பாதையில் சென்ற என்னைப் பாவமறச் சுத்திகரியும்.

என் தேவனே, உம்முடைய கற்பனைகளை நான் மீறி விட்டேன் என்று பகிரங்கமாக அறிக்கை செய்கிறேன். என்னுடைய பாவத்தை வெளிப்படையாய்ச் செய்தேன்; ஆகையால் என்னுடைய பாவ அறிக்கையையும், மனந்திரும்புதலையும் வெளிப்படையாய்ச் செய்கிறேன். என்னுடைய பாவத்தினால் உண்டான குற்ற உணர்வு என்னை இரவும், பகலும் வதைக்கிறது. இனிமேலும் என்னால் எதிர்த்து நிற்க முடியாது.

தேவரீர்! நான் செய்த பாவம் உமக்கு எதிரானது, உமக்கே விரோத மானது என்று உணர்கிறேன். நான் பத்சேபாளுக்கு விரோதமாகவும், அவளுடைய உண்மையுள்ள கணவன் உரியாவிற்கு விரோதமாகவும் பாவம் செய்தேன் என்பதை உணர்கிறேன். தேவரீர்! நான் அந்த மாவீரனுக்கு எதிராகச் செய்த துரோகத்தை மன்னியும். எல்லா வற்றிற்கும் மேலாக அனைத்துப் பாவங்களும் முதலாவதாக உமக்கு விரோதமானவை என்று உணர்கிறேன். உம்முடைய கற்பனையை மீறிவிட்டேன். உம்முடைய சித்தத்தை உதறித்தள்ளிவிட்டேன். உம்முடைய திருப்பெயருக்குக் கனவீனத்தை ஏற்படுத்திவிட்டேன். ஆகவே நானே எனக்கு விரோதமாக, உம்பக்கம் சேருகிறேன். நீர் எனக்குத் தருகிற தண்டனை எதுவாக இருந்தாலும் அது முழுவதும் நீதியுடையதாகும். உம்முடைய தீர்மானங்களில் எவராலும் குற்றம் காண இயலாது.

கர்த்தாவே! நான் நல்லவனல்லன், அக்கிரமத்தில் பிறந்தவன், ஒருபடி பின்னுக்குச் சென்று பார்க்கிறேன். நான் பாவத்தில் கர்ப்பந்தரிக் கப்பட்டவன். இவ்விதமாக நான் கூறுவதால் என் தாயின்மீது எந்தப் பழிச்சொல்லையும் கூறவில்லை; என்னுடைய குற்றத்தை மறைப் பதற்காகவும் அவ்வாறு சொல்லவில்லை. நான் பாவத்தைச் செய்தேன் என்பது மட்டுமல்ல, என்னுடைய சுபாவமே பாவமாகத்தான் இருக்கிறது என்பதுதான் என் வார்த்தைகளின் பொருளாகும்.



ஆனால் தேவரீர், நீர் பாவத்தை வெறுக்கிறீர். மனிதனுடைய உள்ளத்தில் உண்மை வாசம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர். ஆகையால், எனது உள்ளத்தில் ஞானம் ஆழமாகப்பதியும்படி நீர் எனக்குப் போதித்தருளவேண்டி உம்மிடத்தில் வருகிறேன்.

ஒருதொழுநோயாளி தனது நோய்நீங்கி சுத்திகரிக்கப்படுவதற்கு ஈசோப்பையும், ஊற்று நீரையும் பயன்படுத்த வேண்டும் என்று நீர் கட்டளை கொடுத்திருக்கிறீர் (லேவி. 14:1-8). நல்லது, கர்த்தரே, ஒழுக்கக்கேட்டினாலே நான் தொழுநோயாளியைப் போலவே இருக்கிறேன். “நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப் பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப் பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.”

நான் பாவம் இழைத்தபோது என்னுடைய பாடலை இழந்து போனேன். மகிழ்ச்சி, களிகூருதல் ஆகியவை என்ன என்பதை உணர்ந்து அநேக நாட்கள் சென்றுவிட்டன. நான் மீண்டும் மகிழ்ச்சி யின் கீதத்தைக் கேட்கும்படிச் செய்யும்; நான் பின்வாங்கிய நிலையில் இருந்தபோது, என்னுடைய எலும்புகளை நீர் முறித்ததால் நான் முடவனைப் போல இருக்கிறேன். பரிசுத்த பண்டிகையின் நாட்களில் உமக்கு முன்பாக நான் வரத்தடைப்பட்டவனாக இருக்கிறேன். ஆகவே என்னுடைய முறிந்த எலும்புகளைக் குணமாக்குவீராக. அப்பொழுது நான் உமது ஜனங்களோடு சேர்ந்து உமது நாமத்தைத் தொழுதுகொள்வேன்.

என் தேவனே! என்னுடைய பாவங்களை நியாயம் விசாரித்துத் தண்டனை வழங்கும்படி நீர் பார்க்காமல், உமது முகத்தைத் திருப்பிக் கொள்ளும். என்னுடைய மிகுதியான அக்கிரமங்கள் கொஞ்சமும் என்னிடத்தில் இல்லாதபடி நீக்கிவிடும். அவைகளை நான் நினைக்கும் போதெல்லாம் என்னை உருவக்குத்துகின்றனவே!

நான் பின்னோக்கிப் பார்க்கையில், என் உள்ளத்திலேதான் இந்தப் பிரச்சனை தொடங்கியது என்று உணர்கிறேன். என்னுடைய சிந்தனை வாழ்க்கை மாசுபடிந்ததாக இருக்கிறது. நான் பாவத்தைச் செய்யும் வரைக்கும் பொல்லாங்கான சிந்தனையை என்னுள்ளத்தில் வளர விட்டேன். ஆகவே, எனக்குள்ளாக சுத்த மனதை உருவாக்கும்படி வேண்டுகிறேன். நீரூற்று தூய்மையாக இருந்தால் அங்கிருந்து பாய்ந்துவரும் நீரோடையும் தூய்மையாகவே இருக்கும் என்று நான் அறிவேன். ஆம் கர்த்தாவே, பாவம் இனி என்னை அணுகாதபடிக் காத்துக்கொள்ளத்தக்கதாக, என்னுள்ளம் உறுதிப்பட அந்நீரூற்றைப் புதுப்பியும்.

கர்த்தரே, என்னைக் கைவிட்டுவிடாதீர். உம்முடைய சமுகத்தை விட்டு என்னைத் தள்ளிவிடாதீர். உம்மைவிட்டு வெகுதூரத்தில் இருக்கிற நிலையையும், பரிசுத்த ஆவியானவர் என்னிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையையும் என்னால் எண்ணிப் பார்க்க வும் முடியவில்லை. நான் வாழ்கிற இந்த நாட்களில் உமக்குக் கீழ்ப்படியாதவர்களிடமிருந்து உம்முடைய தூய ஆவியானவரை நீர் எடுத்துக்கொள்கிறீர். நீர் அதை சவுலுக்குச் செய்தீர் (1 சாமு. 16:14). அதனுடைய விளைவுகளை எண்ணிப்பார்ப்பதற்கும் நடுங்குகிறேன். கர்த்தாவே, அந்த நிலைக்கு நான் சென்றுவிடாதபடி என்னைத் தப்புவியும்.

நான் ஏற்கனவே சொன்னபடி, நான் என் கீதத்தை இழந்து போனேன். ஆத்துமாவையல்ல, என்னுடைய கீதத்தையே இழந்து போனேன். உம்முடைய இரட்சிப்பையல்ல, இரட்சிப்பின் சந்தோஷத்தையே இழந்துபோனேன். மனவருத்தத்தோடும், பாவ அறிக்கையோடும், பாவத்தை விட்டுவிட்டவனாகவும் நான் இப்பொழுது உம்மண்டை யிலே வருகிறேன். ஆகவே நீர் எனக்கு உமது இரட்சிப்பின் சந்தோஷத் தைத்தாரும். உற்சாகமுள்ள ஆவி என்னைத் தாங்கும்படி மன மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறவனாக ஆக்கும். அப்பொழுது நான் நீதியின் பாதையில் நிலைநிற்பேன்.

நீர் எனக்கு மன்னிப்பை அருளுவதால், உம்முடைய கற்பனைகளை மீறுகிற பிறரிடத்தில் சென்று, மன்னிப்பிற்கும், சமாதானத்திற்கும் உரிய வழியைக்குறித்து ஊக்கமாகச் சான்று பகர்வேன். எனக்கு நீர் செய்ததை அவர்கள் கேள்விப்படும்போது, அவர்களும் உம்மண்டை திரும்பி வருவார்கள்.

நீர் என்னை இரத்தப்பழியிலிருந்து விடுவிப்பீராகில், நீர் தருகிற மீட்பின் சாட்சியை இந்த உலகம் முழுவதும் கேட்கும். உரியாவைக் கொன்ற பழி என்மீது மிகுந்த பாரமாயிருக்கிறது. இரட்சிப்பின் கர்த்தரே, எனக்கு விரோதமாக எழுதப்பட்ட குற்றத்தை நீக்கிவிடும். அப்பொழுது உம்மை நான் எக்காலத்திலும் துதிப்பேன்.

என்னுடைய பாவத்தினால் எனது உதடுகள் கட்டுண்டு போயின. உம்முடைய மன்னிப்பினால் அவைகளை அவிழ்ந்து விடுவீராக. எனது வாய் உமது புகழைப் பேசவும், பாடவும் அதனை உமக்கே அர்ப்பணிப்பேன்.

பாவமன்னிப்பிற்காகச் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், நான் சார்ந்து நிற்கவில்லை. நீர் அவ்விதச் சம்பிரதாயங்களை விரும்பு



கிறவர் அல்லர் என்பதை நான் அறிவேன். நீர் மிருகங்களின் பலியை விரும்புவீர் என்றால், நான் அவைகளைக் கொண்டு வருவேன். ஆனால் தகனபலிகள் உமக்குப் பிரியமானவை அல்லவே. நீர் பலிகளையும், காணிக்கையையும் நிறுவியிருக்கிறீர் என்பது உண்மை தான். ஆனாலும் அவை யாவும் முடிவான பூரணருக்கு பிரதிநிதியாக இல்லை. ஆகவே நான் நொறுங்கிய இதயத்துடன் உம்மிடம் வருகிறேன். அந்தப் பலியைத்தான் நீர் விரும்புகிறீர். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

இப்பொழுது கர்த்தாவே, நான் உமக்குப் பிரியமானவர்களுக்காகவும் எனக்காகவும் ஜெபிக்க விரும்புகிறேன். அவர்கள்மீது நன்மைகளைப் பொழிந்தருளும். எருசலேமின் மதில்களைத் திரும்பக் கட்டுவீராக. என்னுடைய பாவம் உமது கிரியையின் வளர்ச்சியைத் தடைச் செய்துவிட்டது. அதில் எவ்வித ஐயமும் இல்லை. உமது திருப் பெயருக்குக் களங்கம் விளைவித்துவிட்டேன். உம்முடைய சித்தம் தடையின்றி நிறைவேறட்டும்.

எங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவற்றை விடுத்து, உம்முடன் ஐக்கியம் கொண்டவர்களாக நடந்து வருகிற போது, நீர் எங்களுடைய நீதியின் பலிகளில் மகிழ்ச்சியாவீர். உமக்கென்று முற்றிலும் ஒப்புவிக்கப்பட்ட காணிக்கைகள் உமது உள்ளத்தை மகிழ்ச்சியாக்கும். பாவத்தை மன்னித்து அக்கிரமத்தைப் பொறுத்துக் கொண்ட தேவனுக்குப் புகழ்ச்சியாக, உமது பலிபீடத்தில் காளை களைச் செலுத்துவோம். [1]

மேலே சொல்லப்பட்டிருக்கின்ற செய்திகள், பாலுறவுச் சீர்கேடுகளைக் குறித்தும், சுய பாலுறவுச் சீர்கேடுகளைக் குறித்தும் முழுவதுமாகக் கற்றுக் கொள்ள நம்மை வழிநடத்துகின்றன. நம்முடைய சமுதாயம் சிற்றின்பச் சீர்கேடு நிறைந்தது. எனவே அந்தப் பாடத்தை அடுத்து சந்திப்போம். ●

# 14

# ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய தருணங்கள்

எந்தப் போர்க்களத்தில் சாத்தான் பெருமிதம் கொள்ளத்தக்க வெற்றிகளைக் கண்டான்? சிற்றின்பச் சீர்கேடு என்னும் போர்க்கனையால் அவன் பல வெற்றிகளைக் கண்டுள்ளான் என்று திருமறையும், சபையின் சரித்திரமும் கூறுகின்றன. அவன் பயன்படுத்தும் ஆயுதங்களில் அது மிகுந்த வலிமை படைத்தாக இருக்கிறது.

கட்டுக்கடங்கா வெறியினாலே இடறிவிழுந்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக சிம்சோன், தாவீது, சாலமோன் ஆகியோர் காணப்படுகின்றனர். கிறிஸ்தவத் தலைவர்கள் பலர் சுயக்கட்டுப்பாடின்றி, தவறான பாலுறவு கொண்டவர்களாக, கப்பற் சேதத்திற்குக் காரணமாயினர். தேவனுடைய ஊழியத்தைச் செய்யத் தகுதியற்றுப்போய், பரிசுத்தத்தின் நெடுஞ்சாலையில் சிதறிக்கிடக்கும் சடலங்களைப் போல, எறியப்பட்டவர்களாக இருக்கின்றனர். ஆகவே, திருமறை இதைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதை நாம் அறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

தேவன் நமக்குள்ளாகப் பல நாட்டங்களையும், வேட்கைகளையும் வைத்திருக்கிறார். அதில் ஒன்றுதான் சிற்றின்ப வேட்கை. நமக்குள்ளாக எழும் விருப்பங்கள் யாவும் தேவனுடைய ஈவுகளாக இருக்கின்றன. ஆகவே இவைகளும் மற்ற ஈவுகளைப் போலவே நல்லவைகளாக உள்ளன.

தேவனுடைய ஈவுகளை நாம் நன்மைக்கென்றும், தீமைக்கென்றும் பயன்படுத்தலாம். தீயும், நீரும் கட்டுக்குள் இருக்கும்வரை மிகவும் பயனுள்ளவை. ஆனால் அவை கட்டுப்பாடுகளை மீறுகிற வேளையில், அதிக சேதத்தை விளைவிக்கும்.

திருமண உறவின் அடிப்படையில் கொள்ளும் பாலுறவே தகுதியுடையதாகும். தேவன் இம்மாற்றமில்லா சட்டத்தை மனித வாழ்க்கையில் பின்னி



வைத்திருக்கிறார். அச்சட்டம் மனிதனின் ஆவி, சரீரம், மனது ஆகியவைகளுடைய நலனுக்கென்று இயற்றப்பட்ட தயவான கற்பனையாகும்.

தேவன்தாமே திருமணத்தை ஏற்படுத்தினார் (ஆதி. 2:18). இவ்வையகத்தில் பாவம் பிரவேசிக்கிறதற்கு முன்பே தேவனால் திருமண உறவு நிறுவப்பட்டதால், திருமண உறவு பரிசுத்தமற்றது என்னும் கூற்று பெரும்பொய் என்பது தெளிவு. "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக" (எபி. 13:4).

பொதுவாக, திருமணம் மனுக்குலத்திற்கென்று ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதே தேவன் நியமித்ததாகும் (ஆதி. 2:24; மத். 19:5,6; எபே. 5:22-23). தம்பதிகள் இருவரும் உயிரோடிருக்கும்வரைக்கும் அது நிரந்தரமாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய திட்டம். இது விசுவாசிகளுக்கு மட்டுமல்ல, எல்லாருக்கும் நன்மை பயக்கக்கூடியது. கிறிஸ்தவர்களுக்காக மட்டும் இது ஏற்படுத்தப்படவில்லை; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, கானாவூர் திருமண வைபவத்திலே, திருமணத்தைப் பரிசுத்தப்படுத்தி, தூய்மையாக்கியிருக்கிறார் (யோவா. 2:1-11). மேலும் இது கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள உறவைச் சித்தரித்துக் காட்டுகிறது என அப்போஸ்தலனாகிய பவுல் கற்பித்துள்ளார் (எபே. 5:22-33).

(சிலர் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மைதான்; எனினும் அது கட்டளையாகக் கொடுக்கப்படாமல் விதிவிலக்காக இருக்கிறது.)

### திருமணமே பாலுறவிற்கு ஏற்றவழி

கணவன் மனைவிக்குள்ளாக நடைபெறும் தாம்பத்திய உறவே மகிழ்ச்சிக்கும், நிறைவிற்கும் வழிவகுக்கும். அவ்வாறு இன்றி திருமணத்திற்கு புறம்பே பாலுறவு கொள்வோர், தங்களையே சீர்குலைத்துக்கொள்கின்றனர். "மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்" (1 கொரி. 6:18) என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளதே.

சில வேளைகளில், திருமண வைபவமும், ஒப்பந்தமும் தேவையில்லையென்று சிலர் கூறுகிறதைக் கேள்விப்படுகிறோம். இருவர் மனமொன்றி ஒருவரையொருவர் நேசித்தால், அவர்கள் கூடிவாழலாம்; தேவன் அவர்களைத் திருமணம் செய்தவராகக் கருதுவார், திருமணம் பரலோகில் நிச்சயிக்கப்படுகிறது என்று அவர்கள் கூறுவார்கள்.

ஆனால் வேதம் அவ்விதமாகச் சொல்லுவதில்லை. ஈசாக்கு, ரெபெக்காளைத் திருமணம் செய்தபோது அங்கு வைபவமும், ஒப்பந்தமும் நடந்தன (ஆதி. 24:53-58). "நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா? என்று கேட்டார்கள்.

அவள்: போகிறேன் என்றாள்.'' அந்த வைபவத்தில் பொன் நகைகளும், வெள்ளி நகைகளும், விலையுயர்ந்த ஆடைகளும் பரிசாக வழங்கப்பட்டன.

தேவன் இஸ்ரவேலைத் திருமணம் செய்துகொண்டதாகக் கூறுகையில் அதனை உடன்படிக்கை என்று கூறுகிறார் (எசே. 16:8; மல். 2:14).

கலிலேய நாட்டிலே, கானாவூர் திருமண வைபவத்தில் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருமணத்தில் விருந்து அளிக்கப்படும் (மத். 22:1-14; லூக். 14:8). சில வேளைகளில் அந்த விருந்து ஏழு முதல் பதினான்கு நாட்கள் தொடரும்; விருந்தினர்களுக்கு சீர்மீகு ஆடைகள் வழங்கப்படும் (மத். 22:12). லூக்கா 12:36-இல் எஜமான் திருமணத்திற்குச் சென்றுவந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எக்கால மனிதர்களுக்கும், ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்பதே தேவன் ஏற்படுத்திய நியதியாகும் (ஆதி. 2:24). ஒருவர் பலரைத் திருமணம் செய்து கொண்டதாக வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். அது அங்கே எழுதிவைக்கப்பட்டிருந்தாலும், ஒருபோதும் தகுதியுள்ளது என்று சொல்லப்படவில்லை. எல்லாவிதப் பொல்லாங்கிலிருந்தும் அவருடைய பிள்ளைகள் விலகியிருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் (1 தெச. 5:22).

## மற்றவர்கள்மீது பழிசுமத்துதல்

அநேகர் தங்களது கீழ்ப்படியாமையைச் சரியானதென்று நிரூபிக்க முற்படுவர். தங்களது காமவிகாரங்களையும், திருமணம் செய்து கொள்ளாமலேயே மற்றவர்களுடன் கூடிவாழ்வதையும் சரியென்று காண்பிக்க வேத வசனங்களின் பொருளைத்திரித்துக் கூறுவார்கள். அவர்களது பொல்லாப்பிற்கு ''உடன்போகும் தத்துவத்தை'' சக் ஸ்விண்டால் என்பார் பட்டியலிட்டுத் தருகிறார்:

- நான் மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவளோடு நான் பழகினது உண்மைதான். ஆனாலும் அவளைத் திருமணம் செய்துகொண்டால் நான் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. எனவே அவளை விட்டுப் பிரிந்து செல்கிறேன். தேவன் என்னுடைய நிலையை அறிவார் என்று எனக்குத் தெரியும்.

- ஒரு காலத்தில் இவையெல்லாம் ஒழுக்கக்கேடு என்று நினைக்கப்பட்டன. இப்பொழுது அவ்வாறு கருதப்படுவதில்லை. இந்த ஆசையைத் தந்தவரே ஆண்டவர்தான். ஆகவே நான் இவை யாவற்றையும் அனுபவிக்க விரும்புகிறேன்.

- ஒருவரும் குற்றமற்றவர் இல்லை. நான் நினைத்ததைவிடச் சற்று அதிகமாகத் தவறிழைத்துவிட்டேன். இது சரியில்லைதான். ஆனாலும் இதைக் குறித்து கவலை கொள்ளக்கூடாது.



- நான் ஆண்டவரிடம் இதற்காக மன்னிப்பு கேட்க வேண்டுமா? ஏளனம் செய்கிறீர்களா? பாவ மன்னிப்பு போன்றவையெல்லாம் பயனற்றவை. நான் ஆண்டவரிடம் கொண்டிருக்கும் உறவு மிகவும் உறுதியானது.

- நீ நல்லது என்று நினைப்பதைச் செய். நாம் நியாயப் பிரமாணத் திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்லர். அது உனக்குத் தெரியாதா?

- சில செயல்கள் கொஞ்சம் அப்படி இப்படி இருக்கத்தான் செய்யும். சில விளையாட்டுத்தனமாய் இருக்கும். வாழ்க்கையில் சில ருசிகர மான காரியங்கள் இருக்க வேண்டாமா? அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று சொல்வதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது.

மேலே உள்ளவைகளோடு இன்னும் சிலவற்றைக் கூட்டலாம்.

- ஆதி நாட்களில் கடைப்பிடித்த கட்டுப்பாடுகள் இந்த நாளுக்கு ஒத்துவரா. நமக்கு இப்பொழுது எல்லா அறிவும் உண்டு.

- என் மனச்சாட்சி சொல்கிறதை நான் ஏன் தீர்மானிக்கக் கூடாது.

- எல்லாரும் செய்கிறார்கள். நான் ஏன் செய்யக் கூடாது.

- அவளை நான் நேசிக்கிறதால் இப்படி நடந்து கொள்கிறேன். இதில் தவறொன்றும் இல்லை.

மேற்சொன்ன பலவித வாதங்கள் தகாத பாலுறவை ஆதரிப்பவையாகக் காணப்படினும், தகாத உறவு தடை செய்யப்பட்டதேயாகும் (1 தெச. 4:3). அது தொடர்ந்து பலரை அழித்துபோடுகிறது. நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுக்க வேண்டும் என்னும் கூற்று, இந்நாட்களிலும் உண்மையாகவே இருக்கிறது (கலா. 6:7). துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது (நீதி. 13:15) என்னும் கூற்று இந்நாட்களிலும் உண்மையே. வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபி. 13:4) என்பது உண்மைதான். பாலியல் ஒழுக்கக்கேடு விளைவிக்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை என்பதும் உண்மைதான் (1 கொரி. 6:9-10), அவர்கள் அக்கினிக் கடலிலே பங்கடைவார்கள் என்பதும் உண்மையாகவே இருக்கிறது (வெளி. 21:8).

மனிதர்கள் என்னதான் எதிர்த்து நின்றாலும், பாலியல் குற்றங்களைச் செய்தபிறகு அவர்கள் அடைகிற குற்ற உணர்விலிருந்தும், அசுத்தத்திலிருந்தும் தப்பிக்க முடியாது. சரீரத்திலும் மானசீகமாகவும் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பையும் அவர்களால் தவிர்க்க இயலாது (ரோமர் 1:27; 1 கொரி. 6:18). மருத்துவத் துறையில் முன்னேற்றம் இருந்தாலும், பாலியல் நோய்கள் அவர்களை அச்சுறுத்திக் கொண்டே இருக்கும்.

ஆயினும், பாலியல் குற்றத்தில் ஈடுபட்டவர்களுடைய கதை அதோடு முடிந்துவிடுகிறதில்லை. மனிதன் தவறிவிட்டான் என்பதால் தேவன் அவனை அதோடு முடித்துக்கட்டிவிடுவதுமில்லை. மேற்கூறிய ஒழுக்கக்கேட்டில் ஈடு பட்டவன் இரட்சிக்கப்படாதவன் என்றால், தனது பாவத்திற்காக மனம் வருந்தி, இயேசு கிறிஸ்துவின்பாற் விசுவாசம் கொண்டு அவரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளலாம். அப்பொழுது தேவன் அவனுடைய ஒழுக்கக்கேட்டையும், மற்ற பாவங்களையும் தனது முதுகிற்குப் பின்னால் எறிந்துவிடுவார். அதை அவனும் உணர முடியும். தேவன் மன்னிக்கிறார்; மறந்தும் விடுகிறார். அவன்மீதுள்ள வழக்கு அத்துடன் முடிவடைந்துவிடும்.

ஏற்கனவே இரட்சிக்கப்பட்ட ஒருவன் தகாத உறவு கொண்டு பாவம் செய்துவிட்டால், அதற்கென்று மனம் வருந்தி பாவ அறிக்கைசெய்து, தனது பாவத்தை விட்டொழிக்க வேண்டும். அப்பொழுது அவன் தேவனால் தான் மன்னிக்கப்பட்டதைக் குறித்து முழு நம்பிக்கை பெறுவான். தேவன் அப்படிப் பட்டவர்களை மன்னிப்பதற்கு நீதியும், உண்மையுள்ளவருமாயிருக்கிறார் (1 யோவா. 1:29) தமது வாக்குறுதியை நிறைவேற்றவும் உண்மையுள்ளவரா யிருக்கிறார். நமது இரட்சகர் அதற்குரிய விலையை ஏற்கனவே செலுத்தி யுள்ளதின் அடிப்படையில் அக்குற்றத்தை அவனுக்கு நீதியாய் மன்னிக்கிறார். “அதை என்னுடைய கணக்கில் எழுது” என்றும் கூறுகிறார்.

## விவாக ரத்து

திருமணத்தில் இணைக்கப்பட்ட தம்பதிகளுக்கிடையிலுள்ள உறவில் கிளர்ச்சி இல்லாவிட்டால் என்ன செய்வது?

இல்லற வாழ்க்கையில் மனிதன் மகிழ்ச்சியற்று, சோகத்துடன் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறதில்லை. மனிதன் அவ்வாறு நினைத்துக் கொண்டு தனது இல்லற வாழ்வில் உண்டான தளர்ச்சிக்கு விவாகரத்து ஒன்றே சரியான விடையாகும் என்று விரைவான முடிவுக்கு வருகிறான். மனிதர்கள் தங்களது சித்தத்தின்படி நினைக்கலாம். ஆனால், மனிதன் அப்படிப்பட்ட முடிவெடுக்க திருமறை வசனங்கள் வழிவகுக்கவில்லை. ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்னும் கொள்கையை வேதம் மிகத்தெளிவுறப் போதிக்கின்றது. மேலும் திருமண உறவை மரணத்தினாலன்றிப் பிரிக்கக்கூடாது என்பதையும் வேதம் வலியுறுத்துகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய சித்தத்திற்குத் தலை வணங்க வேண்டும். சமுதாயத்தின் பழக்கவழக்கங்களால் கிறிஸ்தவர்கள் ஏமாந்துபோய்விடக் கூடாது. வேறொரு பெண்ணோ அல்லது ஆணோ தனக்கு ஏற்றவராக இருப்பார் என்னும் எண்ணத்தினாலோ, தங்களுக்கிடையேயுள்ள பிரச்சனை மிகப்பெரியதாக இருக்கிறது என்றோ கிறிஸ்தவத் தம்பதிகள் விவாகரத்தைத் தெரிந்துதெடுக்கக் கூடாது.



## அவமானச் செயல்கள்

கடந்த சில ஆண்டுகளில் பிரசித்திபெற்ற கிறிஸ்தவத் தலைவர்கள் அவமானச் செயல்களில் சிக்கிக்கொண்டது அமெரிக்காவையே குலுக்கி விட்டது. தொலைக்காட்சி நற்செய்தியாளர் ஒருவர் பதினோரு ஆண்டுகளுக்குமுன் தகாத பெண்ணுறவு கொண்டிருந்த செய்தி சமீபத்தில் வெளியாகியது. தீர்க்கதரிசனப் பொருளை விளக்கி எழுதும் எழுத்தாளர் ஒருவர் தனது மனைவியை விட்டுவிட்டு வேறொரு பெண்ணை மணந்து கொண்டார். சுகமளித்தலைக் குறித்து எழுது பவரும் பேசுபவருமாகிய புகழ்பெற்ற பெண்மணி திருமண உறவை முறித்து விட்டு வேறொருவரை மணந்து கொண்டார். கிறிஸ்தவ மாணவர் குழுவின் தலைவராக இருந்தவர் மூன்று வருடங்களுக்கு முன் தகாத உறவு கொண்டிருந்தது தெரியவந்ததால் தனது பதவியை இழக்க நேரிட்டது. இத்தகைய சோகக் கதைகள் தொடர்ந்து கொண்டேபோகும்.

இப்படிப்பட்ட அவமான நிகழ்ச்சிகளை மறைக்கும் வண்ணம், கிறிஸ்தவ மக்கள் அவற்றைத் தங்களது அருள் மிகுந்த பண்பினாலே திரையிட்டு மூடி விடுவார்கள். அவைகளைக் குறித்துப் பேசுவது புறங்கூறுதலாகும் என்று சொல்லிச் சிலர் அமைதியைக் காப்பர். அதுவும் சரிதான். ஆயினும் சித்திரத் திற்கு மறுபுறம் இருக்கிறதே. நாம் தொடர்ந்து இவ்வித ஒழுக்கக் கேடுகளை மறைப்பது, தேவனுடைய சபைக்கு ஊறுவிளைவிப்பதாகும். பெயரைச் சொல்லாது இவ்விதத் தீவினைகளை யாவரும் அறியும் வண்ணம் வெளிப் படுத்துவது, இது போன்ற சோதனைகளைத் எதிர்கொள்ளும் மக்களுக்கு நல்ல எச்சரிப்புகளாக அமையும். பலரது தோல்விகளைச் சொல்லி அப்படிப்பட்ட சோக நிகழ்ச்சிகள் நம்மைத் தாக்காதவாறு வேதம் தடுத்து நிறுத்துகிறது.

பரிசுத்தப் பெரும்பாதையில் இப்படிப்பட்ட தோல்வியுற்றோரைக் கண்ணு றும் நாம், “ஏன் சிலர் விழுந்து போகிறார்கள், சிலர் விழுவதில்லை?” என்று ஆச்சரியப்படுகிறோம். அவ்வாறு வீழ்ந்துபோகாத விசுவாசிகள், தேவனுடைய கிருபையே அதற்குக் காரணமாக இருக்கிறது என்று உடனடியாகப் பதிலுரைப் பார்கள். எதிர்த்துவரும் சோதனைகளைத் தங்களது சொந்த பலத்தால் எதிர் கொள்ள முடியாது என்று தங்களது இயலாத நிலையை ஒப்புக்கொள்வார்கள்.

மற்றவர்களுக்கு ஏற்படும் சோதனைகளைக் காட்டிலும், சிலர் கடுஞ் சோதனைகளைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆவிக்குரிய போராட்டத்தில் முன்னணியில் நிற்போர் சாத்தானின் விசேஷித்த தாக்குதலுக்கு ஆளாவர். பார்ப்பதற்கு அழகுள்ளோர், வரம் பெற்றவர்கள், இன்பமாகப் பேசுகிறவர்கள், அன்பாக நடந்துகொள்பவர்கள் திறமைமிக்கவர்கள் யாவரும் மற்றவர்களுக்குப் புலப்படாத தாக்குதல்களைச் சந்திக்க நேரிடும்.

மற்ற விசுவாசிகளின் ஜெபத்தினால் தாங்கப்படுதல் என்னும் பெருத்த ஆசீர்வாதம், சிலருக்குக் கிடைப்பதுபோல எல்லாருக்கும் கிடைப்பதில்லை.

ஆனால், அனைத்து விசுவாசிகளும் அபாயச் சூழ்நிலையைச் சந்திக்க நேரிடும். சிலர் மற்றவர்களைவிட அதிகமாகத் தாக்கப்படுவர். இதனை நாம் எப்பொழுதும் நினைவில் கொண்டவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

ஜெபம் இல்லாமை: கர்த்தருடைய பாதுகாக்கும் வல்லமையை நாம் தொடர்ந்து நாடாது இருப்போமென்றால், அது ஆபத்தை விளைவிக்கும். நாம் பாவத்தில் வீழ்ந்துவிடக்கூடியவர்களாக இருக்கிறோம் என்ற உணர்வும், நேரந்தவறாது ஒவ்வொரு வேளையும் கர்த்தரைப் பற்றிக்கொள்வதும் நமக்குத் தேவையானதாகும்.

***திருமறையை நாடாமை:*** மூடி வைக்கப்பட்ட வேதம் நம்மை எச்சரிப்பதில்லை, புத்தி புகட்டுவதில்லை, ஊக்கமளிப்பதில்லை. நாம் வழுவிப் போகக்கூடிய தருணங்களில் வேதம் உரக்கப் பேசும். தகுந்த முறையிலும் பேசும்.

***சபை ஐக்கியத்தில் பங்குகொள்ளாமல் தனித்திருத்தல்:*** தனித்துச் செல்லும் ஆடு, ஓநாய்க்கு நல்ல வேட்டையாகும். நெருப்புத் தழலிலிருந்து எடுக்கப்படும் கங்கு, விரைவில் குளிர்ந்து போகும்.

***கட்டுப்பாடற்ற சிந்தனை வாழ்க்கை:*** மனதில்தான் பாவம் உற்பத்தியாகிறது (யாக். 1:14,15). சிற்றின்பச் சிந்தனைகளை மனதில் வளரவிடுபவர்கள், தங்களது எண்ணங்களைத் தவிர்க்க முடியாமல் செயல்களாக மாற்றிவிடுவார்கள். ஆகவேதான் இயேசு கிறிஸ்து இச்சையுள்ள பார்வையைக் குறித்து எச்சரிக்கிறார் (மத். 5:28). சிற்றின்பத்தைக் குறித்துச் சிந்திக்காதவர்கள், ஒருபோதும் அப்பாவத்தைச் செய்யமாட்டார்கள்.

***அதிகநாட்கள் பிரிந்திருத்தல்:*** உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்குக் கிறிஸ்தவத் தம்பதிகள் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவர் பிரியக்கூடாதென்று 1 கொரிந்தியர் 7:5 -ஆம் வசனத்தில் பவுல் எச்சரிக்கிறார். விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் தூண்டிவிடாதபடி தம்பதிகள் அதிக நாட்கள் பிரிந்திருக்கக் கூடாது.

***தனிமை:*** தனிமை ஒருவரைத் தகாத முறையிலும், நம்பிக்கையற்ற முரட்டுத் துணிச்சலோடும் செயல்புரிய வழிவகுக்கும். கர்த்தருக்கென்று ஓயாது உழைத்து அச்சேவையில் மூழ்கிவிடுதலும், மற்றவர்களுக்காகத் தன்னலங் கருதாது உழைத்தலும் நம்மைச் சீர்கேட்டிலிருந்து விலக்கிக் காக்கும்.

***தேவையற்ற நெருக்கங்கள்***: “உன் கை உனக்கு இடறலுண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு” (மாற்கு 9:43). ஓர் இறையியல் பேச்சாளர் தனது உரையின் தொடக்கத்தில், “பெண்ணைத் தொடாதே, பணத்தைத் தொடாதே, புகழைத் தொடாதே” என்று அறிவுரை வழங்கினார். ஒருவர் மீது காட்டும் அக்கறை, பிரியம், தட்டிக்கொடுத்தல் ஆகிய செயல்கள் தவறற்றதாகத் தோன்றும், ஆனால் தேவையற்ற நெருக்கத்திற்கு அது வழிவகுக்கும். எல்லாராலும் அன்பு பாராட்டப்பட்ட வானொலிப் பிரசங்கியார், பெண்களைத் தொடாதபடித் தன் கைகளைக் கட்டுப்படுத்த இயலாதவராயிருந்தார். முடிவிலே அவருடைய ஆவிக்குரிய நிலை சைபீரியப் பாலைவனத்திற்கு நாடுகடத்தப்பட்டது போலாகி விட்டது.



***தவிர்க்க வேண்டியவற்றில் தோல்விகள்:*** அலுவலக நேரம் முடிந்த பிறகு பெண் செயலரோடு தனித்திருத்தல், ஆலோசனை தருபவரோடு தனித்திருப்பதால் ஒருவருக்கொருவர் உண்டாகும் கவர்ச்சி, மற்றொருவருடைய மனைவியோடு தனியாகப் பயணம் செய்தல், விருந்துகொடுத்தல் போன்ற சூழ்நிலைகள் தொடக்கத்தில் குற்றமற்றதாகக் காணப்படும். நாளடைவில் அவை அணைக்க முடியாப் பெருந்தீயாகிவிடும்.

மார்கரெட் ஹெஸ் என்பார் கூறும் அறிவுரை:

> “ஆண்பெண் ஒருவரோடொருவர் பழகுவதில் எல்லையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். பெண் நோயாளி ஒருவருக்குச் சிகிட்சையளிக்க மருத்துவர் நாளின் கடைசி நேரத்தை ஒதுக்கக் கூடாது. ஒரு பெண்ணுக்கு ஆலோசனை கொடுக்கும் ஆலோசகர் அப்பெண்ணை மேஜையின் மறுபக்கத்தில் அமரச்செய்ய வேண்டும். அந்நேரத்தில் அறையின் திரைச்சீலை திறந்திருக்க வேண்டும். ஒரு பெண் நோயாளியை மருத்துவர் சோதிக்கும் வேளையில் கூடவே செவிலிப்பெண் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும். மேலாளரும் அவருடைய பெண் செயலரும் தனித்து உணவருந்தச் செல்லக்கூடாது. அவர்கள் இருவரும் தனித்து நெடுநேரம் அலுவலகத்தில் இருக்கக்கூடாது. வீட்டில் கணவன் இல்லாத நேரங்களில் மற்றவரது கவனத்தை ஈர்க்கும் வண்ணம் ஒரு பெண் செயல்படக் கூடாது. மனைவி தன் கணவனைத் தனியாக விட்டுவிட்டு வெகு நாட்கள் வெளியூருக்குச் செல்லக்கூடாது. அடுத்த வீட்டுப் பெண்கள் விடுமுறைக்கு வெளியூர் சென்றால், தனித்திருக்கும் அவர்களது கணவன்மாரைப் புத்தியுள்ள பெண்மணி உபசரிக்கமாட்டாள். வெளியூருக்குக் கணவன் சென்றிருக்கும்போது, தனியாக இருக்கும் பெண்ணுக்கு உதவி செய்ய ஒருவரும் செல்ல வேண்டிய அவசியமில்லை. தன் கணவன் இல்லையே என்ற உணர்வை அவள் உணர வேணடும். அதை ஈடு செய்வதும் அவள் கணவனே.”

***சோம்பேறித்தனம்:*** வேலை செய்வதற்குத் தயங்குகிற நிலை புற்றுநோயைப்போல பரவக்கூடியதாகும். ஒரு நாளைப் பயனுள்ள வகையில் வேலை

செய்து பூர்த்திசெய்யாவிட்டால் அது கவனிக்கப்பட வேண்டியதாகும். சோதனையின்றி நம்மைக் காத்துக்கொள்ள நாம், சுறுசுறுப்பாய் வேலை செய்யும் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனாலும் நம்முடைய வேலைப்பளு நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ள வேண்டிய நேரத்தை கொள்ளையடித்து விடக்கூடாது.

***பெருமை:*** மற்ற விசுவாசிகளால் வியப்போடு பார்க்கப்படும் ஒருவர் பெருமையின் உச்சியைச் சென்றடையக்கூடும். அப்பொழுது தாம் ஏதோ மிகப் பெரியவர் என்று தன்னைக்குறித்து நினைக்கத் தொடங்குவார். உலகமே தனக்கு உவகையூட்டும் இடமென்றும், தான் வீழாது நிலைநிற்கத் தகுதிபடைத்தவர் என்றும் நினைக்கத் தோன்றும். இவ்வேளையே அவருக்கு ஆபத்து பெருகின நேரமாகும். ‘‘அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை’’ (நீதி. 16:18).

***விளம்பரம்:*** விளம்பரத்தை விரும்பும் ஒருவர், கீழே விழுந்து அடி படுவதற்கென்று ஓடுகிறவரைப்போல இருக்கிறார். பொதுவாக, கிறிஸ்தவ வாழ்க்கையிலும் ஊழியத்திலும் விளம்பரம் மிக மோசமானதாகும். சி. ஏ. கோட்ஸ் என்பார், ‘‘நம்மை நாம் விளம்பரப்படுத்த விரும்பும் அத்தருணத் திலேயே நாம் ஊழியர் என்னும் நிலையிலிருந்து தவறியவர்களாகிறோம். கர்த்தர் விளம்பரத்தை விரும்பாது தம்மை மறைத்துக்கொண்டார். ஆனால், அது நமது பண்பிற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. மேலும், அவரது குணம் நமது உள்ளத்தைத் தொடுகிறது. இயற்கையாகவே நாம் விளம்பரத்தை விரும்பு கிறோம். கர்த்தரால் சுகம் பெற்றவர்கள் அதைக் குறித்துப் பேசக்கூடாதென்று அவரிடம் கட்டளை பெற்ற விவரத்தை மாற்கு எழுதிய நற்செய்தி நூலில் ஐந்து அல்லது ஆறு இடங்களில் காண்கிறோம். விளம்பரம் மிகவும் ஊறுவிளை விக்கக்கூடியதாகும். சிலருக்கு ஆண்டவர் விளம்பரத்தைத்தருகிறார். அவர் அதைத் தருகிறபோது மிகுந்த கிருபை அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது’’ என்று கூறியுள்ளார்.

***தொலைக்காட்சி:*** சிற்றின்பம், வேட்கை, சிற்றின்ப ஊடாட்டம் ஆகிய வற்றைத் தொடர்ந்து தொலைக் காட்சியின் மூலம் புசிப்பவர்களாக இருப்போ மென்றால், அதனால் ஏற்பட வேண்டிய மனவருத்தத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழுந்து போவோம். காம விளையாட்டுகளைத் தொடர்ந்து பார்க்கும் ஒருவர் அதை நன்கு அறிந்த நிலையிலே தவறான நடத்தைக்கு வழிநடத்தப்படுவார். தொலைக்காட்சியோடு, காமவிகாரப் பத்திரிகைகள், திரைப்படங்கள், புத்தகங்கள், வீடியோக்கள் யாவும் அவமானச் சின்னங்களே.

***கண்ணியில் சிக்கிக்கொள்ளுதல்:*** கிறிஸ்தவ ஊழியர்கள் தங்களுக்கு விரிக்கப்பட்ட கண்ணியில் விழாமல் தங்களைக் காத்துக்கொள்ள அறிந்திருக்க வேண்டும். கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பு மிகுந்த ஒரு நாட்டில் மிஷனரியாகச்



சென்ற ஒருவருக்குப் பெண் ஒருத்தி ஆவிக்குரிய ஆலோசனையைத் தருவதற்கு நேரடியாக வரும்படி தொலைபேசியில் அழைப்புவிடுத்தாள்; அஞ்சல் அலுவலகத்தில் தான் காத்துக் கொண்டிருப்பதாகவும் உடனடியாக வரும்படியாகவும் அழைப்பு வந்தது. அந்த மிஷனரி தனது மனைவியை அங்கே அழைத்துச் செல்லத் தவறி விட்டார்; அங்கே சென்றபோது காத்திருந்த காவல்துறை அதிகாரிகள், விபசாரப் பெண்ணுடன் அந்த ஊழியர் இருந்தார் என்றுகூறி கைது செய்தார்கள். அரசாங்கம் அவரை அந்நாட்டிலிருந்து வெளியேற்றியது. இந்நிகழ்ச்சியில் அவர் ஒழுங்கீனமாய் நடந்துகொள்ள வில்லை. ஆனால் பல சம்பவங்களில் கண்ணியில் அகப்பட்டவர்கள் பாவத்தில் வீழ்ந்தும் போயிருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு அதிகாரத்தை எழுதுவது மிகுந்த கவலையை அளிக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகள் இல்லாதிருப்பின் இந்தப் பொருளைக் குறித்து எழுதாமல் அடுத்த அதிகாரத்திற்குச் சென்றிருக்கலாம். அது வசதியாகவும் இருந்திருக்கும். ஆனால் ஒரு விசுவாசி திருமறையில் சொல்லப்பட்ட எந்தவொரு பாவத்திலும் விழுந்துவிடக்கூடியவனாக இருக்கிறான். ஒழுக்கக்கேடு அந்தப் பாவங்களில் ஒன்றாக இருக்கிறது. அந்தப் பாவத்தைக் குறித்துக் கற்றுக் கொள்ளாமல், அது நம்மை அணுகாது என்னும் மனப்பான்மையுடன் இருப்போமென்றால். அதில் எவ்வித நன்மையும் உண்டாகாது.

உண்மையை நேருக்குநேராகச் சந்தித்தவர்களாக, நமது இரட்சகரோடு ஒவ்வொரு நாளும் நெருங்கி வாழ்ந்து ஒழுக்கக்கேட்டிலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதே நனி சிறந்ததாகும். ●

# 15

# சுய பாலுறவு என்னும் பாவம்

இல்லற வாழ்க்கைக்கு மாற்றாகச் சுய பாலுறவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்று என்று சிலர் வாதிடுகின்றனர். அவ்வித வாழ்க்கை நடத்துபவர் தங்களது மறைவிடங்களிலிருந்து வெளிவந்து தங்களுக்கும் மற்றோரைப் போன்றுச் சம உரிமை வேண்டுமென்று போராடுகின்றனர்.

பலர் அவ்விதம் பேசுவதாலும், இந்நாட்களில் சிலர் அவ்வித வாழ்க்கையை வாழ்வதாலும் விசுவாசிகள் அதைக் குறித்துத் தவறான முடிவிற்குப் போய் விடலாகாது. ‘‘எல்லாரும் அவ்வாறு செய்கிறார்கள்’’ என்ற பேச்சின் அலையில், விசவாசிகளும் அடித்துச் செல்ல இடம்தரலாகாது. ‘‘வேதம் இதைக் குறித்து என்ன சொல்கிறது?’’ என்ற சோதனையால் அதனைச் சோதித்துப் பார்க்க வேண்டும். ஆகவே நாம் அதனை அறிந்துகொள்ள நமது புனிதமான திருமறையைக் காண விழைவோம்.

### சுய பாலுறவைப் பற்றி வேதம் பேசுகிற இடங்களாவன:

ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்கள். தேவன் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்து, அவர் தம் மக்களுக்குத் திருமண உறவை நிறுவி யிருக்கிறார் என்பதை இவ்வதிகாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆதலின், சுயபாலுறவு இயற்கைக்கு மாறானதும், தேவனுடைய திட்டத்தை மாற்றித் தவறான வழியில் செல்வதுமாக இருக்கிறது. இது குற்றமாகவே காணப்படும்.

ஆதியாகமம் 19:1-26. சோதோம் குடிமக்கள் இவ்வகைக் குற்றத்தைச் செய்யும் இழிநிலை மக்களாயிருந்தனர். அந்த நகரத்தின் பெயரிலிருந்துதான் ‘சோதோமி’ (Sodomy) என்னும் சொல் உருவாயிற்று. ‘‘சோதோமி’’ என்ற சொல்லுக்குச் சுயபாலுறவு என்பது பொருளாகும். லோத்துவின் இல்லத்திற்கு விருந்தினராக வருகைபுரிந்திருந்த இரு ஆண்மக்களை அவ்வூரார் கற்பழிக்க முயன்றனர். தேவனோ தம்மக்களை அங்கிருந்து வெளியேற்றி, அந்நகரத்தையும், அந்நகர்வாழ் மனிதர்களையும் அக்கினியாலும் கந்தகத்தாலும் அழித்துப் போட்டார்.



லேவியராகமம் 18:22; 20:13. மோசேயின் பிரமாணத்தின்படி சுயபாலுறவு அருவருப்பானது ஆகும்; மேலும், அவ்வகைப் பாவத்தில் ஈடுபடுபவர்கள் மரண தண்டனைக்குப் பாத்திரராவர். (ஒருவகை நோயினாலேயே சிலர் இப்பழக்கத்தைக் கைக்கொள்கின்றனர் என்று சிலர் வாதிடுகின்றனர், அவ்வாதத்தைப் பொய்யென்று இவ்வசனம் தெளிவாக்குகிறது. நோயுற்ற மக்களைத் தேவன் தண்டிப்பதில்லை.)

ரோமர் 1:18-32. ஆதிகால மக்கள் உண்மையான தேவனைக் குறித்துச் சிறிதளவு அறிவு கொண்டிருந்தனர். ஆயினும் அந்த அறிவை ஒதுக்கித் தள்ளியவராய்ச் சிலை வணக்கத்தில் ஈடுபட்டனர். கல்லிலும் மரத்திலும் செதுக்கப்பட்ட சிற்பங்களை வணங்கலாயினர். தேவனைக் குறித்த அறிவை அவர்கள் கைவிட்டபோது தேவன் அவர்களைக் கைவிட்டார். அதன் பயனாக அவர்கள் எல்லாவித ஒழுக்கக் கேடுகளிலும் ஈடுபட்டனர்; சுயபாலுறவிலும் ஈடுபட்டனர். சுயபாலுறவில் ஈடுபடுபவர்கள் மரணத்திற்கே அருகதையுடையவராக இருக்கின்றனர் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அச்சமின்றி உரைக்கின்றார்.

1 கொரி. 6:9 இவ்வசனம் சுய பாலுறவுகொள்வோரும், ஆண்வேசிகளும் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்கமாட்டார்கள் எனத் தெளிவுறச் சொல்கின்றது.

1 தீமோ. 1:10 தேவனுடைய கற்பனையை மீறுகிற செயல்களாகிய கொலை, விபசாரம், மனிதரைத் திருடுவது, பொய்யாணை ஆகியவற்றோடு சுய பாலுறவும் பட்டியலிடப்பட்டுள்ளது. தேவனுடைய கற்பனையை மீறுவது மரணத்தையே வருவிக்கும்.

தேவன், தமது படைப்பாகிய மனுமக்களுக்கென்று ஏற்படுத்திய முறைமைக்கு மாறான பாவச் செயலாகவே சுய பாலுறவு இருக்கிறது என்பதைத் திருமறை மிகத் தெளிவாகக் கற்பிக்கிறது. அதைச் சரியென்று எவ்வளவுதான் வாதிட்டாலும் அது திருமறைக்கு விரோதமானதே ஆகும். திருமறை எழுத்துகள் என்ன சொல்லுகின்றன என்பதே தகும். உலகம் நியமிக்கின்ற ஒழுக்கத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் முன்னர் நாம் மிக்க கவனமுடையவராக இருக்க வேண்டும்.

### சுயபாலுறவு கொள்கிற ஒருவர் இரட்சிப்படைய முடியுமா?

ஆம் என்பதே அதன் விடையாகும்; அந்தப் பாவத்தில் வீழ்ந்துபோன ஒருவர், தனது பாவத்திற்காக மனம் வருந்தி இயேசு கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வதனால் இரட்சிப்படைவார் (யோவான் 1:12; ரோமர் 10:13).

ஒரு கிறிஸ்தவ விசுவாசி இந்தப் பாவத்தில் விழுந்து போவாரா? ஒரு விசுவாசி ஒரு கணப்பொழுது பலவீனத்தில் அகப்பட்டுக்கொள்வது என்பது

நடக்கக்கூடியதே. அவ்வாறு நடந்துவிட்டால், மனம் வருந்தி அறிக்கையிட்டு அப்பாவத்தைக் கைவிட்டு பாவமன்னிப்பை ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் (1 யோவான் 1:9). ஆயினும் ஒருவர் அவ்விதப் பழக்கம் உடையவராக இருப்பாரெனில் அவர் ஒருபோதும் மறுபிறப்படையவில்லை என்பதே உண்மை. "அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார் (மத். 7:20).

## நாட்டத்திற்கும் பழக்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

ஒருவர் சுயபாலுறவு நாட்டமுடையவராக இருப்பதற்கும், அவ்விதப் பழக்கமுடையவராக இருப்பதற்கும் வேறுபாடு உண்டா? ஆம், அந்த வேறுபாடு முக்கியமானது ஆகும். பலர் அவ்வித நாட்டம் உடையவராக இருப்பினும் அப்பாவத்தைச் செய்திருக்கமாட்டார்கள். அவர்கள் சுய பாலில் கவர்ந்திழுக்கப் படுவதை நினைத்து மனவேதனைகொள்வர்; எனினும் அந்தச் சோதனையை எதிர்த்து நின்று, தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு தூய வாழ்க்கையை வாழ்வர்.

"ஒருமுறை சுய பாலுறவு கொண்ட ஒருவர் தொடர்ந்து அந்நிலையிலேயே இருப்பார்" என்னும் கூற்று உண்மையா? இந்தக் கூற்றிற்கு அந்நபர் அவ்விதப் பழக்கம் உடையவர் என்று பொருள் கொள்வோமெனில் அது மிகப்பெரிய தவறாகும். சுயபாலுறவு வாழ்க்கை நடத்திய பலர் இயேசு கிறிஸ்துவைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொண்டு, மனமாற்றம் பெற்றவர்களாகத் தங்களது பழக்கத்தை அடியோடு வெறுத்துத் தள்ளி, புதிய வாழ்க்கையை வாழ்கின்றனர். தூய ஆவியானவர் அதற்குத் தேவையான வல்லமையை அவர்களுக்குத் தந்திருக்கிறார். கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் பலர் இவ்விதப் பழக்கம் உடையவராயிருந்து மனமாற்றம் அடைந்து அப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாவர் (1 கொரி. 6:9-11). ஒரு விசுவாசிக்கு அவ்வித நாட்டம் இருக்குமென்றால், அவர் தனது வாழ்க்கை முழுவதும் அதனையெதிர்த்துப் போராடி, இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவிற்காக அயராது உழைத்துத் தனது வலிமையை அதற்கெனச் செலவு செய்து, வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ முடியும்.

சுய பாலுறவு வேட்கை உடையவராய் உண்டாக்கப்பட்டிருக்கிற ஒருவரைத் தேவன் எவ்வாறு குற்றப்படுத்தலாம்? தேவன் யாரையும் அவ்வாறு படைக்க வில்லை. தேவனுடைய கரத்திலிருந்து ஆதாம் தோன்றினபோது அவன் தீங்கற்றவனும், தீட்டற்றவனுமாக இருந்தான். ஆனால் அவன் பாவஞ் செய்த போதோ அவனுடைய சந்ததியார் ஒவ்வொருவரும் உருக்குலைந்து, நீதியற்றுப் பாவ சுபாவம் உடையவராயினர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ அதனின்றும் முற்றிலும் மாறானவர். மனிதன் தனது தோளிலேயே தன் குற்றத்தைச் சுமக்கிறான். தேவன் தடை செய்ததை ஒருவன் செய்தால், அதற்காகத் தேவனைக் குற்றப்



படுத்துவது தவறாகும். மேலும், அவ்வாறு குற்றப்படுத்துவது ஒரு பாவச் செயலின் பொறுப்பை, அப்பாவத்தைச் செய்தவரிடமிருந்து நீக்கிவிடுவதாகவும் போய்விடும்.

சுயபாலுறவு வேட்கை ஒருவரது பிறவிக் குணமா அல்லது அவர் பெற்றுக் கொண்ட குணமா? உண்மையாகவே அது அந்த இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கும். இந்தக் குறையோடு ஒருவர் பிறந்திருப்பது வியப்பிற்குரியதன்று. ஜென்ம சுபாவம் உடையவர் முழுவதும் ஒழுக்கம் கெட்டவராகவும், திருமறை யில் சொல்லப்பட்டிருக்கிற எந்தப் பாவத்தையும் செய்ய வல்லவராகவுமிருக் கிறார். சிலர் ஒருவகைக் குறையுடையவராகவும், வேறுசிலர் வேறுவகைக் குறையுடையவராகவும் இருக்கின்றனர். ஒருவர் சுயபாலுறவு மோகம் கொண்ட வராகப் பிறந்திருப்பதால் குற்றவாளி என்று தீர்க்கப்படவில்லை. மாறாக அவ்விதப் பழக்கம் உடையவராய் இருப்பதாலேயே அவர் பாவியென்று தீர்க்கப்படுகிறார். ஒரு வாலிபன் ஒரு சிறுவனை இவ்வித வாழ்க்கைக்கு வயப்படுத்தலாம். அப்படிப்பட்டோர், "அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்கு கிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும்" (லூக். 17:2) என்று இயேசு கிறிஸ்து உரைத்த வசனத்தினால் சாபத்திற்குட்பட்டவர்களாயிருக் கின்றனர்.

## மீறுவோரின் பாதை

ஆண்களாயினும் பெண்களாயினும் சுயபாலுறவுப் பழக்கம் உடையோரா யிருப்பின் அதற்கென அவர்கள் மிகப்பெரிய விலையைக் கொடுக்கின்றனர். "தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்" (ரோமர் 1:27) என்று பவுல் அவர்களைக் குறித்துச் சொல்லுகிறார். அவர்கள் அடைகின்ற பலன் பாலியல் நோய்கள், நுரையீரல் பாதிப்பு, ஒருவகைப் புற்றுநோய், எய்ட்ஸ் போன்றவை. இவை மட்டுமல்லாமல் குற்ற உணர்வினால் ஏற்படும் மனநோய்கள், விபரீத ஆள்தன்மை ஆகிய நோய்களுக்கும் ஆளா கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒஸ்கார் வில்டே என்னும் ஆங்கில எழுத்தாளர் சுயபாலுறவுப் பழக்கமடையவர் என்று தெரியவந்த பிறகு, "தேவர்கள் எல்லாவற்றையும் எனக்குத் தந்துள்ளனர். ஆனாலும் என்னுடைய மதிகேட்டினால் ஒழுக்கக் கேட்டின் உணர்ச்சிகளால் உந்தப்பட்டவனாய்த் தவறினேன். காமவிகாரத்தினால் ஏற்பட்ட இன்பத்தில் களைத்துப்போய்ப் புதிய இன்பங்களை நாடிக் கீழ்நிலைக்குச் சென்றேன். உண்மைக்கு மாறான எண்ணங்களால் சூழப்பட்டவனாக வெறிச்செயலில் தகாத முறைகளைக் கைக்கொண்டேன். மற்றவர்களது வாழ்க்கையைக் குறித்துச் சிறிதேனும் கவலையற்றவனாகச் செயல்புரிந்தேன். எனக்கு இன்பமானபடியெல்லாம் செய்து

காலத்தைப் போக்கினேன். மனிதர்கள் மறைவிடங்களில் செய்கிற தகாத செயல்களுக்காக ஒவ்வொருவரும் ஒருநாள் வீட்டின் உச்சியில் நின்று கதறி அழ வேண்டியவராய் உள்ளனர் என்பதை மறந்துபோனவனாய் குணநலனை இழந்து, தகாத பல செயல்களைச் செய்தேன். என்னையே என்னால் கட்டுப் படுத்த இயலாத கயவனாய் மாறிப்போனேன். இனி என் ஆத்துமாவிற்கு நான் தலைவனில்லை; அதை நான் அறிந்துகொள்ளவுமில்லை. இன்பம் என் வாழ்க்கையை ஆளும்படி அந்த இன்பத்திற்கே இடம் கொடுத்தேன். ஆயின் இப்பொழுதோ அவமானச் சின்னமாக இருக்கிறேன்" என்று எழுதியுள்ளார்.

மற்ற இச்சைகளிலிருந்து விடுதலையடைவதற்கு என்ன வழியைப் பின்பற்ற வேண்டுமோ, அந்த வழியையே சுயபாலுறவுப் பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் பின்பற்ற வேண்டும். அப்பொருளைக் குறித்து ஏற்கனவே நாம் கூறியிருக்கிறோம். எனினும் அப்படிப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து வேதாகம ஆலோசனை கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

சுயபாலுறவுப் பழக்கம் உடையோரிடம் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? நாம் கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களை மனிதர்கள் என்றே ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அவர்களது பழக்கத்தை ஒருபோதும் ஒத்துக்கொள்ளக்கூடாது. அவர்களும் இரட்சிப்படைய வேண்டு மென்று கிறிஸ்து மரித்திருப்பதால், நாம் அவர்களைக் கிறிஸ்துவுக்கென்று வெற்றிகொள்ள முயற்சிசெய்ய வேண்டும். சாந்தமுள்ள ஆவியோடு அப்படிப் பட்டவர்களிடம் ஈடுபட வேண்டும்; நாமும் சோதிக்காதபடிக்கு நம்மைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து திருமறை எழுத்துகளை வன்மையோடு எதிர்த்து நின்று தகாத சொற்களால் தேவதூஷணம் செய்வார்கள் என்றால், நாம் அவர்களுக்குத் தொடர்ந்து கிறிஸ்துவின் நற்செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டவர் அல்லர். ●

# 16

# மனச்சாட்சி – நமதுள்ளத்தில் வசிக்கும் நடுவர்

ஒருவரது எண்ணங்கள், விருப்பங்கள், செயல்கள் ஆகியவற்றைச் சரியென்றும், தவறென்றும் பகுத்தறிந்து அறிவிப்பது அவரவர் உள்ளத்தில் செயல்படும் மனச்சாட்சியாகும் (ரோமர் 2:15). ஒரு சிறுவன் இனிப்புகளை எடுக்க ஜாடிக்குள்ளாகக் கையை விடும்போது அறைமுழுவதையும் நோட்டமிடுவதன் காரணம் அவனுடைய உள்ளுணர்வே. வேகமாக வாகனத்தை ஓட்டிச் செல்பவர், காவல் துறை வாகனத்தைப்போல ஒருவாகனம் தன்னைப் பின்தொடர்கிறது என்று கண்ணாடியில் கண்டவுடன், தனது உள்ளுணர்வினால் தானாக வேகத்தைக் குறைத்துக் கொள்கிறார். அந்த மனச் சாட்சியே தவறுசெய்த ஒருவரை, எவரும் தொடராத போதும், அந்தச் சூழ்நிலையிலிருந்து ஓடிவிடச் செய்கிறது. இதனையே ஷேக்ஸ்பியர், "ஒருவரது உள்ளுணர்வு அவரைக் கோழையாக்குகிறது" எனக் கூறியுள்ளார்.

வருமானவரி செலுத்தும் நேரங்களிலும், நீதிமன்றங்களிலும், தேர்வு எழுதும் அறைகளிலும் இந்த உள்ளுணர்வு மிகத் திறமையுடன் வேலை செய்கிறது. "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்" என வேதம் இதைக் குறித்துச் சொல்லியிருப்பதில் வியப்பேதுமில்லை (நீதி. 20:27).

அனைத்து மனிதர்களும் உள்ளுணர்வு உடையவராய்ப் பிறந்திருக் கின்றனர். பொய்சொல்வது, திருடுவது, கொலைசெய்வது யாவும் தவறென்று மனிதன் தன் உள்ளுணர்வினாலே அறிகிறான். மற்றவர்களுடைய தவறு களுக்குத் தான் பலியாவதை விரும்பாத மனிதன், தானும் மற்றவர்களுக்கு எதிராகக் குற்றம் செய்யலாகாது என அறிந்திருக்கிறான்.

## உள்ளுணர்வு பிழையற்ற வழிகாட்டியல்ல

ஆயினும், அந்த உள்ளுணர்வு பிழையற்றதல்ல. மனிதனுடைய மற்ற இயல்புகளைப் போல, உள்ளுணர்வும் ஆதாம் பாவத்தினிமித்தம் அடைந்த வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட ஒன்றே. மேலும், நாம் கற்றுக்கொண்டிருக்கின்ற அடிப்படைக் கொள்கைகளின்படியே உள்ளுணர்வு செயல் புரிகிறது.

ஆகவே, "உன்னுடைய மனச்சாட்சியே உனக்கு வழிகாட்டி" என்னும் வழக்குச்சொல் நம்முடைய வாழ்க்கைக்குப் போதுமானதல்ல.

தூய ஆவியானவர் தருகின்ற வெளிச்சத்தில், தேவனுடைய வார்த்தைகளினால் நமது மனச்சாட்சி கற்பிக்கப்பட வேண்டும். பர்ன்ஹவுஸ் என்பார், "தேவன் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களுக்கு ஏற்றபடி காணவும், அவைகளைப் பின்பற்றவும் தக்கதாக நமதுள்ளுணர்வு தட்டியெழுப்பப்பட்டு, சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

உண்மையான மனந்திரும்புதல், உள்ளுணர்வோடு தொடர்புடையதாகும். ஜான் நியூட்டன் என்பார் தனது அனுபவத்தை, "என்னுடைய மனச்சாட்சியிலே குற்றம் குடிகொண்டுள்ளது. அந்தக் குற்ற உணர்வு என்னை ஆட்கொண்டு நம்பிக்கையற்ற படுகுழிக்குள் தள்ளிவிட்டது" என்று எடுத்துரைத்துள்ளார்.

தர்சு நகரத்து சவுல் தனது மனச்சாட்சியினால் குத்தப்பட்டவனாக, முள்ளில் உதைக்கிறது கடினம் என்று அறிந்து கொண்டான் (அப். 9:5). உன்னதத்திலிருந்து இறங்கி வந்த ஒளியினாலே இலவசமாகக் கிருபையைப் பெற்ற இராபர்ட் முர்ரே மேக்செயினி என்பார், தன் மனச்சாட்சியில் எழுப்பப்பட்டு, தனக்கு எதிரான சட்டங்களுக்குப் பயந்து, அதிர்ந்து போனார்; மரணம் அடைய வேண்டுமே என்று நடுங்கினார்.

கிறிஸ்துவின் இரத்தத்தில் கழுவப்பட்டதே, சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சியாகும் (எபி. 9:14). நம்முடைய மனச்சாட்சி நமது நடத்தையை கண்காணித்த போதிலும், கிறிஸ்து நம்முடைய பதிலாளாக நமக்கு வரவேண்டிய தண்டனைகளை ஏற்றுக்கொண்டதனிமித்தம், நித்திய நியாயத்தீர்ப்பைக் குறித்த அச்சம் நமக்கில்லை.

"குறைவற்ற குருதியாலே கழுவப் பட்டேன்
மறைநூலில் சொன்னபடி தூய்மை யானேன்
குற்றமில்லா உள்ளுணர்வை அன்றே பெற்றேன்
மாற்றமில்லா மனுவேந்தர் மகிழ்ச்சி தந்தார்."

சில உணவு வகைகள், பானங்கள் ஆகியவற்றை உட்கொள்வது குற்றமற்றதாக இருப்பினும், அவற்றைக் குறித்து ஒருவர் தேவைக்கு அதிகமாகக் குற்ற உணர்வு கொள்வாரெனில் அவருடைய மனச்சாட்சி பலவீனமாக இருக்கிறது என்பதே அதன் பொருளாகும் (1 கொரி. 8:7,8).



ஒருவர் தம்முடைய உள்ளுணர்வு சொல்வதைக் கேட்க மறுத்தால், நாளடைவில் அவரது உள்ளுணர்வு உணர்வற்றதாக மாறிப்போகும். நான் எனது வாகனத்தில் ஏறி இருக்கையில் அமர்ந்தவுடன், இருக்கையில் உள்ள வார்க்கச்சையைக் கட்டிக்கொள்ளும்படி எச்சரிப்பு மணி எழும். வார்க்கச்சையைக் கட்டிக்கொள்வது சட்டப்படி கட்டாயம் இல்லையென்பதாலும், பழக்கத்தின் காரணத்தினாலும், நாளடைவில் அந்த எச்சரிப்பு ஒலி எனக்குக் கேட்காது போய்விட்டது.

ஒருவர் தனது மனச்சாட்சியை மீறமீற, அதன் ஓசை குறைந்து கொண்டே போகும். ஒரு ரப்பர் நாடா நாளடைவில், தான் முன்னிருந்த நிலைக்குக் குறுகும் சக்தியை இழந்துவிடுவது போல மனச்சாட்சி செயல்படுகிறது. சூடுண்ட தோலில் உணர்ச்சி காணப்படுவதில்லை. அதுபோல மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யராக மாறிவிடுவர் (1 தீமோ. 4:2). அப்படிப்பட்டோர் தாங்கள் செய்த பாவத்தைக் குறித்து உணர்வில்லாதவர்களாகக் காணப்படுவர் (எபே. 4:19). அப்படிப்பட்டவர் கொடிய பாவத்தையும் செய்துவிட்டுத் தன்னுடைய வாயைத்துடைத்து, நான் ஒருபாவமும் செய்யவில்லை என்பர் (நீதி. 30:20).

ஒரு பாவத்தைக் குறித்து அடையும் அதிர்ச்சியே, நாம் அந்தப் பாவத்தைச் செய்யாதபடி நம்மைக் காக்கும் காவலாளியாக இருக்கிறது என்று ஒருவர் கூறியுள்ளார்.

பொல்லாங்கான நடக்கைகளினால் ஒருவரது மனச்சாட்சி தீட்டுப்பட்டதாயிருக்கிறது (தீத்து 1:15). ஒருவரது வாழ்க்கை பொல்லாங்குடையதாயிருக்குமென்றால், அவருடைய உள்ளுணர்வு நல்லதாக இருக்க முடியாது (எபி. 10:22).

நாம் எப்பொழுதும் நல்மனச்சாட்சி உடையவராயிருக்க வேண்டும் (1 பேதுரு 3:16). நாம் தேவனுக்கும், மனிதனுக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவராயிருக்கப் பிரயாசப்பட வேண்டும் (அப். 24:16). நல்மனச்சாட்சி எப்பொழுதும் தேவனுடைய வார்த்தைகளோடு இணக்கமுடையதாயிருக்கிறது. ●

# 17

# மனிதனின் நினைவுகள்

ஒரு கிறிஸ்தவன் தனது சிந்தனை வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதே அவன் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளில் முக்கியமானதாகும். அவன் தனது மனதை எவ்வாறு பயன்படுத்துகிறானோ, அதற்கேற்றபடியே அவனது வாழ்வும், பண்பும் திசை திரும்பும். திருமறைக்குத் தகுந்த சிந்தனைகள், நல்ல விளைவுகளைப் பிறப்பிக்கும் (பிலி. 4:8). தூய்மையற்ற மனது, நிச்சயமாக பண்பற்ற நடத்தைக்கு வழிவகுக்கும்.

இதன் காரணமாகத் திருமறை, "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்று கூறுகிறது (நீதி. 23:7). ஆல்பிரட் பி. கிப்ஸ் என்பார், "உன்னைக் குறித்து நீ யாரென்று நினைக்கிறாயோ, நீ அவனல்ல; உன்னுடைய நினைவு எப்படி இருக்கிறதோ அவ்வாறே நீ இருக்கிறாய்" என்று அழகுற எடுத்துரைத்துள்ளார். ஒரு மனிதன் எவற்றைத் தனது சிந்தனையில் கொண்டிருக்கிறானோ, அவைகளே அவனுடைய நடத்தைக்கு வழிகாட்டியாக இருக்கின்றன.

ஞானத்தில் சிறந்த சாலமோன் அரசர், "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்று சொல்லியிருக்கிறார் (நீதி. 4:23). இவ்வசனத்தில் காணும் இருதயம் என்னும் சொல் மனது என்னும் சொல்லைக் காட்டிலும் பொருட்செறிவு மிக்கதாயினும், இருதயம் என்னும் சொல்லிற்குப் பதிலாக மனது என்னும் சொல்லைப் பயன்படுத்தினாலும் இவ்வசனத்தின் பொருள் நல்ல அர்த்தம் கொண்டதாகவே இருக்கிறது. "எல்லாக் காவலோடும் உன் மனதைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்." மனது என்னும் ஊற்றிலிருந்தே நமது பண்பு வழிந்தோடுகிறது. ஆதாரத்தைக் கட்டுப்படுத்துவீர்களென்றால், அதிலிருந்து வழிந்தோடும் நீரோடையையும் கட்டுப்படுத்திவிடலாம்.

## பத்தாவது கட்டளை

பத்துக் கட்டளைகளில் ஒன்று சிந்தனை வாழ்க்கையைப் பற்றியதாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



"பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குரிய யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" (யாத். 20:17).

இச்சை என்பது மனதிலுண்டாகும் செயலாகும். தேவனுடைய சித்தத்திற்கு அப்பாற்பட்டு நாம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற விருப்பமே இச்சையாகும். "இச்சியாதே" என்று தேவன் கூறுகிறார்.

இந்தக் கட்டளையினால்தான் தர்சு பட்டணத்தாராகிய சவுல், தனது இருதயத்தில் கண்டித்து உணர்த்தப்பட்டார். அவரோ, பிறர் போற்றும் வகையில் வாழ்வதில் பெருமிதம் கொண்டிருந்தார். எந்தவொரு கொடிய பாவத்தையும் அவர் தனது வாழ்க்கையில் செய்ததில்லை. ஆனால், பத்தாவது கட்டளையின் பொருள் அவருடைய உள்ளத்திற்கு வெளிச்சமானபோது, அவருடைய பொல்லாங்கான எண்ணங்கள் கொடிய பாவச் செயல்களுக்கு ஒப்பானவை என்பதை உணர்ந்து கொண்டார். தொடர்ந்து தனது சிந்தனை வாழ்வை ஆராய்ந்து பார்த்தபோது தனது பாவத்தைக் குறித்த கண்டிப்பில் மூழ்கிப் போனார்.

"பாவம் இன்னதென்று நியாயப் பிரமாணத்தில் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை, இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே. முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக் கேதுவாயிருக்கக் கண்டேன். பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" (ரோமர் 7:7-11).

## அது எவ்வாறு செயல்புரிகிறது

யாக்கோபு பாவத்தின் செயல் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கத்தை அழகுற மொழிகிறார். "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக். 1:13-15).

இங்கே, பாவம் மனிதனுடைய வாழ்க்கைச் சக்கரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. முதலாவது கர்ப்பந்தரித்தல் நடைபெறுகிறது. பிறகு குழந்தை பிறக்கிறது. அடுத்து அந்தக் குழந்தை வளர்ந்து மனிதனாகிறான். கடைசியில் அவன் இறந்து

போகிறான். அதுபோலவே பாவமும் செயல்புரிகிறது. முதலாவதாக மனிதனின் உள்ளத்தில் பாவம் கர்ப்பந்தரிக்கிறது. பிறகு அது செயலாக மாறுகிறது. அடுத்து அந்தச் செயல் பழக்கமாக மாறுகிறது. கடைசியில் அது மரணத்திற்கு வழி நடத்துகிறது. நாம் நம்முடைய மனதில் ஒரு பாவத்தைப் பற்றித் தொடர்ந்து எண்ணிக் கொண்டிருந்தால், உடனடியாகவோ அல்லது காலம் கடந்தோ அதைச் செய்வோம் என்னும் உண்மை இங்கே மறைமுகமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதனைப் பழமொழியாகச் சொல்லியுள்ளனர்.

> சிந்தனையை விதைத்துச் செயலை அறுவடைசெய்,
> செயலை விதைத்துப் பழக்கத்தை அறுவடைசெய்,
> பழக்கத்தை விதைத்து நடத்தையை அறுவடைசெய்,
> நடத்தையை விதைத்து முடிவை அறுவடைசெய்!

சிந்தனை வாழ்வின் முக்கியத்துவத்தை கர்த்தராகிய இயேசு தமது போதனையில் மிகவும் அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார்.

ஒருநாள் சில யூதர்களைத் தம்மிடம் அழைத்து, அச்செய்தியைத் தயக்க மின்றி மொழிந்தார். அவர்களோ வெளிப்படையாகச் செய்யும் செயல்களைக் கவனத்துடன் செய்பவர்கள்; உள்ளத்தின் எண்ணங்களைக் குறித்து கவலை யற்றிருப்பவர்கள். பன்றி இறைச்சி, முயல், இரால், நண்டு போன்றவற்றை உண்பதால் தீட்டாகிவிடும் என்று மோசேயின் பிரமாணத்தின்படி கற்பிக்கப் பட்டவர்கள். நியாயப்பிரமாண காலத்தில் அவ்வகை உணவு மனிதனைத் தீட்டுப்படுத்தும் என்பது உண்மைதான். ஆயின், இயேசு கிறிஸ்து உணவுப் பொருட்கள் ஒருமனிதனைத் தீட்டாக்குவதில்லை, அவன் *மனதின் நினைவுகளே* அவனைத் தீட்டாக்குகிறது என்று கூறி அந்தக் காலகட்டத்திற்கு முடிவைக் கொண்டுவந்தார்.

> “பின்பு அவர் ஜனங்களெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள். மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும். கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக் கடவன் என்றார். அவர் ஜனங்களைவிட்டு வீட்டுக்குள் பிரவேசித்தபோது, அவருடைய சீஷர்கள் அவர் சொன்ன உவமையைக் குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள். அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாத வர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப் படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ள வில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லாப் போஜனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசனவழியாய் நீங்கிப்போகும். மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படி யெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும். களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங் களும், கபடும், காம விகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவை களாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்” (மாற்கு 7:14-23).



“பறவைகள் உங்கள் தலையில் வந்து அமர்வதை உங்களால் தடுக்க இயலாது; ஆனால் அவை அங்கே கூடு கட்டுவதை உங்களால் தடுக்க முடியும்” என்று கூறித் தங்களுடைய பாவ சிந்தனைகளுக்குச் சாக்குப்போக்குச் சொல்லும் பக்தியுள்ள மனிதர்களை நாம் காண்கிறோமே! அழைக்காமலேயே ஒரு மனிதனுடைய மனதில் தோன்றும் இச்சையுண்டாக்கும் சிந்தனைகளைப் பாவம் என்று கருதக்கூடாது என்பதே இதன் பொருள். அப்படிப்பட்ட சிந்தனைகளை அழைத்து அதற்குச் செயல்களில் இடங்கொடுக்கிறதே பாவம் என்பது அவர் களது வாதம். “அவை பாவம் இல்லையென்றால், அவை தூய்மையும், பரிசுத்த முமாக இருக்கின்றனவா?” என்னும் கேள்வி நமக்குள் எழுகிறது. எந்த ஒரு இச்சையான நினைவும், பொல்லாங்கும், அழைக்கப்பட்டாலும், அழைக்கப் படாவிட்டாலும் அது பாவமே என்பதுதான் சரியானவிடை. அந்தச் சிந்தனை நியாயம் தீர்க்கப்பட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும். ஆசை இச்சைகளைத் தூண்டிவிடும் விளம்பரங்களும், சீர்கேடான பேச்சுக்களும், தேவையற்ற மாசுபடிந்த எண்ணங்களும் தொடர்ந்து நம்மைத் தாக்குவதால் இவ்வுலகில் தீட்டுப்படாமல் வாழ்வது கடினம். ஆனால் அப்படிப் பட்ட எண்ணங்கள் மனதில் தோன்றியவுடனே, அவற்றைப் பாவம் என்று சொல்லி உடனடியாகத் தவிர்த்து, நம்மைவிட்டு அகற்றுவதே சரியான முறையாகும்.

## அதனை நினைக்கவும் செய்யாதீர்கள்

தமது மலைப்பிரசங்கத்தில் இயேசுநாதர், பாவ எண்ணங்களின் தீமையைக் குறித்துத் தெளிவாக உரைத்துள்ளார்.

> “கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்க ளுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்

தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்'' (மத்தேயு 5:21,22).

''விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப் பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று'' (மத்தேயு 5:27,28).

நியாயப் பிரமாணம், ''கொலை செய்யாதே'' என்றுரைத்தது; ஆனால் இயேசு கிறிஸ்துவோ, ''கொலையைப் பற்றி நினைக்கவும் செய்யாதே'' என்று கூறினார். ஏன் அவ்வாறு கூறினார். நீங்கள் அதைப்பற்றி நினைக்காவிட்டால் அதைச் செய்ய மாட்டீர்கள் என்பதுதான் காரணம். ''விபசாரம் செய்யாதே,'' என்று நியாயப்பிரமாணம் உரைத்தது. ''இச்சையோடு ஒரு ஸ்திரீயைப் பார்க்காதே'' என்றுரைத்தார் இயேசுநாதர். இவ்வாறு அவர் உரைத்ததன் காரணம் என்ன? செயலுக்கு மூலகாரணம் அதைக் குறித்த சிந்தனை என்பதே ஆண்டவர் அவ்வாறு உரைத்ததற்குக் காரணமாகும். உங்கள் மனதில் தோன்றும் நினைவை அழித்துப் போட்டால், பின்னர் அச்செயலுக்காக வருந்தவேண்டிய அவசியம் ஏற்படாது.

இந்த உண்மையை அப்போஸ்தலனாகிய யோவான் தனது மடலில் எதிரொலிக்கிறதைக் காண்கிறோம்.

''தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனா யிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்'' (1 யோவான் 3:15).

ஒருவரைப் பகைப்பதே கொலைக்குச்சமம் என்று சொல்வது மிதமிஞ்சிய பேச்சாகத் தோற்றமளிக்கலாம். ஆயினும், பகையும் கொலையும் ஒன்றோ டொன்று தொடர்புடையவைகளாக இருக்கின்றன. பகை காரணமாகவும், கொலை விளைவாகவும் விளங்கி, இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய வைகளாக இருக்கின்றன. பகை, கொலையின் கருவுற்ற நிலையாகும். வன்மமும், வெறித்தனமான கோபமும் எங்கே இல்லையோ, அங்கே கொலை நிகழாது.

மனிதனின் உள்ளம் விளங்காத புதிராகவும், வியக்கத்தக்க அற்புதமாகவும் இருக்கிறது. இராணுவத் தலைமையகம் அனைத்துக் கட்டளைகளையும் எவ்வாறு தனது போர் முகாம்களுக்கு அனுப்புகிறதோ, அதற்கொப்பாகவே ஒருவருடைய மனதும் செயல்புரிகிறது. ஒருவருடைய மனது எழுதுகோலை எடுத்து எழுது என்று கைக்குக் கட்டளையிடுகிறது. என்னென்ன எழுதவேண்டும் என்று தீர்மானிப்பதும் அவருடைய மனதே. நீரூற்றிலிருந்து நீர் ஓடிவருகிறது போல், மனதிலிருந்து எண்ண அலைகள் அனுப்பப்படுகின்றன. இது ஒரு தொலைத் தொடர்பு அமைப்பாகவும் காணப்படுகிறது. இவையாவும் எங்ஙனம் நடை பெறுகின்றன? சிந்தனை என்பது யாது?



ஒரு மனிதனின் மூளை செய்யும் எல்லா வேலைகளையும் செய்யத்தக்க கணிப்பொறி ஒன்றை அமைத்தால் அது அமெரிக்க நாட்டு தலைமை அரசினர் மாளிகை அளவிற்குப் பெரியதாய் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அவ் வளவு பெரியதாய், இருந்தாலும் அது மனிதனின் மனதிற்கு ஈடாகாது என்றும் கருதுகின்றனர்.

பலர் தம்முடைய மனதைக் குறித்துக் கவலையற்றிருக்கின்றனர். ஆனால் அது மனிதனுக்கு இறைவன் தந்த திறமையாகும். அவனையே அதற்குப் பொறுப்பாளியுமாக்கியுமிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் பெரியதும் பல அதிகாரங்கள் உடையதுமான நாட்டின் அரசனைப் போல இருக்கிறோம். அவரவருடைய மனதே அந்த நாடாகும். என்னென்னவற்றைச் சிந்திக்கிறோம், என்ன விதமாய்ச் சிந்திக்கிறோம் என்பதற்கு அவரவர் பொறுப்புடைய வராவோம். அதனை நாம் நல்லதற்கும், கெட்டதற்கும் பயன்படுத்தலாம். தகுதியுடைய செயலுக்கும், தகுதியற்ற செயலுக்கும் அதனைப் பயன் படுத்தலாம். நமது சிந்தனையை நாம் கட்டுப்படுத்தவும் முடியும்.

## மனதின் நல்ல பகுதி

நல்ல செயல்களை விளைவிக்கும் மனதின் ஆற்றலை நான் நினைத்துப் பார்க்கிறேன். ஹேண்டல் என்பார் இயற்றிய, ''மேசியா'' என்னும் கலை நிகழ்ச்சியை எண்ணிப்பார்க்கிறேன். அந்த இசை, வேத எழுத்துகளோடு எவ்வளவு அழகுற ஒன்றியிருக்கிறது. அந்த வேதப் பகுதியைப் படிக்கும்போது அந்த இசை என்னுடைய உள்ளத்திற்குள் பிரவாகிக்கிறது. நம்மைப் பரலோகத் திற்கு எடுத்துச் செல்லும் அளவிற்கு அவ்விசை நிகழ்ச்சி ஆவிக்குரிய அற்புதப் படைப்பாக இருக்கிறது.

ஐசக் வாட் என்பார் இயற்றிய ''அற்புதச் சிலுவையை நான் ஆராய்ந்து பார்த்தபோது'' என்னும் பாடலை நான் எண்ணிப்பார்க்கிறேன். அவர் தம்முடைய மனதை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்புவித்துள்ளார்; இந்த ஒரு பாடலை மட்டுமே கிறிஸ்தவ உலகிற்கு அர்ப்பணித்துள்ளார். ''அன்னாரது தகுதி நிறைந்த வாழ்க்கைக்கு இவ்வொரு பாடலே சான்றாக விளங்குகிறது'' என்று எனதுள்ளத்தில் நான் அடிக்கடி சொல்லிக்கொள்வதுண்டு.

மில்ட்டன் என்பாரை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் தமது சிந்தனை யைக் கட்டுப்படுத்தி, உடல் வருத்தம் பாராது, அயராது உழைத்து ''இழந்த பரலோகம்'' என்னும் உன்னத காவியத்தை இயற்றினார். அன்னாரது உள்ளத்தை அவ்விலக்கியம் எவ்வளவாகச் செழிக்கப்பண்ணியிருக்கும்.

மைக்கல் ஏஞ்சலோவின் சித்திரங்களும், சிற்பங்களும் அவரது இயம்ப இயலா கலைத்திறனை எடுத்துக்காட்டுகின்றன. அண்ட சராசரத்தைப் பற்றிய அவருடைய மனம் ஓவியங்களிலும், சலவைக் கற்களிலும் பளிங்குபோல பளிச்சிடுவது நாம் பெற்ற பாக்கியமாகும்.

பிரசங்கிகளின் இளவரசன் என்று போற்றப்படும் சார்லஸ் ஹாடன் ஸ்பர்ஜன் என்பாரைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேன். அவரைக் குறித்து ஏ. டி. பியர்ஸன் என்பார், "அவர் தனது மனது முழுவதையும், மேலும், தேவன் அளித்த சந்தர்ப்பங்கள் யாவற்றையும், தேவனுக்கென்றே பயன்படுத்திக் கொண்டார்" என்று எழுதியுள்ளார். அன்னாரது கனிநிறைந்த வாழ்க்கையைக் குறித்தும், அவரது சொற்பொழிவுகளையும் நான் படிக்கும்போது இக்கூற்று உண்மையென்றே நம்புகிறேன்.

நமது நாட்களில் நடந்த ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். நிலவிற்கு பல விண்வெளிக்கலங்களை அனுப்புவதற்காகத் தங்களது உள்ளங்களை ஒப்புவித்து அனைத்தையும் திட்டமிட்டுச் செயலாற்றியவர்களை நினைத்துப் பார்க்கிறேன். அவர்களது தரிசனமும், திறமையும், துல்லியமான செயல்பாடும் எத்தனை சிறப்பு வாய்ந்தவை!

## பொல்லாங்கை நிறைவேற்றும் ஆற்றல்

பொல்லாங்கைச் சிந்திக்கும் உள்ளங்களைப் பற்றியும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். கொடுங்கோலாட்சியில் நடந்த இருட்டறைச் சித்திரவதைகளும், சிறைப்பட்டோர் முகாம்களும், நச்சுவாயுக் கூடங்களும், எரிகலன்களும் எத்தனை கொடுமையானவை. அவர்களது கொடூரச் செயல்களால் இலட்சோபலட்ச மக்கள் மடிந்துபோனார்களே!

மற்றவர்களது விசுவாசத்தைத் தகர்க்க, தங்களது ஆற்றலை வீணடித்த வால்டேர், டாம்பெய்ன், இராபர்ட் இங்கர்சால் போன்ற மனிதர்களைப் பற்றிச் சிந்திக்கத் தோன்றுகிறது. தேவனாலே அறிவுடைய மனதைப்பெற்ற மேதைகள், நாத்திகத்தையும், இறைவனைக்குறித்த அறிவு தேவையற்றது என்ற கொள்கை யையும் சார்ந்து தங்களது உள்ளங்களைத் தீட்டுப்படுத்திக் கொண்டனர்.

இந்நாட்களிலே காமவிகாரப்படங்களை வரைந்து, அச்சிட்டு, வெளியிடும் மனிதர்களை நினைத்துப் பார்க்கிறேன். தங்களது உள்ளத்தை எவ்விதமாகப் பயன்படுத்துகின்றனர்! ஒழுக்கக் கேட்டை வியாபாரம் செய்யும் வர்த்தகங்களும், சுற்றுப்புறச் சூழ்நிலையை ஒழுக்கக்கேட்டினால் மாசுபடுத்தும் மனிதர்களும், மாறுபாடான உறவுகளை ஊக்குவிக்கிறவர்களும் எத்தனையெத்தனை பேர்!

எந்த ஒரு மனித *உள்ளமும்* பல்வேறு வகையில் கேடுபாடுகளைச் சிந்திக்கும் ஆற்றல் படைத்ததாக இருக்கிறது. இந்த வாரத்தில் நமதுள்ளத்தில் எழுந்த மிகக்கேவலமான எண்ணத்தைப் படமாகப் பிடித்துக்கொண்டு, ஒருமணி நேரம் பொது இடத்தில் நடந்து செல்ல ஒத்துக்கொள்ளமாட்டோம். எந்த மனிதனின் கண்களும் நம்மைப் பின்தொடர்வதில்லை என்னும் எண்ணத்தோடு, இருள் சூழ்ந்த பாதையிலே நமதுள்ளம் நம்மை நடத்திச் செல்ல இயலும் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். மேலும், நம்முள்ளம் எல்லாவிதச் சிற்றின்பங்களுக்குள்ளும், தகாத உறவுகளுக்குள்ளும் பங்கு பெறும்படி நம்மை இழுத்துச் செல்லவும் ஆற்றல் படைத்ததாக இருக்கிறது. அவற்றில் ஏதாவது ஒன்றை நமது நண்பர் செய்யக்கண்டால், நீதியின் பொருட்டு எழுகின்ற கடுங்கோபம் அவரைக் குற்றவாளியாகத் தீர்க்கும்; ஆனால் நாம் தனித்திருக்கும் நேரங்களில், இருட்டறைகளில் நமது மனதில் அதே கெட்ட நடத்தையைச் செய்கிறவராக இருப்போம். எனினும், நாம் குற்ற உணர்வு கொள்வதுமில்லை; கோபம் கொள்வதுமில்லை. காலம், இடம் என்னும் இயற்கையின் தடைகளைத் தாண்டி, நம்முள்ளம் நம்மை எங்கு வேண்டுமானாலும் கொண்டுபோகும்; நமக்குப் பிடித்த நபரோடு நாம் விரும்பியதைச் செய்யும்படியும் ஏவிவிடும். ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே இப்படிப்பட்ட சிந்தனைகள் எழ வாய்ப் புண்டு என்பதை எண்ணிப்பார்க்கிறபோது அதிக பயம் உண்டாகிறது. இந்த வாய்ப்புகளையெல்லாம் ஒருவர் தமது சிந்தனையில் தொடர்ந்து பழக்கப் படுத்திக் கொள்வாரானால், அதனுடைய விளைவு பேரழிவாக அமையும். தொலைக்காட்சிப் பிரசங்கியாக விளங்கி, உலகெங்குமுள்ள மக்களுக்கு நற்செய்தியை வழங்கியவர், 1988-இல் ஒழுக்கக்கேட்டில் சிக்கிக்கொண்டார். பின்னர், அவர் தன் சிறுபிராயத்திலிருந்து காமத்தைத் தூண்டும் படங்களைக் காண்பதில் கவர்ந்திழுக்கப்பட்டவர் என்று பாவ அறிக்கை செய்தார்.



இந்நாட்களில், பலர் தங்களைக் குத்தும் பாவத்திற்குள் அகப்பட்டவர்களாக வேதனைப்படுவதுண்டு. அவர்கள் அப்பாவத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமென்று கூறினாலும், தங்களது சிந்தனை வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். சமீபத்தில் கிறிஸ்தவர் ஒருவர் விமானத்தில் பயணம் செய்தபோது, அவர் அருகில் அமர்ந்த படைவீரனிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். சிறிது நேரம் கழித்து அப்படைவீரன் ஒரு பத்திரிக்கையை அக்கிறிஸ்தவரிடம் கொடுத்தான். அதில் அருவருப்பான படங்கள் இருப்பதைப் பார்த்தவுடன் அக்கிறிஸ்தவர் அந்தப் பத்திரிக்கையைத் திருப்பிக் கொடுத்து விட்டார். அதோடு ஒரு சிறிய வேதப்புத்தகத்தையும் அவனிடம் கொடுத்தார். அதன் பின்னர் இருவரும் சிறிது நேரம் அமைதியாக இருந்தனர். பின்னர் அப்போர்வீரன் கிறிஸ்தவரிடம் தனது ஒழுக்கக்கேடான வாழ்க்கையைக் குறித்தும், அருவருப்பான படங்களைப் பார்ப்பதில் தனது ஆவலைக் குறித்தும் சொல்லி அவைகளிலிருந்து விடுதலையடைய வேண்டுமென்ற தனது விருப்பத் தையும் கூறி, "நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா?" என்று வேண்டினான்.

ஜார்ஜ் குட்மேன் என்பார் சிந்தனையைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறுகிறார்:

> "கெட்ட சிந்தனை, துணியைப் பெட்ரோலில் நனைப்பதற்கு ஒப்பா யிருக்கிறது; சோதனை என்னும் தீப்பொறி அதன் மீது விழும்போது அத்துணியில் தீ பற்றிக்கொள்ளும். நீங்கள் கெட்ட சிந்தனையை

நிறுத்த வேண்டும். சிந்தனையைக் கட்டுப்படுத்தக் கூடிய கலையை இதுவரை கற்றுக் கொள்ளவில்லையென்றால், உடனடியாக அதைக் கற்றுக்கொள்ளுங்கள். மாம்சத்திற்கு ஏற்றவைகளில் உங்களுடைய மனதை இரகசியமாக ஈடுபடுத்துவதற்குத் தகுந்த காரணங்கள் ஏதுமில்லை. ஆவியானவரால் நம்முடைய ஒவ்வொரு நினைவை யும் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிதலுக்கென்று சிறைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு நினைவும் ஆவியானவரால் ஒடுக்கப்பட வேண்டும்."

## மாறுபாடுகளை விளைவிக்க மேற்கொள்ள வேண்டிய செயல்கள்

மேற்கூறிய செய்தியின் கருப்பொருள் யாது? மரத்தின் வேரைக் கோடரி யால் வெட்ட வேண்டும். சிந்தனை வாழ்க்கையைச் சரிப்படுத்தும் நடவடிக்கை யெடுக்க விருப்பமே தேவை.

இரட்சிக்கப்படாதவரைப் பொருத்தமட்டில், முதலாவது அவர் மனந் திரும்ப வேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது கொள்ளும் விசுவாசத்தினால் மறுபடியும் பிறக்க வேண்டும். அதன் பின்னரே உள்ளத்தில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் தரும் பலத்தினால், தூய்மையற்ற சிந்தனைகட்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்க முடியும்.

கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில், பல படிகள் சொல்லப்பட்டுள்ளன:

முதலாவதாக, ஜெபத்தில் எல்லாவற்றையும் கர்த்தரிடம் கொண்டுவர வேண்டும். தாவீதின் வார்த்தை அவ்வாறு தவறியவர்கள் ஏறெடுக்க வேண்டிய நல்லதொரு வேண்டுகோளாக அமைந்துள்ளது. "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத் திலே புதுப்பியும்" (சங். 51:10). விபச்சாரம், கொலை ஆகிய இரண்டு பாவங்களைச் செய்த பின்னர், தாவீது ஏறெடுத்த பாவ அறிக்கையின் ஒரு பகுதியாக இச்சொற்கள் அமைந் துள்ளன. இந்த வார்த்தைகளில் தாவீது தனது சிந்தனை வாழ்க்கையில் கட்டுப் பாடற்று வாழ்ந்ததை ஒத்துக்கொள்கிற உண்மை உள்ளடங்கியிருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் சமுகத்தில் இருப்பதுபோல எண்ணியவர் களாய் உங்கள் உள்ளத்தில் எழும் சிந்தனைகளை நியாயம்தீர்க்க வேண்டும். நினைவுகளும், செயல்களும் அவருடைய சமுகத்தில் எவ்வாறு கருதப்படும் என்பதே உண்மையான பரீட்சையாகும்.

"அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லாமேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களா யிருக்கிறோம்" (2 கொரி. 10:5 ).



நாம், நமது சிந்தனைகள் ஒவ்வொன்றையும் சிறையாக்கி கிறிஸ்துவின் தீர்ப்பிற்குக் கீழ்ப்படியும்படி அடிமையாக்கவேண்டும்.

அடுத்ததாக, கிறிஸ்து ஏற்றுக்கொள்ளாத ஒவ்வொரு நினைவையும் நாம் பாவம் என்றும், தீட்டு என்றும் அறிக்கை செய்ய வேண்டும். சாலையோரத்தில் நடந்து செல்லும்போதும், வாகனத்தில் பயணம் செய்யும் வேளையிலும், எங்கிருந்தாலும், நம் உள்ளத்தில் அலைபாயும் பொல்லாங்கான சிந்தனையைக் குறித்து, "கர்த்தாவே, அது பாவம் - என்னுடைய மனது தீட்டுப்பட்டுவிட்டது. குருதியின் வல்லமையை நாடுகிறேன்" என்று அறிக்கை செய்ய வேண்டும்.

மேலும், நம்முடைய உள்ளங்களிலிருந்து அப்படிப்பட்ட எண்ணங்களை அறவே அகற்ற வேண்டும். தங்களது பாவங்களை அறிக்கை செய்கிறவர்களுக் கல்ல, அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களுக்கே இரக்கம் வாக்குறுதியாகத் தரப்பட்டுள்ளது.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி. 28:13).

நடைமுறையில், நம்முடைய உள்ளத்திற்கு இது கூடாது என்று ஒரு வாரத்தில் பத்தாயிரம் தடவை கட்டளை கொடுக்கக் கற்றுக்கொள்வதாகக் காணப்படும். நாம் தவறாகச் சிந்திக்கும்படி ஏவிவிடப்படும் ஒவ்வொரு வேளை யிலும், நாம் "கூடாது, அந்த எண்ணத்தை என் உள்ளத்தில் அனுமதிக்க மாட்டேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் அதை நிராகரித்து, அகற்றி விடுகிறேன்" என்று கூற வேண்டும்.

## ஏற்புடைய சிந்தனைகள்

ஏற்புடைய சிந்தனைகளைச் சிந்திக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதைக் குறித்து பவுல் பிலிப்பியர் 4:8-இல் உரைப்பதாவது:

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்க முள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைக ளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ வைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்."

மேற்கூறியவைகளையும், பாவத்தையும் ஒரே நேரத்தில் சிந்திக்க இயலாது என்பதே குறிப்பிடத்தக்கது. கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தமும் நமது உள்ளத்தை நிரப்ப வேண்டுமென்றால், பாவமும், கேடுபாடும் அங்கிருந்து அகல வேண்டும். 'பழையதை அகற்றும் புதிய இணக்கம்' என்று சிலர் இதற்குப் பெயரிட்டு அழைக்கின்றனர். நீங்கள் உங்கள் விருப்பப்படிப் பெயரிட்டு அழையுங்கள், ஆனால் எப்படியாவது அதை நிறைவேற்றுங்கள். நாம்

எவ்வளவுக்கெவ்வளவு கிறிஸ்துவால் நிறைந்திருக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அவருக்கொப்பாக மாறுவோம் (2 கொரி. 3:18).

நாம் படிக்கிறவைகள், பார்க்கிறவைகள், நட்பு பாராட்டுகிறவர்கள் ஆகிய வற்றில் ஒழுங்குடன் இருப்போமென்றால், நம்முடைய சிந்தனை வாழ்க்கையில் வெற்றி பெறுவோமென்று பொதுஅறிவு நமக்குச் சொல்கிறது. சிற்றின்ப ரசனையூட்டும் நூற்கள், பத்திரிக்கைகள், திரைப்படங்கள், தொலைக் காட்சியில் காணும் பல நிகழ்ச்சிகள் யாவும் உடனுக்குடன் மாசுவிளைவிக்கும் ஏதுக்க ளாகும். இவைபோக சில பொருட்களும் மனிதர்களுடைய வாழ்க்கையில் இச்சையைத் தூண்டிவிடுகிறவைகளாக உள்ளன. தேவையற்றவைகளை எரிக்கும் பெரும்தீ நமக்குப் பேருதவியாக இருக்கும்.

கடைசியாக, நாம் கர்த்தருக்கு சேவை செய்வதில் அயர்ச்சியின்றி ஈடுபட வேண்டும். சரீரத்திற்கு நல்ல உணவையும், ஓய்வையும் அளித்துவிட்டு வேலை யின்றி இருப்போமென்றால், அந்நேரமே பெரிய ஆபத்தை விளைவிக்கும் நேரமாகும். கிறிஸ்துவுக்காக அயராது உழைப்பதனால் பெருத்த பாதுகாப்பும், காவலும் நமக்குக் கிடைக்கிறது. நேரத்தை மீட்கும் கலையைக் கற்றுக்கொண்டவ னுடைய உள்ளத்தில், தீய சிந்தனைகளுக்கு இடமில்லை. அவை அவனைத் தாக்குவதுமில்லை. நீதிமொழிகள் 16:3-இல் இந்த உண்மை நமக்குத் தரப்பட்டி ருக்கிறது.

“உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.”

மிகுந்த ஜாக்கிரதையுடன் உங்கள் உள்ளங்களைக் காத்துக்கொள்ள இதுவே வழியாகும். ●

# 18

# முறையான தியானம்

திருமறையைத் தியானம் செய்யாத ஒரு பரிசுத்தமான மனிதரை நான் இதுவரை கண்டதில்லை. ஒருவர், தான் தியானம் செய்வதற்கென்று எடுத்துக்கொள்கின்ற நேரத்திற்கும், அவருடைய திவ்விய சுபாவத்திற்கும் நேரடியான தொடர்பு உண்டு.

பக்தி விருத்திக்கும், தேவனுடைய புகழ்ச்சிக்கும் ஏதுவானவற்றில் நம் முடைய மனதின் நினைவுகளைப் பயனுள்ள வகையில் ஒருமுகப்படுத்து வதையே நாம் தியானம் என்று குறிப்பிடுகிறோம். கர்த்தரையும், தேவனுடைய வார்த்தைகளையும், கர்த்தருக்கு உரியவைகளையும் நோக்கி நமது சிந்தை களைத் திசை திருப்பும் மனதின் ஆற்றலே கிறிஸ்தவ தியானம் என்றழைக் கப்படுகிறது. நம்முடைய மனது எவ்வித நோக்கமுமின்றிப் பயனற்ற அற்பமான பொருட்களைக் குறித்துச் சிந்தித்து அலைந்து திரியாமல், பயனுள்ள பொருட் களைப் பிரதிபலிக்கப் பயிற்சிவிக்க வேண்டும். நாம் கிருபையிலும் அறிவிலும் பெருகும்படி, நமது சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டிவிட்டு, அது செயலற்றுப் போகாதபடிக் காத்திட வேண்டும். தியானம் என்பதைக் கிறிஸ்தவனுடைய திறமைமிக்க சிந்தனைக் களஞ்சியம் என்று கூறலாம்.

பசு தனது உணவை அசைபோடுவதைச் சித்தரித்துப் பாருங்கள். அது ஏற்கனவே தனது உணவை உண்டு விட்டது. ஆனால் அந்த உணவைத் தனது முதல் இரைப்பையிலிருந்து மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து அரைக்கிறது. அந்தப் பசுவின் முகத்தில் காண்கிற திருப்தி நமக்கு வியப்பைத் தருகிறது. அவ்வாறே விசுவாசி தேவனுடைய வார்த்தைகளை உண்கிறான். பின்னர் அதனை ஆழ்ந்து சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்கிறான். அஃது அவனுடைய வாழ் நாட்களெல்லாம் அமைதியையும் மனநிறைவையும் அளிக்கும்.

**தவறான முறை**

ஆவிக்குரிய வேத தியானத்தை நாம் இயற்கை நியதிகளுக்கும் பகுத்தறி விற்கும் அப்பாற்பட்டுக் காணப்படும் கடந்து செல்லும் முறையோடும், மற்ற ஆசியநாட்டுச் சமயங்கள் கையாளுகிற முறைகளோடும் ஒப்பிட்டுக் குழப்பிக்

கொள்ளக்கூடாது. பல சமயக் குழுவினர் மனிதனுக்குள்ளாகவே இறைவன் இருக்கிறார் என்றும், தியானத்தின் வாயிலாக தனக்குள்ளாக இருக்கும் தெய்வீக ஆற்றலை அவன் வெளிக்கொணர முடியும் என்றும் நினைக்கின்றனர். மனிதன் தனது உள்ளத்தை முற்றிலுமாகத் தூய்மையாக்கிப் பின்னர் இறைவனின் வெளிப்பாட்டிற்காகக் காத்திருக்க வேண்டும் என்றும் சில தியான முறைகள் கற்பிக்கின்றன. தங்களுடைய உள்ளங்களை வெறுமையாக்கிவிட்டு இறைவனின் வெளிப்பாட்டிற்காகக் காத்திருக்கும்போது அந்த உள்ளங்களை நோக்கிப் பிசாசு படையெடுக்கும் ஆபத்து உண்டாகும். பிசாசு பிடித்து அதற்குப் பின்னர் ஏதோ ஒரு வகைச் சீர்திருத்தத்தை அடைந்த ஒரு மனிதனைக் குறித்து இயேசு நாதர் மத்தேயு 12:43-45-இல் கூறியுள்ளார். அசுத்த ஆவி அந்த மனிதனை விட்டு வெளியேற்றப்பட்டது, ஆனால் அந்த வீடு வெறுமையாகக் கிடந்தது. அதைக் கண்ட அந்த அசுத்த ஆவி தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து அந்த மனிதனுடைய வாழ்க்கையில் குடிபுகுந்தது. கிறிஸ்தவ தியானமோ தியானிப்பவரது உள்ளத்தை உண்மையினாலும், ஒழுக்கத்தினாலும், நீதியினாலும், கற்பினாலும், அன்பினாலும், நற்கீர்த்தியினாலும், புண்ணியத்தினாலும், புகழினாலும் மற்றும் வேத வார்த்தைகளாலும் நிரப்புகிறது (பிலி. 4:8).

ஒருவர் ஆவிக்குரிய வளத்தையும், வெற்றியையும் அடைவதற்குத் தியானம் வழி வகுக்கிறது. "இந்த நியாயப்பிரமாண புத்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப் பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்" (யோசுவா 1:8). "இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி... தியானிப்பாயாக" என்று சொல்லியிருப்பதனால், தியானம் செய்வதின் இலக்குகளில் ஒன்று, ஒருவரது நடத்தை மாறுதல் அடைய வேண்டும் என்பதாம்.

தியானம் ஒரு மனிதனைத் தேவனுக்குள்ளாக ஆழமாக வேர் கொள்ளச் செய்கிறது. "அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங். 1:3).

தியானம் ஒருவரைத் தெய்வீகச் செய்திகளைப் பெற்றுக்கொள்ளத் தக்கவராக ஆக்குகிறது. கேட்பதற்கு நெருங்கியிருப்பவர்களுக்குத் தேவன் தமது மறைபொருட்களை வெளிப்படுத்துகிறார் (சங். 25:14). அந்தச் செய்திகள் வழிநடத்துகிறவைகளாகவோ, உற்சாகமூட்டுகிறவைகளாகவோ, புத்திபுகட்டுகிறவைகளாகவோ, சீர்திருத்துகிறவைகளாகவோ இருக்கும். ஆயின் வேதத்தின் சத்தியங்களை விளக்குகிறவைகளாக இருக்காது. வேதத்தில் காண்கின்ற சத்தியங்களுக்கு மேலாகப் புதிய சத்தியங்களை அவர் வெளிப்படுத்துகிற



தில்லை. பரிசுத்தவான்களுக்கு விசுவாசம் ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டு விட்டது (யூதா 3).

அற்பமான பொழுதுபோக்குகளில் நேரத்தை வீணாக்குவதிலிருந்து தியானம் ஒரு மனிதனைப் பாதுகாக்கிறது.

தியானம் தேவனுக்கு இன்பமளிக்கும் செயலாக இருக்கிறது. சங்கீதப் பாடலாசிரியன், "எனது தியானம் அவருக்கு இன்பமளிப்பதாக" என்று வேண்டு கிறான். நாமும், "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த் தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியா யிருப்பதாக" (சங். 19:14) என்று மன்றாடுகிறவர்களாயிருக்க வேண்டும். தியானம் கிறிஸ்துவின் சாயலை நம்மிடத்தில் உருவாக்குகிறது. நாம் எவ்வளவாக அவரால் நிறைந்திருக்கிறோமோ அவ்வளவாக அவருக்கு ஒப்பாக மாறுவோம் (2 கொரி. 3:18).

## எங்ஙனம் தியானம் செய்ய வேண்டும்?

தியானம் செய்யும் முறையைப் பொறுத்தமட்டில், எல்லாருக்கும் பொது வானதும் சிறந்ததுமான முறை என்று ஒன்று இல்லையென்றே கூறலாம். ஒவ்வொரு விசுவாசியும் தனக்குப் பொருத்தமானதாகவும், அவரவருடைய சூழ்நிலைக்கேற்றதாகவுமுள்ள முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் அதற்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைக்க வேண்டும். அதற்கென்று ஒரு அமைதியான இடத்தையும் தேர்ந்தெடுக்க வேண்டும். தொலைபேசி, தொலைக் காட்சி, வானொலி, போக்குவரத்து போன்ற, கவனத்தைத் திசை திருப்பும் அனைத்து செயல்களையும், இடத்தையும் தவிர்க்க வேண்டும். ஈசாக்கு தியானம் செய்வதற்காக மாலைப் பொழுதில் வயல்வெளியில் அமைதியான ஓரிடத்தைத் தெரிந்து கொண்டான் (ஆதி. 24:63). பகலோ, இரவோ எவ்வேளை யாக இருப்பினும் நமக்குக் கிடைக்கும் தனிமையான நேரத்தைத் தியானிப்பதற் கென நாம் பயன்படுத்த வேண்டும். தாவீது தேவனை நினைவுகூர்வதற்காகவும், அவரைக் குறித்துத் தியானிப்பதற்காகவும், தான் படுத்திருக்கும் நேரத்தைப் பயன்படுத்தினான் (சங். 63:6).

செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்த நினைவுகள், தொலைபேசியில் பேசவேண்டியவைகள், பிற சிந்தனைகள் ஆகியவை நம்முடைய தியானத்தின் போது நமது உள்ளத்தில் குறுக்கிடும்; உடனடியாக அவற்றை ஒரு கையேட்டில் குறித்துக்கொள்ள வேண்டும். அவற்றைக் குறித்துக் கொண்டவுடன் நமது மனதிலிருந்து அந்த சிந்தனைகளை அறவே அகற்றிவிட்டுத் தியானத்தைத் தொடர வேண்டும்.

தியானிப்பதற்குத் தகுதியான ஆய்வுப் பொருட்களில் தட்டுப்பாடு இல்லை. இரவு நேரத்தில் சங்கீத ஆசிரியனின் உள்ளத்தைத் தேவனுடைய விலையேறப்பட்ட வாக்குறுதிகளைப் பற்றிய தியானம் ஆட்கொண்டது (சங். 119:148).

முதல் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ள பாக்கியவான் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வார்த்தைகளைத் தியானம் பண்ணுகிறவனாயிருக்கிறான் (சங். 1:2; 119:78). பியூரிடன் என்றழைக்கப்பட்ட குழுவினர், தேவனுடைய குணநலன்களைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கிறவர்களாயிருந்த காரணத்தினால் அந்த எண்ணங்கள் அவர்களுடைய ஆத்துமாவின் பெரும்பகுதியை நிறைவு செய்வதாயிருந்தது. தேவனுடைய படைப்பில் காணும் வியத்தகு செயற்பாடுகள், அவருடைய அருட்கொடை ஆகியவை நமது சிந்தைக்குத் தீர்ந்துபோகாத உணவாயிருக்கின்றன (சங். 143:5). மீட்பின் வியத்தகு தன்மை நமது தியானத்திற்கு முடிவில்லா பொருட்களைத் தருகின்றது. ஆற்றல் மிக்க கிறிஸ்தவ ஊழியத்தோடு தொடர்புடைய இன்றியமையாத பொருளைக் குறித்துத் தியானிக்கும்படி பவுல் தீமோத்தேயுவிடம் கூறினார் (1 தீமோ. 4:15).

தொடக்கத்தில், திருமறையிலிருந்து ஒரு சிறு பகுதியை எடுத்துக்கொண்டு, ஓரளவு கற்பனை வளத்துடன் ஒவ்வொரு சொல்லையும், சொற்றொடரையும் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எடுத்துக்காட்டாக "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன்" (கலா. 2:20) என்னும் பகுதியை எடுத்துக்கொள்வோம்.

*தேவனுடைய குமாரன்* – இந்தச் சொற்றொடரைப் பற்றிச் சிந்திப்போம்! வெறும் மனிதனல்ல, தேவனே மாம்சத்தில் வெளிப்பட்டார். அவரே ஜீவனும் மகிமையும் நிறைந்த கர்த்தர். இந்த அண்டசராசரத்தைப் படைத்தவரும் இதனைத் தாங்குபவரும் அவரே.

*அன்புகூர்ந்து* – அவருடைய அன்பை விளக்கிக்காட்டும் சில பண்புத் தொகைகளை அதனுடன் இணைத்துக் காணலாம். அந்த அன்பு அளவிட இயலாதது, தகுதியற்றோரிடம் செலுத்தப்படுகிறது, தம்மையே பலியாகச் செலுத்திய அன்பு, இணையற்றது, பாகுபாடற்றது. மேலும் 1 கொரி. 13:4-8-இல் அன்பைக் குறித்துச் சொல்லியிருக்கிறவைகளை ஆய்ந்து பாருங்கள்.

*என்னில்* – திருமறை நமது ஜென்ம சுபாவத்தை எங்ஙனம் விவரிக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பாவிகளும், துன்மார்க்கரும், மரித்துப்போனவர்களும், தேவனுக்கு எதிரிகளும், தேவனற்றவர்களும், கிறிஸ்து இல்லாதோரும், நம்பிக்கையற்றவர்களும், பலமற்றவர்களுமாயிருந்தோம்.

*ஒப்புக்கொடுத்த* – அன்பு எப்பொழுதும் கொடுக்கிறது. அவருடைய அன்பு எதனைக் கொடுத்தது என்று சிந்தியுங்கள். அவரையே கொடுத்தது. அவர் பணத்தையோ பிறபொருட்களையோ கொடுக்கவில்லை. அவர் தம்மையே ஒப்புக்கொடுத்தார். அவருடைய குருதி, அவருடைய ஜீவன், அவருடைய தனைத்தையும் ஒப்புக்கொடுத்தார் என்பதே அதன் பொருளாகும். நாம் மீட்பை பெற்றுக்கொள்வதற்காக மிகப்பெரிய விலையைக் கொடுத்தார்.



*எனக்காக* – தகுதியற்ற எனக்காக இவையாவற்றையும் தந்தருளினார் என்பது எவ்வளவு வியப்பு மேலிடச் செய்கிறது! அவரால் மட்டுமே இவ்வாறு தர இயலும். அந்த அன்பிற்கு நான் எங்ஙனம் கைம்மாறு செய்வேன்? ஐசக்வாட்ஸ் என்பாரின் சொற்களை என்னுடைய சொற்களாக பாவித்துக்கொள்கிறேன்.

> "இந்தப்புவி அனைத்தும் எனக்குச் சொந்தமானதாக இருந்து, அனைத்தையும் அவருக்குக் காணிக்கையாகச் செலுத்தினாலும் அஃது மிகச் சிறியதே. அவருடைய அன்போடு அதனை ஒப்பிட இயலாது. அவருடைய அன்பு மெய்சிலிர்க்கச் செய்யும் வியத்தகு தன்மை வாய்ந்தது. அதன் காரணமாக என்னுடைய ஆன்மா, வாழ்வு யாவற்றையும் அவருக்கே சமர்ப்பிக்கிறேன்."

வேத அறிவு ஓரளவேயுடைய புதிய விசுவாசிக்கு இவ்வாறு தியானிக்கும் முறை கடினமாகத் தோன்றினால், வேதத்தில் சொல்லியிருக்கிற ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டு, அதைத் தன் மனக்கண்முன் காண முற்பட வேண்டும். அதனை அவ்வாறு தொடர்ந்து படிக்கும்போது அதினின்று சில பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, லூக்கா 5:27,28-இல் மத்தேயு என்னும் லேவி கர்த்தரால் அழைக்கப்பட்ட நிகழ்ச்சியைப் படித்து அதனைப் படமாக மனக்கண்முன் நிறுத்துங்கள். மத்தேயு வரியையும், தீர்வையையும் வசூலிக்கிறான். அதற்காக அவன் பல மனிதர்களைச் சந்திக்கிறான். அப்பொழுது அங்கே இயேசுநாதர் வருகிறார். அவரிடத்தில் மத்தேயு கண்ட வேறுபாடுகள் எவை? "என் பின்னே வா" என்று மட்டுமே இயேசுநாதர் கூறினார். மத்தேயுவின் உள்ளத்தில் என்னென்ன சிந்தனைகள் ஊடுருவியிருக்கும்? அங்கே நான் இருந்திருப்பேனென்றால் என்னுடைய உள்ளத்தில் என்னென்ன நினைவுகள் ஊடுருவியிருக்கும்? இயேசுநாதரைப் பின்பற்றிச் செல்ல அவன் எவற்றையெல்லாம் விட்டுவிட வேண்டியதாயிருந்தது? அவன் அடைந்துகொண்டது என்ன?

இவ்வாறு ஒரு காட்சியைப் படமாக மனக்கண்களாலே காண்கிற முறையை, *இவ்வாறு நடைபெற வேண்டும்* என்ற எண்ணத்துடன் காண்கிற முறையோடு ஒப்பிட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் இவ்வாறு நடைபெற வேண்டும் என்று விரும்பி அதனைத் தரிசிப்பதனால் அதனை அடைந்துகொள்ளலாம் என்று சில மதக்குருக்கள் கற்பிக்கிறார்கள். அது செல்வமோ, புகழோ, மேன்மையோ, இன்பமோ எது வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும் கூறுவார்கள். அவர்களுடைய கூற்றுக்கு வேதத்தில் எவ்விதச் சான்றுமில்லை.

முனைவர் டபிள்யு. இ. சேங்ஸ்டர் என்பார் கூறியதாவது: "பக்தி நிறைந்த மாணவன் வேதத்தை வாழ்ந்துகாட்டக் கற்றுக் கொள்கிறான், பயபக்தியுடன்கூடிய கற்பனை வளத்தினாலே வேதத்திற்குள்ளாகப் புகுந்து அதனைத் தனது சொந்த வாழ்க்கை வரலாறாக ஆக்கிக் கொள்கிறான். நம்முடைய கற்பனை வளத்தைக்

கொண்டு எதிர்கால நலத்தைத் திட்டமிடுவதினாலே எவ்விதச் சிறப்புமில்லை. அதற்கு மாறாக காலத்தின் பின்னோக்கிய பாதையில் சென்று, நமது ஆண்டவருடைய உலக வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளில் நாமும் சரீரப்பிரகாரமாக இருப்பது போன்று கற்பனை செய்து பங்குகொள்வதே சாலச்சிறந்ததாகும். பேதுருவோடும், யாக்கோபோடும், யோவானோடும் தோளோடுதோள் நடந்து, இரட்சகரின் அருகில் நிற்கிறவனாக எண்ணிக்கொள்ள வேண்டும். லாசரு கல்லறையினின்று வெளிவருவதைக் காணவேண்டும். இயேசுநாதரின் பாதத்தின் அருகில் மரியாளோடு அமர்ந்திருக்க வேண்டும். அந்நாட்களில் உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளை இந்நாளில் நடப்பது போன்று தெளிவாகக் காண்பதே நமது கற்பனை வளத்தின் சிறப்பாகும். வேதத்திற்கு வெளியிலிருந்து அதனை நாம் படிக்கலாம். அதற்கு உட்புறம் சென்று படிக்கலாம். வேதத்தை விட்டு நம்மை விலக்கிக் கொண்டு, எப்போதும் அதற்கு வெளிப்புறமாக இருந்து அதனை நாம் படிக்கலாம். அல்லது நாம் திருமறைக்குள்ளாகப் புகுந்து தெய்வீக வார்த்தைகளை வாழ்ந்து காட்டலாம்'' [2]

## வேலைமிகுதியினால் ஏற்படும் கனியற்ற வாழ்க்கை

நாம் மிகவும் அதிகமாக உலக வேலைகளில் ஈடுபடுவதின் காரணமாக, நமது தியான வாழ்க்கைக்குப் பெரிய தடை ஏற்படும். உலகியலில் சுறுசுறுப்பாக இருக்கிறவர்கள் கனியற்ற நிலையையே அனுபவிக்கின்றனர். நம்முடைய அலுவல் நமது வலிமையை அழித்துவிடுகிறது. குடும்பத்தின் தேவைகள் நம்மை வருத்துகின்றன – வீடு வாங்க வேண்டும், வாகனங்கள் வேண்டும், அவற்றைப் பராமரிக்க வேண்டும், உணவு, உடை, காப்பீடு, படிப்பு ஆகியவற்றிற்கு உண்டாகும் செலவுகள். உடனடித் தேவைகள் போன்ற கொடுங்கோன்மை முழுநேர கிறிஸ்தவ ஊழியர் என்று அழைக்கப்படுகிறவர்களையும் வீழ்த்திவிடுகிறது என்று சார்லஸ் ஹம்மல் என்பார் கூறியுள்ளார். செய்திகள் ஆயத்தம் செய்ய வேண்டும், சீஷத்துவ ஊழியம், ஆலோசனைக்கான அழைப்புகள், உதவி வேண்டி வரும் அழைப்புகள் போன்றவை, இரட்சகரின் பாதத்தின் அருகில் ஒரு ஊழியர் அமர்வதற்கு நேரம் அளிப்பதில்லை.

நாம் தொடர்ந்து கடினமான வேலை செய்து கொண்டே இருப்பவர்களாகக் காணப்படுகிறோம். ''நாங்கள் எப்பொழுதும் ஓட்டப்படுகிறோம்'' என்று தங்களுடைய வாகனங்களுக்கு ஜப்பானியர் விளம்பரம் கொடுப்பதில் பெருமை கொள்கின்றனர். வீட்டை நன்கு பராமரிக்க வேண்டும், கடைகளுக்குச் சென்று தேவையான பொருட்களை வாங்க வேண்டும் என்னும் உலகியல் சார்ந்த எண்ணங்களால் நம்மை நிறைத்துக் கொண்டு தேவையானவற்றை விட்டு விடுகிறோம். நாம் அவ்விதமாக விரட்டப்படுவதைக் காரணம் காட்டி நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொள்ளக்கூடாது. மிகுதியான அலுவல் உடையவர்களும் தியானம் செய்யலாம். தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை கையாளுகிற முறையிலே அதனைச் செயல்படுத்த முடியும். மிக உயர்ந்த பதவியில் இருப்பவர்களும்கூட தங்களுடைய அலுவல்களுக்கு இடையே கிடைக்கும் நேரத்தை இதற்கெனப் பயன்படுத்தலாம். காலத்தை ஆதாயப்படுத்தும் கலையை நாம் கற்றுக்கொள்வோமெனில் பரலோகத்தைக் காண்கிறவர்களாக இருப்போம். அவ்வாறு செய்ய இயலாதபடி மிகுந்த அலுவல் கொண்டவர்களாயிருப்போமெனில், நாம் உண்மையாகவே மிகவும் சுறுசுறுப்பானவர்கள்தான்.



> ஒரு மனிதன் ஒருமுறை உயரக் குதிப்பதால் தேவன் அவனுக்குச் சடுதியாகத் தம்மை வெளிப்படுத்தி விடுவதில்லை. வெறும் ஆர்வத்துடனோ, தற்செயலாகவோ தேவனைக் காண விரும்புகிறவர்களுக்கும் அவர் தம்மை வெளிப்படுத்துகிறதில்லை. ஆவிக்குரிய நிலையில் ஒரு சுற்றுலாப் பயணியைப் போல உள்ளவர்களுக்கும் அவர் வெளிப்படுவதில்லை. ஆயின், தனித்து மலையின்மேல் ஏறிய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே அவர் தமது மகிமையை வெளிப்படுத்துவார். மோசேயின் முகத்தில் பிரகாசித்த மகிமை, அவன் நாற்பது நாட்கள் தேவனோடு மலையில் கொண்டிருந்த ஐக்கியத்தினாலேயே உண்டாயிற்று. ஒரு கணப்பொழுது உண்டாகும் அனுபவத்தினாலோ, ஒரு வினாடியில் புகைப்படம் எடுப்பது போலவோ இது உண்டாகிறதில்லை. [3]

## பரலோகத்துடன் நேரடித் தொலைத் தொடர்பு

தியானம் கர்த்தரிடத்திலிருந்து நேரடியாகச் செய்திகளைப் பெறத்தக்கதான ஒரு நிலைக்கு மனிதர்களை அழைத்துச் செல்கிறது என்று ஏற்கனவே கூறினோம். இதைக் குறித்து நாம் மிகுந்த எச்சரிக்கையுடையவர்களாயிருக்க வேண்டும். ஏனோதானோவென்று கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துகிறவர்களும், ஜென்ம சுபாவம் உள்ளவர்களும் கூட ''கர்த்தர் என்னிடம்... என்று கூறினார்'' என்று சொல்வார்கள். ஆனால் திருமறையோ அல்லது அதன்பின்னர் அவர்கள் நடந்துகொள்ளும் முறையோ அப்படிப்பட்ட அனுபவம் ஒன்றும் நடக்கவில்லையென்பதை எடுத்தியம்பும். எனினும், தேவனோடு மிக நெருங்கிய நிலையில் ஐக்கியம் கொண்டவர்கள், அவரிடமிருந்து சில வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை மறுக்க இயலாது. நான் மூன்று எடுத்துக்காட்டுகளை இங்கு கூறி முடிக்கிறேன்.

தம்முடைய பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் தனக்கு வாக்களித்திருப்பதாகத் திருமதி ஷெப்பர்ட் என்பார் நம்பினார். இருந்தபோதிலும், இச்செய்தியை ஒரு பிரசங்கியாரிடம் கூறியபோது அது நடைமுறைக்கு ஒவ்வாத அறிவற்ற செய்தி என்று கூறிவிட்டார். அந்த அம்மையாரின் நோய்வாய்ப்பட்ட சகோதரர் அந்த நகரத்தின் வேறொரு பகுதியில் வசித்து வந்தார். அவர் இந்த நிகழ்ச்சியைக் குறித்து ஒன்றும் அறியாதவராயிருந்தார். அவர் ஒரு நாள் இரவு ஏசாயா 49 – ஆம் அதிகாரத்தைத் தியானித்துக்

கொண்டிருந்தார். அப்பொழுது அவர் தனது சகோதரிக்கு ஒரு செய்தியை அனுப்பும்படித் தன் மனைவியிடம் வேண்டிக்கொண்டார். "உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்" என்னும் 25 - ஆம் வசனமே அச்செய்தியாகும். அந்த அம்மையாரின் பிள்ளைகள் யாவரும் சில ஆண்டுகளில் இரட்சிக்கப்பட்டனர்.

ஆல்பிரட் என்பார் கர்த்தரிடம் மிகவும் நெருங்கிய ஐக்கியம் கொண்டவரா யிருந்தார். அவருடைய நெருங்கிய நண்பர் அலெக்ஸ் என்பார் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்து கொண்டிருந்தார். அவரும் உன்னதமான தேவனுடைய மறைவிடங்களில் வாசம் செய்பவராக இருந்தார். ஒருநாள் வயதுமுதிர்ந்த ஆல்பிரட் தனது மகளை நோக்கி, "உனக்குத் தெரியுமா, கடந்த மூன்று மாதங்களாக அலெக்ஸை தேவனுடைய கிருபாசனத்தருகில் காண வில்லை" என்றார். சில நாட்களுக்குப் பிறகு, அலெக்ஸ் மூன்று மாதங்களுக்கு முன்னர் இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது.

அது ஒரு சனிக்கிழமை மாலை; அலுவலகத்தில் தன் ஆத்தும வருத்தத் தோடு ஒரு இளைஞன் தேவனோடு போராடிக்கொண்டிருந்தான். அந்த விசுவாசி தன்னை ஆண்டவர் கைவிட்டுவிட்டார் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது தொலைபேசி மணி ஒலித்தது. மறுமுனையிலிருந்து ஆலன் ஸ்மித் என்பவர் பேசினார். வயது முதிர்ந்த அவர் சங்கீதப் புத்தகத்தில் தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். அவர், "என்னுடைய இதயத்தில் கர்த்தர் உன்னை வைத்தார். நான் இப்பொழுது உனக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேன்" என்று அந்த இளைஞனிடம் கூறினார். ஆலன் அந்த இளைஞனுக்கு அறிமுகமானவரெனினும் நெருங்கிய நண்பர் அல்லர். மனித முறையில் கூறுவோமெனில், அந்த இளைஞனைக் குறித்தும், அவனுடைய இன்னல்களைக் குறித்தும் அவர் அறிந்திருக்க எவ்வித வாய்ப்புமில்லை. அந்தச் சனிக்கிழமை மாலைப்பொழுதில் அவ்விளைஞனின் அலுவலகத்திற்கு அவர் சென்று அவனைப் பற்றி அறிந்திருப்பார் என்று எவரும் நினைப்பதற்கும் வாய்ப்பில்லை.

முர்டோ மேக்லியாட் என்பார், "விசுவாசத்தினால் கர்த்தருடன் நடந்து செல் பவர்கள் தங்களுடைய பாதையில் அவர் உடனிருக்கிறார் என்று அறிந்திருப்பார் கள். மேலும் அவருடைய அன்பையும் அக்கறையையும் அனுபவிக்காமல் இருக்க மாட்டார்கள். தேவன் அவர்களுக்கு அந்நியருமல்லர், அவர்களோடு பேசா திருக்கவும் மாட்டார்.... கிறிஸ்தவ அனுபவத்தின் எந்த ஆழத்திலும், உலகம் அறிந்திராத இரகசியங்கள் அடங்கியுள்ளன. இவ்வுலகில் தங்களுடைய பெயரை மட்டும் தாங்கினவர்களாக வாழ்கிறவர்களும் அதனை அறியமாட்டார்கள்" என்று கூறியுள்ளார். ●

# 19

# நாவடக்கம்

ஒரு கிறிஸ்தவனின் பேச்சு, அவனுடைய குணநலனின் அளவுகோல் என்றுரைப்போமாயின் அது எவருக்கும் வியப்பளிக்காது. ஏனெனில், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று திருமறை விளம்புகிறது (மத். 12:34). ஒருவருடைய பேச்சைக் கேட்டாலே, அவருடைய ஆவிக்குரிய நிலை எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ளலாம்.

நாம் நம்முடைய அனுபவத்தில் கற்றுக்கொண்டதை யாக்கோபு நமக்கு நினைவூட்டுகிறார். நாவு ஒரு சிறிய உறுப்பாக இருப்பினும், மிகப்பெரிய அளவில் நல்லதையும், பொல்லாப்பையும் செய்ய வல்லதாயிருக்கிறது. வலிமைமிக்க காட்டுவிலங்குகள் அனைத்தையும் அடக்கக்கூடிய மனிதன், தனது நாவை அடக்க இயலாதவனாயிருக்கிறான். "அது அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது." ஒன்றுக்கொன்று எதிரான வைகளை உண்டாக்கும் ஒரு பொருளை நாம் இயற்கையில் காண முடியாது. ஆயின், நாவோ இனிப்பையும் கசப்பையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் பேசும் (யாக். 3:1-12).

நாம் நமது நாவை அடக்கக்கூடாதவர்களாக இருப்பினும், தேவன் அதைச் செய்யக்கூடியவராக இருப்பதினால் நாம் அவருக்கு எப்பொழுதும் நன்றிக்கடன் உடையவராய் இருக்கவேண்டும். ஆவியின் வல்லமையால் கூர்மையான நாவுகளைக் கிருபைபொருந்தினவைகளாகவும், புறம்கூறுகிறவைகளைப் பக்தி விருத்திக்கேற்றவைகளாகவும் அவர் மாற்றுவார்.

நமது வாய்மொழியைக் குணநலமிக்கதாகக் காக்கவல்ல பண்புகள் சிலவற்றைக் காணவிழைவோம்:

### அது உண்மையுள்ளதாக இருக்கவேண்டும்

"அன்றியும் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபே. 4:25). தேவனால் பொய் பேசமுடியாது; மற்றவர்கள் பொய் பேசுவதை அவரால் அனுமதிக்கவும் முடியாது. சிறுபொய், மற்றவர்கள் மனவருத்தம்

அடையாமல் இருப்பதற்காகச் சொல்லப்படும் பொய், மிகைப்படுத்திப் பேசுதல், முகஸ்துதி, நிறைவேற்றமுடியா வாக்குறுதிகள் யாவும் பேசக்கூடாதவையாகும். கிறிஸ்தவ ஊழியத்தின் பலனை மிகைப்படுத்தி செய்தித்தொகுப்பு அளிக்கக் கூடாது. மேலாளர் அறைக்குள் இருக்கும்போது, அவருடைய செயலாளர், மேலாளர் இல்லையென்று கூறலாகாது. அழைக்கப்படாத விருந்தினர்களிடம், பெற்றோர் இல்லையென்று சொல்லும்படி பிள்ளைகளைப் பழக்கப்படுத்தக் கூடாது.

ஒருவர் உண்மையுள்ளவராக இருப்பாரென்றால் அவருக்கு நல்ல நினைவுத்திறன் தேவையில்லை. ஸ்டேன்லி ஜோன்ஸ் என்பார், "நீங்கள் பொய் சொல்லும் பழக்கம் உடையவராயின், அப்பொய்களை மறைப்பதற்கு நல்ல நினைவுத்திறன் படைத்தவராயிருக்க வேண்டும். எப்போதும் உண்மை பேசுவீர்களெனில், உங்களுக்கு ஞாபகசக்தி தேவையில்லை. உண்மையைச் சொன்னால் போதும். அது மிகவும் எளிது" எனக் கூறியுள்ளார்.

## அது பயனுள்ளதாயிருக்க வேண்டும்

"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்...." (எபே. 4:29). இங்கு கெட்டவார்த்தை என்னும் சொல் கீழ்த்தரமானது, பேசத் தகாதது, பயனற்றது என்னும் பொருள்படும். ஒலிநாடாவில் பதிவு செய்யும் கருவி வந்த நாட்களில், சிலரது உரையாடலை அவர்கள் அறியாமல் பதிவு செய்து, பின்னர் அவர்களிடம் அதைப் போட்டுக்காட்டி, அவர்களுடைய பேச்சிலே எவ்விதப் பயனுமில்லையென்று அறியச்செய்து நாணமடையச் செய்வார்கள். "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து எச்சரித்துள்ளார். எனவே வீண்பேச்சைப் பாவமென்று அறிக்கையிட்டு, அதனை நம் வாழ்க்கையினின்று அகற்ற வேண்டும்.

## அது பக்திவிருத்திக்கேதுவானதாயிருக்க வேண்டும்

"பக்திவிருத்திக்கேதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே. 4:29).

அஃதாவது, கேட்போர் ஆவிக்குரிய நிலையில் கட்டப்படுவதற்கென்று, எப்போதும் நமது பேச்சு வளமுள்ளதாகக் காணப்படவேண்டும். பக்திவிருத்திக் கேதுவான பொருளைக் குறித்தே எப்போதும் பேசும்படி எச்.ஏ. அயன்சைடு ஏவப்படுவார். பல வேளைகளில், "இந்த வசனத்திற்கு என்ன பொருளாக இருக்கும்?" என்று ஒரு கடினமான வசனத்தைச் சொல்லிக் கேட்பார். அவரோடு உரையாடுபவர் அதன் பொருளைச் சரியாக அறிந்திருக்கவில்லையென்றால், "இதனுடைய பொருள் இவ்வாறு இருக்குமா?" என்று சொல்லி அவ்வசனத்தின் பொருளைக் கிருபையுடன் விளக்குவார். அவர் கூறுகிற விளக்கம் மறக்க முடியாததாக இருக்கும்.



ஒருமுறை எனது நண்பரொருவர் வேறொருவருடைய குறைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். அது கேட்பதற்கு மிகுந்த ஆவலைத் தூண்டிவிடக் கூடியதாகத் தோன்றிற்று. ஆனால் அந்த நண்பர் இடையே நிறுத்திவிட்டு, "வேண்டாம், அது பக்திவிருத்திக்கேதுவாக இருக்காது" என்றுகூறி மௌனமாகிவிட்டார். அந்த நிகழ்ச்சியை முழுவதும் அறிந்து கொள்ள வேண்டும் என்று எனக்குள் எழுந்த பேராவல் என்னைக் கொன்று விடுவது போல இருந்தது. ஆயினும், அந்நாளில் நாவை எவ்வாறு அடக்க வேண்டும் என்னும் பாடத்தைக் கற்றுக்கொண்டேன்.

## அது ஏற்புடையதாயிருக்க வேண்டும்

"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படிப் பேசுங்கள்" (எபே. 4:29). இதே வசனம் புதிய மொழி பெயர்ப்பில் "நேரத்தின் தேவைக்கேற்ப பேசுங்கள்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. சரியான நேரத்தில் சரியான செய்தியைச் சொல்வது மிகப்பெரிய ஈவாகும். இறக்கும் தருவாயில் உள்ள பரிசுத்தவானின் கட்டிலில் குனிந்து, "தன் நேசர்மேல் சார்ந்துகொண்டு வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்?" என்று சாலமோனின் உன்னதப் பாட்டிலிருந்து எடுத்துரைக்கும் பக்தி நிறைந்த மூப்பனைப்போல பேச வேண்டும் (உன். 8:5).

உற்றாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு, "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" என்றுகூறி ஆறுதலளிக்கும் போதகரைப் போல நமது வார்த்தைகள் இருக்க வேண்டும் (சங். 30:5). ஊக்கமிழந்த ஊழியருக்கு தனது மடலின் முடிவில், "அதற்கு நான்: விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன்" என்று எழுதிய பெண்மணியைப் போல இருக்க வேண்டும். முனைவர் அலெக்ஸாண்டர் வைட் என்பார் ஒருமுறை வழக்குரைஞர் அலுவலகத்திற்குச் சென்றார். "வயது முதிர்ந்த பாவிக்கு உங்களால் ஏதாவது செய்தி தரமுடியுமா?" என்று தள்ளாடி வினவினார் வழக்குரைஞர். தான் ஏற்கனவே தியானித்திருந்த வேத பகுதியை விளக்கி விடையளித்தார் முனைவர். "அவர் கிருபை செய்ய விரும்புகிறவர்" (மீகா. 7:18) என்பதே அந்தப் பகுதி. இந்த வார்த்தைதான் தனக்கு ஆறுதல் அளித்தது என்று நன்றி கூறினார் வழக்குரைஞர். இவையாவும் அந்தந்த நேரத்திற்குத் தகுந்த வார்த்தைகளாக உள்ளன. ஆகவே, "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25:11). மேலும், "ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது" (நீதி. 15:23).

## அது கிருபை பொருந்தினதாக இருக்க வேண்டும்

நமது பேச்சு ஏற்புடையதாக இருப்பதோடு, கிருபை பொருந்தினதாகவும் இருக்க வேண்டும். "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தின தாயிருக்க வேண்டும்" (கொலோ. 4:6). நமது கர்த்தர் கிருபை நிறைந்தவர். "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டனர்" (லூக். 4:22). யூதகுலத்தில் பிறந்த இயேசு கிறிஸ்து தம்முடைய கிருபையினாலன்றி வேறெதினால் "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" (யோவான் 8:11) என்று கூற இயலும். கிருபையோடு பேச வேண்டுமாயின் குத்திப்பேசுதல், தாக்கிப்பேசுதல், மறைமுகமாகப் பேசுதல், முள்போன்ற பரியாசப்பேச்சு ஆகியவற்றை விட்டொழிக்க வேண்டும். சீமாட்டி ஆஸ்டர், "கனம் வின்சன்ட் அவர்களே, நான் உங்களுடைய மனைவியாக இருந்தால் நீங்கள் பருகும் பானத்தில் விஷத்தைக் கலந்துவிடுவேன்" என்றார். அதற்குத் திருவாளர் வின்சன்ட் சர்ச்சில், "சீமாட்டி ஆஸ்டர் அவர்களே, நான் உங்கள் கணவராக இருந்தால், அதைக் குடித்து விடுவேன்" என நறுக்கென்று பதிலுரைத்தார். இந்த உரையாடல் பயங்கர நகைச் சுவையாகக் காணப்படினும், கொஞ்சமும் கிருபையற்றதாக இருக்கிறது.

நமது பேச்சு கிருபை நிறைந்ததாக இருப்பதோடு, உப்பினால் சாரமேற்றப் பட்டதாகவும் இருக்க வேண்டும். "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பினால் சாரமேறினதாயும் இருப்பதாக" (கொலோ. 4:6). "தாகத்துக்குத் தா" என்றுரைத்த கர்த்தர் சமாரியப் பெண்ணிடம், "நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா" என்றார் (யோவான் 4:16). "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்று சொன்ன பிறகு, "நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்று கூறினார் (யோவான் 8:11). கர்த்தருடைய வார்த்தைகள் கடிந்து உணர்த்துபவைகளாக இருந்தன.

பொருட்களைக் கெட்டுப்போகாமல் பாதுகாக்கக்கூடியதாக உப்பு இருக் கிறது. மேலும் அது தாகத்தை உண்டுபண்ணக்கூடியது. ஆகவே, நாம் நம்முடைய பேச்சிலே ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். கிறிஸ்து தருகிற ஜீவ தண்ணீரின் மீது தாகத்தை உண்டுபண்ணுகிறதாக அமைய வேண்டும்.

## அது தூய்மையுடையதாயிருக்க வேண்டும்

விசுவாசிகளின் பேச்சிலே தூய்மை காணப்பட வேண்டியது அவசியம். "மேலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகியவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப் படவுங் கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்" (எபே. 5:3,4). நாம் ஒழுக்கக் கேட்டைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும் சர்வசாதாரணமாகப் பேசினால்,



கேட்போர் உள்ளத்தில் அது சாதாரணச் செயல்களாகத் தோற்றமளிக்கும். அது நமக்கு நன்கு தெரிந்த ஒன்றாகவும், பயத்தை உண்டாக்கக் கூடாததாகவும் போய்விடும். வேதம் சில வேளைகளில் கொடிய பாவங்களைக் குறித்துப் பேசுகிறது; அவற்றைப் பொறுத்துக்கொள்வதற்காகவோ அல்லது அவற்றைச் சாதாரணமாகக் கருதுவதற்காகவோ அவை எழுதப்படவில்லை; வெறுப்பதற் காகவே அவை எழுதப்பட்டிருக்கின்றன.

## அது ஆணையிடுதலாயிருக்கக் கூடாது

விசுவாசிகள் உரையாடுகிறபோது ஆணையிடக்கூடாது. "... பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம். வானத்தின் பேரில் சத்தியம் பண்ண வேண்டாம்... பூமியின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம் ... உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம் ... உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" (மத். 5:34-37). "விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின் பேரிலாவது, பூமியின் பேரிலாவது, வேறெந்த ஆணையிலாவது சத்தியம் பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்" (யாக். 5:12). ஒரு கிறிஸ்தவனின் பேச்சு எப்பொழுதும் உண்மையுடன் காணப்பட வேண்டும். அவ்வாறாயின் ஆணையினால் அதை உறுதிப்படுத்த வேண்டியதில்லை. ஒருவர், "ஆணைகள் பயனற்றவை, நல்லவனுக்கு அது தேவையில்லை, கெட்டவன் அதற்குக் கட்டுப்படப்போவதில்லை" என்று கூறியுள்ளார்.

கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவது தவறு என்று நாம் அனை வரும் அறிந்திருக்கிறோம். கர்த்தரின்பேரில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆணையிடுவது வேதத்தில் சொல்லப்பட்ட கற்பனையை மீறுவதாகவே இருக்கிறது.

நீதிமன்றத்தில் ஆணையிடுவது முறையானதா? நம்முடைய கர்த்தர் விசாரிக்கப்பட்டபோது, பிரதான ஆசாரியன், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்றான். நியாயப் பிரமாணத்திற்குக் கீழான யூதர் என்னும் அடிப்படையில் இயேசு கிறிஸ்து உண்மையை உரைக்கும் படி ஆணையிடப்பட்டார் (லேவி. 5:1). அவர் அதைச் செய்தார். கிறிஸ்தவர்கள் நீதிமன்றத்தில் ஆணையிட்டுச் சாட்சி கூறலாமா என்னும் கேள்விக்குரிய பதிலை இங்கே காண்கிறோம். ஆனாலும், தங்களுடைய மனச்சாட்சியின்படி அவ்விதம் ஆணையிடக்கூடாது என்று கருதினால், தேவனின் பேரில் ஆணையிடுவதற்குப் பதிலாக, உள்ளதை உரைக்கிறேன் என்று சொல்லிச் சாட்சி கூறலாம்.

## அது கனத்திற்குரியதாக இருக்க வேண்டும்

தெய்வீகக் காரியங்களில் ஏளனமாகவோ, கனவீனமாகவோ பேசக்கூடாது. மற்றவர்களைச் சிரிக்க வைப்பதற்கென்று, திருமறை வசனங்களை நகைச்சுவைப் பொருளாக மாற்றிப்பேசக் கூடாது. இந்த விஷயத்தில் நாம் மிகுந்த ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கலப்படமற்ற நகைச்சுவைக்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள். கருத்தற்ற மிகுதியான பேச்சு ஆவியின் பலத்தை இழந்துவிடும். பிரசங்கத்தில் தொடர்ந்து சொல்லப்படும் வேடிக்கைக் கதைகள் பரிசுத்த ஆவியானவரை அவித்துபோடும். அது போலவே, சிலருடைய வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளை நற்செய்தி கூட்டங்களில் கூறுவது நற்செய்தியின் இறைத் தன்மையையும், அதனுடைய அழைப்பின் வல்லமையையும் வலுவிழக்கச் செய்துவிடும்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள், நகைச்சுவையாகப் பேசுவதையும், மற்ற வர்கள் எரிச்சலடையத்தக்க வகையில் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். உரையாடல்களின் இடையிலே நகைச்சுவையாகப் பேசவும், தங்களுடைய திறமையைக் காட்ட விழைவதும் ஒருவருடைய ஆவிக்குரிய மதிப்பைக் குறைவுபடுத்திவிடும்.

## அது சுருக்கமாகவும் கருத்துடையதாகவும் இருக்க வேண்டும்

“சொற்களின் மிகுதியால் பாவமில்லாமற் போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்” (நீதி. 10:19) என்று திருமறை கூறுகிறது. நாம் மிகுதியாகப் பேசப்பேச பாவம் செய்ய ஏதுவுண்டாகும் என்றும் அதனை வேறுவிதமாகக் கூறலாம். ஏதாவது சொல்ல வேண்டுமென்கிற எண்ணம் நமக்குள்ளாக உண்டாகும்போது அதனைத் தடைசெய்வோமென்றால் அந்த ஆபத்தைத் தவிர்க்கலாம். “தேவ சமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக” (பிர. 5:2) என்று வேதத்தில் வாசிக்கிறோம். தேவ சமுகத்தில் ஆணையிடுவதைக் குறித்து இவ்வசனம் சொல்வதாயிருப்பினும் இந்த ஆலோசனையைப் பொதுவானதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

ஒருவர் தனது நாவைக் கட்டுப்படுத்த இயலாதபடி பேசுவது மற்றவர் களுக்குச் சலிப்பை உண்டாக்கும். அந்தப் பேச்சிலே தேவையான பதிலையும் பெற்றுக்கொள்ள முடியாது. அந்த உரையாடலில் மற்றவர்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். ஒவ்வொருமுறை உரையாடும் வேளை யிலும், பிறருடைய நேரத்தையும் கவனத்தையும் அவரே ஆதிக்கம் செலுத்திக் கேட்போரைத் துரதிஷ்டமான நிலைக்கு உள்ளாக்குவார்.



முடிவுரையாக மேற்கோள் ஒன்றைத் தருகிறேன். இது சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை யார் எழுதியது என்று தெரியவில்லை. இதனை நானே எழுதியிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

> “ஒரு கிறிஸ்தவன் தனது நாவை என்ன செய்ய வேண்டும்? அவன் அதனைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். பலர் உரையாடுகிற போது தன் நாவு ஆதிக்கம் செலுத்தும்படி அதனை அனுமதிக்கக் கூடாது. அது சொல்ல வேண்டியதைக் காட்டிலும் குறைவாகவே சொல்லும்படிப் பயிற்சியளிக்க வேண்டும். தவறாகப் பேசுதல், உண்மையை மறைத்துப் பேசுதல், வன்மம், மறைமுகமாகத் தாக்கிப் பேசுதல், பழிசொல்லுதல், தூய்மையற்ற பேச்சு, தேவையற்ற பேச்சு ஆகியவற்றை அறவே அகற்ற வேண்டும். சாட்சி பகர்வதற் கென்றும், அறிக்கையிடுவதற்கும், உற்சாகமூட்டும் வகையில் பேசுவதற்கென்றும் எப்பொழுதும் நம்முடைய நாவைப் பயன் படுத்த வேண்டும். ‘நன்றி’ என்று சொல்வதற்குத் தயங்குகிற நாவையுடைய விசித்திரமான மனிதராக நீங்கள் இருப்பீர்கள் என்றால் அந்த வார்த்தையைச் சொல்லும்படியாகப் பழகிக்கொள்ள வேண்டும். கொடுமையான பெருமை அவ்வாறு சொல்வதைத் தடுக்குமெனில் அப்பெருமையோடு போராட வேண்டும்.”

எண்ணங்கள் வழிநடத்துகிறபடியே நாவானது சொற்களைப் பேச வேண்டும். மாறாக, எண்ணங்களை நாவு வழிநடத்திச் செல்லக்கூடாது. பலர் தாங்கள் அமைதியாக இருந்ததினாலன்று, தங்களுடைய பேச்சிற்காகவே வருந்தி யிருக்கிறார்கள். பேசுகிறவர் விதைக்கிறார்; ஆனால் கேட்கிறவரோ அறுவடை செய்கிறார். ●

# 20

# புறங்கூறுதல்

சில ஆண்டுகளுக்கு முன்னர் அட்லாண்டா நாளேட்டில் வெளிவந்த செய்தி: "துப்பாக்கி முனையிலிருந்து வெளி வரும் குண்டுகளைக் காட்டிலும் நான் கொடுமையானவன். மற்றவர் களைக் கொல்லாமலேயே வெற்றி பெறுவேன். நான் குடும்பங்களை இடித்துப் போடுவேன், உள்ளங்களை உடைப்பேன், வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்குவேன். காற்றை இறக்கையாகக் கட்டிக்கொண்டு பறப்பேன். குற்றமற்றவருங்கூட என்னை அச்சுறுத்த முடியாது, எந்தத் தூய்மையும் என்னை நடுங்கச்செய்யும் அளவிற்குத் தூய்மை படைத்ததல்ல. நான் உண்மையை மதிப்பதில்லை, நியாயத்தைக் கனப்படுத்துவதில்லை, தற்காப்பற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டுவ தில்லை. எனக்குப் பலியானவர்கள் கடற்கரை மணலைப்போல மிகுதியாயிருக்கிறார்கள். ஒன்றுமறியாதவர்கள் எனக்கு இலக்கா யிருக்கிறார்கள். நான் மறப்பதுமில்லை, மன்னிப்பதுமில்லை, என்னுடைய பெயர்தான் புறங்கூறுதல்!"

"நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால் பூரண புருஷனும் தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனாகவும் இருக்கிறான்" என்று யாக்கோபு எழுதிய போது புறங்கூறுதல் என்னும் பாவத்தைப் பற்றியே குறிப்பாக எண்ணியிருப்பார் போலும் (யாக். 3:2).

ஒருவர் புறங்கூறுதலை மிக எளிதாகவும், இயற்கையாகவும் பழக்கப் படுத்திக்கொள்ளலாம். ஆயின் அப்பழக்கத்தை உதறித்தள்ளுவது மிகக் கடினமாகும்.

புறங்கூறுதல் என்பது யாது? ஒன்றுமில்லாத ஒரு விஷயத்தை, எதையும் விட்டுவிடாமல் எல்லாவற்றையும் சொல்லிவிடுவதே புறங்கூறுதல் என்று வில்லியம் ஆர். மார்சல் என்பார் கூறியுள்ளார். ஒரு பிரச்சனைக்கு எவ்விதத்



திலும் சம்பந்தம் அற்றவரும், அந்தப் பிரச்சனையைத் தீர்க்கக் கூடாதவருமான ஒருவரிடம் அந்தச் செய்தியை விளக்கிக் கூறுவது புறங்கூறுதலாகும் என்று பில் கோத்தார்ட் என்பார் கூறியுள்ளார். ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றித் தவறாகப் பேசுவது புறங்கூறுதலாகும் என்று அதனைச் சற்று விரிவுபடுத்திக் கூறலாம். புறங்கூறுதலுக்குப் பலியானவர் தன்னைக் காத்துக்கொள்வதற்குத் சாதகமற்ற சூழ்நிலையில் இருக்கிறார். புறங்கூறுதல் இரக்கமற்ற முறையில் பக்திவிருத்தியற்றவைகளையும், தேவையற்றவைகளையும் பேசுகிறது. இஃது ஒருவரை முகமுகமாக எதிர்கொள்வதை விடுத்து, அவருடைய முதுகிற்குப் பின்னால் அவரைப்பற்றிக் குறைசொல்வதாக அமைகிறது. மேலும், இது ஒருவருடைய குணச்சிறப்பைக் கொலைசெய்வதாகவும் அமைகிறது.

இந்தப் பழக்கத்தைத் திருமறை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

"உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக" (லேவி. 19:16).

"புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான்; ஆவியில் உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்" (நீதி. 11:13; 20:19-ஆம் வசனத்தையும் காண்க). "மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்; கோள்சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்" (நீதி. 16:28).

"கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப் போலிருக்கும், ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும்" (நீதி. 18:8).

"விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள் சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்" (நீதி. 26:20).

ரோமர் 1:29-ஆம் வசனத்தில் புறங்கூறுதலைக் கொலையோடும் வேசித் தனத்தோடும் இணைத்துப் பவுல் கூறியுள்ளார்.

## நான் சொன்னதாக ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்

சில வேளைகளில் ஜெபத்திற்காகச் செய்திகளைப் பகிர்ந்துகொள்கிறோம் என்று கூறி, நம்முடைய புறங்கூறுதலை மூடிமறைக்கப் பார்க்கிறோம். "நீங்கள் இதைக் குறித்து ஜெபம் செய்ய வேண்டும் என்பதற்காகவே இதனை உங்களிடம் கூறுகிறேன். அது உங்களுக்குத் தெரியுமா..." என்று நாம் உரைப்பதுண்டு. இதனை மற்றவர்கள் அறியமாட்டார்கள்; ஆகவே, இது எவருக்கும் தீங்கு விளை விக்காது என்று நினைத்துக் கொள்கிறோம். பல வேளைகளில் அதனுடைய விளைவு தவறாகவே போய்விடுகிறது.

இருபெண்களுடைய உரையாடலை நாம் கீழே தருகிறோம்:

"நான் லில்லியிடம் கூறவேண்டாம் என்று சொன்ன இரகசியத்தை, நீ அவளிடம் சொன்னதாக அவள் என்னிடம் கூறினாள்."

"அவள் தனது சிறுமையைக் காட்டிவிட்டாள். நான் சொன்னதை உன்னிடம் சொல்ல வேண்டாமென்று அவளிடம் சொல்லியிருந்தேனே."

"பரவாயில்லை, இதைக்குறித்து உன்னிடம் கேட்கமாட்டேன் என்று நான் லில்லியிடம் சொல்லிவிட்டேன். ஆகவே அவளிடம் ஒன்றும் கேட்டு விடாதே."

சார்லஸ் ஸ்விண்டால் என்பார், "வாழ்க்கையின் காலங்கள்" என்னும் தனது நூலில் வதந்தியைப் பரப்புவோரைக் குறித்து எழுதியுள்ளார். வதந்தியின் மறுபெயர் புறங்கூறுதலாகும். அவர் எழுதியுள்ளவற்றைக் கீழே தருகிறோம்:

வதந்திகளைப் பரப்புவோர் சந்தேகப் பிராணிகளாக இருக்கிறார்கள். மங்கலான வெளிச்சத்தில், தந்திரமான முறையில் வெடிகுண்டுகளை மற்றவர்களுடைய உள்ளத்தில் போடுவார்கள். அது வெடிக்கும் படியாகத் தீப்பொறி போன்ற தங்களுடைய கருத்துக்களையும் சேர்த்துவிடுவார்கள். இது அவர்களுக்கு மிக்க மனமகிழ்ச்சியை உண்டுபண்ணும் வியாபாரமாக இருக்கிறது. உறுதிப்படுத்தப்படாத செய்தியை, அதை யார் வாயிலாகத் தெரிந்தது என்று சொல்லாமல், ஒன்றுமறியா நபர்கள் மூலமாகப் பரப்பிவிடுவதில் அவர்களுக்கு அதிக திருப்தி உண்டாகும். "அவர்கள் சொன்னார்கள்" அல்லது "இதை நீங்கள் கேள்விப்பட்டீர்களா?" அல்லது "மற்றவர்களிடம் இருந்து இதைத் தெரிந்து கொண்டேன்" என்று அநேகருக்குத் தெரிந்த ஒன்றைச் சொல்வதுபோலச் சொல்லி வதந்தியைப் பரப்புவோர் தங்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

"..... என்னும் இடத்தில் கூடிவருகிற சபை இரண்டாக உடையப் போகிறது உங்களுக்குத் தெரியுமா?"

"அவர்... தன் மனைவியை விவாகரத்து செய்யப்போகிறார் என்று கேள்விப்பட்டேன்.... அவள் நடத்தை சரியில்லை என்று சொன்னார்கள்."

"அவனுடைய பெற்றோர்களிடம் மிகுதியான பணம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள்."

".... போதகரை அவர் முன்னிருந்த சபையிலிருந்து போய்விடும்படிச் சொன்னார்களாம். அதை நீங்கள் கேள்விப்பட்டீர்களா?"



"அவர்களுடைய மகன் போதைப் பொருட்களுக்கு அடிமையா யிருக்கிறான் என்று யாரோ என்னிடம் சொன்னார்கள்... அதுமட்டு மில்லை, ஒரு கடையில் சில பொருட்களைத் திருடி மாட்டிக் கொண் டானாம்."

"அவர் பெரிய குடிகாரர் என்று ஒருவர் என்னிடம் சொன்னார்."

"அவள் ஒரு மாதிரி என்று சொன்னார்கள்... நீ கொஞ்சம் கவனமா யிருந்து கொள்."

"எல்லாருக்கும் தெரிந்துவிட்டது... குறுக்கு வழியில்தான் அவர் அந்தப் பதவியைப் பிடித்தார்."

"அவர் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவராக இருப்பது பலருக்குக் கவலையாக இருக்கிறது."

ஒருவரிடம் இருந்து இன்னொருவரிடம் செல்லும்போது புறங்கூறுதலும் வதந்தியும் வளரக்கூடியதாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அவரவர்கள் தங்களது ரசனைக்கேற்ப கருத்துகளைச் சேர்த்துக் கொள்வார்கள். கடைசியில் பார்க்கிறபோது முதலில் சொன்ன செய்திக்கும் பிறகு கேள்விப்படுகிற செய்திக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை.

## பவுல் சில பெயர்களைக் குறிப்பிடுவதின் காரணம் என்ன?

பவுல் சிலருடைய பெயர்களைக் குறிப்பிட்டுக் குற்றப்படுத்திச் சொல்லி யிருக்கிறாரே என்று ஒருவர் வாதிடலாம். இமனேயும் அலெக்சந்தரும் (1 தீமோ. 1:19,20); பிகெல்லு, எர்மொகெனே (2 தீமோ. 1:15); கன்னானாகிய அலெக்சந்தர் (2 தீமோ. 4:14) என்போரது பெயர்களைக் காண்கிறோம். மேலும் யோவான் தீயோத்திரேப்புவை விட்டுவைக்கவில்லை (3 யோவான் 9,10). இந்தச் சாட்சி உண்மையுள்ளது. இந்த மனிதர்களைக் குறித்து விசுவாசிகள் எச்சரிக்கை யுடையவர்களாயிருக்க வேண்டுமென்பது அவர்களது நோக்கமாயிருந்ததே யொழிய, அவர்களுடைய மேன்மையைக் குற்றப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் அவை எழுதப்படவில்லை.

ஒழுங்கு நடவடிக்கைக்காகவும், சீர்ப்படுத்துவதற்காகவும் வழிநடத்திச் செல்கிறவர்கள் சிலரைக் குறித்து ஆலோசிக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். குறிப்பிட்ட நபர்கள் திருந்துவதற்கான உதவிபுரியும் நோக்கோடு அது செய்யப்படுகிறது; அவர்களைச் சின்னாபின்னமாக்குவதற்காக அல்ல. இது புறங்கூறுதலாகாது.

இந்தப் புறங்கூறுதலை எதிர்த்துச் செயல்பட சில வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

முதலாவதாக, நம்மிடம் செய்தியைச் சொல்பவரிடம் இதனை யார் உங்களுக்குச் சொன்னது என்று வினவி அதனுடைய ஆதாரத்தைக் கேட்க வேண்டும். இதற்குப் பவுல் நல்ல முன் மாதிரியாகத் திகழ்கிறார்: "ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது" (1 கொரி. 1:11).

இரண்டாவதாக, புறங்கூறுகிறவரிடம் "நீங்கள் யாரைக் குறித்துச் சொல்கிறீர்களோ, அவரிடம் இதனைக் கேட்கலாமா?" என்று அனுமதி கேட்க வேண்டும். "ஐயையோ, நீங்கள் அப்படிமட்டும் செய்துவிடாதீர்கள், எனக்கும் அவருக்கும் இடையே இருக்கும் நட்பு அத்தோடு முறிந்துபோகும்" என்பதே அவர்களுடைய பதிலாக இருக்கும்!

இல்லையெனில், அவர்கள் புறங்கூறுவதை நாம் கேட்க மறுக்கலாம். இதனைக் கேட்க எனக்கு விருப்பமில்லை என்று மிகப் பணிவுடன் எடுத்துரைக்கலாம். அல்லது உரையாடலைப் பக்திவிருத்திற்கு ஏதுவாகத் திசை திருப்பலாம். இதனை வில்லியம் ஆர். மார்சல் என்பார், "புறங்கூறுவதை ஒருவரும் கேட்கவில்லையென்றால், ஒருவராலும் அதைச் சொல்ல முடியாது. கேட்போரைச் செவிடாக்கினால், நீங்கள் புறங்கூறுபவரை ஊமையாக்குபவராக இருப்பீர்கள்" என அழகுறக் கூறியுள்ளார்.

"உங்களிடம் புறங்கூறுகிறவர் உங்களைப் பற்றியும் புறங்கூறுவார்" என்னும் துருக்கிய பழமொழி நமக்கு நினைவிற்கு வருகிறது. ●

# 21

# சினம் கொள்ளாமை

இது சபைக் கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சி. அவர் தன்னிலையில் இல்லை. அவர் கடுஞ்சினங்கொண்டு பொங்கியெழுந்தார். அவருடைய கரங்கள் அங்குமிங்கும் அலைமோதின. கடுமையான சொற்களைப் பொழிந்து தள்ளிவிட்டார். அவருடைய பார்வையில் கோபக்கனல் வீசியது. கன்னத்தில் தொங்கிய தசை குலுங்கியது. விரலின் மூட்டுக்கள் வெளுத்துப் போயின. கடைசியில், தரையை ஓங்கி மிதித்தவராகக் கூடத்தைவிட்டு வெளியேறினார். வெளியே செல்லும் வேளையில், "நான் போகிறேன், கர்த்தரும் என்னோடு இங்கிருந்து போகிறார்" என்று கத்தினார். எனினும் அவரைப் பரிசுத்தமான மனிதர் என்று ஒருவரும் கருதவில்லை. கடுஞ்சினம் கொண்டு தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாத ஒருவருடன் கர்த்தர் செல்வார் என்று ஒருவரும் நம்பவுமில்லை.

அடுத்த காட்சிக்குச் செல்வோம். ஞாயிறு காலை வேளையில் ஒரு கிறிஸ்தவ இல்லம். எல்லோரும் சபைக்குச் செல்ல ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். சிறுபிள்ளைகள் மெதுவாக அசைந்துகொண்டிருந்தனர், தந்தை சத்தமிட்டுக் கொண்டிருந்தார், தாயோ அடுப்பறையில் போராடிக்கொண்டிருந்தார். வீடு அமளிபட்டுக் கொண்டிருந்தது. அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. கொஞ்சநேரம் கழித்து யாவரும் சபையில் தங்களது இருக்கையில் வரிசையாக மகிமைபொருந்திய முகப்பொலிவுடனும், கேருபீன்களின் புன்முறுவலோடும் அமர்ந்திருந்தனர்.

கிறிஸ்மஸ் பண்டிகைக் காலம். எல்லாரும் தேவையற்ற பரிசுப் பொருட்களை வாங்குவதற்காக மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். அனைத்து வசதிகளும் உடையவர்களுக்குக் கொடுக்க, என்ன பரிசுப்பொருள் இருக்கிறது என்பது பலரது கவலை. உள்ளத்தில் பழு ஏறிக்கொண்டே போகிறது. காரணமற்ற முன்கோபம். ஒரு சிறியசொல், அவ்வளவுதான் உலை வெடிப்பது போன்ற காட்சி. சண்டை தொடர்கிறது. சாந்தமும் மனத்தாழ்மையும் கொண்ட இயேசு நாதரின் பிறந்தநாள் இவ்வாறுதான் கொண்டாடப்படுகிறது!

ஆத்திரத்தைத் தூண்டிவிடும் சம்பவங்கள் வாழ்க்கையில் நிறைந்திருக்கின்றன. அந்தச் சோதனைகளை மனச்சோர்வு என்றுசொல்லி மூடிமறைக்கப் பார்க்கிறோம். உங்களுடைய புத்தம் புதிய வாகனத்தில் யாரோ ஒருவரது வாகனம் உரசி அதனுடைய அழகு போய்விட்டது. உங்களுடைய விமானம் காலதாமதமாகக் கிளம்பும் என்று அறிவிப்பு கொடுக்கிறார்கள். சிற்றுண்டிச் சாலையில் அந்தச் சிப்பந்தி மிகுந்த பரபரப்புடன் செயல்பட்டு, பானத்தை உங்கள் ஆடையில் ஊற்றிட்டார். அதிகாலை 3:30 மணிக்கு தொலைபேசி ஒலி எழுப்புகிறது. உங்கள் குரலைக் கேட்டபிறகு, "தவறான எண்ணைப் பெற்றுவிட்டேன், மன்னிக்கவும்" என்னும் பதில் கிடைக்கிறது. நீங்கள் தொலைபேசியை வைத்தவுடன் மீண்டும் மணி ஓசை; மீண்டும் அதே குரல்; மீண்டும் அதே வார்த்தைகள். விலையுயர்ந்த பொருள்மீது உங்களுடைய உதவியாள் சாயத்தைச் சிந்த விட்டுவிட்டார். வீட்டில் வளர்க்கும் நாய் நல்லதொரு பொருளை மென்று வீணாக்கிவிட்டது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நமது வாழ்க்கையில் நிகழும் வேளையில் நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம்?

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மிக மோசமான விளம்பரம், விசுவாசிகள் காட்டுகிற ஆத்திரத்தைத் தவிர வேறொன்றுமில்லை. சோதனை நேரங்களில் விசுவாசிகள் மிகுந்த அமைதியோடும் அடக்கத்துடனும் நடந்து கொள்வார்களெனில், அதுவே கிறிஸ்து நம்மை மறுரூபமாக்கும் வல்லமையுடையவராக இருக்கிறார் என்பதை எடுத்துச் சொல்லுகிற யுக்தியாக இருக்கும். "பலவானைப் பார்க்கிலும், நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" என்று வேதம் சொல்வதில் வியப்பேதுமில்லை (நீதி. 16:32).

## கோபம்கொள்ளவேண்டிய தருணம்

எபேசியர் 4:26-ஆம் வசனத்தில் நாம் கோபப்படவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் என்று சிலர் வாதிடலாம். "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது." அது உண்மைதான். நம்முடைய கர்த்தர் அவமதிக்கப்படும்போது நாம் கோபப்படவேண்டும். இயேசு நாதர், தம்முடைய பிதாவின் வீட்டைச் சிலர் கள்ளர் குகையாக்கினதைக் கண்டபோது கோபமடைந்தார் (மத். 21:13). மற்றவர்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதைக் காணும்போது நாம் கோபமடைய வேண்டும். சுருங்கக் கூறுவோமாயின் கர்த்தருக்காகவும், மற்றவர்களுக்காகவும் நாம் கோபம்கொள்ள உரிமை பெற்றிருக்கிறோம். ஆயின், ஒருபோதும் நமக்காகக் கோபமடையக்கூடாது. தேவனுக்காகச் சிங்கத்தைப் போலவும், நமக்காக ஆட்டுக்குட்டியைப் போலவும் நடந்து கொள்ள வேண்டும். ஆனாலும், நீதியுள்ளகோபம் பாவத்தோடு கூடிய கடுஞ்சினமாகப் பொங்கி வழியும் அபாயம் உள்ளது. கோபத்தின் மூடியை அகற்றிவிட்டால் அது



கடுஞ்சினமாக உருவெடுக்கும். ஆகவேதான் பவுல் "நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" என்று கூறுகிறார்.

கோபம் கொள்ளுங்கள் என்று ஒருமுறைதான் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். அதற்கு மாறாக, நீடிய பொறுமையுடனும், நீடிய சாந்தத்துடனும் இருக்க வேண்டும் என்று பற்பல வசனங்களில் நமக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

> "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4:31,32).
>
> "ஆவியின் கனியோ... நீடியபொறுமை ... " (கலா. 5:22).
>
> "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி" (எபே. 4:2).
>
> "சந்தோஷத்தோடே கூடிய எல்லாப்பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" (கொலோ. 1:11).
>
> "முற்கோபி மதிகேட்டைச் செய்வான்" (நீதி. 14:17).
>
> "நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான்; முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான்" (நீதி. 14:29).
>
> "கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்" (நீதி. 15:18).
>
> "மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை" (நீதி. 19:11).
>
> "கோபக்காரன் வழக்கைக் கொளுவுகிறான்; மூர்க்கன் பெரும் பாதகன்" (நீதி. 29:22).
>
> "மூடன் தன் கோபத்தை (உள்ளத்தையெல்லாம்) வெளிப்படுத்துகிறான்; ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கிவைக்கிறான்" (நீதி. 29:11).

கர்த்தர் யோனாவைப் பார்த்து, "நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?" என்று வினவினார். நாம் அடுத்த முறை நிதானம் தவறும்படி பரிட்சிக்கப்படும்போது அந்தக் கேள்வியை நினைவுகூர வேண்டும். கோபப்படும்படி ஏவப்படும்

போதெல்லாம் ஜூலியஸ் சீசர் பதிலுரைக்கும் முன்னர் தான் சொல்ல நினைக்கும் வார்த்தைகளைத் தன்னை நோக்கிச் சொல்லிப்பார்த்துக் கொள்வார். அந்த முறையை நாமும் பின்பற்ற வேண்டும்.

தனது சினத்தை அடக்கிக்கொள்ள இயலாத ஒரு கிறிஸ்தவரிடம் அவரது நண்பர் அக்குணத்தைக் குறித்துக் குறைகூறியபோது, அக்குற்றம்புரிந்த கிறிஸ்தவர், "நல்லது என்னுடைய கோபம் அதிகநேரம் நிலைத்து நிற்காது" என்று பதிலுரைத்தார். அப்பொழுது அந்த நண்பர், "எனது இனிய நண்பரே, பூமியதிர்ச்சி அதிகநேரம் நிலைத்திருப்பதில்லை, ஆனால் அது அதிக சேதத்தை அந்தக் குறைந்த நேரத்திலேயே செய்துவிடுகிறது" எனப் பதிலுரைத்தார். ●

# 22

# நாம் அணியும் ஆடைகள்

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நாங்கள் உடுத்துகிற உடைகளுக்கும் பரிசுத்தத்திற்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறுகிறீர்களா? ஒருக் காலும் இல்லை! உள்ளம் எப்படிப்பட்டது என்பதுதான் கணக்கிலடப்படும். நாம் யார் என்பதில்தான் தேவன் அக்கறை கொண்டிருக்கிறாரேயொழிய நமது உடை யிலன்று."

இந்த வாதம் சரியானதுபோன்று தோற்றமளிக்கலாம்; ஆயின், தேவன் உள்ளத்தைக் குறித்தும், உடையைக் குறித்தும் அக்கறை உடையவராக இருக் கிறார். நமது உள்ளம் எப்படிப்பட்டதாக இருக்கின்றதோ அதனை வெளிப் படுத்தும் அளவுகோலாகவே நமது வெளித்தோற்றம் அமையும் என்பதை அவர் நன்கறிவார். சீயோன் குமாரத்திகளிடம் அவர் குற்றம் கண்டவராக எச்சரிக் கிறதைக் கேளுங்கள்.

> "அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ஆபரணங்களாகிய சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும், ஆரங்களையும், அஸ்த கடகங்களையும், தலை முக்காடுகளையும், சிரபூஷணங்களையும், பாதசரங்களையும், மார்க்கச்சைகளையும், சுகந்த பரணிகளையும், தாயித்துகளையும், மோதிரங்களையும், மூக்குத்திகளையும், விநோத வஸ்திரங்களையும், சால்வைகளையும், போர்வைகளையும், குப்பிகளையும், கண்ணாடிகளையும், சல்லாக் களையும், குல்லாக்களையும், துப்பட்டாக்களையும் உரிந்து போடு வார். அப்பொழுது சுகந்தத்துக்குப் பதிலாகத் துர்க்கந்தமும், கச்சைக்குப் பதிலாகக் கயிறும், மயிர்ச்சுருளுக்குப் பதிலாக மொட்டையும், ஆடம்பரமான வஸ்திரங்களுக்குப் பதிலாக இரட்டுக் கச்சும், அழகுக்குப் பதிலாகக் கருகிப்போகுதலும் இருக்கும்" (ஏசா. 3:18-24).

தேவன் இதைக் குறித்து ஏன் அக்கறைகொண்டுள்ளார்? அதனுடைய விடை 16-ஆம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

"சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்தை நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப் பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள்."

அவர்களது விலையுயர்ந்த ஆடைகளும், பகட்டான ஆபரணங்களும், அவர்களது பெருமையையும், கர்வத்தையும் காட்டுபவைகளாக இருந்தன.

## ஆடை அணிகலன்களைக் குறித்த சில ஆலோசனைகள்

நமது ஆடை அணிகலன்களில் கிறிஸ்துவிற்குரியவர்களாய்க் காணப்படுவதற்குத் திருமறை தரும் கொள்கை விளக்கங்கள் சிலவற்றைக் காண விழைவோம்.

முதலாவதாக, நமது ஆடை கவர்ச்சியற்றதும் தகுதியானதுமாக இருக்க வேண்டும். "ஸ்திரீகள் தகுதியான வஸ்திரத்தினால் தங்களை அலங்கரிக்க வேண்டும்" (1 தீமோ. 2:9). 'தகுதியான' என்னும் சொல் பல அர்த்தங்களைக் கொண்டதாக இருப்பினும் 'மரியாதைக்குரிய' என்னும் பொருளையும் உட்கொண்டதாக இருக்கிறது. தகுதியான ஆடைகளை அணியும்போது உடல் உறுப்புகளை உள்ளர்த்தத்தோடு வெளிக்காட்டுவதாக இருக்காது. சரீரத்தின் பெரும்பகுதி தகுதியான ஆடையால் மறைந்திருக்கும். நமது ஆடை மற்ற விசுவாசிகள் கிறிஸ்தவர்களாக வாழ்வதற்குத் தடையொன்றையும் ஏற்படுத்தாது.

மேலும், நமது ஆடை மற்றவர்களது கவனத்தை ஈர்க்கக்கூடியதாகவோ, நம்மை விளம்பரப்படுத்துவதாகவோ இருக்கலாகாது. பிறரது கவனத்தை நம்மை நோக்கி இழுக்க வேண்டுமென்பது நமது நோக்கமாயிராமல், கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதே நமது நோக்கமாயிருக்க வேண்டும் (யோவான் 3:30; கொலோ. 1:18).

"ஒரு கிறிஸ்தவரின் உலக வாழ்க்கை, கிறிஸ்துவை உயர்த்திக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமேயொழிய தனது செல்வச் செழிப்பைக் காட்டுவதாகவோ, தனது தையற் கடைக்காரரின் விளம்பரப் பொருளாகவோ இருக்கக்கூடாது" என்று ஜெ. இரஸ்ஸல் ஹௌடன் என்பார் கூறியுள்ளார்.

நமது உடைப்பழக்கம் இந்த விசித்திரமான உலக நாகரீகத்தை நாடி ஓடுவதாக அமையக் கூடாது. அது போலவே பழங்காலத்திற்குரியதாகவும், மங்கிப் போனதாகவும் காணப்பட்டு, மற்றோரது கவனத்தை இழுக்கக் கூடியதாகவும் இருக்கக்கூடாது. இந்த இரண்டு விதப் பழக்கங்களையும் தவிர்க்க வேண்டும். இதைக்குறித்து, ஹௌடன் கூறியுள்ளதையே காண்போம், "மங்கிப் போனதையும், அழுக்கையும் அணியவேண்டுமென்று தேவன் நமக்குப் பரிந்துரைக்கவுமில்லை, கட்டளையிடவுமில்லை. ஒரு நபர் தன்னைக் குறித்தும், தன் ஆடையைக் குறித்தும் அக்கறையற்றவராக இருப்பின், அவர் ஆவிக்குரியவர் என்பதை அது எடுத்தியம்புகிறதில்லை. நமது சரீரம் தேவனுடைய ஆலயமாக இருப்பதினால் எது அழகுள்ளதோ, இன்பமானதோ, ஏற்புடையதோ



அதனையே ஆடையாகக் கொண்டிருக்க வேண்டும்." இதைக் குறித்த பழமொழி தற்காலத்திற்கும் உகந்ததாகவே உள்ளது. "புதியதை அணிந்துபார்ப்பதற்கு நாம் முந்த வேண்டாம்; பழையதை விட்டொழிய நாம் கடைசியாகவும் இருக்க வேண்டாம்."

நாம் பகட்டான உடைகளைத் தவிர்த்து, தகுதியானவற்றை அணிவதே சாலச்சிறந்ததாகும். இவ்வுலகில் தேவைகள் மிகுந்த சூழ்நிலையையே நாம் காண்கிறோம். அவ்வாறு இருக்குங்கால் அலங்கார ஆடை நிறுவனங்களுக்கு விளம்பரதாரர் போலக் கிறிஸ்தவர்கள் காட்சியளிப்பது அழகன்று.

மேற்கூறிய காரணத்தின்பொருட்டு, நாம் மிகுந்த விலைகொடுத்து ஆடைகள் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப் பெற்ற வஸ்திரங்களினாலாவது தங்களை அலங்கரியாமல்" (1 தீமோ. 2:9). "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்" (1 பேதுரு 3:3). இருந்தபோதிலும், நாம் எப்பொழுதும் விலை குறைந்த ஆடைகளை வாங்க வேண்டுமென்பது அதன் பொருளன்று. சில வேளைகளில் அவ்வாறு விலை குறைந்த ஆடைகளை வாங்குவது அதிகச் செலவீனத்தை உண்டு பண்ணிவிடும். வாங்கும் பொருளின் தரத்தையும் விலையையும் நிதானித்துப் பார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, விலை குறைந்த காலணியை நாம் வாங்குவோமென்றால், காலில் சிகிட்சையளிக்க மருத்துவருக்குச் செலவு செய்ய நேரிடும். அதற்குப் பதிலாகக் கூடுதலாகப் பணம் செலவு செய்து, நல்ல காலணியை வாங்குவோமென்றால் காலுக்கும் நல்லது. காலணியும் சீராக இருக்கும்.

நமது ஆடைகள் சீராகவும், தூய்மையாகவும் இருத்தல் இன்றியமையாதது. அழுக்கானதும், கசங்கிப் போனதுமான ஆடைகள் நமது இரட்சகருக்கு நல்ல விளம்பரமாக இருப்பதில்லை. "தூய்மையற்ற ஆடை, தூய ஆவியானவருக்கு அவமானமாகும்" என ஓஸ்வால்ட் சேம்பர்ஸ் என்பார் கூறியுள்ளார்.

கிறிஸ்தவர் அணியும் ஆடை, பார்த்தவுடன் ஆண்களுடையதென்றும், பெண்களுடையதென்றும் எளிதாக அறியத்தக்கதாக இருக்க வேண்டும். "புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்" (உபா. 22:5) என்னும் வசனம் இதனை வலியுறுத்துகிறது. ஒரு ஆண், பெண் உடைகளையும், பெண் ஆண் உடைகளையும் அணியும் பழக்கத்தையும், எதிர்மறையான பாவனையைக் கொண்டிருப்பவர்களையும் கண்டிக்கும் வண்ணம் இவ்வசனம் எழுதப்பட்டிருக்கிறது என்றாலும், ஆணும் பெண்ணும் ஒன்றுபோல ஆடை அணிவதையும் வளர்ந்து

வரும் அவ்விதக் கொள்கையையும் இவ்வசனம் வன்மையாகக் கண்டிக்கிறது. முடி அலங்காரம், ஆடைப் பழக்கம் ஆகியவற்றில் ஆணும் பெண்ணும் தங்களது வேறுபாட்டைக் காண்பிக்கிறவர்களாயிருத்தல் அவசியம். மேலும், வேறு பாடின்மையை நாம் முற்றிலும் ஒழிக்க வேண்டும். பால் வேறு பாடின்மையால் ஏற்படும் குழப்பத்தை ஆண்டவர் வெறுக்கிறார் என்பதில் எவ்வித ஐயமு மில்லை; அதைக் குறித்த கேள்விக்கும் இடமில்லை.

பொதுவாக, கர்த்தருடைய தூதுவர்களாயிருக்கிற நாம், நமது ஆடைகள் அவருடைய பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறவைகளாகக் கொண்டிருக்க வேண்டும். இது நமது சமுதாய நாகரிகத்தையும், நாம் வாழ்கின்ற காலத்தையும் பொருத்து மாறக்கூடியதாக இருக்கின்றது. நாம் கொடுக்கும் செய்தியின் பலத்தை நமது சரியற்ற தோற்றம் வீணாக்கிவிடும் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். கியிர்கிகார்ட் என்பார் சர்க்கஸில் பணிபுரியும் ஒரு கோமாளியைக் குறித்துச் சொன்ன கதை. “ஒரு சமயம் சர்க்கஸ் கூடாரத்தில் தீ பற்றிக் கொண்டது. அது மிக விரைவாகப் பரவத் தொடங்கியது. அந்தத் தீ நகரத்திற்குள் பரவும் வாய்ப்பை உணர்ந்த கோமாளி, தனது விசித்திரமான ஆடை அலங்காரத்துடன் நகரத்திற்கு ஓடிச்சென்று அபாயக் கூக்குரலிட்டான். விசித்திர உடையில் இருந்த கோமாளியின் கதறுதலை எவரும் பொருட் படுத்தவில்லை. அவன் வேடிக்கை காட்டுகிறான் என்று கருதி ஊர்மக்கள் நகைத்தனர். காலம் கடந்தது. யாரும் எதிர்பாராத வகையில் தீயானது கட்டுக்கடங்காமல் பரவி, ஊர் முழுவதும் எரிந்து சாம்பலாயிற்று. அவன் அணிந்திருந்த உடையானது அவன் கூறிய எச்சரிப்பின் செய்தியைப் பயனற்றுப் போகச் செய்துவிட்டது.”

### உள்ளத்தில் என்ன இருக்கிறது

வேதாகமம் நமது வெளித்தோற்றத்தையல்ல, நமதுள்ளத்தில் இருப்பதைக் குறித்தே வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாக கொலோசெயர் 3:12-14ஆம் வசனங்களைக் காண்க:

“ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடியபொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.”

மேலும் 1 தீமோ. 2:9-10 ஆகிய வசனங்களை மீண்டும் பார்ப்போம், “ஸ்திரீகள்.... நற்கிரியைகளினால் தங்களை அலங்கரிக்க வேண்டும்.” ●

# 23

# உண்மையே பேசுதல்

ஏதோ ஒரு தருணத்தில் பொய் சொன்னால் அது சரியாகுமா? அதற்கு ஒரே ஒரு விடைதான் உள்ளது. தேவனால் பொய்சொல்ல இயலாது. வேறொருவர் பொய் சொல்வதற்கும் அவரால் அதிகாரம் கொடுக்க இயலாது. பொய்ச்சாட்சி சொல்லக்கூடாது என்று ஒன்பதாவது கட்டளை தடை விதிக்கிறது. கிறிஸ்தவர்கள் பொய்யைக் களைந்து, பிறருடன் மெய்யைப் பேசக்கடவர்கள் (எபே. 4:25). சாத்தான் பொய்யின் தகப்பனாயிருக்கிறான் (யோவான் 8:44). அவனுடைய குணத்தை நாம் பின்பற்றலாகாது.

டென்னிஸ் ஜெ.டி.ஹான் என்பார், “உண்மையில்லாத நிலை பல முக மூடிகளைக் கொண்டுள்ளது. நிறைவேற்ற வேண்டும் என்று கருதாமல் பல வாக்குறுதிகளைத் தருகிறது. கடையில் பொருட்களை விலைக்கு வாங்கும்போது கடைக்காரர் தவறுதலாகத் தொகையைக் குறைத்துச் சொன்னால், உண்மையற்ற தன்மை அமைதியாக இருந்துவிடும். தவறுதலாக ஒருபொருள் தன்னிடம் வந்தால், அத்தன்மை அப்பொருளைத் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் (உண்மையற்ற தன்மையே திருட்டிற்குப் பிறப்பிடமாக இருக்கிறது). அது உண்மையைப் போல வேடந்தரித்து, சுய நலனைப் பேணிக் காக்கிறது. தவறுகளை மறைக்கும்படி பொய் சொல்லுகிறது” என்று நமக்கு நினை வூட்டுகிறார்.

பொய் பேசிய நிகழ்ச்சிகள் வேதத்தில் எழுதப்பட்டிருப்பினும் அது ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை. ஆபிரகாம் சாராளைக் குறித்துப் பொய் கூறினான் (ஆதி. 12:10-20; 20:2). ஈசாக்கு ரெபெக்காளைக் குறித்துப் பொய் சொன்னான் (ஆதி. 26:7). அனனியாவும், சப்பீராளும் தாங்கள் தேவனுக்குக் கொடுத்ததின் அளவைக்குறித்துப் பொய் கூறினார்கள் (அப். 5:1-11).

வேறு சில தருணங்களில் தேவனுடைய மக்கள் பொய் சொல்லவில்லை; ஆயினும் அவர்கள் முழு உண்மையையும் சொல்லவில்லை என்று வேதத்தில் பார்க்கிறோம். தாங்கள் போகுமுன்னே எபிரெயப் பெண்கள் பிள்ளைகளைப்

பெற்றெடுத்து விடுகின்றனர் என்று எபிரெய மருத்துவப் பெண்டிர் கூறினர் (யாத். 1:19). அவர்கள் பொய் கூறவில்லை என்பது தேவன் அதனை அனுமதித்ததி லிருந்து வெளியாகிறது (வச. 20). மூன்று நாட்கள் பயணம் செய்து, தேவனுக்குப் பலியிட வேண்டும் என்று மோசே இஸ்ரவேலருக்காக பார்வோனிடம் அனுமதி கேட்டான் (யாத். 5:3). சிறிய விண்ணப்பத்தையே அவன் நிராகரிப்பான் என்றால், நிரந்தரமாக எகிப்தைவிட்டுச் செல்ல வேண்டும் என்ற பெரிய விண்ணப்பத்தை யும் நிராகரிப்பான் என்பதை மோசே அறிந்திருந்தான். இரகசியமான தேவவாக்கு தன்னிடத்தில் உண்டென்று எக்லோன் என்னும் அரசனிடம் ஏகூத் கூறினான். ஆயினும் அது அவனது மரணத்தைக் குறித்த செய்தி என்று கூறவில்லை (நியா. 3:12-30). தாவீதை அபிஷேகம் செய்யும்படி, தேவன் சாமுவேலிடம் பணித்த போது, இராஜாவாகிய சவுல் அதைக் குறித்து வினவினால் தான் தேவனுக்குப் பலிசெலுத்த வந்துள்ளதாக மட்டும் கூறினால் போதும் என்று சொன்னார் (1 சாமு. 16:1-3). அது உண்மைதான். அவன் பலி செலுத்தினான். ஆனாலும் அவனுடைய பயணத்தின் முழுக்காரணமும் அதுவன்று. சாமுவேல் தான் அறிந்த அனைத்தையும் கூறவேண்டிய அவசிய மில்லை.

முடிவு நன்மையாக இருக்குமென்றால், எவ்வழியையும் கைக்கொள்ளலாம் எனச்சிலர் பொய்யுரைப்பதைத் தவறென்று கருதுவதில்லை. நன்மை வரும் படிக்குத் தீமை செய்வோமாக என்று போதிக்கிறவர்கள்மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும் என்று வேதத்தில் காண்கிறோம் (ரோமர் 3:8).

நாம் உண்மையைக் கூறும்போது, அது எவருடைய மரணத்திற்காவது காரணமாகுமென்றால், அது நம்முடைய மனச்சாட்சியைத் தாக்கும் பெரும் சிக்கலாக இருக்கும். நாசிச ஆக்கிரமிப்பின்போது யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல யூதர்கள் கிறிஸ்தவர்களுடைய இல்லங்களில் ஒளிந்து கொண்டிருந்தனர். சோதனையிடும் நாசிசப் போர் வீரர்கள் கிறிஸ்தவர்களின் வீட்டின் வாசற்படியில் நின்று கொண்டு, "இங்கே யூதர்கள் யாராவது இருக்கிறார் களா?" என வினவுவார்கள், இல்லையென்று கூறினால் அது அப்பட்டமான பொய். உண்மையைக் கூறினால் தஞ்சம் புகுந்த யூதர்களுக்கு மரணம் நிச்சயம். என்ன செய்வது?

"உண்மையைச் சொல்லி, விளைவைக் கர்த்தரிடம் விட்டுவிடுங்கள்" என்றுரைப்பார் சிலர். ஆனால் விளைவோ நிச்சயமாக மரணத் தீர்ப்பாக இருக்கும். உண்மையற்றதாக இல்லாததும், மற்றவர்களைக் குற்றப்படுத்தாதுமான ஒரு பதிலை அந்த நேரத்தில் தேவன் தருவார் என்ற நம்பிக்கையோடிருப்பது வேறொரு வழிமுறையாகும். தேவன் அதைச் செய்வார், ஆயினும் இவ்வழி முறையை எப்பொழுதும் கைக்கொள்ள முடியாது.

இந்த உலகம் கேடுகளால் நிறைந்திருப்பதனால், இரண்டு பொல்லாப்பு களில் எது குறைந்த கேடுண்டாக்கும் என்று அறிந்து அதைத் தேர்ந்தெடுக்கலாம்



எனச் சிலர் கூறுவர். ஒன்றுமறியா மக்கள் மாண்டுபோவதைவிட, தவறா யிருப்பினும் பொய் கூறுவது குறைவான கேடுண்டாக்கும். ஒன்றுமறியா மற்றவரது உயிர் சம்பந்தப்பட்டிருந்தாலொழிய இக்கொள்கையைக் கடைப் பிடிக்கலாகாது.

"மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப் படிகிறதே அவசியமாயிருக்கிறது" என்னும் அப். 5:29ஆம் வசனத்தைச் சிலர் மேற்கோள் காட்டுவர். "கொலை செய்யாதிருப்பாயாக" என்று தேவன் கூறுகிறார் (யாத். 20:13). "மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளியாரோ?" என்றும் கூறியுள்ளார் (நீதி. 24:11,12).

கடைசியாக, நாம் கவனிக்க வேண்டிய ஒன்றை எழுதுகிறேன். சில செயல்கள் தம்மகத்தே நன்மையைக் கொண்டிருப்பதில்லை. ஆயினும் அவற்றை உண்மையான விசுவாசத்துடன் செயல்படுத்துவோமென்றால் நற்கிரியைகளாகக் காணப்படும். ஆபிரகாம் ஈசாக்கைத் தகனபலியாகச் செலுத்துவது சாதரணமாகக் கொலை என்றே கருதப்படும். எனினும் அஃது ஆபிரகாமின் உண்மையான விசுவாசத்தை வெளிப்படுத்தியதால் தேவன் அதனை அங்கீகரித்தார் (யாக். 2:21). இராகாப் ஒற்றர்களிடம் நட்பு பாராட்டினது சாதாரணமாக நம்பிக்கை துரோகம் என்றே கருதப்படும். எனினும் அச்செயல் அவள் தேவனிடம் கொண்டிருந்த விசுவாசத்தின் அடையாளமாகக் காணப் பட்டு அவளுக்கு நீதியாயிற்று (யாக். 2:25). இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் அவர்களது விசுவாசத்தை அகற்றிவிட்டுச் செயலை மட்டும் காண்போமென்றால் பொல்லாங்கானவைகளாகவே இருக்கின்றன.

நாம் ஏற்கனவே கூறியதுபோல, இவ்விதப் பிரச்சனைகள் சிக்கல் மிகுந் தவை. இப்படிப்பட்ட பிரச்சனைகளை நம்மில் பலர் பெரும்பாலும் சந்திப் பதில்லை. நாம் எதிர்கொள்ளும் நூற்றுக்கணக்கான பிரச்சனைகளுக்கு விடை ஒன்றே: "உண்மையைச் சொல், ஒருபோதும் பொய்யுரையாதே." டென்னிஸ் டி. ஹான் என்பவரது கூற்றை மீண்டும் மேற்கோள் காட்டுகிறேன்: "பொய் கூறுதல் நம்பிக்கையின்மையை விளைவிக்கும். ஐயத்தை எழுப்பும். உறவுகளை அழித்துப் போடும். பொய் எல்லாவற்றிலும் மோசமானது, அது உண்மைக்குக் காரணராகிய தேவனுக்கு அவமானத்தை ஏற்படுத்தும்." ●

# 24

# நேர்மை எது?

எது நல்லது எது கெட்டது என்றும், எது சரி எது தவறு என்றும் பகுத்தறிவதற்கு நேர்மை எது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அதனைக் குறித்து நாம் சிந்திக்கவில்லையென்றால் கிறிஸ்தவப் பரிசுத்தத்தைக் குறித்து முற்றிலும் கற்றறிந்துவிட்டோம் என்று சொல்லுவதற் கியலாது. தவறுகளைக் கண்டும் காணாதுபோலவும், தவறுகளுக்கு ஒத்துப் போகிறவர்களாகவும், ஏமாற்றுகிறவர்களாகவும் நடந்துகொள்ளும்படிக் கிறிஸ்தவர்களை வற்புறுத்துகிற சோதனைகள் எல்லாச் சமுதாயத்திலும் மிகுந்து காணப்படுகின்றன. பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இத்தகைய சோதனை கள் ஏராளமாக இருக்கும். "பணம் என்றால் அனைத்து மதங்களும் ஒன்றுதான்" என்று வோல்டேர் என்பார் உரைப்பதற்கு இதுவே காரணமாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் வோல்டேர் கூறியதைத் தவறு என்று நிரூபிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறான்.

"தொழில்துறை மடக்கிவைக்கப்படும் திரையைப்போல இருக்கிறது. அதில் காணப்படும் வளைவுகளுக்கு ஏற்றாற்போல கோணலும் மாணலுமாக வளைந்து தான் நிற்கும்" என்று தொழிலதிபர் ஒருவர் தனது தத்துவத்தை விளக்கினார். கர்த்தருடைய மலைப்பிரசங்கத்தில் கூறியுள்ளதற்கு ஏற்றாற்போல ஒருவர் தொழில் புரிந்தால் நொடித்துப்போவார் என்று சிலர் வெளியரங்கமாகக் கூறுகின்றனர். அஃதாவது, தொழிலில் நேர்மையைக் கடைப்பிடித்தால் நிலைநிற்க முடியாது என்பதே அவர்களின் கருத்து.

இந்நாட்களில் காணும் நேர்மை தவறுகிற சில பொதுவான செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டுவோம். தவறான வருமானவரி அறிக்கைகள், செலவீனங் களைக் கூடுதலாகக் காட்டுதல், உண்மையற்ற விளம்பரங்கள், கைக்கூலி கொடுத்தலும் வாங்குதலும், தொழில் ஒப்பந்தங்களில் மறைமுகப் பேரம், எடைகளிலும் அளவுகளிலும் செய்யும் ஏமாற்றுவேலை, ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதைக் காட்டிலும் தரம் குறைந்த பொருட்களை உற்பத்தி செய்தல், வங்கியில் பணம் இல்லாமலேயே காசோலை கொடுப்பது, கடன் கொடுத்தவர்



களிடமிருந்து தப்பிக்க திவால் கணக்குக் காட்டுவது போன்றவை அத் தகையவை. இன்னும் பல உள்ளன; மற்றவர்களுடைய கண்டுபிடிப்புகளையும், பிரசுரங்களையும் களவாடித் தம்முடையவை என்று கூறுவது, தான் வேலை செய்யும் அலுவலகத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் சிலருக்கு மறைமுகமாகச் செய்கின்ற சலுகை, வேலை நேரத்தில் சரிவர வேலை செய்யாதிருப்பது, வேலை நேரத்தில் கிறிஸ்துவைக் குறித்து சான்று பகர்வது, கர்த்தருக்கென்று உழைப்பதில் ஈடுபாடற்று இருப்பது, சாலைப் போக்குவரத்து விதிகளை மீறுவது, நம்பிக்கையற்ற முறையில் செயல்படுவது, குறிப்பிட்ட நேரத்தில் செல்லாமலிருப்பது போன்றவைகளும் அவற்றில் இடம்பெறும்.

ஒரு கிறிஸ்தவ வழக்குரைஞர், ஒருவர் குற்றம் இழைத்தவர் என்று அறிந்திருந்தும் அக்குற்றத்தை அவர் செய்யவில்லையென்று வாதிடலாமா? விமானத்தில் பணிபுரியும் கிறிஸ்தவர் பயணிகளுக்கு மதுபானம் வழங்கலாமா? தொழிற்சாலை ஒன்றில் பொருட்களை வாங்கும் பிரிவில் வேலைசெய்யும் ஒருவர் விற்பனையாளர்களிடமிருந்து வெகுமதிகளையும், அன்பளிப்பு களையும் பெற்றுக் கொள்ளலாமா? வெளிநாட்டிற்குச் செல்லும் ஊழியப் பணி யாளர் அனுமதி கிடைக்க ஆகும் காலதாமதத்தைத் தவிர்க்க அனுமதியளிப் பவருக்குப் பணம் கொடுக்கலாமா? மாணவன் தான் எழுதப்போகிற தேர்வின் கேள்வித்தாளை முன்னரே பெற்றுக்கொள்ளக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளலாமா? புற்றுநோயை விளைவிக்கும் போதைப் பொருட்களை விற்பனை செய்யலாமா? பணப்பற்றாக்குறையில் இயங்கும் கிறிஸ்தவப் பள்ளியின் பொறுப்பாளர்கள் மதுபானம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அதிபர் தரும் பெரும் உதவித் தொகையைப் பெற்றுக் கொள்ளலாமா? கிறிஸ்தவர் காப்பீட்டுக் கழகத்திலிருந்து தவறான முறையில் பணம் பெறுவதற்கு மனுச்செய்யலாமா? அந்த மனுவில் கிறிஸ்தவ மருத்துவர் ஒப்புதல் அளித்துக் கையெழுத்திடலாமா? தரம் நிர்ணயிக்கும் அலுவலர், தானே அந்தப் பொருட் களை விற்பனை செய்யலாமா? யாரிடமாவது வாங்கித்தானே ஆகவேண்டும், நான் விற்பனை செய்தால் என்ன என்று வினவுகிறவர்களும் இருக்கிறார்களே!

### நேர்மைக்குச் செலுத்த வேண்டிய விலை

ஒருவர் சிறிய உணவு விடுதி ஒன்றை நடத்திக் கொண்டு வந்தார். அந் நகரத்தின் தூய்மைச் சோதனை ஆய்வாளர் அந்த உணவு விடுதியைச் சோதனை செய்யவந்தார். அவர் பார்வையிட்டு முடிந்தவுடன் செய்ய வேண்டிய மாற்றங்கள் எவையென்று எழுதத்தொடங்கினார். பல ஆயிரங்கள் செலவு செய்யும் படியாகப் பட்டியல் நீண்டுகொண்டே போயிற்று. முடிவில் அந்த உணவு விடுதியின் உரிமையாளரிடம் இவையாவற்றையும் நூறு ரூபாய் சரிசெய்துவிடும் என்று கூறினார். முடியாது என்று கூறினால், "இரண்டு வாரங்களில் இத்தனை வேலையையும் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் கடையை மூடுங்கள்" என்று ஆணை பிறப்பித்துச் செல்வார் அந்த ஆய்வாளர்.

டகோமா குறுகிய பாலம் கட்டிமுடிந்தது. காப்பீட்டுக் கழகத்தின் திறமைமிக்க பிரதிநிதி ஒருவர் அப்பாலத்திற்கு காப்புறுதி செய்து அதன் ஒப்பந்தத்தை எழுதினார். காப்பீட்டுக் கழகத்திற்கு ஒரு பெருந்தொகை அதற்குரிய கட்டணமாகவும் கிடைத்தது. அந்தப் பிரதிநிதி பாராட்டைப் பெற்று உவகை கொண்டவராக இருந்தார். அந்த ஒப்பந்தத்தை எழுதுகிறபோது அப்பாலம் வலுமிக்கது, ஒருபோதும் உடைந்துபோகாது என்று திட்டவட்டமாக நம்பினார். ஆனால் நடந்தது என்ன? பலத்த புயல் அடித்தது. அப்பாலமும் உடைந்து நீருக்குள் மூழ்கிப்போயிற்று.

கிறிஸ்தவர்கள் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது. ஆயினும் தவறான தீர்மானங்களை எடுப்பது அதைவிடக் கடினமாகும்.

எவ்வளவு பெரிய விலைகொடுத்தாகிலும், தாங்கள் சரியென்று அறிந்ததையே தீர்மானமாகக் கொண்ட சிலரைப் பற்றி இங்கே காணலாம்.

ஆடம் கிளார்க் என்பவர் ஒரு துணிக்கடையில் அலுவல் புரிந்தார். விற்பனை செய்வதற்காக பட்டுத்துணியை அளவெடுக்கும் போது துணியைச் சற்று இழுத்து அளவெடுக்கும்படியாக அவரிடம் அவரது கடை உரிமையாளர் கூறினார். “உங்கள் பட்டுத்துணியை இழுத்தால் நீளும், ஆனால் என்னுடைய மனச்சாட்சியோ நீளாது” எனப் பதிலுரைத்தார் ஆடம். பின் நாட்களில் தேவன் ஆடம் அவர்களைத் திருமறைக்கு விளக்கவுரை எழுதும்படிக்கு உயர்த்தினார். அன்னாரது பெயர் அந்நூலில் அழகுறப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

வேறொரு கடையில், ஒரு வாடிக்கையாளர் பொருளை எடைபோடும் கிறிஸ்தவரிடம், “இன்னும் அதிகமாகப் போடுங்கள். உங்கள் முதலாளி இங்கே கவனிக்கவில்லை” என்று கூறினவராகத் தான் கொடுத்த பணத்திற்குரிய பொருளைக் காட்டிலும் அதிகம் வேண்டுமென்று கேட்டார். அதற்கு அந்த எடைபோடும் கிறிஸ்தவர், “என்னுடைய பெரிய முதலாளி என்னை எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிறார்” எனப்பதிலுரைத்தார்.

புதிதாக வேலையில் அமர்ந்த எப். டிக் என்பவர் தனது பயிற்சியாளருடன் சேர்ந்து வாடிக்கையாளர்களைச் சந்திக்கும்படி பணிக்கப்பட்டார். ஒவ்வொரு நாள் முடிவிலும் அந்தப் பயிற்சியாளர் வாடிக்கையாளர்களிடம் செலவு செய்த நேரத்தைக் கணக்கிட்டு அதற்குரிய பதிவேட்டில் எழுத வேண்டும். பெரும்பாலும் 7 அல்லது அதற்குக் குறைவான மணிநேரமே கணக்கின்படிவரும். ஆனால் அவர் அதனை அங்கும் இங்கும் சற்று மாற்றி 8 மணி நேரமாக மாற்றிவிடுவார். அது போலவே டிக் என்பவரும் தனக்குரிய பதிவேட்டில் எழுத வேண்டும் என்று அவர் கூறினார். ஆனால் டிக் தான் கிறிஸ்தவராக இருப்பதால் அவ்வாறு செய்ய இயலாது என்று மறுத்துவிட்டார். வேலைபோனாலும் தன்னால் அவ்வாறு செய்ய இயலாது என்றும் கூறினார். பயிற்சியாளர் கடுங்கோபம் கொண்டார்; எனினும் டிக் விட்டுக்கொடுக்கவில்லை. பின்னர் டிக் அவ்வேலையை விட்டுவிட்டு ஈகுவேடார் நாட்டிற்கு ஊழியப் பணியாளராகச் சென்றார்.



ஹெரால்ட் ஜி என்பவர் கடைகளுக்குச் சென்று உருளைக்கிழங்கு சிப்ஸ் பாக்கெட்டுகளைப் போடும் வேலைக்குச் சென்றார். அவருடைய முதலாளி அவர் கடைகளுக்குச் செல்லும் போது கூர்மையான பென்சிலை எடுத்துக் கொண்டு போகும்படியும், போட்டியாளர்களின் சிப்ஸ் பாக்கெட்டுகளில் யாருக்கும் தெரியாமல் துளையிடும்படியும் கூறினார். அவ்வாறு செய்வதால் மற்றவர்களுடைய பொருட்கள் கெட்டு தமக்கு அதிக விற்பனையாகும் என்றும் கூறினார். ஹெரால்ட் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டார். ஆனால் அந்த உரிமையாளர் கோபம் கொள்ளவுமில்லை, வேலையைவிட்டு நீக்கவுமில்லை. இப்படிப்பட்ட நேர்மையான வேலையாட்கள் இருக்க வேண்டும் என்று உரிமையாளர்கள் சில வேளைகளில் உணர்வடைகிறார்கள்.

பி. பாப் என்பவர் துணிக்கடையொன்றில் விற்பனையாளராகப் பணி புரிந்தார். அவருடைய கடையின் மேலாளர் தன்னைக் கிறிஸ்தவர் என்று கூறிக்கொள்பவர். அந்த மேலாளர் “துணிகளை விலைக் குறைப்பில் விற்க வேண்டும். ஆகவே எல்லா ஆடைகளிலும் இருக்கிற விலைத் தாட்களை எடுத்துவிட்டு ரூ. 400 என்று விலையிடப்பட்ட ஆடைகளுக்கு ரூ. 600 என்று எழுதி அதை அடித்து விலைக்குறைப்பு ரூ. 500 என்று எழுதுங்கள்” என்று கூறினார். பாப் அதனை எதிர்த்து நின்றார். அவர் வேலையை இழக்க நேரிட்டது. ஆனால் தேவன் அவரைத் தமது பண்ணையில் ஊழியராக உயர்த்தினார்.

“என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்” (1 சாமு. 2:30) என்னும் தேவனுடைய வாக்குறுதி நிச்சயமாக நிறைவேறும். நீதியாய்ச் செயல்புரிபவர் அதற்குரிய விலையை உடனடியாகக் கொடுக்க வேண்டும். ஆனால், தேவன் தமது நீதியை நிலைநிறுத்தி தமது ஜனங்களை உயர்த்துவார்.●

# 25

# ஆண்டவரே, என்னை நொறுக்கும்

ருவாண்டா நாடெங்கிலும் எழுப்புதல் அனல்மூண்டது .அந்நாட்டைச் சேர்ந்த மக்கள் பலர் ஆவியில் நொறுங்குண்டவர்களாக எழுப்புதல் அடைந்ததே அதன் சிறப்பாகும். இங்கிலாந்து சபையாரால் மறைதிரு. கேவின் பேக்கர் [4] அவர்கள் ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்டார். கிறிஸ்தவ இளை ஞர்கட்கு ஊழியப் பயிற்சி கொடுப்பதே அன்னாருடைய வேலை.

இறையியல் கல்லூரியில் சேர்ந்த அவர், மாணாக்கருக்குத் திருமறையைக் கற்பித்தார். ஆயின், அவரது போதனைகள் திருவெழுத்துகளை முற்றிலும் சாராமல் மேற்போக்காகவே இருந்தன. வேதத்தை மறுக்கவும், சில பகுதிகளில் ஐயம் ஏற்படத்தக்கதாகவும் அவரது வகுப்புகள் அமைந்திருந்தன. ஆங்கு, சில மாணாக்கர் "மறுபடியும் பிறந்தவர்கள்" என்ற பெயரில் ஒரு குழுவாகச் செயல்பட்டனர். அவர்கள் அதிகாலை 4.00 மணிக்கு ஒன்றுகூடித் தங்களது மன்றாட்டை ஏறெடுப்பர். அந்த மாணவர்கள் தனக்காக ஜெபிக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்ட கேவின், அவர்கள்மீது மிகுந்த கோபம் கொண்டார். அவர் பாரம்பரியமிக்க சபையின் போதகராயிருக்கிறார், அவர்களோ பாமரமக்கள் என்பதே அவருடைய எண்ணமாயிருந்தது.

ஒருநாள் அந்த மாணவர் குழுவின் தலைவரை அழைத்துக் கல்லூரியை விட்டுப் போய்விடும்படிச் சொல்லத் தீர்மானித்தார். அவரை அழைப்பித்தார். அவர்மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போனார். கண்டித்தும், கேவலமாகவும் பேசினார். ஆனால் அந்த மாணவரோ மிகுந்த அமைதியோடு அமர்ந்திருந்தார். கடைசியில் அந்த மாணவர், "உங்களுக்கு உண்மையாகவே உதவி தேவையாயிருக்கிறது" என்று கூறியவுடன் போதகர் முன்னிலும் அதிக கோபம் கொண்டவராக வெகுண்டெழுந்தார்.

ஆயினும், அம்மாணவர்கள் தொடர்ந்து ஜெபித்தனர்; மறைதிரு. பேக்கரின் வாழ்க்கையில் தேவன் செயல்புரியத் தொடங்கினார். பாரம்பரிய விசுவாசத்தி லிருந்து எவ்வளவாக விலகியிருக்கிறார் என்பதை பேக்கர் உணரத்தொடங் கினார். கடைசியில் தலைமைப் போதகரிடம் சென்று தமது போதனைகள்



அவர்களது சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும் திருமறைச் சத்தியங்களுக்கு மாறானவைகளாக இருக்கின்றன என்று கூறினார்.

நற்செய்தியைக் குறித்து கேவின் கொண்டுள்ள அபிப்பிராயத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் கண்ட தலைமைப் போதகர் மிகுந்த ஏமாற்றம் அடைந்தார். தம்முடைய கரங்களில் தமது முகத்தைப் புதைத்துக் கொண்டவராக, "கேவின், இனிமேல் நீங்கள் தலைமைப் போதகராக ஆகப்போவதில்லை" என்றார். உடனே கேவின், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று விடை பகர்ந்தார்.

## உள்ளம் நொறுங்குண்டது

தூய ஆவியானவர் தொடர்ந்து கேவின் உள்ளத்தில் பேசிக் கொண்டி ருந்தார். தான் செய்த தவறை உணர்ந்தவராக, மாணவர் தலைவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று ஏவப்பட்டார். ஆனால் அவர் உள்ளத்தின் மறுபுறம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. புகழ்பெற்ற கிறிஸ்தவச் சபைப் பிரிவின் போதகர், கறுப்புநிற மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்பதா? அவருடைய நன்மதிப்பு என்னாவது? அவ்வாறு செய்யலாகாது. நாளுக்கு நாள் அவருடைய உள்ளத்தில் போராட்டம் அதிகரித்துக் கொண்டேபோயிற்று. முள்ளில் உதைக் கிறதற்கு ஒப்பாக இருந்தது அவரது நிலைமை. கடைசியில் மாணவரைச் சந்திக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். அப்பொழுதுதான் உள்ளத்தில் அமைதி ஏற்பட்டது. உடனடியாக, உள்ளம் நொறுங்குண்ட நிலையில் மாணவர் விடுதியை நோக்கி தனது வாகனத்தை ஓட்டத் தொடங்கினார். அங்கு சென்று எவ்வாறு மன்னிப்புக்கேட்பது என்று தனக்குள்ளே சொல்லிப்பார்த்துக் கொண்டார்.

மணியோசை கேட்டுக் கதவைத்திறந்த மாணவர் அங்கு போதகர் நிற்பதைக் கண்டவுடன் உள்ளக் கிளர்ச்சி அடைந்தவராக "அல்லேலூயா" என்று கூறினார். தனது ஜெபம் கேட்கப்பட்டது என்பதை அறிந்துகொண்டார். ஒரு கறுப்பு நிற மனிதனை முதன் முதலாகப் போதகர் கேவின் தழுவிக்கொண்டார். அவ்வாறு செய்ய வேண்டுமென்றும் அப்பொழுதுதான் அவருக்குத் தோன்றிற்று.

"மறுபடியும் பிறந்தவர்கள்" தங்களோடு காலை 4 மணி ஜெபத்தில் கலந்து கொள்ளும்படி கேவின் அவர்களுக்கு அழைப்பு விடுத்தனர். போதகர் அவ்வாறு செய்யலாமா? அவர் வாய் குழறியது. சில காரணங்களைக் கூறினார். அவர் பேசியவற்றை மாணவர்கள் அமைதியோடு கேட்டனர். பின்னர் "ஒருவாரம் முயற்சி செய்யுங்கள்" என்று வருந்திக் கேட்டுக்கொண்டனர். அவரால் தொடர்ந்து எதிர்த்து நிற்க முடியவில்லை. ஜெபத்தில் கலந்துகொள்ள உடன்பட்டார். கலந்துகொண்ட அவருக்கு ஜெபத்தில் இதுவரை கண்டிராத பெருமகிழ்ச்சி கிடைத்தது.

தங்களது போதகர்களில் ஒருவர் மாணவர்களோடு சேர்ந்து காலையில் 4.00 மணிக்கு ஜெபிக்கிறார் என்று சபை நிர்வாகிகள் கேள்விப்பட்டவுடன் இறை

யியல் கல்லூரிக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டது என்றே கருதினர். இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாண, திரு கேவின் அவர்களை வேறு கல்லூரிக்கு மாற்றம் செய்ய வேண்டுமென முடிவு செய்தனர். காலை 7 மணிக்கு முன் எந்த ஒரு கூட்டமும் கல்லூரி வளாகத்தில் நடத்தக்கூடாதென்றும் தடை கொண்டு வந்தனர்.

மாணவர் குழுவோ இதனைக் கர்த்தருடைய சமுகத்தில் நிறுத்துப் பார்த்தனர். மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே உத்தமம் என்று முடிவு செய்தனர். தடையைமீறி காலை 4.00 மணி ஜெபம் தொடர்ந்தது. அவர்களது படிப்புமுடிய இன்னும் சில வாரங்களே இருந்தன. அந்த மாணவர்கள் அந்தத் தறுவாயில் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

அந்த மாணவர்கள் மனமுடைந்து போயினர். ஆயினும் நிர்வாகத்தின் மீது கசப்புணர்வு கொள்ளவில்லை. ஆனால், சகோதரர் கேவின் தலைமைப் போதகரிடம் கடுங்கோபமும், கசப்பும் கொண்டுள்ளார் என்பதை அறிந்த அவர்கள் அவரோடு உடன்பாடு கொள்ளும்படியாகக் கேவின் அவர்களைக் கேட்டுக்கொண்டனர். இம்முறை கேவின் உள்ளத்தில் எவ்விதப் போராட்ட முமில்லை. உடனடியாகத் தலைமைப் போதகரிடம் சென்று தமது உள்ளத்தை வெளிப்படுத்தி உடன்பாடு எய்தினார். அதன் பின்னர் தமது வாழ்க்கை எழுச்சி அடைவதைக் கேவின் உணர்ந்தார்.

## இதயத்தை அடிக்கும் சம்மட்டி

பரிசுத்தத்தின் அனைத்துக் கூறுகளிலும், உள்ளம் நொறுங்குதல் மிகவும் இன்றியமையாததும், எழுச்சி மிக்கதுமாக இருக்கிறது. ஒருவருடைய சித்தம் தேவனுடைய சித்தத்தின் ஆதிக்கத்திற்குள் அடங்கிக் காணப்படுமாயின் அவரையே உள்ளம் நொறுங்குண்டவர் என்று அழைக்கிறோம். சூழ்நிலைகள் தனக்கு எதிரானவைகளாக இருக்கும்போதும், மற்றவர்கள் தன்னை எரிச்ச லடையச் செய்கிற முறையில் நடக்கிறபோதும், உள்ளம் நொறுங்குண்டவர் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவராக நடந்துகொள்வார். அவர் ஒரு கன்னத்தில் அறையப்படும்போது மறுகன்னத்தைக் காட்டுவார். ஸ்டேன்லி ஜோன்ஸ் என்பார், “உனது மறுகன்னத்தைக் காட்டுவதால் உனது எதிரியின் படைக்கலனை அழித்துப் போடுகிறாய். அவன் உனது ஒரு கன்னத்தில் அறை யும் போது, நீ கொண்டிருக்கிற ஒழுக்கத்தின் துணிச்சலால் மறு கன்னத்தைக் காட்டுவதன் மூலம் அவனுடைய இதயத்தில் அறைகிறவனாகக் காணப்படுவாய். அப்பொழுது அவன் உன்மேல் கொண்டிருக்கும் விரோதத்தை விட்டொ ழிவான். நீ விரோதிகள் இல்லாதவனாய்க் காணப்படுவாய். ஒருவன் தன்னை அடித்த மற்றவனை எதிர்த்து அடிக்கக்கூடிய வலிமை படைத்தவனாக இருப்பினும், அவ்வாறு அடிக்காதிருக்கும் வலிமை படைத்தவனாயிருப்பா னென்றால், அவனுடைய காலடியில் இந்த உலகம் வீழ்ந்துகிடக்கும், அதுவே வலிமை. அதுவே முடிவான வலிமை” என்று கூறியுள்ளார்.



இருதயம் நொறுக்கப்படுவதற்கு ஆயத்தமான நிலை, ஒரு சீரிய குணமாக இருக்கிறது. எதிர்த்துச் செயல்படவோ, தன்னைக் காத்துக்கொள்ளவோ, பிறரைக் குற்றப்படுத்தவோ முயலும் இயற்கையான எண்ணத்தை நொறுங்குண்ட உள்ளம் தடுத்து நிறுத்தும். நொறுங்குண்ட பாத்திரங்களையே தேவன் விரும்புகிறார்.

ஒருநாள் முனைவர் அலெக்ஸாண்டர் வொய்ட் என்பவருடைய சபை உறுப்பினர் ஒருவர் தனக்குக் கிடைத்த செய்திகளுடன் அவரிடத்தில் வந்தார். அந்த நகருக்கு வந்துள்ள ஒரு பிரசங்கியார் அலெக்ஸாண்டர் வொய்ட் அவர்களின் உடன் ஊழியர் ஒருவர் உண்மையான கிறிஸ்தவர் இல்லை என்று வெளியரங்கமாகச் சொன்னதே அந்தச் செய்தி.

அதனைக் கேட்ட வொய்ட் சினம்கொண்டுப் பொங்கியெழுந்தார். கர்த்தரு டைய உண்மையான ஊழியருக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு அவரைச் சினமடையச் செய்தது. அவ்வாறு பேசிய அந்தக் குற்றத்திற்கு எதிராகத் தெரிந்துதெடுத்த சில வார்த்தைகளால் தனது சினத்தை வெளிப்படுத்தினார்.

அப்பொழுது அந்தச் சபை உறுப்பினர், “அது மட்டுமன்று, நீங்களும் உண்மையான கிறிஸ்தவர் அல்லர் என்று அவர் கூறினார்” என்றார்.

அதனைக் கேட்ட முனைவர் வொய்ட் தொய்ந்து விழுந்தார். பிறகு, “நீங்கள் என் அறையை விட்டுப் போய்விடுங்கள். நான் என் உள்ளத்தைக் கர்த்தருக்கு முன் சோதித்துப் பார்க்க என்னைத் தனிமையில் விட்டுவிடுங்கள்” என்றார்.

உள்ளம் நொறுங்குதல் என்னும் பாடத்தை நம்மில் சிலர் எளிதாகக் கற்றுக்கொள்கிறதில்லை. ஒருநாள் மாலையில் நான் வயது முதிர்ந்த மரியாதைக் குரிய இரண்டு தேவ ஊழியர்களுடன் ஒரு வீட்டிற்குச் சென்றேன். நான் தலைவராகப் பணியாற்றிய வேதாகமக் கல்லூரியைப் பற்றிய உரையாடல் அச்சமயத்தில் எவ்வாறு தொடங்கியது என்பதை மறந்துபோனேன். ஆனால் அந்த ஊழியர்கள் இருவரும் அக்கல்லூரியைக் குறை கூறினர். என்னுடைய உள்ளத்தில் கோபம் பொங்கியெழுந்ததை என்னால் உணரமுடிந்தது. ஒரு குழந்தையைப் பார்த்து, “என்ன விகாரமான குழந்தை” என்று யாராவது கூறினால். அக்குழந்தையின் தாய் எவ்வித எண்ணம்கொள்வாளோ அவ்வித மாகவே நானும் எண்ணினேன். என்னுடைய உணர்ச்சிப் பெருக்கு நயாகரா நீர் வீழ்ச்சியைப் போலக் கொதித்தெழுந்தது. இருகுழல் துப்பாக்கியிலிருந்து வெளிவரும் குண்டுபோல இருந்தது என் பேச்சு. இருவருக்கும் நன்றாகக் கொடுத்தேன். என் வீட்டிற்குத் திரும்பும் வழியில் நீதிக்காக வீரமுடன் செயல்புரிந்தேன் என்று என்னை நானே போற்றிக்கொண்டேன்.

மாதங்கள் சில கழிந்தன. ஐயோவா என்ற நகருக்குப் பயணம் செய்து கொண்டிருந்தேன். அங்கு சென்று கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும்.

அத்தருணத்தில் தேவ ஆவியானவர் என்னை ஆட்கொள்வதையும் என்னை உத்வேகத்துடன் கண்டித்து உணர்த்துவதையும் உணர்ந்தேன். "மேக்டோனால்ட், கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவது எப்படி என்று பிறருக்குக் கற்றுக்கொடுக்கப் போகிறாய். என்னுடைய ஊழியக்காரர் இருவரிடம் நீ எவ்வாறு பேசினாய் என்பதை நினைத்துப் பார். அதை நீ இன்னும் சரிசெய்யவில்லை" என்று அவர் என்னிடம் கூறுவதுபோல இருந்தது. அந்த வாரத்தின் கடைசியில் நான் செய்தி அளிக்கும் முன்னர் அந்த இரண்டு ஊழியர்களுக்கும் மன்னிப்பு மடலை எழுதினேன்.

## உள்ளம் நொறுங்குதல் முறிந்த நட்பைச் சீராக்குகிறது

அந்த நட்பு அதனோடு முடிவடைந்துவிட்டதா? நட்பு மீண்டும் மலர்ந்தது. இதுவரை இருந்ததைக் காட்டிலும் இன்னும் ஆழமானதாக மாறிற்று. அவர்கள் இருவரும் கிருபைபொருந்தின மடல்களை எழுதினர். எனது மன்னிப்பின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டனர். என்னுடைய நலனைக் கருதுவதாகவும் எனக்காக மன்றாடுவதாகவும் உறுதி மொழிந்திருந்தனர். தேவனுடைய வழியே சிறப்புமிகு வழி. உள்ளம் நொறுங்குவதால் முறிந்த நட்பு மீண்டும் புதிப்பிக்கப் படும் என்பதை அவர் அறிவார். ஆனால் பெருமையோ அவைகளை அழித்து விடும்.

நான் நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொண்டதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் அப்படியில்லை. ஒருநாள் காலையில் அடக்க நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். எனது தொலைபேசி மணி அடித்தது. இங்கிலாந்திலிருந்து அந்தப் பகுதிக்கு வந்திருந்த ஒரு பிரசங்கியார் மறுமுனையிலிருந்து பேசினார். கர்த்தருடைய வருகையைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து திருமறைக்கு விரோதமானது என்று நான் நம்பினேன். அவர் அவ்வாறான கருத்துடையவர் என்பது ஏற்கனவே எனக்குத் தெரியும். எங்களது உரையாடல் தீர்க்கதரிசனத்தை நோக்கிச் சென்றது. கொஞ்ச நேரத்தில் நான் கோபத்துடன் என்னுடைய வாதத்தை எடுத்துக் கூறினேன். அந்தத் தொலைபேசிக் கம்பியில் சூடு ஏறியிருக்கும் என்று நிச்சயமாக என்னால் கூற முடியும். அடக்க நிகழ்ச்சிக்குச் செய்த ஆயத்தம் கெட்டுப்போனதுதான் அதன் விளைவு. எங்களுடைய வாதம் தொடர்ந்துகொண்டே போயிற்று. முடிவில் இருவரும் அவரவருடைய கருத்தே சரியானதென்று இன்னும் கொஞ்சம் அதிகமான நிச்சயம் கொண்டவர்களானோம்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் நான் லண்டன் மாநகருக்குச் சென்றேன். மீண்டும், நான் விரும்பாத வகையில் கர்த்தர் என்னிடத்தில் வந்தார். அந்தப் பிரசங்கியார் வசிக்கும் தெருவிற்கு அருகில்தான் நான் நடந்து சென்று கொண் டிருந்தேன். எனக்கு முன்னால் இருந்த தொலைபேசிக் கூடத்தை என்னால் காண முடிந்தது. "பில், அங்கே தொலைபேசி இருக்கிறது. நீ அந்தச் சகோதரனை அழைத்து அவரிடம் கோபமாகப் பேசியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா?" என்று ஆண்டவர் என்னிடம் வினவினார்.



"ஆனால் ஆண்டவரே, நான் பேசியது சரியென்றுதான் இன்னும் நினைக் கிறேன். உமது வருகை திடீரென்று இருக்கும் என்னும் கருத்தை ஆதரித்துத் தானே நான் பேசினேன்" என்று நான் பதிலுரைத்தேன்.

கர்த்தர், "அது பொருட்டல்ல. உனது நடத்தை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதையே கருத்தில் கொள்ள வேண்டும்" என்றார்.

நான் அந்தத் தொலைபேசிக் கூடத்திற்குச் சென்றேன். அவர் அங்கே இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் அவருடைய இல்லத்தின் எண்களைச் சுழற்றினேன். ஆனால் அவர் அங்கு இருந்தார். அவர்தான் தொலைபேசியை எடுத்தார். எதற்காக அவரை அழைத்தேன் என்று விவரித்தேன். அது என்னுடைய பெருமைக்கு விழுந்த பேரடி. மீண்டும் எனக்குப் பெருமை மேலிடாதபடி, என்மேல் விழுந்த பேரடியாக அது இருந்தது. அவர் மிக்க கிருபைபொருந்தின சொற்களால் என்னுடைய மன்னிப்பை ஏற்றுக்கொண்டார். அருகில் உள்ள உணவு விடுதியில் அடுத்தநாள் அவரோடு உணவருந்த வரும்படி அழைத்தார். பின்னர், அவர் ஐக்கியம் கொள்ளும் சபையில் செய்தி அளிக்கும்படி அழைக்கப்பட்டேன்.

"என்னுடைய உள்ளம் நொறுங்கவில்லையென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?" என்று சிலர் கேட்கலாம். அதற்குரிய படிகளைக் கீழே ஆலோ சனையாகத் தருகிறேன்.

## உள்ளம் நொறுங்குவதற்கான படிகள்

முதலாவதாக, "கர்த்தாவே என்னை நொறுக்கும்" என்று ஜெபியுங்கள். மற்ற கிறிஸ்தவர்களைப் போலவே நீங்களும் மாற்றம் அடைய வேண்டியவராக இருக்கிறீர்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மாற்றத்தைக் கர்த்தர் உங்களுடைய வாழ்வில் ஏற்படுத்த வேண்டும் என்று மன்றாடுங்கள். அதற்குரிய விலையை எண்ணிப்பாருங்கள். உள்ளம் நொறுங்குவதன் அனுபவம் மிகுந்த வேதனை தருவதாயிருக்கும்.

இரண்டாவதாக, சரிசெய்யப்பட வேண்டிய உங்கள் தவறுகளையும், மன்னிப்புக்கேட்க வேண்டிய உங்கள் சொற்களையும், ஆவியில் செயல் படுவதற்குப் பதிலாக மாம்சத்தில் செயல்பட்ட நேரங்களையும் துருவித் தேடுங்கள்.

அடுத்தது, தேவனிடம் அறிக்கை செய்யுங்கள்; யார்யாருக்கு எதிராகச் செயல்பட்டீர்களோ அவர்களிடமும் அறிக்கை செய்யுங்கள். மற்றவர்களிடம்

அறிக்கை செய்வதைவிடத் தேவனிடம் அறிக்கை செய்வது எளிதாக இருக்கும். ஆனாலும் செய்ய வேண்டிய அறிக்கையைச் செய்துவிடுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தாத உள்ளத்துடன் நடமாடுவீர்கள்.

கடைசியாக, உங்கள் அனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அதினிமித்தம் உள்ளம் நொறுங்குவதால் உண்டாகும் ஆசீர்வாதத்தை அவர்களும் அனுபவிக்க அது வழிவகுக்கும்.

உடைந்த பொருட்களையும், உடைந்த உள்ளங்களையும் இறைவன் நேசிக்கிறார். வேன்ஸ் ஹேவ்னர் என்பார், "பயிர் வளர்வதற்கு நிலம் உழுது நொறுக்கப்பட வேண்டும்; மழைபொழிய மேகங்கள் நொறுங்க வேண்டும்; மக்கள் வலிமைபெறத் தானியங்கள் பொடியாக வேண்டும். உடைக்கப்பட்ட நளதைலக் குப்பியே நறுமணத்தைக் கமழும். யாப்போக்குத் துறையிலிருந்து நொண்டி நடந்த யாக்கோபு, தேவனிடத்திலிருந்தும் மனிதனிடத்திலிருந்தும் வல்லமை பெற்றான். மனம் கசந்து அழுத பேதுரு, முன்னிருந்த நிலையைக் காட்டிலும் மகாவல்லமையைப் பெற்றான்" என்று எழுதியுள்ளார். ●

# 26

# போதைப் பொருட்கள் – வேண்டவே வேண்டாம்

ஸ்டீவ் ஒரு வணிகர், இளைஞர், திருமணமானவர் மகிழ்ச்சியோடு இல்லற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் தனது நண்பன் அளித்த விருந்தின்போது கோகைன் என்னும் போதைப் பொருளை முதன் முதலில் உட்கொண்டார். கூடிய விரைவில் அந்தப் போதைப் பொருளின் கிளர்ச்சியை நாடுகிறவராக மாறிவிட்டார். சிறிது நேரம் நிலைக்கும் கிளர்ச்சிக்காக நாள்தோறும் 60 பவுண்டு பணத்தைச் செலவு செய்யத் தொடங்கினார். அது அவருடைய இல்லற வாழ்க்கையைப் பெரிதும் பாதித்தது. மற்றும் பலரைப் போலவே இவருடைய வாழ்க்கையிலும் சண்டை, கடன் போன்ற பிரச்சனைகள் தோன்றி, கடைசியில் விவாகரத்தில் முடிந்தது. அவரோடு நெருங்கிப் பழகின தோழர்கள் அவரை விட்டு விலகிச் சென்று விட்டனர்.

போதைப் பொருட்களால் சரீர இன்பம் உண்டாகும் என்பதை யாரும் மறுக்கவில்லை. இவ்வையகம் மனிதனுக்கு இன்பத்தை அளிக்கும் என்பதைத் திருமறையும் ஒப்புக்கொள்கிறது. ஆயினும் அந்த இன்பம் "அநித்தியமான பாவசந்தோஷம்" (எபி. 11:25) என்றே அழைக்கப்படுகிறது. அவைகளில் இன்பமுண்டு. ஆனால், அவ்வின்பம் நிலைபேறானது அன்று. எனினும் அதற்கென மனிதன் கொடுக்கின்ற விலை மிகப்பெரியது.

விசுவாசிகள் போதைப் பொருட்களைக் குறித்து எவ்வித மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும்? இந்நாட்களில் போதைப் பொருட்கள் மலிந்து கிடக்கின்றன. ஆம்பிடெமைன், பார்பிடியுரேட்ஸ், ஹீரோயின், கோகைன், பிசிபி, ஓபியம், மாரிஜோனா, எல்எஸ்டி, பியோட், க்ளு, நைட்ரஸ் ஆக்ஸைடு. மேலும் கோடின், டார்வன், பெர்கோடன் ஆகிய மருந்துகளும் அந்தப் பட்டியலில் சேரும். திருமறை இதைக் குறித்து என்ன சொல்லுகிறது?

மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து பவுல் கலாத்தியருக்கு எழுதுகிற போது பில்லிசூனியம் என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். புதிய

ஏற்பாட்டின் மூல மொழியில் அச்சொல் 'பார்மாகேயியா' என்பதாகும். போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், மந்திர சக்தியை அளிக்கும் பானத்தை அருந்துதல், மந்திர சக்திக்கு உட்படுதல் ஆகியவற்றையே அச்சொல் குறிக்கிறது. கெட்ட ஆவிகளுடைய உலகத்தின் ஒரு பங்கான மந்திரக் கலையில் போதைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். ஒரு மருத்துவர் கூறுகிற ஆலோசனையின்படி உட்கொள்கின்ற மருந்துகள் பயனளிக்கக்கூடியவை. ஆனால் மந்திரவாதிகள் தரும் போதைப் பொருட்களைக் குறித்தும், ஆவிகளின் கிரியையைக் குறித்தும், தீய ஆவிக்குட்படுதலைக் குறித்தும் வேதம் கண்டித்து உணர்த்துகிறது.

## போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர் அடையும் இழப்பு

மனதை விரிவுபடுத்தும் போதைப் பொருட்கள், மனிதனைத் தீய ஆவிகளின் உலகத்திற்குக் கொண்டு போகக்கூடியவை என்பதை நாம் அறிவோம். போதைப் பொருட்களுக்கு அடிமையாயிருந்து, பின்னர் மீட்கப்பட்ட விசுவாசிகள் தங்களது முந்தைய அனுபவத்தைப் பற்றிக் கூறுகையில் தீய ஆவிகளின் ஆதிக்கத்திற்குட்படாமல் போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட முடியாது என்று கூறுகின்றனர்.

அழிப்பதொன்றையே தீய ஆவிகள் இலக்காகக் கொண்டிருக்கின்றன (மாற்கு 9:22; யோவான் 10:10). இந்த விதிக்கு விலக்கொன்றுமில்லை. பிசாசானவன் போதைப் பொருட்களை உட்கொள்கிறவரையோ அல்லது அவர் மூலமாக மற்றவர்களையோ அழிக்க முற்படுவான். இந்நாட்களில் நாம் பலவிதமான மதியற்ற செய்கைகளையும், வன்முறைகளையும் குறித்துக் கேள்விப்படுகிறோமே; போதைப் பொருட்கள், தீய ஆவிகள், அழிவு ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையவைகளாக உள்ளன என்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக அவற்றில் நாம் எவ்விதப் பங்கும் கொள்ளாதபடித் தவிர்க்க வேண்டும்.

ஊறு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்தாமல் அவற்றினின்றும் விலகியிருப்பதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. அந்தப் பொருட்கள் மனிதனை அடிமைப்படுத்தக் கூடியவை. எந்த ஒரு பழக்கத்திற்கும் கிறிஸ்தவர்கள் அடிமைப்படக்கூடாது (ரோமர் 6:16-23). அவை பொருட்செலவு மிகுந்தவை. அந்தப் பழக்கத்தில் தொடர்ந்து இருப்பதற்கான தேவையைச் சந்திக்க மனிதர்கள் திருடுகிறார்கள்; வன்முறையில் ஈடுபடுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்கள் விபசாரத்திலும் ஈடுபடுகிறார்கள். போதைப் பொருட்களால் ஏற்படும் விளைவுகள் சிலவற்றைக் காணலாம். ஊசிகளின் மூலமாக ஏற்படும் தொற்று நோய்கள், எலும்பும்தோலுமாக மெலிந்து காணப்படுதல், நோய் எதிர்ப்பு சக்தியை இழந்து போகுதல் ஆகியவைகள் அவற்றில் சில. அதனால் மனதில் ஏற்படும் பாதிப்பு ஈடுசெய்ய இயலாததாய்ப் போய்விடும். அடிமைப்பட்டவர்கள்



உயிரற்ற பிணத்தைப் போலவும், மனநிலை பாதிக்கப்பட்டவராகவும் காணப்படுகின்றனர். சிலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். போதை மருந்துகளைப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். மீறுகிறவர்கள் கைது செய்யப்படுவர்; நீதி மன்றத்தில் வழக்குகளைச் சந்திக்க வேண்டும்; வழக்காட மிகுந்த செலவு செய்ய வேண்டும்; குற்றம் நிரூபிக்கப்பட்டால் சிறை தண்டனையும் வழங்கப்படும். அதிகமாகப் போதைப் பொருட்களை உட்கொள்ளுவோர் புதைகுழிக்குச்செல்ல வேண்டும் அல்லது எரிந்து சாம்பலாக வேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் ஒருபோதும் ஊறுவிளைவிக்கும் போதை மருந்தை உட்கொள்ளலாகாது. ஏனெனில் அவனுடைய சரீரம் தூய ஆவியானவர் தங்கும் ஆலயமாக இருக்கிறது (1 கொரி. 6:19). போதைப் பொருட்களை வியாபாரமும் செய்யலாகாது. ஏனெனில் அது மற்றவர்கட்கு ஊறு விளைவிக்கும். அவ்வாறு வாணிபம் செய்யும் ஒருவர், கிறிஸ்தவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குரிய நல்ல எடுத்துக்காட்டாக விளங்காமல், அதற்கு மாறான நடத்தையுள்ளவராகக் காணப்படுவார். மனிதர்களைக் கிறிஸ்துவுக்கென்று வெற்றி கொள்வதே நம்முடைய பணி; போதைக்கு அடிமைப்படுத்துவது நமது தொழில் அன்று.

போதைப் பொருட்களுக்கும், தீய ஆவிகளுக்கும் தொடர்பு உண்டு என்று நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டினோம். அவற்றுடன் விசுவாசிகள் விலக்க வேண்டிய மேலும் சில செயல்களைக் கூற விழைவோம். அவை தீய ஆவிகளுடன் தொடர்புடையனவாகும். அவையாவன அதிர்ஷ்ட அட்டைகள், வருமுன்னுரைத்தல், தீய மந்திரசக்தி, தூய மந்திரசக்தி, யோகம், ஜோஸ்யம், அதிர்ஷ்டப் பலகைகள், மாயக்கண்ணாடி, கைரேகை பார்த்தல், இறந்தவர்களுடன் உறவாடுதல், குறிபார்த்தல், அஞ்சனம் பார்த்தல், இறந்தவர்களின் ஆவியை எழுப்புதல் ஆகியவைகளே (உபா. 18:9-14).

## மதுபானம்

குடிகாரனாயிருந்து விசுவாசியாக மனந்திரும்பிய ஒருவரிடம், "இயேசு நாதர் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்று வினவியபோது, அவர் உடனடியாக, "ஆம் நம்புகிறேன், மதுபானத்தை மளிகைப் பொருட்களாகவும், சூதாட்டச் சீட்டை மரச்சாமான்களாகவும், மனம் உடைந்து போன மனைவியைக் கிறிஸ்துவுக்காகப் பிரகாசிக்கும் பெண்மணியாக அவர் மாற்றியுள்ளதை நான் கண்டுள்ளேன். ஆகவே, அவர் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியதை நான் நம்புவதற்குத் தடையேதுமில்லை" என்றார்.

போதைப் பொருட்களில் மதுபானமே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. போதைப்பொருட்களைப்பற்றி நாம் முந்தைய பகுதியில் விளக்கமாகப் பார்த்தது போல, மதுபானமும் உலகத்தின் உண்மைகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறதிற்கான வழியாக இருக்கிறது. அது தற்காலிக மனக்

கிளர்ச்சியைத் தருகிறது, பிரச்சனைகளைச் சிறிதுநேரம் மறக்கச் செய்கிறது, மனத் தாக்குதலிலிருந்து கொஞ்ச நேரம் விடுதலை கிடைக்கிறது. மற்ற போதைப் பொருட்களைப் போலவே இதுவும் ஒழுக்கக்கேட்டிற்கு வழிவகுக்கும், மனித நேயத்தைக் கெடுக்கிறது, அழிவை உண்டாக்குகிறது.

மதுபானத்தைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறதென்று காணலாம். ஆண்களும் பெண்களும் திராட்சப்பிழிவை மிதமாக அருந்தி மகிழ்ந்திருக்க வேண்டும் என்பது ஆதியிலே தேவன் கொண்டிருந்த விருப்பமாகும் (சங். 104:15). ஆயினும், அது மிதமிஞ்சியதாக இருக்கக்கூடாது. அதனை மிதமிஞ்சி அருந்துவதால் சரியான தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலை மனிதர்கள் இழந்துவிடுவார்கள் என்று தேவன் எச்சரித்துள்ளார் (நீதி. 31:4,5; ஓசியா 4:11). மேலும், வயிற்றுக்கு நீர் ஊறுவிளைவிக்கும்போது திராட்சப்பிழிவை அருந்து வதற்குத் தேவன் அனுமதி வழங்கியுள்ளார் (1 தீமோ. 5:23). இறந்துபோகும் தறுவாயில் இருப்போருக்கு மனுபானத்தை மருந்தாகக் கொடுக்க தேவன் அனு மதித்துள்ளார் (நீதி. 31:6,7). தேவன் தமது இரக்கத்தில் அருளியுள்ளதைத் தகாத விதத்தில் பயன்படுத்திப் பலர் குடிக்கு அடிமையாகின்றனர். மதுபானம் மித மிஞ்சிக் குடிக்கப்படுவதைத் தேவன் வன்மையாகக் கண்டித்துள்ளார் (ரோமர் 13:13). வெறியர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்கமாட்டார்கள் என மிகத் தெளிவாக அவர் சொல்லியிருக்கிறார் (1 கொரி. 6:10). ஒரு மனிதன் தன்னை விசுவாசி என்று சொல்லியும், அவன் குடிகாரனாக இருப்பானென்றால், அவனது கூற்று உண்மையல்ல என்பது திண்ணம். அதைத் தகாதவிதமாய்ப் பயன் படுத்தினால், "திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதில் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" (நீதி. 20:1). நமது கலாச்சாரத்தின் படி குடிப்பது மற்றவர்களுக்குத் தடையாயிருப்பதால் விசுவாசிகள் முற்றும் அதற்கு விலகியிருக்க வேண்டும். அஃதாவது மயக்கம் அளிக்கும் எல்லா விதமான பானங்களிலிருந்தும் விலகியிருக்க வேண்டும் (ரோமர் 14:21).

உண்மையில் விசுவாசிகள் மதுபானத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவையே இல்லை. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல் ஆவியினால் நிறைவதே இறைமக்கட்கு நல்வழியாகும் என அப்போஸ் தலனாகிய பவுல் உரைத்துள்ளார் (எபே. 5:18).

## இது நோயா அல்லது பாவமா?

மதுபானத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பது பாவமன்று, நோயே என்று இந்நாட்களில் சொல்லப்படும் கதையைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள். திருமறை அதனைப் பாவம் என்றே சொல்லுகிறது. வெறியர்கள் தேவனுடைய இராஜ்ஜி யத்தைச் சுதந்தரிக்க மாட்டார்கள் (1 கொரி. 6:10). மனிதன் தன்னுடைய நடத் தைக்குத் தானே பொறுப்பாளியாக இருக்கிறான். பாவத்தை நோய் என்று சொல்லி, அப்பொறுப்பிலிருந்துத் தப்பித்துக்கொள்ள இயலாது.



மதுபானப்பழக்கம் ஒரு நோய் என்று சொல்லப்படுவதை எள்ளிநகையாடி எழுதப்பட்ட தொகுப்பு சில ஆண்டுகளுக்கு முன்னர் "தேசியக்குரல்" என்னும் பத்திரிகையில் வெளிவந்தது:

> தன் மனவிருப்பத்தோடு ஒருவர் ஏற்றுக்கொள்கிற ஒரேநோய் மதுபானப் பழக்கமாகும்.
>
> இந்த நோயே பரப்பப்படுவதற்கு உரிமைபெற வேண்டிய ஒன்றாகும்.
>
> இந்த ஒருநோயே குப்பியில் அடைக்கப்பட்டு விற்கப்படுகிறது.
>
> இந்த ஒருநோய் பரப்பப்படுவதற்கு பல விற்பனைக் கூடங்களைக் கொண்டிருக்கிறது.
>
> இந்த ஒரு நோயினால் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது.
>
> இந்த ஒரு நோயினால் குற்றங்கள் பெருகுகின்றன.
>
> இந்த ஒரு நோயே பழக்கத்தினால் உண்டாவதாகும்.
>
> இந்த நோய் நுண்கிருமிகளாலோ, நோய்க்கிருமிகளாலோ உண்டா வதில்லை. இந்த நோய்க்கு மருந்துமில்லை.
>
> இந்த ஒரு நோய்தான் மனிதனைப் பரலோகம் செல்லவிடாமல் தடை செய்கிறது.
>
> இந்த ஒரு நோயையே கிறிஸ்துமஸ் பரிசாக அளிக்கின்றனர்.

குடிப்பழக்கம் ஒரு மனிதனை அடிமைப்படுத்தும் பழக்கமாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கேயன்றி நாம் எவருக்கும், எதற்கும் அடிமைப்பட இடங்கொடுக்கலாகாது (1 கொரி. 9:26,27).

இது செலவீனத்தை அதிகரிக்கும். குடும்பத்தேவைகளுக்கும், தனிப்பட்ட தேவைகளுக்கும் உரிய பணத்தைக் குடிப்பழக்கத்தில் செலவு செய்ய ஏதுவாகும். மதுவை விரும்புகிற எவனும் செல்வந்தனாவதில்லையென்று சாலொமோன் கூறியிருக்கிறான் (நீதி. 21:17). மதுபானம் அருந்தவேண்டும் என்ற வெறியில் மனிதர்கள், தங்களது பெண் குழந்தைகளையும் விற்றுப் போடுவார்கள் என யோவேல் தீர்க்கதரிசி கூறியுள்ளான் (யோவேல் 3:3).

குடிப்பழக்கம் ஒருவருடைய உடல் நலத்தைக் கெடுத்துவிடும் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். கல்லீரல் தடித்தல், சிறுநீரகநோய், இதயநோய், மூளையில் உயிரணுக்கள் பாதிப்பு ஆகியவை அவற்றுள் சில. அமெரிக்க நாட்டுக் குடிகாரர்களின் சராசரி வாழ்நாட்காலம் 51 ஆண்டுகள். அது நாட்டின் சராசரியை விட மிகக்குறைவாகும். மேலும் குடிப்பழக்கம் உள்ள கருவுற்ற பெண்களுக்குப் பிறக்கப்போகிற பிள்ளைகளின் உடல் நலமும் பாதிக்கப்படுகிறது. "தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார். ஆனால் நமது உடல் நமது பாவங்களை மன்னிக்கிறதில்லை" என்று ஒருவர் கூறியுள்ளார்.

ஒருவரது குடிப்பழக்கம், அவரது அலுவல் செய்யும் நேரத்தைக் குறைத்து விடும். எப்போதும் அவர் வேலைசெய்யப் பலமிழந்து காணப்படுவார். அது அவரது குடும்ப வாழ்க்கையை மிகவும் பாதிக்கும். வாகன ஒட்டுநர்கள் குடிப் பதால் ஏற்படும் விபத்துகளினாலே அநேகர் மரிக்கநேரிடும். தற்கொலை, கொலை ஆகியவை குடியினால் அதிகரிக்கின்றன. சிறைச்சாலையில் அடைக் கப்பட்டுள்ள கைதிகளில் 80 சதவீதம் தங்கள் குற்றங்களை மதுமயக்கத்தில் செய்திருக்கிறார்கள் என்று சமீபத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இவையாவும் குடிப்பழக்கத்தின் கேடு என்ன என்பதை நமக்குத் தெளிவாக விளக்கிக்காட்டுகின்றன.

சாலொமோன் குடிகாரனின் நிலையை அழகுற விளக்கிக் காட்டியுள்ளான் (நீதி. 23:29-35):

> ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டை கள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத் திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர் களுக்குதானே. மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப்பாராதே; அதுமெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக் கிறவனைப் போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப் போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், எனக்கு சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்.

## தன்னைப் பாதுகாக்கச் சிறந்தவழி

குடிப்பழக்கத்திற்குத் தான் அடிமையாகக் கூடாது என்று உறுதிப்படுத்திக் கொள்ள, ஒருவர் முழுவதுமாக மதுவைவிட்டு விலகியிருக்கவேண்டும். பிறருக்கு இடறல் உண்டாக்காமல் தன்னுடைய நடையை ஒருவர் காத்துக் கொள்வதற்கு இதுவே சிறந்த வழி. இஃது நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்றாகும். பலவீனமான சகோதரன் மற்றொரு விசுவாசி குடிக்கிறதைக் கண்டால், இது விசுவாசிக்கு ஏற்றதுபோலும் என்று முடிவு செய்வார். மேலும் அது தனக்கும் ஏற்றது என்று எண்ணிக் குடிக்கத் தொடங்குவார். கொஞ்சமாகக் குடிக்கத் தொடங்குபவர் காலப்போக்கில் குடிகாரராக மாறிவிடுவார். மற்றவர்கள் குடிகாரராக மாறுவதற்கு அவர்கள் காரணமாகி விடுகின்றனர். “மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில்



ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்” (ரோமர் 14:21) என்று பவுல் சொல்லியிருப்பதன் காரணம் அதுவே. “ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண் டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்” என்றும் பவுல் கூறியிருக்கிறார். ஒருவர் குடிகாரராக மாறிவிடுவதைவிட, மற்றவர்களைக் குடிகாரராக மாற்றுவது இழிவானதாகும். அது மிகவும் கேடானது என்பதைத் தேவன் அறிவார்.

## வெற்றிக்கான வழி

மெல் டிராட்டர் என்பார் ஒரு குடிகாரராயிருந்தார். குடித்தபிறகு உண்டாகும் தலைவலியைத் தவிர்க்கத் தொடர்ந்து குடித்துக்கொண்டேயிருப்பார். ஒருநாள் அவருடைய குழந்தை இறந்துவிட்டது. அப்பொழுது அவருக்குக் குடிக்க வேண்டும் என்ற ஆசை மேலிட்டது. ஆனால் அவரிடம் பணமில்லை. சவப் பெட்டிக்கு அருகில் சென்று மரித்துப்போன பச்சிளம் குழந்தை அணிந்திருந்த அழகிய காலணியைக் கழற்றி கடைக்குச் சென்று அதை அடகு வைத்தார். அந்தப் பணத்தைக்கொண்டு ஆசைதீரக் குடித்தார். அப்பொழுது தன்னையே வெறுத்த அவர் தனது வாழ்வை முடித்துக்கொள்ள வேண்டும் என்று கருதிய வராய் அருகில் உள்ள ஏரியை நோக்கி நடந்தார். போகும் வழியில் வீடற்ற வர்களும், குடிவெறியிலும் இன்னும்பல தீமைகளில் வாழ்வோரும் குடியிருக் கும் பகுதி ஒன்று இருந்தது. அங்கே அவர்களைக் கர்த்தரிடம் நடத்த வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்ட நற்செய்திப் பணியாளர்களின் குழு ஒன்றைக் கண்டார். அவர்கள் மூலமாக நற்செய்தியைக் கேட்டு வியத்தகு முறையில் இரட்சிப்படைந்தார். அவருடைய வாழ்க்கை முற்றிலும் மாற்றமடைந்தது. அவர் தனது குடிப்பழக்கத்தை அடியோடு கைவிட்டார். அவர் தனது எஞ்சிய வாழ்நாளெல்லாம் எல்லாத் தெருக்களிலும் நின்று கர்த்தரின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை மேற்கொண்டார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை யால் குடிப்பழக்கத்திலிருந்து வெற்றிபெற முடியும் என்பதற்கு உயிருள்ள சான்றாக விளங்கினார். குடிகாரராயிருந்தவர்கள் குடிக்க வேண்டுமென்ற ஆசையிலிருந்து முழு விடுதலையைப் பெறமுடியாது என்னும் கருத்து தவறானது என்பதை நிரூபித்துக் காட்டினார். குடிப்பழக்கத்தைக் கைவிட்டாலும் குடிக்கவேண்டுமென்ற ஆசையிலிருந்து விடுதலை பெறமுடியாது என்னும் கருத்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை உணராததினால் ஏற்பட்ட கருத்தாகும்.

மனந்திரும்பிய வேறொரு குடிகாரர், முந்தின வாழ்க்கையின் பாவ வழிகளுக்குத் தான் இறந்து விட்டதையும், தற்பொழுது புதிதான ஜீவ மார்க்கத்தில் வாழ்வதற்குக் கொண்டுள்ள உறுதியையும் ஞானஸ்நானத்தில் சாட்சிபகர கேட்டுக்கொள்ளப்பட்டார். ஞானஸ்நான சாட்சி நிறைவேறியது. பின்னர், தொட்டியிலிருந்து நீரை வெளியேற்றியவர் தொட்டியின் அடியில் ஒரு மதுக்குப்பி கிடப்பதைக் கண்டெடுத்தார். ஞானஸ்நானத்தில் சாட்சிபகர்ந்த அந்த

விசுவாசி தனது முந்தின இயல்பாகிய குடிப்பழக்கம் மரித்து விட்டது என்பதைக் காண்பிக்க நீருக்குள் குப்பியை மூழ்கடித்துவிட்டார்.

ஒரு விசுவாசி மதுபானத்தினால் தொல்லைக்குட்படக் கூடியவராயிருப்பா ரென்றால் கீழே தரப்பட்டுள்ள எளிய வழிமுறைகளைக் கைக்கொள்வாராக.

1. கையில் மீதமிருக்கும் மதுவைத் தூக்கி எறிந்துவிடுங்கள். நீங்கள் உண்மையாகவே குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையடைய விரும்புகிறீர்கள் என்பதை இது நிரூபித்துக்காட்டும்.

2. மதுபானத்தைவிட்டு விலகியிருப்பதற்கான பலத்தை நாடி தேவ னிடத்தில் தொடர்ந்து கதறி அழுங்கள். "என்னைச் சோதனைக்கு உட்படப்பண்ணாமல் தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும்" என்று கூறி ஜெபியுங்கள்.

3. உங்களைத் தூண்டும் ஒவ்வொரு சோதனைக்கும் எதிர்த்து நில்லுங்கள். கொஞ்சம்தானே என்று சொல்லி சிறிதளவு மதுவையும் குடிக்க வேண்டாம் (நீதி. 1:10). கர்த்தரை உதவிக்கு அழைத்து அந்தச் சோதனையை எதிர்த்து நில்லுங்கள் (நீதி. 18:10). ஒவ்வொருமுறை நீங்கள் பெறும் வெற்றி, உங்களது அடுத்த சோதனையில் வெற்றிபெற வழிவகுக்கும் (1 கொரி. 10:13).

4. ஒவ்வொருமுறை நீங்கள் தோல்வியடையும் போதும் அதனை உடனடியாகத் தேவனிடத்தில் அறிக்கை செய்யுங்கள் (1 யோவான் 1:9). உங்களுடைய தோல்வியைக் குறித்து, ஆவிக்குரியவரும், உங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவருமாகிய கிறிஸ்தவரிடம் பகிர்ந்து கொள்ளுங் கள், அவர் உங்களுக்காக ஜெபித்து உங்களுடைய ஜெபப்பங்காளராக இருப்பார்.

5. சோதனைகளை உண்டாக்கக்கூடிய இடங்களுக்குச் செல்ல வேண்டாம். அப்படிப்பட்ட நண்பர்களையும் காண வேண்டாம் (ரோமர் 13:14).

6. முடியுமானால், வளர்ச்சியடைந்த விசுவாசி ஒருவரிடத்தில் கணக் கொப்புவிக்க வேண்டும் என்று உங்களை நிர்ப்பந்தப்படுத்திக் கொள்ளுங்கள். அவர் உங்களுக்காக ஜெபிப்பார். உங்களுடைய சோதனைக் காலங்களில் உற்ற நண்பராக விளங்கி உங்களுக்காக எப்பொழுதும் மன்றாடுவார் (நீதி. 17:17).

நீங்கள் உண்மையாக அப்பழக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று தீவிரமாக இருப்பீர்களென்றால், நீங்கள் வெற்றியடைவதற்குரிய பலத்தைத் தேவன் உங்களுக்குத் தருவார். ஆனால் அதில் நீங்கள் உண்மையுள்ளவரா யிருக்க வேண்டும். 5 ●

# 27

# சூதாட்டம் – அதன் விலை மிக அதிகம்

"நீங்கள் ஏற்கனவே ஒருகோடி ரூபாய் வெற்றிபெற்று இருப்பீர்கள். அந்தப் பணத்தின் அதிர்ஷ்ட எண்கள் இந்த உறையில் இருக்கின் றன. அதற்குரிய விலையை இத்துடன் இணைத்து இந்த உறையைத் திருப்பி அனுப்புங்கள். வெற்றி பெற்றவர்கள் வரிசையில் உங்கள் பெயரும் சேரட்டும்."

சூதாட்டத்தில் பங்குகொள்ளும்படி இதைப் போன்ற விளம்பர அழைப்பு கள் நம்மை நோக்கி எய்யப்பட்ட வண்ணமாயிருக்கும் காலம் இது. பெரிய அங்காடிகளில் பணத்தைச் செலுத்த வரிசையில் நிற்கும்போது அதிர்ஷ்ட அட்டைகள் தரப்படும். பொருட்களின் விலை ஏறிக்கொண்டே போகிற இந்த நாட்களில் குறைந்தது ரூ. 1000-ஆவது நாம் வெற்றிபெற்றுவிடலாம் என்று நமதுள்ளத்தைத் தூண்டிக் கவர்ந்திழுக்கக் கூடியவைகளாக இவ்வாறான விளம்பரங்கள் இருக்கின்றன.

வீடு திரும்பியபின் சாய்வு நாற்காலியில் அமர்ந்து நாளிதழைத் திருப்புகிற வேளையில் ஒரு தொழிலாளி அதிர்ஷ்டச் சீட்டில் பலலட்ச ரூபாய்களைப் பரிசாகப் பெற்றது நம் கண்களுக்குத் தெரியும். இதற்கு அதிகச் செலவு கிடையாது. ஆனாலும் பல லட்சங்கள் பரிசு. "ஆ! அந்தப் பணம் எனக்குக் கிடைத்தால் என்னென்ன வாங்கலாம்" என்னும் நினைவு நம்முடைய உள்ளத்தை அசைக்கிறது.

கதவு மணியோசை கேட்கிறது! ஒரு அழகான சிறுபெண். அவளுடைய பள்ளியில் நடத்தப்போகிற பரிசுச்சீட்டுக் குலுக்கலுக்கான சீட்டு வாங்கும்படி விண்ணப்பிக்கிறாள். மறுப்பு தெரிவிப்பது கடினம்! அழகான குழந்தை! நல்ல காரியத்திற்காக இதை வாங்கக் கூடாதா!

### விரைவில் பணம் சம்பாதிப்பது எப்படி?

நாம் விரைவில் செல்வந்தராக ஆவதற்குப் பலவிதமான சந்தர்ப்பங்களை நமது சமுதாயம் உருவாக்கித் தருகின்றது. அது அதிர்ஷ்ட விளையாட்டோ,

குதிரைப் பந்தயமோ, நாய்ப் பந்தயமோ எதுவாகவும் இருக்கலாம். சுழற் சக்கரத்தில் பந்து எறிதல் புதுவகையான சூதாட்டம். மாநில அரசுப் பரிசுச் சீட்டு, மத்திய அரசுப் பரிசுச் சீட்டு இன்னும் எத்தனை வகையான பரிசுச்சீட்டுகள். கிறிஸ்தவ சபைகளும் அதிர்ஷ்ட எண் விளையாட்டை நடத்துகின்றன. கால்பந்து, குத்துச் சண்டை ஆகியவற்றில் பந்தயம் கட்டுதல். பங்குச் சந்தையில் ஊகத்தின் அடிப்படையில் பங்குகளை விற்பதும் வாங்குவதும் நாகரீகச் சூதாட்டமாயிருக்கிறது. ஆனாலும், பங்குச்சந்தைத் தொழில் செய்வது அனைத்தையும் சூதாட்டம் என்று சொல்ல முடியாது. அவற்றிலும் பாதுகாப்பான முதலீடுகள் உள்ளன. பங்குகளை வாங்குபவரது நோக்கத்தையும், பங்குகளின் தரத்தையும் பொருத்து நாம் அதை அறியலாம்.

பந்தயத்திற்காகக் கட்டும் பணத்தோடு பெறக்கூடிய பரிசுத்தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால் அது பெருந்தொகையாகத் தோன்றும். 1975ஆம் ஆண்டு பிரேசில் நாட்டைச் சேர்ந்த மிரோன் டி சௌசா 30 பென்ஸ் பந்தயத்தொகையாகக் கட்டி 2,451,549 அமெரிக்க டாலர்களைப் பரிசாகப் பெற்றார். அதற்கு முன்னர் அவ்வளவு பெருந்தொகையை எவரும் பரிசாகப் பெற்றது கிடையாது.

அடுத்த ஆண்டு நியூஜெர்ஸியைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய இளைஞர் மாநில அரசுப் பரிசுக் குலுக்கலில் வெற்றிபெற்றார். அதன்படி அவர் தன் வாழ்நாட்களெல்லாம் ஒவ்வொரு வாரமும் 1776 டாலர்களைப் பெறுவார். அவர் 76 வயது வரை வாழ்வாரென்றால் அவர் பெறும் தொகை 4.6 மில்லியன் டாலராகும்.

தொடர்ந்து பெருந்தொகையைப் பரிசாகப் பெறுகின்ற செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. தொகை கூடக்கூட அதனால் கவர்ந்திழுக்கப்படுபவரது எண்ணிக்கையும் கூடிக்கொண்டே போகும்.

## திருமறை தரும் வெளிச்சம்

இவையாவற்றையும் குறித்துத் திருமறை கூறுவது யாது? கிறிஸ்துவின் திருப்பெயரைத் தாங்கினவர்கள் சூதாட்டத்தில் கலந்து கொள்ளலாமா? அது முறையாகுமா?

"நீங்கள் சூதாடக்கூடாது" என்று திருமறை வெளியரங்கமாகக் கூற வில்லையெனினும், பத்தாவது கற்பனை, "நீங்கள் இச்சியாதிருப்பீர்களாக" (யாத். 20:17) என்று சொல்லுகிறது. சூதாட்டம் ஒருவகை இச்சையாகவே இருக்கிறது. தேவன் தனக்கு அளித்தவைகளில் மனநிறைவு அடையாமல் செல்வத்தின் மீது மிகுந்த விருப்பம் கொள்வதையே சூதாட்டம் வெளிப்படுத்துகிறது. முடியு மென்றால், மற்றவர்களின் இழப்பினாலே ஒருவன் செல்வந்தனாக ஆக வேண்டும் என்று விரும்புவதையே அது காட்டுகிறது. மேலும் ஒருவன் தனது பரமபிதாவை நோக்கிப் பார்க்காமல், அதற்கு மாறாக ஒரு சந்தர்ப்பத்தையோ தனது அதிர்ஷ்டத்தையோ நாடுகிறான் என்பதே அதன் பொருளாக இருக்கிறது.



ஆகலின், இச்சைக்கு எதிராகத் திருமறையில் சொல்லப்பட்டுள்ள அனைத் துத் தடைகளும் சூதாட்டத்திற்குப் பொருந்தும். பொருளாசையைக் குறித்து எச்சரிகையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்குத் திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்று லூக்கா 12:15-இல் வாசிக்கிறோம். விசுவாசிகளின் வாழ்க்கைமுறை பண ஆசையிலிருந்து விடுபட்டதாக இருக்க வேண்டும். தான் பெற்றிருப்பதைக் கொண்டு மனநிறைவு கொண்டிருக்க வேண்டும் (எபி. 13:5). இச்சை சிலை வணக்கமாகும் (கொலோ. 3:5). மேலே கூறியுள்ளபடி, இச்சையானது நமது ஆத்தும அரியாசனையில் வீற்றிருக்கும் தேவனை அங்கிருந்து அகற்றிவிடுகிறது. அவருடைய ஸ்தானத்தை இச்சை எடுத்துக்கொள்கிறது. ஒரு விசுவாசி ஸ்தல சபையிலிருந்து விலக்கி வைக்கப் படுவதற்குக் காரணமான பாவங்களாகிய ஒழுக்கக்கேடு, குடிவெறி, கொள்ளை ஆகியவற்றோடு இச்சையும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது (1 கொரி. 5:11). உண்மையில் ஒரு மனிதனைத் தேவனுடைய இராஜ்ஜியத்திலிருந்து விலக்கி வைக்கக்கூடிய வல்லமையை இச்சை கொண்டுள்ளது (1 கொரி. 6:10).

"வஞ்சனையால் தேடினபொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிற வனோ விருத்தியடைவான்" (நீதி. 13:11) என்றும் திருமறை விளம்புகிறது. உற்பத்தி செய்வதும், உண்டாக்குவதும் மேன்மையுள்ள வேலையாகும். ஆனால் சூதாட்டம் அப்படிப்பட்டதன்று. "எடுத்துக்கொள்" என்று தருவதைப் போலத் தோற்றமளித்தாலும் சூதாட்டம் நம்மிடத்தில் உள்ளதை "எடுத்துக் கொண்டு போய்விடும்."

"வன்கண்ணன் செல்வனாகிறதற்குப் பதறுகிறான், வறுமை தனக்கு வரு மென்று அறியாதிருக்கிறான்" (நீதி. 28:22) என்றும் திருமறை இயம்புகிறது. சூதாட்டத்தின் நோக்கமே பேராசைதான். பேராசை தூய்மையற்றதும் பாவமுமாக இருக்கிறபடியால் தேவனுடைய சாபத்திற்குப் பாத்திரமானதாகும். இங்கு வறுமையே சாபமாகச் சொல்லப்பட்டுள்ளது.

"அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங் காத்தும், குஞ்சு பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு தன் முடிவிலே மூடனாயிருப்பான்" (எரே. 17:11) என்பது திருமறை வாக்காகும். சூதாட்டத்தில் வெற்றிபெற்ற பணம் நிலையான மனநிறைவை அளிப்பதில்லை. அது அடுத்தடுத்து வரும் வேதனை களையே உண்டாக்கும்.

உண்ண உணவும், உடுக்க உடையும் போதுமென்றிருப்பதே விசுவாசிக்கு அழகு என்று தீமோத்தேயுவிற்கு நினைவூட்டியபின் பவுல், செல்வந்தனாக வேண்டுமென்ற விருப்பத்தை எச்சரித்து, "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" (1 தீமோ. 6:9) என்று எழுதியுள்ளார்.

நமது இரட்சகர் சிலுவையில் அறையப்பட்டிருந்த வேளையில் அவருடைய தையலில்லாத ஆடைக்காக ரோம நாட்டுப் படைவீரர்கள் சீட்டுப்போட்ட நிகழ்ச்சி, விசுவாசிகளுக்குச் சூதாட்டம் பொல்லாங்கானது என்பதை எப்பொழுதும் நினைவுகூரச் செய்யும்.

## இழப்பை ஏற்படுத்தும் தொழில்

மனிதர்கள் "ஜாக்பாட்" பரிசுபெறும் வேளைகளில், அவர்களுடைய அதிர்ஷ்டத்தைப் பெரிய அளவில் விளம்பரம் செய்வார்கள். ஆனால் சூதாட்டத்தில் தோற்றுப்போகிறதைக் குறித்துச் செய்திகள் பெரிய அளவில் வருகிறதில்லை என்பது விளங்காத புதிராக இருக்கிறது. இத்தாலிய நாட்டு வணிகர் ஒருவர் 1974-ஆம் ஆண்டு மோண்டிகார்லோ என்னுமிடத்தில் அமெரிக்க டாலர் 1920,000-ஐ ஒரே நேரத்தில் இழந்துபோனார். அதே ஆண்டு லாஸ்வேகாஸ் என்னுமிடத்தில் அரபுநாட்டு இளவரசர் ஒரு மணி நேரத்திற்குள்ளாக ஒரு மில்லியன் டாலரை இழந்துபோனார். இந்தச் செய்திகளைப் பெரிய அளவில் விளம்பரப்படுத்துவதில்லை. சாதாரண குடிமக்கள் ஒவ்வொரு ஆண்டும் பல கோடிப் பணத்தைச் சூதாட்டத்தில் இழந்துகொண்டே இருக்கிறார்கள். கடின உழைப்பினாலே ஈட்டிய பணம் இவ்வாறு வீணாகிறது. அவர்கள் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பைக் கணக்கிட்டால் அது மிகவும் அதிர்ச்சியளிக்கக் கூடியதாக இருக்கும். 10 பவுண்டு பணத்தைக் கட்டி ஒரு மில்லியன் பவுண்டு பணத்தைப் பரிசாகப் பெற வேண்டுமானால் அந்தப் பரிசைக் குலுக்கும் இயந்திரம் 25000 மில்லியனுக்கு ஒரு முறைதான் அப்படிப் பரிசை வழங்குமாம்.

சூதாட்டம் ஒருவரை மிக எளிதில் வயப்படுத்தித் தனக்கு அடிமையாக்கிவிடும். சூதாட்டத்தில் மனிதன் சிக்கிக்கொண்டு அறிவற்றுப்போய் தனது பணத்தைத் தொடர்ந்து இழந்துகொண்டே இருப்பதைச் சர்வ சாதாரணமாக நாம் காணமுடியும். அவர்கள் தங்களது சுயநினைவை இழந்தவர்கள்போலச் செயல்படுவார்கள். அதிக நேரம் சூதாட்டத்தில் ஈடுபட்டால் நிறையப் பணத்தைச் சம்பாதித்துவிடலாம் என்று நினைத்துத் தொடர்ந்து பணத்தை இழப்பார்கள். இழந்த பணத்தையாவது எடுத்துவிடலாம் என்று இன்னும் தொடருவார்கள். எப்போதாவது பெயருக்குக் கொஞ்சம் பணம் கிடைக்கும். அது அவர்களது ஆசையைத் தூண்டிவிடும். சூதாட்டத்திற்கு அடிமைப்பட்டுப் போய்விடாதபடி ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னைத் தற்காத்துக்கொள்ள வேண்டும். எந்த ஒரு செயலுக்கும், அது சட்டப்படி தவறற்றதாக இருப்பினும் அதற்கு அடிமைப்படலாகாது என்று கொரிந்தியருக்கு (1 கொரி. 6:12) பவுல் எச்சரித்துள்ளார். ஆனால் சூதாட்டத்தைத் தவறற்றது என்று சொல்ல முடியாது.

சூதாட்டத்திற்கு அடிமைப்பட்டவர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் அளவிட இயலா வறுமையையும், துக்கத்தையும் கொண்டுவந்துள்ளனர். ஒரே இரவில் வறுமையிலிருந்து, செல்வச் செழிப்புள்ளவராக மாறிவிடலாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இடைவிடாமல் பணத்தை விரயமாக்கும் வீணான முயற்சியால், குடும்பங்கள் ஈடுசெய்ய இயலாத இழப்புகளைச் சந்திக்க நேரிடும்; உணவுப்பொருட்கள் குறைந்துபோகும், கடன்தொல்லை மலைபோலப் பெருகிக் காணப்படும்.



இழந்த பணத்தை ஈடு கட்டச் செய்யப்படும் குற்றங்கள் ஏராளம். நிதிநிலையைச் சரிப்படுத்த திருட்டு, கொள்ளை, மிரட்டுதல் போன்ற குற்றங்கள் கணக்கிலடங்காத அளவில் நிகழ்கின்றன.

சூதாட்டத்தோடு தொடர்புடையது துன்மார்க்கரின் நட்பு. சூதாட்டக்காரரின் கூட்டமைப்பு, 'பெரும்புள்ளிகளின்' கூட்டமைப்பு ஆகியவை நாம் அறிந்ததே. நரக வாசனை வீசும் இடங்களில் கிறிஸ்தவன் நடமாடுவதை நியாயப்படுத்த முடியுமா? சில வேளைகளில் சமயத்தின் போர்வையிலும் சோதனைகள் மறைந்திருந்து வரும். சூதாட்டத்தில் ஈடுபட்டால் உங்களால் எவ்வளவு பணம் கர்த்தருடைய ஊழியத்திற்காகக் கொடுக்க முடியும் என்று ஆசைகாட்டி அது நமக்கு அழைப்பு விடுக்கும். தீமைகளைச் செய்வதால் அவற்றில் சில நன்மைகள் உண்டாகும் என்பது பழைய வாதம். ஒருமுறை பக்தி நிரம்பிய பெண்மணி, தனது சபைப் பிரசங்கியாரை நோக்கிச் சத்தமிட்டுக்கொண்டு உற்சாகத்துடன் ஓடி வந்தாள். அவள் ஒரு திட்டத்தோடுதான் அவரிடம் வந்தாள். தான் மத்திய அரசுப் பரிசுச்சீட்டு ஒன்று வாங்கியுள்ளதாகக் கூறி, அதற்குப் பரிசு கிடைக்கும்படி ஜெபம் செய்யும்படி வேண்டுகோள் விடுத்தாள். அந்த ஜெபத்தினால் பரிசு கிடைத்தால் பாதிப் பணத்தை சபைக்குத் தந்து விடுவதாகவும் உறுதி கூறினாள். பிரசங்கியார், "பக்தி என்றால் என்ன என்றும், கிறிஸ்தவப் பக்தி என்றால் என்ன என்றும், நீ அறிய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்" என்று பதிலுரைத்தார். சூதாட்டத் தில் கிடைக்கும் பணம் கர்த்தருடைய ஊழியத்திற்குத் தேவையில்லை. தேவன் அதை ஆசீர்வதிக்கவே மாட்டார். அது பரிசுத்தமற்ற பணமாகும்.

சூதாட்டத்தினால் கவர்ந்திழுக்கப்படும் விசுவாசிகள் "போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" (1 தீமோ. 6:6) என்று பவுல் உரைத்துள்ளதை உள்ளத்தில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் தேவ பக்தியுள்ளவராகவும், போதுமென்கிற மனதுடனும் இருப்பீர்களென்றால் உங்களிடம் பணத்தால் வாங்கமுடியாத ஒன்று இருக்கிறது என்பது உறுதி. நீங்கள் தெய்வீக சுபாவம் உள்ளவரானால் சூதாடமாட்டீர்கள். உங்களுக்குப் போதுமென்கிற மனது இருக்குமாயின் அந்த விருப்பமோ, தேவையோ ஏற்படாது.

கடைசியாக, சூதாடுவதற்குக் கவர்ந்திழுக்கப்படுவோர் சாமுவேல் ஜான்சன் என்பாருடைய சொற்களைக் கருத்தில் கொள்வது நல்லது, "பொன்னின்மேல் இச்சை, இரக்கமற்ற தன்மை, குற்ற உணர்வு இல்லாமை இவையாவும் மறுபடியும் பிறக்காதவர்களின் நேர்மையற்ற குணங்களாகும்." [6]

# 28

# குடும்பக் கட்டுப்பாடு ஆதரவும் எதிர்ப்பும்

கிறிஸ்தவப் பரிசுத்தம் என்னும் இந்நூலில், குடும்பக் கட்டுப்பாட்டைக் குறித்த ஒரு அத்தியாயம் இடம்பெற வேண்டுவது அவசியமா? குடும்பக் கட்டுப்பாட்டில் ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றைப் பற்றிய கொள்கை அடிப்படையிலான முக்கியமான கேள்விகள் எழ வாய்ப்புள்ளது என்று விசுவாசிகள் பலர் கருதுகின்றனர். மேலும் பலர் இந்தப் பொருள் பற்றிய அதிகாரம் இந்நூலில் இடம்பெற வேண்டும் என்றும் தமது கருத்தை வலி யுறுத்திக் கூறியுள்ளனர்.

குடும்பக்கட்டுப்பாட்டைப் பொருத்தமட்டில் இருவிதக் கருத்துகள் நிலவு கின்றன. தேவ மக்களைக் குறித்து தேவன் கொண்டுள்ள நோக்கத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்பது முற்றிலும் தவறானது என்று கருதுவோர் ஒரு சாரார். பிறிதொரு சாரார் இஃது எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி தனி விசுவாசி தனது மனதின் தீர்மானத்திற்கு உகந்தபடி செய்யத்தக்கது என்று கருதுகின்றனர் (ரோமர் 14:15).

### குடும்பக் கட்டுப்பாட்டிற்கு எதிரான கருத்துகள்

ஒரு கொள்கையை எதிர்ப்பவர்களுடைய கருத்துகளை முதலாவது கூறிப் பின்னர் அதனை ஆதரிப்பவர்களுடைய கருத்துகளைக் கூறுவதே பொது வானதும் தகுந்ததுமான முறையாகும். அதனடிப்படையில் முதலாவதாகக் குடும்பக்கட்டுப்பாட்டை எதிர்த்துச் சொல்லப்படும் கருத்துகளைக் காண விழைவோம்.

1. ஆதியாகமம் 1:28-இல் தேவன் கூறியதாவது: "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி அதனை ஆண்டுகொள்ளுங்கள்." மேலும் இது மாற்றமடையாத கட்டளையாகவே இருக்கிறது. (மாற்றாரின் கருத்துகள் இங்கே விடையாகத் தரப்படுகின்றன).



விடை: படைப்பு நிறைவேறிய பின் தொடக்க காலத்திலும் ஜலப் பிரளயத் தின்போதும் கொடுக்கப்பட்ட கட்டளையே இது. மக்கள்தொகைப் பெருக்கம் நிறைந்த இக்காலத்திற்கு இக்கட்டளை தேவையற்றதாகும்.

2. பெரிய குடும்பம் கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின்கனி அவரால் கிடைக்கும் பலன், வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் அம்பறாத் தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்" (சங். 127:4-6).

"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக்கொடியைப் போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்" (சங். 128:3,4).

3. பெரிய குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் எல்லாவிதத்திலும் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். கரடுமுரடான குணங்கள்யாவும் சீர் அடைந்து, மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்துச் சிந்திக்கிறவர்களாகவும், விரைவில் கேடுபாடுகளுக்குள் வீழ்ந்துவிடாதபடித் தங்களைக் காத்துக்கொள் கிறவர்களாகவும் பக்குவம் அடைந்தவர்களாயிருப்பார்கள்.

4. ஓனான் என்பவன் குடும்பக் கட்டுப்பாட்டு முறையைக் கையாண்ட வனாகத் தேவனுடைய சாபத்திற்கு ஆளானான் (ஆதி. 38:1-11).

விடை: உண்மை அதுவன்று. ஓனான் தன் தமையனின் விதவையைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று தன்னலமிக்க எண்ணம் கொண்ட வனாகச் செயல்பட்டான். அவ்வாறு திருமணம் செய்து கொள்வது அந்நாட்களில் யூதர்களுடைய மரபாயிருந்தது.

5. பவுல் கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகளுக்கு எழுதியதாவது: "உப வாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாத படிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்" (1 கொரி. 7:5).

விடை : இங்கு தாம்பத்திய உறவைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளதே யொழிய கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தலாமா, கூடாதா என்ற கருத்து வெளியிடப்படவில்லை.

6. ஒரு பெண் பிள்ளைப்பேற்றினாலே தனது வாழ்க்கையின் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றுகிறாள். சபைகளில் பெண் கொண்டுள்ள ஸ்தானத்தைப்

பொருத்தமட்டில் இந்த முறையிலே அவள் இரட்சிக்கப்பட்டவளாய் இருக்கிறாள் (1 தீமோ. 2:15). தெய்வீக சந்ததியை உருவாக்கி வளர்ப்பது பெண்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இன்றியமையாத பொறுப்பாகும். அவர்கள் பிள்ளைகளைப் பெற்றுத் தேவனுடைய திருநாமத்தின் மகிமைக்காக வளர்க்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் (1 தீமோ. 3:15; 5:14; தீத்து 2:4).

விடை: அவ்வாறாயின் திருமணம் செய்து கொள்ளவோ, அதன் பிறகு பிள்ளைபெறவோ இயலாத பெண்களின் நிலை என்ன?

7. தேவன்தாமே கர்ப்பங்களைத் திறக்கிறவரும் அடைக்கிறவருமா யிருக்கிறார் (ஆதி. 20:18; 29:31; 1 சாமு. 1:6). அவர் இந்த அதிகாரத்தை மனிதனுக்குக் கொடுக்கவில்லை. திருமறையை நீங்கள் எங்கு ஆய்ந்து நோக்கினும் கருத்தடை யைப் பற்றி ஓரிடத்திலும் காண இயலாது. உங்கள் ஆய்வு வீணாகவே போய் விடும். குடும்பக்கட்டுப்பாட்டிற்கு ஆதரவாகத் திருமறையை அடிப்படையாகக் கொண்டு உங்களால் வாதிடவும் இயலாது.

## குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆதரவான கருத்துகள்

இப்பொழுது குடும்பக்கட்டுப்பாட்டிற்கு ஆதரவான கருத்துகளைக் காணலாம்.

1. திருமறையில் குடும்பக் கட்டுப்பாட்டினைப் பற்றித் தெளிவான முறையில் சட்டமொன்றும் கொடுக்கப்படவில்லை. தங்களது வாழ்வில் இதைக் குறித்த தேவனுடைய நோக்கம் என்னவென்று திருமணமான தம்பதிகள் அவரிடமிருந்தே கேட்டறிந்துகொள்ள விடுதலை பெற்றவர்களாயிருக்கின்றனர்.

2. தற்காலத்தில் காணும் மக்கட்தொகைப் பெருக்கம், சில கட்டுப்பாடுகளை நாம் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறது. நாள்தோறும் பசிக் கொடுமையினால் மாள்வோர் பலர். கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச சத்துணவையும் பெற்றுக்கொள்வதில்லை. ஆகலின், மக்கட்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படாவிடில் உலகம் பேராபத்திற் குள்ளாகும்.

விடை: உணவுப் பொருட்களின் பற்றாக்குறை பிரச்சனையன்று. தேவை யுள்ளவர்களுக்குச் சரிவர உணவுப் பொருட்களை வழங்குவதில் உண்டாகும் சிக்கலுக்குச் சிலருடைய பேராசையே காரணமாக இருக்கிறது. மேலும், போஷாக்கு நிறைந்த மாமிச உணவு உண்பதை சில மதங்களின் போலித்தன்மை தடைசெய்கிறது.

3. பெற்றோர்களுடைய நிதி நிலையை அனுசரித்துப் பிள்ளைகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட வேண்டும். சில பிள்ளைகளைப் பெற்று நன்கு பராமரித்து வளர்ப்பதற்குப் பதிலாகப் பல பிள்ளைகளைப் பெற்றுச் சரிவர



வளர்க்கவில்லையென்றால், அது கிறிஸ்துவின் நற்பெயருக்கு மேன்மை தருவதில்லை.

விடை: சிலரோ, பலரோ தேவன் அவர்களைப் போஷிக்க வல்லவரா யிருக்கிறார் (மத். 6:33; பிலி. 4:19- ஆகிய வசனங்களைக் காணவும்).

4. விவசாயக் குடும்பத்திற்கு நிறைய பிள்ளைகள் பயனுள்ளவர்களாக இருப்பார்கள். வயலில் பெற்றோர்களுக்கு உதவி செய்வார்கள். ஆனால் நகரத்தில் வாழ்பவர்களுடைய நிலை வேறு. நெருக்கமான கட்டிடங்களில் சிறிய வீடுகளில் வசிக்க வேண்டும்.

5. திருமணத்தின் நோக்கம் பிள்ளைகளைப் பெறுவதுமட்டுமேயன்று. தம்பதிகள் ஒன்றுபட்டவர்களாகக் கூடிவாழ்ந்து களிகூருவதே தேவனுடைய விருப்பம்.

6. தாயின் உடல்நலம் பாதிக்கப்படும் சூழ்நிலை உண்டாகும்போது கருத்தடை செய்யலாம் என்றால் மற்ற காரணங்களுக்காகவும் அது சரிதானே.

7. இந்த உலகம் பாவமும், தீவிரவாதமும், துக்கமும் நிறைந்ததாயிருக்கிறது. பிள்ளைகளைப் பெற்று இப்படிப்பட்ட உலகத்திற்குள் கொண்டுவர வேண்டுமா என்று சிலர் நினைக்கிறார்கள்.

விடை: கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதி யாய் என்றென்றைக்கும் உள்ளது (சங். 103:17).

8. உண்மையின் அடிப்படையில் எழுந்த வாதம். கருத்தடையை ஏதாவது ஒரு வழியில் எல்லாரும் கடைப்பிடிக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அந்நாட்களைப் போல இக்காலத்தில் 17,18 அல்லது 19 பிள்ளைகளைப் பெற்றவர் களைக் காண முடிகிறதா?

விடை : எல்லாரும் செய்கிறார்கள் என்பதனால் ஒரு செய்கையைச் சரியென்று சொல்லிவிட முடியாது.

9. கடைசியாக ஒன்றை நாம் கருத்தில் கொள்வோம். திருமறை, குடும்பக் கட்டுப்பாட்டை வெளிப்படையாக ஆதரித்துக் கருத்தைச் சொல்லவில்லை யென்றாலும் இச்சையடக்கத்தை ஆவியின்கனியென்று போதிக்கிறது (கலா. 5:23).

குடும்பக்கட்டுப்பாட்டை ஆதரித்தும், எதிர்த்தும் சொல்லப்படுகிற வாதங் களில் சில மேலே கூறப்பட்டுள்ளன. அப்படியென்றால் முடிவான விடையாது? இந்த வாதங்களைத் திருமணத்தில் இணைக்கப்பட்ட தம்பதிகள் கர்த்தருடைய சமுகத்தில் சீர்தூக்கிப்பார்த்து, ஜெபம் செய்து அவர் அவர்களை எவ்வாறு வழிநடத்துகிறாரோ அவ்வழியைப் பின்பற்றுவார்களாக.

இரு சாராருக்குள்ளும் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் பலர் உள்ளனர் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அது உண்மையாக இருக்கின்ற காரணத்தினால் நமது கருத்தைப் பிறர்மீது திணிக்க நாம் முயற்சி செய்ய வேண்டாம். இரு சாராருடைய வாதங்களிலும் சில மறுக்கமுடியாத கருத்துகள் உள்ளதால், தேவனுடைய சமுகத்தில் சரியென்று நினைத்து மற்றவர்கள் எடுக்கின்ற தீர்மானத்தை மதித்து நடந்துகொள்வோம். ●

# 29

# அரசியல்

ஒரு கிறிஸ்தவர் அரசியலில் ஈடுபடலாமா? இக்கேள்விக்கு விடையாக ஈடுபடலாம் என்று ஆமோதிக்கிற அனைவரும் வேறுபாடின்றி “நல்ல மனிதர்கள் ஒன்றும் செய்யாதிருந்தால், பொல்லாங்கு தானாகவே வெற்றிபெறும்” என்னும் வழக்கமான கூற்றைக் கூறுவர். அவர்களுடைய அக்கூற்று பயனற்றுப்போய்விடுமெனில், உடனடியாக யோசேப்பு, மோசே, தானியேல் ஆகியோர் அரசியலில் ஈடுபட்ட விசுவாசிகள் தானே என்று இயம்புவர்.

அவர்களது கூற்று சரியானதென்று தோன்றினாலும், அது தேவன் வெளிப்படுத்தினதன்று; இது மனித ஞானத்தின் அடிப்படையில் எழுந்த வாதம் என்று நாம் நினைவுகூர வேண்டும். ஆகவே திருமறைக்குக் கொடுக்கும் அதிகாரத்தை நாம் அந்த வாதத்திற்கு அளிக்கக்கூடாது. யோசேப்பும், தானியேலும் பதவியை அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு அரசியலில் ஈடுபடவில்லை. அவர்கள் அரசு அலுவலர்களாகப் பணியாற்றியவர்களே ஆவர். மோசே அரசாங்கத்திற்கு எரிச்சலூட்டுபவனாகச் செயல்பட்டானேயொழிய அதன் பங்காகச் செயல்புரியவில்லை.

### திருமறை தரும் பதில்

இதற்கு வேதம் தரும் பதில் என்ன?

கர்த்தராகிய இயேசு அரசியலில் ஈடுபாடுகொள்ளவில்லை. சொல்லப்போனால், அவர் அரசியல் முறையோடு தொடர்பற்றவராகவே காணப்பட்டார்.

அவருடைய சீடர்கள் அரசியலில் ஈடுபடவில்லை. நற்செய்தி ஊழியத்தில் மிக்க கவனம் செலுத்தி, தேவன் தந்த நல்ல பங்கை இழந்து போயினரோ? இல்லையே.

அப்போஸ்தலனாகிய பவுல் அரசியலில் ஈடுபடவில்லை. தான் அழைக்கப்பட்ட அழைப்பிற்கும், தான் கொடுத்த செய்திக்கும் உண்மையுள்ளவராக இருந்ததால் அவர் பரிசேயர் கூட்டத்திற்கு எதிர்த்துநிற்க வேண்டியதாயிருந்தது.

தமது இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியது அன்று என்று இயேசுநாதர் போதித்தார் (யோவான்18:36). "உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது; அதன் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிற படியினாலே, அது என்னைப் பகைக்கிறது" (யோவான் 7:7) என்று தன்னை விசுவாசிக்காத சகோதரர்களிடம் இயேசுநாதர் கூறினார்.

"உகலம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று அறிந்திருக் கிறோம்" (யோவான் 5:19) என்று அப்போஸ்தலனாகிய யோவான் நமக்கு நினைவூட்டுகிறார். அரசியல் இந்த உலக முறைமைக்குட்பட்டதாயிருக்கிறது.

நாம் இந்த உலகத்திலிருந்து பிரிந்து வாழ்வோமென்றால் இவ்வுலகத்தை மாற்றும் செல்வாக்கைக் கொண்டிருப்போம் (2 கொரி. 6:17). இந்த உலகத்திற்கு வெளியே ஒரு அச்சு கிடைக்குமென்றால் இந்த உலகையே அசைத்து விடுவேன் என்று அறிவியல்மேதை ஆர்க்கிமெடிஸ் கூறினார். இந்த உலக முறைகளுக்கு அப்பால் நம்மை நிறுத்திக்கொண்டோமென்றால் தேவனுக்கென்று இவ்வுலகை அசைக்கிறவர்களாயிருப்போம்.

"தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்" (2 தீமோ. 2:4) என்று பவுல் உறுதிபடக் கூறியுள்ளார். அனைத்து விசுவாசிகளும் தேவனுக்காகச் சுறுசுறுப்பாக அலுவல் புரிகிறவர் களாயிருக்க வேண்டும். தங்களது அலுவல்களினின்றும் திசைதிரும்பிப் போய்விட இடம் கொடுக்கக்கூடாது.

அரசியல் ஊழல் மிகுந்ததாகும். தகுதியற்றவைகளைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய முறையையே அரசியல் பின்பற்றுகிறது. செயல்கள் நிறைவேற வேண்டும் என்னும் அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பார்கள். அது சாரியானதாவென்று ஆய்ந்துபார்க்கிறதில்லை. அரசியல் தேவனுடைய கொள்கை களை விடுத்து மனிதனுடைய கொள்கைகளையே பின்பற்றுகிறது. "அரசியல் தன் இயல்பின்படி ஊழல் மிகுந்ததாகும். நடக்க வேண்டிய முறையை மறந்துவிட்டு கிறிஸ்தவ சபை மனிதர்களுடைய விவகாரத்தில் ஈடுபடலாகாது. அவ்வாறு செயல்படும் வேளையில் கிறிஸ்தவ சபை உலகத்தோடு போட்டி யிடுவதற்குத் தகுதியற்றது என்பது வெளிப்படும். அது அரசியலில் ஈடுபட்டால் தனது நோக்கத்தின் தூய்மையை இழந்துவிடும்" என்று மிசிகன் மாநில, மறைந்த சட்டமன்ற உறுப்பினர் வேன்டென்பெர்க் என்பார் கூறியுள்ளார்.

உலகத்தின் பிரச்சனைகளுக்குத் தேவன் அரசியலை விடையாகத் தர வில்லை; ஆவிக்குரிய முறையிலேயே தீர்வுகாண வேண்டும் என்று விரும்பு கிறார். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களையல்ல, புதிய பிறப்பையே அவர் விடையாகக் கொண்டுள்ளார். சிறு புண்களுக்குப் போடும் மருந்து புற்றுநோயைக் குணப்படுத்துமா? அது போலவே உலகத்தின் பிரச்சனை



களை அரசியல் தீர்க்காது. "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட் டும்; நீ போய், தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணு" என்பதே நமதாண்டவர் நமக்குக் கொடுத்த கட்டளையாக இருக்கிறது (லூக். 9:60). 'வாழைப்பழத் தோல்' கதை அதனை நமக்கு நன்கு தெளிவுபடுத்தும்.

## வாழைப்பழத் தொழில்

விளம்பரத்தொழிலில் மிகவும் முக்கியமான பதவியை வகிப்பவர் அவர். ஆயிரக்கணக்கான விளம்பரத் தொகுப்புகளை அச்சிட்டுப் பல்வேறு இடங் களுக்கு அனுப்பவேண்டியது அவருடைய வேலை. ஒருநாள் தனது வேலைக் குச் செல்லும் வழியில் சாலையோரத் திருப்பத்தில் வாழைப்பழத்தோல் ஒன்றைக் கண்டார். அது நிச்சயமாக ஆபத்தை விளைவிக்கும் என்று அறிந்தவராக ஒருவரும் அதனால் வழுக்கி விழாதபடி அதைத் தன் காலால் உதைத்துச் சாக்கடைக்குள் தள்ளிவிட்டார். இந்தப் பெரிய நகரத்தில் சாலை ஓரங்களில் ஆங்காங்கு வாழைப்பழத்தோல் கிடக்குமே என்று யோசிக்கலானார். ஒருவேளை எவரும் சாக்கடைக்குள் தள்ளாமல் கிடக்கும் தோலின் மீது எவரேனும் காலை வைத்து நடந்துவிட்டால் என்னாவது. அப்படியென்றால் அவ்வாறு கிடக்கும் தோல்களை சாக்கடைக்குள் தள்ளிவிடும் வேலையைத் தானே செய்ய வேண்டும். அதற்கு நேரம் செலவழிக்க வேண்டும். இல்லை யென்றால் யாராவது வழுக்கி விழுந்து எலும்புகளை முறித்துக்கொள்வார்கள். பலர் மருத்துவமனைக்குச் செல்வதைத் தவிர்க்கலாம். திடீரென்று அந்தச் சிந்தனை தடைப்பட்டது. "இந்தச் சிந்தனையைக் கொஞ்சநேரம் நிறுத்து - எனக்கென்று சில பொறுப்புகள் உள்ளனவே. விளம்பரத் தொழிலில் நான் மிக முக்கியமான பொறுப்பு வகிப்பவனாயிற்றே" என்று சிந்திக்கத் தொடங்கினார். விளம்பரங்களை அச்சிட்டு உலகத்தின் பல பக்கங்களுக்கும் அனுப்ப வேண்டும் என்று எண்ணியவர் அரை மனதோடு தனது வாழைப்பழத்தோல் வேலையை அத்தோடு நிறுத்தினார். சாலையைத் தூய்மைப்படுத்தும் பணியாளர் கள் அந்த வேலையைச் செய்து கொள்ளட்டும். அது அவர்களுடைய வேலை.

இந்தக் கதையின் உண்மையை நம்முடைய வாழ்க்கையில் நாம் நடை முறைப்படுத்திப் பார்ப்போம். ஒரு கிறிஸ்தவனுக்கு இவ்வுலகில் மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற் செய்தியை இந்த உலகிற்கு அளிப்பதே அவனுடைய இன்றியமையாத அலுவலாகும். அந்த வேலையை அவன் செய்யவில்லையென்றால் அது நடைபெறாது போய்விடும். "முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்" என்று இயேசுநாதர் உரைத்ததன் காரணம் அதுவே. பலர் அரசியலில் ஈடுபடுகின்றனர். ஆனால் நித்திய மரணத்தை நோக்கிச் செல்லும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் நற்செய்தியைப் பகிர்ந்து அளிக்கும் பரம ஊழியத்தைத் தேவன் நமக்களித்துள்ளார். மற்றும் பல

வேலைகள் தகுதியானவைகளே, ஆனால் நற்செய்திப் பணியில் நாம் பலனற்றுப் போனால் நம்முடைய இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.

இந்த யுகத்தில் உலகத்தை மனிதர்கள் வாழ்வதற்கு மேலும் சிறந்த இடமாக மாற்ற வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமன்று. மாறாக, பல நாடு களினின்றும் அவருடைய திருப்பெயருக்காக மக்களைப் பிரித்தெடுக்க வேண்டுமென்பதே அவரது நோக்கமாகும் (அப். 15:14). அவரது நோக்கத்தை நம்முடைய இலக்காகக்கொண்டு, அதனை நிறைவேற்றும்படி நாம் அவரோடு இணைந்து செயல்பட வேண்டும். ஜோவெட் என்பார், "இந்த வையகத்தை மீட்கும் பணியில் நாம் இறைவனுடைய உடன் ஊழியர்களாயிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் விளங்கும் இராஜரீக வாழ்க்கைக்குப் பலரை ஆயத்தம் செய்வதும், அவர்கள் ஆளுகை செய்வதற் குரிய தகுதியைப் பெற்றுக்கொள்ளச் செய்வதும், நமது ஊழியமாகும். அதுவே நாம் எடுத்தியம்பும் செய்தியாகும்" என்று அழகுறக் கூறியுள்ளார். மேலும் அவர், "பரம அழைப்பைப் பெற்றவர்கள் அதனை மேன்மைபாராட்டாதவர் களாகவும், கீழ்தரமானவற்றைப் பற்றிக்கொள்கிறவர்களாகவும், பறப்பதற்குப் பதிலாக ஊர்வனவற்றைப் போலக் காணப்படுகிறவர்களாகவும், அரசர்களாக இருப்பதற்குப் பதிலாக அடிமையானவர்களாகவும் வாழ்கின்றனர்" என்று கூறியுள்ளார். மேலும், அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களின் சோகக்கதையைக் கண்டு வருந்துகிறார்.

கிறிஸ்தவன் முதலாவது பரலோகக் குடியிருப்பைப் பெற்றவன் (பிலி. 3:20) என்பதை நினைவுகூர வேண்டும். அவன் இந்த உலகில் அந்நியனும் பரதேசியு மாக இருக்கின்றான் (1 பேதுரு 2:11). அவன் தான் வாழும் நாட்டின் அரசுக்குக் கீழ்ப்படிய வேண்டியவனாகவும், நீதிமன்றச் சட்டத்திட்டங்களின்படி உரிமை பெற்றவனாகவும் இருந்தாலும், அதன் அரசியல் அமைப்பில் பங்குவகிக்க வேண்டிய அவசியமில்லை.

நான் அரசியலில் பங்குகொள்கிறவனாயிருந்தால், அந்த அமைப்பே இவ்வையகத்தின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய வழி என்று நம்பிக்கை வாக்களிப்பவனாகக் காணப்படுவேன். பல நூற்றாண்டுகளாக இந்த அரசியல் அமைப்பு பெருந்தோல்வியைத் தழுவியதாகக் கண்டபிறகும் அப்படிப்பட்ட நம்பிக்கை கொள்வதற்கு எவ்விதக் காரணமுமில்லை.

புதிய ஏற்பாட்டின் செய்திகளின்படிப் பார்த்தால் இவ்வுலகத்தின் நிலைமை யில் முன்னேற்றம் உண்டாகும் என்று சொல்ல முடியாது (1 தீமோ. 4:1-3; 2 தீமோ. 3:1-5). இந்நிலை, கிறிஸ்தவன் தான் பெற்றுள்ள மேன்மையான கட்டளையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் தீவிரம் காட்ட வேண்டும் என்று கற்பிக்கிறது.



அவ்வாறாயின் விசுவாசிகள் எதைக் குறித்தும் ஒன்று செய்ய வேண்டிய தில்லை என்பதுதான் பொருளா? இல்லை! நாம் ஓட்டுச்சீட்டில் வாக்களிப்பதை விட ஜெபத்தின் மூலமாக அதிகமாகச் செய்யலாம். அரசுகளை நிலைநிறுத்தும் பலத்தை நாம் ஜெபத்திலே பெற்றிருக்கிறோம். ஜெபத்தின் மூலமாக ஒரு நாட்டின் முடிவை நாம் நிர்ணயிக்கலாம். "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது" (2 கொரி. 10:4).

கிறிஸ்தவர்கள் ஆளுகை செய்யுங்காலம் இன்னும் வரவில்லை (1 கொரி. 4:8). நமது இவ்வுலக வாழ்வின் காலம், நாம் இனி ஆளுகை செய்யப்போகின்ற காலத்திற்குப் பயிற்சிபெறும் காலமாயிருக்கிறது. வில்லியம் கெல்லி என்பார் இதைக் குறித்து உரைத்திருப்பதாவது:

> கர்த்தரின் நாமத்திற்குக் கனவீனத்தையும், தங்களுக்கு அவமானத் தையும் கொண்டுவரக்கூடிய இந்த உலக ஆட்சியில் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் குறுக்கிடக்கூடாது. தற்காலத்தில் கிறிஸ்துவுடன் சேர்ந்து பாடுபடுவதற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்யப் போகிறார்கள். தமது வல்லமை மிக்க ஆளுகையை இதுவரை அவரே எடுத்துக் கொள்ளவில்லை. இப்பொழுதோ அவர் இந்த வையகம் ஏற்றுக் கொள்ளாத நிலையில் தமது பிதாவின் அரியணையில் வீற்றிருக் கிறார். நியாயத் தீர்ப்பைச் செலுத்தும்படியான கட்டளையைப் பிதா பிறப்பிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். அப்பொழுது அவர் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பார் (வெளி. 3:21).

நான் இதை எழுதுகின்ற வேளையில் எனக்குக் கிடைத்த செய்தி, கெல்லி என்பார் கூறியுள்ளதை ஆதரிப்பதாக இருக்கிறது. அச்செய்தியாவது:

"வேன் டைக் என்பார் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர். எனினும் சர்ச்சைக் குரிய அரசியல்வாதி. அவருடைய அரசியல் வாழ்க்கை களங்கமுடைய தாயிருக்கிறது. ஒரு தவறான செய்தியை விளம்பரப்படுத்தினதால், அவர் 1984-ஆம் ஆண்டு சட்டசபையிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. அரசாங்கம் அவருக்கு 500 டாலர் அபராதம் விதித்தது. சட்டசபை மன்னிப்பு கோரும்படி அவரைப் பணித்தது."

கெல்லி அவர்களின் கூற்றை நாம் கவனத்துடன் கருத்தில் கொள்ள வேண்டும். "கர்த்தரின் திருப்பெயருக்குக் களங்கத்தையும், தங்களுக்கு அவ மானத்தையும் கொண்டுவரக்கூடிய இந்த உலக ஆட்சியில் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் குறுக்கிடக்கூடாது." ●

# 30

# சுயம் – உள்ளான துரோகி

ஒருவரது பரிசுத்த நாட்டத்தை மிகவும் பாதிப்பது சுயத்தில் மூழ்கியிருத்தல் ஆகும். இதுபோன்று வேறொன்றும் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. வெற்றிபெறுவதற்காகச் சுயத்தையே நோக்கிப் பார்க்கிறவர்கள் தவறான ஒன்றையே நோக்கிப் பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று ஏமாற்றத்தையும், நம்பிக்கையின்மையையும், தோல்வியையும் வருவித்துக் கொள்கிறார்கள்.

இவ்வையகம் மனிதனுக்கும் அவனுடைய ஆற்றலுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. மனிதன் எல்லாராலும் அறியப்பட்டவனாக, புகழ்பெற்றவனாக, ஏற்றுக்கொள்ளப்பட்டவனாகக் காணப்படுவதற்கு விருப்பம் கொண்டிருக்கிறான். சுயத்தை நாடக்கூடிய விருப்பத்தையே சபையும் உடையதாயிருக்கிறது. நற்செய்திச் சொற்களை வேடமாக அணிந்துகொண்டு, சமயச்சார்பற்ற மனித மேம்பாட்டைக் குறித்த கருத்துகளை அது பறைசாற்றுகிறது. தற்புகழ் பாடும் பல புதிய நூல்களை வெளியிட பக்திநூல் வெளியீட்டார்கள் நாடி ஓடுகிறார்கள். ஒருமுறை, கிறிஸ்தவ நூலகம் ஒன்றிற்குச் சென்றபோது கீழ்க்கண்ட தலைப்புகள் கொண்ட நூல்களைக் கண்டேன்:

உன்னிடத்தில் அன்புகூரு
உன்னை நேசிக்கும் கலையைக் கற்றுக்கொள்
தன்நேசம் - வெற்றிக்கு வழிவகுக்கும் பேராற்றல்
நான் சரி, நீயும் சரி
நான் சரி என்று யார் சொல்லுகிறார்கள்?
உன்னுடைய உண்மையான சித்திரம்
உனது நிழலினால் நண்பர்களைப் பெற்றுக்கொள்
உன்னை அறிந்துகொள்ளும் கலை
உனது முந்தின காலத்தை அறிவதே, உன் எதிர்காலத்தை அறியும் வழி
எனது அழகிய நினைவு
உன்னை நல்லவனாக நினைக்க



30 நாட்களில் உன் உள்ளத்தின் பாரம் குறைய
நீ சிறந்த மனிதன்
நான் நானாக வாழ வேண்டுமா? (உன்னோடு நீ வாழ்ந்து
உன்னையே விரும்பு)

ஒரே ஒரு நூல் மட்டும் இக்கருத்தை எதிர்த்து மெல்லிய ஓசையிட்டுக் கொண்டு அங்கு காட்சியளித்தது. அதனுடைய தலைப்பு:

"உன்னைத் தனியே விட்டுவிட்டு வா!"

இந்த நாட்களில் சுயத்திற்கு முக்கியத்துவம் அளித்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. நோயாளியின் குறைக்கு அவனது பெற்றோர்களின் வளர்ப்புமுறையே காரணம் என்று சொல்லித் தருகிறார்கள். அவனுடைய நினைவுகள், நோக்கங்கள், அச்சங்கள், பிரச்சனைகள், உள்ளத்தில் ஏற்படும் தடைகள் (தாம்பத்ய உறவைப் பொறுத்தமட்டில்) ஆகியவற்றை எண்ணிப் பார்க்கும்படி அறிவுரை வழங்கப்படுகின்றது. அவன் தனது பிரச்சனைகளைக் குறித்து வெளிப்படையாகப் பேசும்போது அவனுடைய நோய்க்கு விடை காண்பதுபோலத் தோன்றும். அந்த ஆலோசனைகளில் தீர்வுக்கான வழி கிடைக்காது. ஆனால் தீர்வுக்கான வழியைச் சொல்லிக்கொடுத்துவிட்டதாகக் கூறுவார்கள்.

### பித்துப்பிடித்தோரின் புகலிடம் இந்த உலகமே

பீட்டர் ஜின்ட் என்பார் மனநோய் மருத்துவமனைக்குச் சென்றுவந்த நிகழ்ச்சியை நார்வே நாட்டைச்சேர்ந்த இப்சென் என்னும் நாடகக் கலைஞர் கதையாகச் சொல்லியிருக்கிறார். மனநோய் மருத்துவமனைக்குச் சென்ற பீட்டர் ஜின்ட் அங்கு பயித்தியம் பிடித்த நிலையில் ஒருவரையும் காணாததால் மிகுந்த ஆச்சரியம் அடைந்தார். அங்கிருந்தோர் புத்தி கூர்மையோடு பேசினார்கள். அவர்கள் தங்களது திட்டங்களை மிகக் கவனத்தோடும், கூர்ந்த அறிவோடும் சொன்னதைக்கேட்டு அவர்கள் நிச்சயமாக மனநோயாளிகள் அல்லர் என்ற முடிவுக்கு வந்தார். பின்னர் அதைக் குறித்து மருத்துவரிடம் பேசினார். மருத்துவரோ, "அவர்கள் யாவரும் மன நோயாளிகள் தான். அவர்கள் யாவரும் புத்தி கூர்மையோடு பேசுவார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் எப்போதும் தங்களைக் குறித்தே பேசுவார்கள். காலையிலும், நண்பகலிலும், இரவிலும் தான் என்பதுதான் அவர்கள் பேச்சு. தான் என்னும் பிடியிலிருந்து இங்கே தப்பிக்க முடியாது. தான் என்பதை எப்போதும் தங்களோடு மாட்டி வைத்துக் கொள்வார்கள். கனவிலும்கூட அது அவர்களை விட்டுப்போகாது. புத்தியோடு பேசும் அவர்கள் மனநோயாளிகளே" என்றார்.

இந்த வையகமும் அந்த மருத்துவ மனைக்கு ஒப்பாகவே இருக்கிறது. இந்த உலகம் தன்னையே பிரபல்யப்படுத்துகிறது

என்பதை நாம் உணரும் வரை இது நமக்குப் புத்தியுடையதாகத் தோற்றமளிக்கும். இது தனது எண்ணங்களையும், அரசியலையும், யுத்தங்களையும், வரவு செலவுக் கணக்குகளையும், செல்வத்தையும் குறித்துப் பேசிக்கொண்டேயிருக்கும். பெரும்பாலும் இது தேவனைக் குறித்து ஒன்றும் பேசாது. [7]

மனத்தடுமாற்றம் உள்ளவர்களும், மனநோயாளிகளும் எப்பொழுதும் சுயம் என்பதைத் தங்களுடைய வாழ்க்கையின் மையமாகக் கொண்டு செயல் புரிகிறார்கள், அவர்களைப் போன்றே இந்த உலகமும் செயல்படுகிறது. தங்களைக் குறித்தே சிந்திக்கத் தூண்டும் ஆலோசனைகள் அவர்களுடைய பரிதாபமான நிலையை இன்னும் சற்று அதிகரிக்கும். "மனத்தடுமாற்றம் உள்ளவர்கள் ஆகாயத்தில் கோட்டையைக் கட்டுவார்கள்; மன நோயாளிகள் அந்தக் கோட்டையில் குடியிருப்பார்கள்; மனநோய் மருத்துவர்கள் அந்தக் கோட்டைக்கு வாடகை வசூலிப்பார்கள்" என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

## 77 – ஆம் சங்கீதத்தில்காணும் பரிதாப மனிதன்

சுயத்தின் ஆளுகைக்குள் இருக்கும் மனிதர்களைப் பற்றித் திருமறை இரண்டு இடங்களில் கூறிய பின்னர் அக்குறையை எவ்வாறு சீராக்குவது என்று சிறப்பாக இயம்புகிறது. முதல் பகுதி 77-ஆம் சங்கீதமாகும். அதனைப் புல்லிங்கர் என்பார் கீழ்க்காணும்படி வகைப்படுத்தியுள்ளார்.

சுயத்தில் மூழ்கியிருத்தல் (வச. 1-6)
அதனால் உண்டாகும் விளைவு, துன்பம் (வச. 7-9)
தேவனுக்குள் மூழ்கியிருத்தல் (வச. 10-12)
அதனால் உண்டாகும் விளைவு, மகிழ்ச்சி (வச. 13-20)

இந்த நான்கு பிரிவுகளுக்கும், வேறொருவர் கொடுத்துள்ள தலைப்புகள்:

சோகப்பெருமூச்சு
மூழ்கிவிடுதல்
துதி பாடுதல்
உயரப் பறத்தல்

இந்தச் சங்கீதத்தின் முதல் பகுதியில் சுயத்தின் பிரச்சனையால் ஆசாப் வேதனைப்படுகிறதைப் பார்க்கிறோம். நான், என், எனது என்னும் சொற்கள் 22 இடங்களில் வருகின்றன. ஆனால் தேவன் என்னும் சொல்லை 13 இடங்களில் மட்டுமே பயன்படுத்தியுள்ளான். சங்கீத எழுத்தாளன் சுயம் என்னும் சிந்தையில் மூழ்கிப்போனவனாக, உன்னதமானவருடைய நற்குணம், கிருபை, இரக்கம் ஆகியவற்றைக் குறித்துக்கேள்வி எழுப்புகிறான்.



இரண்டாவது பகுதியில் ஆசாப் தனது கண்களைக் கர்த்தரிடத்தில் திருப்புகிறான். தேவன், கர்த்தர், அவர் என்னும் சொற்கள் 24 தடவைகளும், நான் என்னும் சொல் மூன்று தடவைகள் மட்டுமே காணப்படுகின்றன.

## ரோமர் 7– இல் காணும் நிர்ப்பந்தமான மனிதன்

வேதத்தில் காணும் இரண்டாவது பகுதி ரோமர் 7:9-25 ஆகும். இப் பகுதியில் நாற்பதுக்கும் மேற்பட்டு நான் என்னும் சொல்லைப் பயன்படுத்திய பின்னர் பவுல், "நிர்ப்பந்தமான மனுஷன் நான்!" என்று தவிக்கிறார். சுயத்தின் மீது அவரால் வெற்றிகொள்ள முடியவில்லை. "அதெப்படியெனில், என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்" என்று உறுதிபடக் கூறுகிறார். ஆயின், அந்த அதிகாரத்தின் கடைசியில் சுயத்தைவிட்டுத் திரும்பிக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் வெற்றியைக் காண்கிறார்.

சுயத்திற்குள்ளாக நோக்கி வெற்றியைத் தேடுவது, படகிற்குள்ளாக நங்கூரத்தைப் போடுவதற்கு ஒப்பாகும். ஆவிக்குரிய நிலையிலிருந்து விலகிச் செல்வதற்குரிய வழியை அது நிச்சயமாக உண்டாக்கும்.

இஸ்ரவேலின் அரசன் தன்னைக் காட்டிலும் பெரியவர் தனக்குத் தேவை என்பதை உணர்ந்தான். ஆகையால், "என் இருதயம் தொய்யும் போது, பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்" என்று கூறியுள்ளான் (சங். 61:2). இங்கு தேவனையே கன்மலை என்று குறிப்பிட்டுள்ளான்.

சுயத்தில் மூழ்கியிருப்பவன் தான் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை மறந்துபோகிறான். அந்நிலை அவனை நன்றியற்றவனாகவும் மாற்றிவிடுகிறது. அது ஒருவனுடைய மனதின் ஒருமுகத்தைக் குலைத்து, வேலையின் தரத்தைக் குறைத்து, அவனுடைய செயலாக்கம் நிறைந்த ஊழியத்திற்குப் பக்கவாதத்தை உண்டுபண்ணி விடுகிறது. மேலும் அது அவனை மற்றவர்களுடைய தேவையைக் குறித்துக் கொஞ்சமும் நினைக்காத உணர்ச்சியற்ற மனிதனாக மாற்றிவிடுகிறது.

## சுயவிரும்பி என்னும் அடிமைத்தனம்

சுயம் பற்றிய எண்ணம் கொண்ட மனிதன் தன்னுடைய எண்ணங்களுக்கும் நினைவுகளுக்குமே அடிமையாயிருக்கிறான். அவனுடைய நட்பை எவரும் விரும்புகிறதில்லை. தனது ஆலோசகர்களிடத்திலும், நண்பர்களிடத்திலும் தனது துயரக் கதைகளைப் பொழிந்து தள்ளவே விருப்பம் கொண்டிருக்கிறான். தான் பேசுவதையே மற்றவர்கள் கேட்க வேண்டுமென்று விரும்பும் அவன் மற்றவர்களுடைய அறிவுரைகளை வெறுத்துத் தள்ளுகிறான். தன்னிடத்தில்

மாற்றம் ஏற்படாதபடி இரும்பு மனம் கொண்டு எதிர்த்து நிற்கிறான். தேவனுடைய சித்தத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. எசேக்கியல் 33:31,32-இல் கர்த்தர் விவரித்துக் கூறியுள்ள மனிதர்களைப் போலக் காணப்படுகிறான்.

> "ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில்வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள்போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை; அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது. இதோ, நீ இனிய குரலும் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுடையவன் பாடும் இன்பமான பாட்டுக்குச் சமானமாயிருக்கிறாய்; அவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவைகளின்படிச் செய்யாமற் போகிறார்கள்."

சுய விருப்பம் எவ்வளவு கீழ்த்தரமான நோயாக இருக்கிறது! ஒரு மனிதன் எவ்வாறு அதனைத் தோற்கடிக்க முடியும்?

## சுயத்தைத் தோற்கடிக்க ஐந்து படிகள்

*முதலாவதாக,* சுயத்தில் மூழ்கியிருக்கும் மனிதன் அந்நிலையிலிருந்து திரும்பி கிறிஸ்துவுடன் தொடர்பு கொண்டவனாக மாற வேண்டும் (2 கொரி. 3:18). அவரை நோக்கிப் பார்ப்பதால் நாம் அவர் சாயலாக மறுரூபப்படுவோம். தன்னைக் குறித்துச் சொல்லும் ஆயிரம் சொற்கள், கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லப்படும் ஒரு சொல்லுக்கு ஈடாகாது. பரிசுத்தமாக்கப்பட்ட சுயம் மகிமையடைந்த கிறிஸ்துவிற்கு எவ்வகையிலும் ஈடாகாது என்று இதனையே வேறொரு விதமாகக் கூறலாம். அவன், "நேசக் கர்த்தரே, என்னிடத்திலிருந்து நான் விடுதலை பெற வேண்டும். உமக்குள்ளாக நான் மறைந்துவிட வேண்டும். இனி நான் அல்ல, எனக்குள்ளாக வாழும் கிறிஸ்துவே காணப்பட வேண்டும்" என்று ஏ. பி. சிம்சன் பாடியது போல தொடர்ந்து ஜெபம் செய்ய வேண்டும்.

"சுயத்தில் மூழ்கியிருப்பதால் பெருங்கவலை நெருங்கி வருகிறது. மற்றவர்களோடு நெருங்கியிருப்பதால் அவநம்பிக்கை உண்டாகிறது. கிறிஸ்துவோடு நெருங்கியிருப்பதால் பேருவகை கிடைக்கிறது" என்னும் மெய்ப்பொருள் கூற்றை எப்பொழுதும் நினைவிற்கொள்ள வேண்டும்.

பால் வேன் கோர்டன் என்பார் கூறியுள்ளதாவது: "கீழே சொல்லப்பட்டிருக்கிற நிகழ்ச்சியிலிருந்து, எப்படிப்பட்ட மனப்பான்மை உடையவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். பீதோவனின் ஒன்பதாவது இசை நிகழ்ச்சியை நிறைவேற்றிய பிறகு, நிகழ்ச்சியை நடத்திய ஆர்டுரோ டோஸ் கானினி என்பாருக்கும், அவருடைய இசைக் குழுவினருக்கும், இசையைக் கேட்டு மகிழ்ந்த பார்வையாளர்கள் எழுந்து நின்று



நீண்ட கரஒசை எழுப்பித் தங்களது பாராட்டைத் தெரியப்படுத்தினர். அதனைக்கண்ட டோஸ்கானினி இசைக்கலைஞர்களை நோக்கி, உணர்ச்சி ததும்பிய மெல்லிய குரலில், 'நான் ஒன்றுமில்லை, நீங்களும் ஒன்றுமில்லை' என்றார். சிறிது இடைவேளைக்குப் பிறகு போற்றும் பெருங்குரலில், 'எல்லாம் பீதோவன் தான்' என்றார்."

தன்னைச் சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியமே என்று கூறி, சிலர் இக்கருத்தை மறுத்துரைக்கலாம். திருமறையும் அவ்வாறே சொல்லுகிறது என்றும் அவர்கள் கூறுவர். ஆம் இதை ஏற்றுக்கொள்கிறோம். ஆயின், மேக்செய்னி என்பார் "உங்களை நோக்கிப் பார்க்கும் ஒவ்வொரு தடவைக்கும், பத்துமுறை கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்" என்று கூறியுள்ள விதியை நாம் பின்பற்ற வேண்டும். "சுயத்தை விட்டு நீங்கி இரட்சகரின் தாபரத்தில் தங்குவது எத்தனை இன்பமானது" என்று பழைய கவிதை ஒன்று கூறுகிறது.

*இரண்டாவதாக,* இறைநூல் சுயத்தைக் குறித்து எத்தகைய கருத்துடையதாக இருக்கின்றது என்பதை அறிய வேண்டும். ஒருபுறம் காண்கையில், மறைநூல் கூறுகிறபடி, ஒருவன் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறான், மன்னிக்கப்பட்டிருக்கிறான், நீதிமானாக்கப்பட்டிருக்கிறான், பரலோகத்திற்குத் தகுதியுடையவனாக மாற்றப்பட்டிருக்கிறான். தேவனின் நேசகுமாரனுக்குள்ளாக, அவரால் ஏற்றுக்கொள்ளத்தக்க தகுதியோடு தேவனுக்கு முன்பாக நிற்கிறான். தேவனுக்குச் சுதந்தரனாகவும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரனாகவும் கிறிஸ்துவுக்குள் பரிபூரணனாகவும் இருக்கிறான். தேவனுடைய படைப்பில் தனித்தன்மை வாய்ந்தவனாகவும், தன்னுடைய வாழ்க்கையில் சிறப்பானதொரு பங்கை நிறைவேற்ற வேண்டியவனாகவும் இருக்கிறான். தேவனால் பெரிதும் மதிப்பிடப்பட்டவன். அதன் நிமித்தம் தன்னால் முடிந்த எல்லவற்றிலும் கிறிஸ்துவுக்கு உரியவனாகக் காண விருப்பம் கொள்கிறான்.

வேறொருபுறம் காண்கையில், அவன் தன்னில்தானே ஒரு மேன்மையும் இல்லாதவன் என்பதை ஒப்புக்கொள்கிறான் (2 கொரி. 12:11; கலா. 6:3). அவனுடைய மாம்சத்தில் ஒரு நன்மையும் வாசமாயிருப்பதில்லை. தன்னிடத்தில் நன்மையுண்டோ என்று அவன் பார்ப்பதில்லை. அதில் நன்மை இல்லை என்கிற காரணத்தினால் தோல்வி மனப்பான்மை அடைகிறதில்லை.

*மூன்றாவது அறிவுரை,* சுயவிருப்பம் உடையவன் மற்றவர்களுக்காக உழைப்பதில் தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். பிறருக்காக உழைக்கும் உழைப்பில் மூழ்கி, தங்களைக் குறித்துச் சிந்திக்க நேரமற்றவர்கள் மனநிறைவு பெறுவார்கள். மன நிறைவு தன்னைக் குறித்துச் சிந்திக்கிறதால் உண்டாகிறதில்லை. மாறாக, தன்னை மறுக்கிறதினாலேயே மனநிறைவு ஏற்படும். இதனையே இயேசுநாதர், "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய

ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" என்று சொல்லி நினைவுகூர்ந்தார் (யோவான் 12:25). கார்ல் மெனிங்கர் என்னும் மனநோய் நிபுணரிடம் நீங்கள் மனத்தளர்ச்சியடைவதை அறிந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது "என்னைக் காட்டிலும் மிகவும் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் சென்று அவருக்கு உதவி செய்ய முற்படுவேன்" என்றுரைத்தார்.

*நான்காவதாக:* வேறொருவரை போல் இருக்க வேண்டும் என்று கருதி ஒருவன் தனது நேரத்தை வீணடிக்கக் கூடாது. சரீர வெளித்தோற்றம், குறைபாடுகள், ஆற்றல் குறைவுகள் இருந்தபோதிலும், தேவன் ஒருவனை ஏற்றுக்கொண்டதுபோல அவன் தன்னை ஏற்றுக்கொண்டவனாக, "ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்" (1 கொரி. 15:10) என்று சொல்லவேண்டும். அப்படிப்பட்டவன் தன்னுடைய வாழ்க்கையில், மாற்ற இயலாதவைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு மனஅமைதிபெறுகிறான். இறையாண்மையினால் நாம் நமது வாழ்க்கையில் பெற்றுக்கொண்ட நிலையான தன்மைகளைப் பற்றிக் குறைகூறுவது பாவமாகும். அதை மாற்றவேண்டுமென்று விரும்புவது பயனற்ற செயலாகும்.

*கடைசியாக,* தன்னைக் குறித்தே சிந்திக்கத் தூண்டும் விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். கர்த்தரை நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, தன்னை எவ்வாறு மதிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கும் நூல்களையும், தன்னால் செய்ய முடியும் என்று சிந்திக்கத் தூண்டும் பயிற்சி முகாம்களையும், தன்னை நோக்கிப் பார்க்கச் செய்யும் ஆலோசகர்களையும் தவிர்க்க வேண்டும். தன்னை மறந்து கர்த்தரிடத்தில் தனது மனதை ஒருமுகப்படுத்தி வாழ்வதையே நாம் நாட வேண்டும். அவர் ஒருவரே எல்லாத் தகுதியும் உடையவர். ●

# 31

# பரிசுத்தமடைய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்

வில்லியம் டி. லாங்ஸ்டாப் என்பார் பரிசுத்த வாழ்விற்குத் தேவையானயாவற்றையும் நான்கு கவிகள் கொண்ட பாடலின் வாயிலாக அழகிய முறையில் எடுத்தியம்பியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அப்பாடல் கருத்தாழம் மிக்கதும், பொருள் பொதிந்ததுமாக இருக்கிறது என்று உணர்ந்து போற்றாமல், அப்பாடலை அடிக்கடி பாடுகிறவர்களாயிருக்கிறோம். கிறிஸ்தவப் பரிசுத்தம் என்னும் பாடத்தைக் கற்று முடிக்க இருக்கிற நாம், அப்பாடலை ஒவ்வொரு வரியாக வாசித்து இந்நூலின் முந்தைய அதிகாரங்களில் சொல்லப் பட்டவைகளை அப்பாடல் எவ்வாறு தழுவியிருக்கிறது என்பதைக் காண லுறுவோம்.

***பரிசுத்தமடைய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.*** பரிசுத்த வாழ்க்கை என்பது வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அஃது ஒரு கணப்பொழுதில் உண்டாகும் பொருளல்ல. எல்லாவற்றிலும் உடனடியான விளைவு காண வேண்டும் என்று எதிர்நோக்குகிற காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். நமது வாழ்வில் உண்டாகும் ஒரு அனுபவத்தினால் பரிசுத்த வாழ்க்கையில் மகத்துவ மான முன்னேற்றத்தை அடைந்துவிடுவோம் என்று சிந்திக்கும்படித் தூண்டி விடப்படுகிறோம். ஆயினும் அவ்வாறு ஏதும் நிகழ்வதில்லை. உள்ளத்தில் வாழும் கிறிஸ்துவினால் கணத்திற்குக் கணம் முன்னேறுகிற அனுபவமாகவே பரிசுத்த வாழ்வு இருக்கிறது. வேன்ஸ் ஹேவ்னர் என்பார், "பரிசுத்தமடைய மிகுந்த காலம் ஆகும். ஆனால் நமக்கோ நேரமில்லை! எளிய விசுவாசத்தின் நெருப்பை அவ்வப்போது கிண்டிவிடுகிற ஆத்துமா களிகூரும். அந்த ஆத்துமா குறுக்கு வழியில் செல்ல ஊக்கமளிப்போரிடம் தன்னை விற்றுப்போட அனுமதிக்காது. தான் தங்கி இளைப்பாறுவதற்கு முந்தின பாதைகளையே நாடிச் செயல்படும்" என்று கூறியுள்ளார்.

***உங்கள் ஆண்டவரோடு அடிக்கடி பேசுங்கள்.*** ஜெபம் இல்லையேல் பரிசுத்தமும் இல்லை. ஜெபம் நமது வாழ்வின் நிகழ்ச்சிகளை மட்டும் மாற்று வதில்லை. அது நம்மையே மாற்றக் கூடியதாயிருக்கிறது. எப்போதாவது ஜெபம் செய்வோம் என்றல்ல, அடிக்கடி செய்ய வேண்டும். ஏனோதானோ என்றல்ல, ஊக்கத்துடன் செய்ய வேண்டும். மற்றவர்களுடைய கட்டாயத்தினால் அல்ல, தன்னில்தானே வலிமையுடையதாக அமைய வேண்டும்.

***எப்பொழுதும் அவருக்குள் நிலைத்திருங்கள்.*** நிலைத்திருத்தல் தொடர்ச் சியைக் குறிக்கிறது. முக்கியமாக மறைநூல் எழுத்துகளுக்குக் கீழ்ப்படிதலில் தொடர்ந்து நிலைநிற்பதை இது குறிக்கிறது. அவ்வாறு நிலைத்திருப்பது இரட்சகரைக் குறித்து ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ளச் செய்யும்; அவர் சாயலில் வளர்ச்சியடையவும் செய்யும். “நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத் திருப்பீர்கள்” என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார் (யோவான் 15:10)

***அவருடைய வார்த்தைகளை உட்கொள்ளுங்கள்.*** நாம் இறைநூலை வாசித்து, படித்து, மனப்பாடம் செய்து, தியானிக்க வேண்டும்; அதற்குக் கீழ்ப்படியவும் வேண்டும். எரேமியா தேவ வார்த்தைகளைப் புசித்தான். அது அவனுக்கு மன மகிழ்ச்சியையும், உள்ளக் கிளர்ச்சியையும் ஏற்படுத்தியது. சங்கீதக்காரன் அதனை உண்டு, அதன் பயனால் பாவம் செய்யாதபடிக் காக்கப்பட்டதை உணர்ந்தான். நாம் அவற்றை உண்டு அவை உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கின்றன என்று அறிந்திருக்க வேண்டும்.

***இறைமக்களோடு நட்பு பாராட்டுங்கள்.*** பரிசுத்தவான்களோடு நாம் கொண்டிருக்கும் ஐக்கியம் நம்மைப் பரிசுத்தமாக்கும் தன்மையுடைய வலிமை மிக்க ஓர் ஊக்குவிக்கும் கருவியாகும். துன்மார்க்கரின் நட்பு நமது நல்ல பழக்கங்களைக் கெடுத்துவிடுவது போலவே, நல்லவர்களின் ஐக்கியம் தெய்வீகப் பழக்கவழக்கங்களை உண்டாக்கும்.

***வலிமையற்றோர்க்கு உதவுங்கள்.*** கர்த்தருக்கும் உடன் விசுவாசி களுக்கும் ஊழியம் செய்யும் வாழ்க்கையை விளங்கிக்கொள்ளும் பொருட்டு, நாம் வலிமையற்றோர்க்கு உதவி செய்ய வேண்டும். சோம்பேறித்தனம் நமது வாழ்க்கையில் ஒரு கண்ணியாக இருக்கிறது எனக் கண்டோம். நமது விண் அரசருடைய சேவையில் நாம் சுறுசுறுப்பாகப் பங்குகொள்ளாவிடில் கொடிய சோதனைகள் நம்மை எதிர்த்துவரும்.

***தேவனுடைய ஆசீர்வாதத்தை நாடுவதில் ஒன்றையும் நாம் மறக்க வேண்டாம்.*** நான் தலை வணங்கி தேவனிடத்தில் ஆசீர்வதிக்கும்படி என்னால் கேட்க முடியுமா?” என்பது கிறிஸ்தவர்கள் நடைமுறையில் சந்திக்கும்



சோதனையாக உள்ளது. நாம் எதைச் செய்தாலும் அவருடைய மகிமைக்காகவே செய்ய வேண்டும். அது தூய்மையானதும், அவரை மன நிறைவு கொள்ளச் செய்வதுமான ஒரே நோக்கமாக அமைய வேண்டும். தம்முடைய பரிசுத்தத்திற்கு ஏற்ற பரிசுத்தத்தையே தேவனால் ஆசீர்வதிக்க முடியும்.

***பரிசுத்தமடைய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், இந்த வையகம் வேகமாகப் பாய்ந்து செல்கிறது.*** “இந்த உலகம் எப்பொழுதும் நம்மோடுகூட இருக்கிறது. காலம் கடந்தாலும் நம்மைவிட்டுப்போகாது, திரும்பவும் உடனே வந்து ஒட்டிக்கொள்ளும். இந்த உலகில் எல்லாவற்றையும் நாம் பெற்றுக் கொள்கிறோம், செலவுசெய்கிறோம். இவ்வாறு நமது பலத்தை இந்த உலகிற்காக வீணாக்குகிறோம்” என்று வேர்ட்ஸ் வொர்த் மிகச்சரியாகக் கூறியிருக்கிறார்.

இயேசு நாதருடன் தனித்து அதிக நேரத்தைச் செலவு செய்யுங்கள். “ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி இயேசு நாதரிடம் நீங்கள் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள்” என்று டபிள்யு கிரகாம் ஸ்கோர்ஜி வலியுறுத்தியுள்ளார். பரிசுத்தத்தில் சிறந்தவர்கள் வேதத்தைத் தியானிப்பதில் அதிக நேரத்தைச் செலவு செய்வார்கள். நமது வேர் தேவனுக்குள் ஆழ்ந்து பதியாதிருந்தால் நமது வாழ்க்கையும் மேலோட்டமாகத் தான் இருக்கும்.

***இயேசு நாதரை நோக்கிப் பார்த்து அவர் சாயலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*** ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அப்போஸ் தலனாகிய பவுல், “நாமெல்லோரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்” என்று எழுதியுள்ளார் (2 கொரி. 3:18). அவரை நோக்கிப் பார்த்து அவரைப் போல மாற்றம் அடைகிறோம் என்பதே அதன் பொருளாகும்.

***உங்களுடைய நண்பர் குழாம் உங்களது நடத்தையில் அவருடைய சாயலைக் காணும்.*** சீனாய் மலையிலிருந்து இறங்கிவந்த மோசேயின் முகம் கர்த்தரிடம் கடன் பெற்ற பிரகாசத்தினால் ஜொலித்தது. பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை இஸ்ரவேல் ஆலோசனைச் சங்கத்தார் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்.

***பரிசுத்தமடைய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், அவர் உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்.*** உங்களது வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதற் குரிய அதிகாரத்தை அவரிடம் கொடுத்துவிடுங்கள் என்பதே இதன் பொருள். நமது சித்தத்திற்குப் பதிலாக அவருடைய சித்தத்தை நடைமுறைப்படுத்துவதும்,

நமது காட்சிக்குப் பதிலாக அவருடைய காட்சியை நம்புவதும் அதனுடைய சிறப்புகளாகும்.

***எச்சூழ்நிலையிலும் அவருக்கு முன்பு ஓடாதீர்கள்.*** ஒரு செயலைச் செய்வதற்கு அவருடைய வழி நடத்துதலை நாடி உடனடியாகப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், முன்யோசனையின்றி நாமாகவே செயல்படுவது நமது இயல்பாகும். தறிகெட்டு ஓடும் குதிரையைப் போல நமது எண்ணப்படி செயல்புரிகிறோம். காலதாமதத்தினால் பொறுமையிழந்து நாம் வேகமாகச் செயல்படுகிறோம். அதன் காரணமாகப் பின்னர் துக்கத்தில் மூழ்கிக்கிடப்பது நிச்சயம் (ஏசா. 50:11).

***உவகையோ, துக்கமோ எதுவாயிருப்பினும் கர்த்தரையே பின் தொடருங்கள்.*** நமது பக்தி, சூழ்நிலைகளைச் சார்ந்திருக்கலாகாது. அல்லது நமது வாழ்வின் மேடு பள்ளங்களையும் சார்ந்திருக்கலாகாது. இதன் பொருட்டே ஜான்வெஸ்லி என்பார், "நீண்ட இடைவெளிகளுள்ள எனது பக்தியைக் குணமாக்குவீராக. கர்த்தாவே என்னை முழுமையான கிறிஸ்தவனாக மாற்றும்" என்று மன்றாடினார்.

***இயேசுநாதரை நோக்கிப் பார்த்து அவருடைய வார்த்தைகளில் மேலும் நம்பிக்கை கொள்ளுங்கள்.*** கவிஞர் மீண்டும் மறைநூல் வார்த்தை களைக்குறித்து சொல்கிறார். அந்த வார்த்தைகளையே இறைவன் தம் மக்களைத் தூய்மைப்படுத்தவும், பரிசுத்தப்படுத்தவும் கருவியாகப் பயன்படுத்துகிறார். 119-ஆம் சங்கீதத்தின் ஆசிரியருடைய மனப்பாங்கிற்கு ஒப்பான மனப்பாங்கை இப்பாடலாசிரியரும் கொண்டுள்ளதைக் காணுங்கள்.

***பரிசுத்தமடைய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், உங்களுடைய ஆத்துமாவில் அமைதி கொள்ளுங்கள்.*** பரிசுத்த வாழ்க்கை அமைதியானதும், நம்பிக்கையுடையதும், தடுமாற்றம் அற்றதுமான வாழ்க்கையாகும். விசுவாசம் ஒருவரை அவருடைய பயத்திலிருந்தும், எரிச்சலிலிருந்தும் விடுவிக்கும். உண்மையாகவே நாம் நம்பிக்கையுடையவர்களாக இருப்போமாயின், கவலை கொள்ளமாட்டோம்.

***நம்முடைய ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு மனநிலையும் அவருடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டுக் காணப்பட வேண்டும்.*** "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என் னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்" என்று தாவீது மன்றாடினான் (சங். 139:23,24).

> "எனது எல்லா நினைவுகளையும், உள்ளத்திலிருந்து பெருக்கெடுக் கும் இரகசிய ஊற்றுகளையும், அவற்றை ஆளும் எனது நோக்கங் களையும் ஆராய்ந்து பார்ப்பீராக. எனது இருதயத்தின் அறைகளில் அரசராக ஆட்சி செலுத்துவீராக" என்று எஃப் பாட்டோம் என்பார் பாடியுள்ளார்.



***அவரது ஆவியினால் நடத்தப்படுங்கள், அன்பின் ஊற்றினிடத்திற்கு நடத்தப்படுங்கள், மேலோக ஊழியத்திற்கென்று இசைவாய்க் கட்டப் படுங்கள்.*** நாம் பரிசுத்தமடைய நேரத்தை எடுத்துக்கொள்பவர்களாக இருப்போ மென்றால், இவ்வுலக வாழ்வில் தொடர்ந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள் வோம்; முடிவில்லாத மேலோக வாழ்வில், அதாவது மகிமை நிறைந்த மாளி கையில் நித்திய ஊழியத்திற்கென்று ஆயத்தப்படுகிறவர்களாயிருப்போம் என்பதே பாடலின் இப்பகுதியின் பொருளாகும். இதனையே பவுல் , "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" என்று தீமோத் தேயுவுக்கு எழுதியுள்ளார் (1 தீமோ. 4:8). ●

# 32

# முடிவுரை

"பரிசுத்தராயிருங்கள்" என்ற கட்டளை மறந்துபோன ஒன்றாகக் காணப்படினும், அது அங்ஙனம் இருத்தற்பாலன்று. கர்த்தருடைய கட்டளைகளில் அஃது முதலிடம் வகிப்பதாகும். அது ஒரு ஆலோசனை யாகவோ, தெரிந்துகொள்ளலாமா அல்லது வேண்டாமா என்று நமது தீர்மானத் திற்கு விடப்பட்டதொன்றாகவோ கொடுக்கப்பட்டதன்று. மாறாக நாம் கடைப் பிடிக்கும்படியாக கொடுக்கப்பட்ட கட்டளையாம். அவருடைய மற்ற கட்டளை களைப் போலவே இதுவும் அவருக்காக இல்லாமல் நம்முடைய நன்மைக் காகவே கொடுக்கப்பட்டதாகும்.

கர்த்தராகிய இயேசுவின் சாயலை அணிந்து கொள்வதைக் காட்டிலும் மேலான நோக்கத்தை ஒருவர் உடையவராயிருக்க முடியாது. பரிசுத்த வாழ்க்கை யைக் காட்டிலும் கூடுதலாகத் தேவனை உலகிற்கு எடுத்தியம்பும் செயல் ஒன்றுமில்லை. அதுவே கிறிஸ்தவத்தை நம்பிக்கைக்குரியதாகக் காணச் செய் கிறது. அது தேவனை மகிமைப்படுத்துகிறது. விசுவாசிக்கு நன்மை பயக்கிறது. அதற்கு முற்றிலும் மாறாக ஒரு பரிசுத்தவானின் பாவச் செயலைப் போன்று, ஆண்டவருடைய நாமத்திற்கு அவமானத்தையும், கனவீனத்தையும், களங்கத் தையும் கொண்டுவருவது வேறொன்றுமில்லை.

கிறிஸ்துவின் அன்பு, நம்மை மீட்க அவர் செலுத்திய விலை, அவர் நம்மீது பொழிந்தருளிய கிருபை ஆகியவை நாம் தூயராக வாழும்படி நம்மை நெருக்கி ஏவுகின்றன. ஆனால் பாவமோ ஒரு விசுவாசி தேவனோடு கொண்டுள்ள ஐக்கியத்தை முறிக்கிறது. அதனைக் காணும் மற்றொருவருடைய வாழ்க்கையில் அது இடறுதலை ஏற்படுத்துகிறது. கிறிஸ்தவர்களைப் பேசவொட்டாதபடித் தடை செய்கிறது.

பரிசுத்தம் என்பது நாம் அடைந்து விட்டோம் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல; அது ஒருவருடைய வாழ்க்கையில் காண வேண்டிய வளர்ச்சி யாகும். நாம் நமது இரட்சகரின் முகத்தைக் காணும் வரை முழுமையான தூய்மையை அடைய முடியாது. ஆயினும் அதுவரை அவரைப்போலக் காணும்படித் தொடர்ந்து வளர்கிறவர்களாயிருக்க வேண்டும்.

இந்த உலகத்தோடும், மாமிசத்தோடும், பிசாசோடும் நாம் கொண்டிருக்கிற போராட்டத்தில் வெற்றிகொள்ள கிறிஸ்தவப் படைவீரனுக்குரிய படைக் கலன்களை நாம் அணிந்தவர்களாயிருக்க வேண்டும். சுருங்கக் கூறின், அந்தப் படைக்கலன் கிறிஸ்தவனின் நீதியான குணநலனேயாகும். அதை நாம் அணிந்த வர்களாக இருப்போமென்றால் எதிரி நம்மீது எய்யும் அஸ்திரங்கள் செயலற்றுப் போம்.

தேவன்தாமே நம்மைப் பரிசுத்தமுள்ளவராக்க முடியும், ஆயினும் நமது ஒத்துழைப்பின்றி அதனை அவர் செயலாற்றமாட்டார். நமக்கு வழிகாட்டியாகச் சில வழிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார். அவைகட்கு நாம் கீழ்ப்படிவோ மாயின், தூய ஆவியானவரால் மகிமையின் மீது மகிமையடைந்து மறுரூபப் படுவோம். பாவ அறிக்கை, திரும்பச் செலுத்துதல், ஒப்புவித்தல், வேத வாசிப்பு, மன்றாட்டு, உடன் சகோதரருடன் ஐக்கியம், கர்த்தருக்கென்று உழைத்தல், சரீர ஒழுங்கு, மன ஒழுங்கு ஆகியவை அதற்கு முன்தேவைகளாக உள்ளன.

நமது தாம்பத்திய வாழ்க்கை, பேச்சு, மனக்கட்டுப்பாடு, ஆடை ஆகிய வற்றில் பரிசுத்த இயல்பு மிளிர்தல் இன்றியமையாதது. உண்மையில் நமது வாழ்க்கையின் எந்த ஒரு அம்சத்திலும் பரிசுத்தமின்றி வாழ முடியாதே?

"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி. 12:14) என்னும் இறைவாக்கைப் படிக்கும் ஒவ்வொரு விசுவாசியும் அதிர்ச்சி அடைய வேண்டியவனாக இருக்கிறான். ஒருவர் கிறிஸ்துவைத் தனது இரட்சகராக நம்பி விசுவாசிக்கிறபோது, பரிசுத்தவான் என்ற நிலையை அவர் கிறிஸ்துவுக்குள் பெறுகிறார் என்னும் உண்மையை இவ்வசனம் விளக்குவதாயிருப்பினும், மெய்யான மனமாற்றத்தின் விளைவாக அவரது வாழ்க்கையில் காண வேண்டிய நடைமுறைப் பரிசுத்தத்தையும் இது குறிக்கின்றது என்பது திண்ணமே. ●

# அடிக்குறிப்புகள்

**அதிகாரம் 13**

1. ஆசிரியரின் "சங்கீதங்களில் இன்புறுதல்" பகுதி 1 பக்கங்கள் 238-240 Kansas City, KS: Walteric Publishers, அனுமதியுடன் எடுக்கப் பட்டுள்ளது

**அதிகாரம் 18**

2. J. Oswald Sanders in "The Best That I Can Be" ( Singapore: OMF Books, 1965) 110, 111 பக்கங்களில் மேற்கோளிடப்பட்டவை.

3. "1200 More Notes, Quotes and Anecdotes" by A. Naismith பக்கம் 93.

**அதிகாரம் 25**

4. இச்சரித்திரம் உண்மையாய் நடைபெற்றதாகும். பெயர் மட்டும் மாற்றப் பட்டுள்ளது.

**அதிகாரம் 26**

5. இவ்வதிகாரம் ஆசிரியரின் "இயேசுவோடு நேரத்தைச் செலவிடுதல்" என்ற எம்மாவு அஞ்சல் வழிப் பாடங்களில் உள்ளதாகும். எம்மாவு வேதாகமக் கல்லூரி 1985.

**அதிகாரம் 27**

6. இவ்வதிகாரம் ஆர்தர் வில்டர், டொனால்டு நோர்பி ஆகியோருடன் ஆசிரியரும் இணைந்து எழுதிய, "சூதாட்டமும் குடிப்பழக்கமும்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. Published by Everyday Publications, Scarborough, Ontario, Canada, 1980.

**அதிகாரம் 30**

7. Eugene H. Peterson, "Travelling Light" (Downer's Grove, IL: Inter Varsity Press), பக்கங்கள் 69-71.

# மோரியாவின் இதர வெளியீடுகள்

**வேதாகமப் போதனைக் கோட்பாடுகளும் நடைமுறை ஒழுங்குகளும்**

இறை மகனாகிய இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்ட இறைமக்களது வாழ்க்கை, ஐக்கியம், ஊழியங்கள் மற்றும் திருச்சபையைக் குறித்த ஒழுங்குகள் ஆகியவற்றை ஒன்றுகூட்டித் தரும் நூல். கிறிஸ்தவப் பெருமக்கள் கற்று, வாழ்க்கையில் கைக்கொண்டு கற்பிப்பதற்கு இந்நூல் ஆதாரமானது.

110 பக்கங்கள், விலை ரூ. 35/-

**இவர் எவ்வளவு பெரியவர்**

**(எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை)**

**- இரா. கிருட்டினன் குட்டி**

ஆழமிக்க கருத்துக்களை உள்ளடக்கிய எபிரெயர் நிருபத்தில் காணும் சத்தியங்கள், பழைய உடன்படிக்கையில் நிழலாகக் காணப்படும் நபர்கள், முறைமைகள், பண்டிகைகள் இவை சுட்டிக்காட்டும் மெய்ப்பொருள் ஆகியவற்றை எளிமையாகவும், தெளிவாகவும் இந்நூல் விவரிக்கிறது. பல ஆசிரியர்களின் கருத்துக்களை மேற்கோள்களாகக் கொண்டுள்ள இந்நூல், நிருபத்தில் உள்ள சிக்கலான பகுதிகளுக்குத் தகுந்த விளக்கமளிக்கிறது.

250 பக்கங்கள், விலை ரூ. 120/-

## இது ஒரு நல்ல கேள்வி!

**- வில்லியம் மெக்டொனால்டு**

மனுமக்கள் ஆத்தும இரட்சிப்பு அடைவதற்கான நற்செய்தியை எளிய முறையில் தெளிவாக இச்சிறுநூல் விவரிக்கிறது. கேள்வி - பதில் முறையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகம், தூய்மையும், நீதியுமுள்ள தேவனிடமிருந்து பாவமன்னிப்பைப் பெறுதல், அவரோடு ஒப்புரவாகுதல், அவருடைய சமாதானத்தைப்பெறுதல் ஆகியவற்றை அடைவதன் வழியை எடுத்துரைக்கிறது.

64 பக்கங்கள், விலை ரூ. 15/-

## கொலோசெயர் நிருபம்

**- திரு. தாம்ஸன் B. தாமஸ்**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எல்லாவற்றிக்கும் முந்தினவரும், முதன்மையானவருமாய் உள்ளார் என்கிற அடிப்படைச் சத்தியங்களைக்கொண்ட கொலோசெயர் நிருபத்தைப் பகுத்துணர்வதற்கு உதவும் சிறுநூல். ஆசிரியர் வழங்கிய ஆங்கிலச் செய்திகளின் தமிழாக்கமாக இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

64 பக்கங்கள், விலை ரூ. 15/-


**மோரியா ஊழியங்கள்**

தபால் பெட்டி எண் 2540
1 மேற்கு கிளப் ரோடு
செனாய் நகர்,
சென்னை - 600 030

பெத்தனி சுவிசேஷ மன்றம்
16 வடக்குத் தெரு
மன்னார்புரம்,
திருச்சி - 620 020